Koviloor Digital Library

சித்தர்கள் வரலாறு

ACC.NO.44964
R689
No 5



எஸ்.பி. இராமச்சந்திரன்

தாமரை நூலகம்
சென்னை-600 026.

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

சித்தர்கள் வரலாறு

ஆசிரியர்
எஸ்.பி. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்
ஆர்.சி. மோகன்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44964

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண்	: 239
முதல் பதிப்பு	: செப்டம்பர் 1999
இரண்டாம் பதிப்பு	: நவம்பர் 2002
மூன்றாம் பதிப்பு	: செப்டம்பர் 2012
நான்காம் பதிப்பு	: ஏப்ரல் 2018
ஐந்தாம் பதிப்பு :	**நூலைப்பற்றி ஜனவரி : 2022**
நூலின் பெயர்	: சித்தர்கள் வரலாறு
பதிப்பாசிரியர்	: ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	: தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	: ஜனவரி : 2022
உரிமை	: பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	: டெமி
அச்சுத்தாள்	: 16 கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	: 11 புள்ளி
மொத்த பக்கங்கள்	: 296 + 8
பிரதிகள்	: 1200
நூல் விலை	: ரூ. 150/-
அச்சிட்டோர்	: கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை - 34

Koviloor Digital Library

91/4

பதிப்புரை

தேன் சொட்டும் இனிய தமிழில் வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்ற நான்கு துறைகளிலும் முழுமையான கருத்துக்களைப் பாடிய சித்தர்களின் பெருமையை நினைத்துப் பார்க்கவும் அருகதையில்லேன்!

சித்தர்கள் மனிதராய்ப் பிறந்து மனிதர் நிலையிலிருந்து மேம்பட்டவர்கள். மனிதனின் அடுத்த பரிணாம வளர்ச்சியைக் கண்டவர்கள். அறிவியல் இன்று அண்டத்தைக் கட்டியாளும் அளவுக்கு வளர்ச்சியுற்றிருப்பதாக நாம் கூறிக் கொண்ட போதிலும் - மனிதன் வளரவில்லையே!

இயற்கையின் பரிணாம வளர்ச்சியின் முழுமைத் தோற்றமாக மனிதன் உண்டானான். அவனுடைய உடல், உயிர் உள்ள பிராணிகளின் உடல் அமைப்பு முறைகளில் முழுவளர்ச்சி யடைந்தது. அவனுடைய அறிவும் வளர்ச்சி யடைந்தது. ஆனால் அவன் தன்னை வளர்த்துக் கொண்டிருக்கிறானா?

இல்லை! இல்லை!! இல்லை!!!

உலகில் முதலில் தோன்றிய தமிழ் மகன்! பண்பிலும் அறிவிலும் உயர்ந்து விளங்கிய தமிழ் மகன்! தன்னை வளர்த்து அடுத்த பரிணாம நிலையை அடைந்தான். சித்தராக!

சித்தர் சாகாக்கலை கற்றனர். உடலைத் தாம் விரும்பும் காலம் வரையில் அழியாநிலையில் வைத்திருந்தனர். அண்டவெளியில் சஞ்சரித்தனர். உலகத்தின் எந்த மூலையில் என்ன நடந்த போதிலும் தாம் இருந்த இடத்திலிருந்தே அறியவும் அவ்விடத்தில் செயல்படவும் ஆற்றல் பெற்றனர். அத்தகைய ஆற்றலை மனிதகுலம் முழுவதுமே அடைய வேண்டும் என்பதற்காக நூல்களைப் பாடினர்.

ஆனால் மனிதன் தன் அகத்தே இருந்து, தன்னைத் தான் அறிந்து, தானே உலகமாய், உலகமே தானாய் நின்று உலகத்தையே இயக்கும் அளவு ஆற்றல் படைத்த நிலையில் இன்று ஒருவர் கூடக் காணப்படவில்லை என்பதே உண்மை!

இன்று சித்தர் நெறியில் ஆர்வம் கொண்ட பலர் தோன்றி வருகிறார்கள். அரும்புகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. இனி முழுமையாகச் சித்தர் என்ற நிலையை அடையக் கூடியவர்கள் தோன்றுவார்கள். அவர்களுக்குச் சித்தர் பெருமக்களே உதவியாக

Koviloor Digital Library

வருவார்கள் என்ற நம்பிக்கை என் உள்ளத்தை உந்துவதன் விளைவே இந்த நூல்.

சித்தர்களைப் பற்றி ஓரள வேனும் உணர்ந்து கொள்ள இந்த நூல் உதவி செய்யும் என்ற நம்பிக்கையுடன் அமைகிறேன்.

இந்த நூல் சித்தர்களின் வாழ்க்கையில் நடை பெற்றதாகச் சொல்லப்படும் நிகழ்ச்சிகள், அவர்களைப் பற்றி வழங்கப்படும் கதைகள், அவர்கள் நிகழ்த்திய தாகச் சொல்லப்படும் அற்புதங்கள் யாவும் கொண்ட தொகுப்பாகவே அமைந்துள்ளது. சித்தர்களைப் பற்றிய எல்லாத்தக வல்களும் இடம் பெறவேண்டும். எதுவும் விடுபட்டுப் போய் விடக் கூடாது என்று நான் எண்ணியதே காரணம்.

அகத்தியர் பனிரெண்டாயிரம், போகர் ஏழாயிரம், கருவூரார் வாதகாவியம் மற்றும் பலநூல் களில் காணப்படும் நிகழ்ச்சிகள் யாவும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.

அதோடு அறிவியல் துறையில் சித்தர்களின் மேம்பாடு விளங்கும் படியான பல விஷயங்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. பிறநாட்டார் இதுவரை சிந்தித்துக் கூடப் பார்த்திராத அறிவியல் உண்மைகளுக்குச் சில எடுத்துக் காட்டுகள் காட்டப்பட்டுள்ளன. அதுவே இந்த நூலின் தனிச்சிறப்பு என்றும் கருதுகிறேன்.

சித்தர்கள் வரலாற்றோடு, ஆரியர் குடி யேற்றம், அகஸ்தியர் விந்திய மலையைக் கடந்து தமிழ் நாட்டுக்கு வந்தது, அதனால் எற்பட்ட விளைவுகள் போன்ற சர்ச்சைக் குரிய பிரச்னைகள்பின்னிக் கிடக்கின்றன. அவற்றை இந்நூலில் எடுத்துக் காட்ட வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது.

இந்நூலின் பலனைத் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.

கடைசியாக இந்த நூலுக்கு அருமையான அணிந்துரை எழுதி வழங்கிய திரைப்படத் தயாரிப்பாளரும் எழுத்தாளருமான என் அருமை நண்பர் வலம்புரி சோமனாதன் அவர்களுக்கும் நூலை முழுதும் படித்துப் பிழைகளைத் திருத்தியும் உதவிய பேராசிரியர் அரங்க-இராமலிங்கம் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வணக்கம்.

எஸ்.பி. இராமச்சந்திரன்.

Koviloor Digital Library

அணிந்துரை

சித்தர்கள் என்றால், கை கூடுவதற்கு அரிதான எட்டு வகைச் சித்திகளும் கைவரப் பெற்றவர்கள், ஆசாபாசங்களுக்கு இடம் தரும் சித்தத்தை வென்றவர்கள், உடலோடு வாழ்ந்து கொண்டே வீட்டின்பம் காண்பவர்கள் என்று பொருள்.

நாம் பல விஷயங்களைச் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. அத்துடன் அவைகளைத் தவறாகவும் புரிந்து கொள்ளுகிறோம். அதுதான் நம்மில் பலரிடம் உள்ள குறை. அத்தகைய குறைகளில் ஒன்றுதான் நாம் சித்தர்களைச் சரியாக அறியாததோடு தவறாகவும் அறிந்து வைத்திருப்பது.

சித்தர்களை, அறிந்து கொள்ள முடியாத போக்கை உடைய விசித்திரர்கள் என்றும், ஞான யாத்திரையில் நடுவழியில் நின்று விட்டவர்கள் என்றும், பக்தி நெறியில் புரட்சிப்பாதையை வகுத்துக் கொண்டவர்கள் என்றும், கோபத்தைக் குணமாகக் கொண்டவர்கள் என்றும் நம்மில் பலர் எண்ணி வருகிறோம்.

சித்தர் பாடல்களில் காணப்படும் பரிபாஷைகளால் நமக்கு உண்டான இடர்ப்பாடுகள் இவை.

சித்தர்கள் உண்மையில் அருளாளர்கள். அருளாளர்களென்றால் பக்தர்களா? அல்ல. பக்தர்களுக்கும் சித்தர்களுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. அந்த வேறுபாடுகளை அறிவதின் மூலமே சித்தர்களின் உண்மை இயல்பை நாம் சரிவர அறிந்து கொள்ளலாம்!

கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள். கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்.

இறைச் சிந்தனை, இறைத் தாகம் - இவைகளோடு நிற்பது பக்தர்களின் செயல். உடல், உயிர், உலகம், இயற்கை. இவைகளின் இயல்புகளையும் மர்மங்களையும் அற உணர்ந்து அவைகளில் உள்ள பேதங்களை நீக்கி குணங்களை மட்டும் கருவிகளாகக் கொண்டு இறை ஆனந்த நிலையை வசப்படுத்திச் சாவை வென்று சதா காலமும் சிவத்தோடு ஒன்றி வாழ்வது சித்தர்களின் செயல

காலத்திற்கு உட்பட்டவர்கள் பக்தர்கள். காலத்தை வென்றவர்கள் சித்தர்கள். வேளை வரும்போது இறப்பவர்கள் பக்தர்கள். விரும்பும் வரை மரணத்தைத்தள்ளிப்போடும் ஆற்றல் பெற்றவர்கள் சித்தர்கள்.

Koviloor Digital Library

உடலையும் உயிரையும் பக்தர்கள் பாரமாகக் கருதுபவர்கள். ஆனால் அவைகளை நலம் செய்யும் கருவிகளாகக் கண்டவர்கள் சித்தர்கள். " உடம்பார் அழியின் உயிரார் அழிவர், திடம்பட மெய்ஞானம் தேரவும் மாட்டார்'' என்ற திருமூலர் பாடல் சித்தர்களின் அணுகுமுறையைத் தெளிவு படுத்தும்.

இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய அட்ட யோக வழிகளில் சிறிதும் வழுவாது வாழ்ந்து, உணவையும் உடல் இயக்கத்தையும் குறைத்து, வாசி என்ற மூச்சினை அடக்கி, நாடிகளைத் தூய்மையாக்கி, அவைகளின் மூலம் சரீரத்தில் உள்ள ஒவ்வோர் உயிர் அணுவையும் தூய்மையாக்கி, பிறகு மனன வழிபாட்டால் அணுவியக்கம் முற்றி, ஒளிவடிவம் என்னும் தெய்வ வடிவம் வளர்ந்து வரும் பொழது, பொருள்களின் பொய்த் தோற்றமும் உண்மை இயல்பும் மாறி மாறித் தோன்றி, முடிவில் தோற்ற மாயை மறைந்து உண்மை இயல்புமட்டும் நிலைத்துத் தோன்ற உடலை ஞான ஒளிமயமாக்கி நாத தத்துவத்தோடு இணைத்து சாவை வென்று சதாசிவமாக வாழ்வதே சித்தர்களின் வாழ்வு முறை.

இந்த முறை நான்கு படி நிலைகளை உடையது.

"பேய்க் குரங்கு போலே பேருலகில் இச்சை வைத்து நாய் நரிகள் போலலைந்தால் நன்மை உண்டோ தன்மனமே? " என்று புலம்பி, திருந்த முயல்வது முதல் நிலை.

" இருட்டறைக்கு நல் விளக்காய் இருக்கும் தம் வல்லமையை." என்பது இரண்டாம் நிலை.

" அருட் துறையில் நிறுத்தி விளக்காகு நீ புல்லறிவே." என்பது மூன்றாம் நிலை.

" அஞ்ஞானம் போயிற்று என்று தும்பீ பற. பரமானந்தம் கண்டோம் என்று தும்பீ பற " என்ற ஆனந்தத் துள்ளல் நான்காவது முடிநிலை.

இத்தகைய சித்தர்கள் ஒரு மொழி, ஒரு, இனம், ஒரு மதம், ஒருநாடு என்ற எல்லைகளுக்குள் அடைப்பட்டவர்கள் அல்லர். எல்லா நாடுகளிலும் எல்லா மதங்களிலும் எல்லா இனங்களிலும் எல்லா மொழிகளிலும் வாழ்ந்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலே ஞானரத்தினக் குறவஞ்சி பாடிய பெரியவர் பீரு முகம்மது, குணங்குடி மஸ்தான், கமால் முனி என்ற இஸ்லாமிய சித்தர்கள், தேரையர், தருமசௌமியர் அறவண அடிகள் என்ற புத்தமதச்

Koviloor Digital Library

சித்தர்கள், சாரணர் என்று குறிக்கப் பெறும் சமணமதச் சித்தர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

" நிலம் தொட்டுப் புகார், வானம் ஏறார், விலங்கிரு முந்நீர் காலில் செல்லார் " என்று குறுந்தொகை கூறும் மூவகைச் சித்திகளால் சங்க காலத்திலும் சித்திகள் கைவரப்பெற்ற சித்தர்கள் இருந்தார்கள் என்று அறிய முடிகிறது.

சாவுக்கு ஏதுவான உடலை சாவை வெல்வதற்கு ஏதுவாக்கியது ஒன்றே சித்தர்களின் அருஞ்சாதனை. இந்தச் சாதனா மார்க்கத்தில் மலர்ந்ததுதான் யோகக் கலையும் சித்த மருத்துவமும். பிணி, மூப்பு, மரணம், ஆகிய மூன்றிலுமிருந்து உடலை மீட்பது மருத்துவமும் யோகமும் தானே?

சித்தர்கள் உலகமெங்கும் வாழ்ந்திருந்தாலும் சித்த மருத்துவம் மட்டும் தமிழ்ச் சித்தர்களால் உருவாக்கப் பெற்றது. அதனால்தான் அது தமிழ் மருத்துவம் என்ற பெயரையும் பெற்றிருக்கிறது.

தமிழ்ச் சித்தர்கள் தாம் பெற்ற ஆன்ம ஞானத்தை தத்துவப் பாடல்களாகவும் மருத்துவ ஞானத்தை வைத்தியப் பாடல்களாகவும் வழங்கித் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெருந்தொண்டாற்றியிருக்கிறார்கள்.

இலக்கியத்தில் கையாளப் பெறும் " சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், "கூறுவது கூறாது ஒழிதல்" போன்ற அணிகளைப் போல் 'இடித்து உரைத்தல்' என்ற அணி பெரும்பாலான சித்தர் பாடல்களை அழகு செய்கிறது. மடமையில் அழுந்தியுள்ள மக்களை அடித்து எழுப்பும் ஒரு உத்தியே அது.

" மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்கு
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?.... "

" ஊத்தைக் குழிதனில் மண்ணை எடுத்து
உதிரப்புனலில் உண்டை சேர்த்து
வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம்
வரவோட்டுக்கும் ஆகாதென்று ஆடு பாம்பே! "

என்பது போன்ற பாடல்களில் சித்தர்கள் கையாண்டுள்ள குழூஉக் குறிகள் பொருள் அறிந்த வெகு சிலருக்கன்றி பெரும்பாலான மற்றவர்களுக்குத் தெளிவும் இன்பமும் தரா. சித்தர் பாடல்களில் உள்ள இடர்ப்பாடு இது.

Koviloor Digital Library

சித்தர்களில் மேலான சில சித்தர்கள் இறைத்தத்துவத்தையும் விஞ்சிச் சில தத்துவங்களை கீழ்க்கண்ட பாடல்களில் கூறியுள்ளது வியப்பைத் தருகிறது.

"அன்பே சிவமென்பது ஆரும் அறிகிலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே."

"தெய்வம் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

"தெய்வத்தாலாகாதெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்."

இத்தகைய சித்தர்களின் வாழ்க்கையை, அவர்கள் வாழ்வு முறைகளை, அவர்கள் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பல்துறைகளிலும் ஆற்றிய தொண்டுகளை அறிஞர் இராமச்சந்திரன் அவர்கள் மிக விரிவாகவும் மிக அற்புதமாகவும் இந்த நூலில் விளக்கியுள்ளார்.

இது ஒரு அரிய நூல், ஆன்மீக அறிவு, மருத்துவ ஞானம், யோக விளக்கம், இலக்கிய இன்பம் அனைத்தையும் ஒருங்கே தரவல்ல ஒரு களஞ்சியம். ஊன்றிப் பயில்பவர்கள் ஒரு புதிய பாதையைக் காண்பார்கள். வேகப்படிப்பும் மலிவு நூல்களைப் படிக்கும் இயல்பும் உள்ளவர்கள் தங்கள் போக்கை மாற்றிப்படிக்க வேண்டிய ஒரு நன்னூல்.

இதை இராமச்சந்திரன் அவர்கள் பல்துறை அறிஞர். சிரமமின்றி எதையும் கற்றுத் தேரும் இயல்பு உடையவர். சிறந்த கவிஞர். சோதிட இயலில் தேர்ந்தவர். என் மதிப்பில் நாளும் உயர்ந்து வருபவர். தாமரை நூலகம் மூலம் அவர் தமிழர்களுக்கு ஆற்றிவரும் தொண்டை நாடு நன்கு அறியும். அவர் வாழ்க! அவர் தொண்டுகள் மேலும் மேலும் சிறந்து விளங்குக.

அன்புடன்,
வலம்புரி சோமனாதன்

Koviloor Digital Library

இந்த நூல் அமைப்பில் கருத்துக்கள் எடுத்து கையாளப்பட்ட பிற நூற்கள்

1. திரு. T.V. சாம்பசிவம் பிள்ளை அகராதி :-பதிப்பாளர்:-The Research Institute of Siddhar`s Science, Mount Road, Chennai - 600 002.

2. அபிதான சிந்தாமணி :- எழுதியவர் ஆ. சிவப்பிரகாச முதலியார், B.A பதிப்பாளர் ஸி. குமார சாமி நாயுடு ஸன்ஸ், சென்னை - 1.

3. History Of Siddha Medicine :- ஆசிரியர் N. கந்தசாமி பிள்ளை Publishers Department Of Indian Medicine $ Homoeopathy, Chennai- 600106.

4. தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவமும் :- எழுதியவர் Dr. உத்தமராயன் பதிப்பாளர். தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால் பதிப்பிக்கப்பட்டது.

5. திருக்குற்றால நாதர் சுவாமி கோயில் வரலாறும், பண்பாடும். எழுதியவர் சொ. சுப்ரமணிய கவிராயர், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை- 600 113.

6. வால்காவிலிருந்து கங்கை வரை:- எழுதியவர் ராகுலசாங்கிருத்தியாயன் தமிழ்ப் புத்தகலாயம் சென்னை- 600017.

7. சிந்தனையாளர் டார்வின் :- பதிப்பாளர். பிரேமா பிரசுரம், ஆற்காடு ரோடு, சென்னை - 24.

8. சிவமகா புராணம் :- தூர்க்காதாஸ் S.K.சாமி, பிரேமா பிரசுரம், சென்னை- 600 024.

9. ஸ்ரீமத் பாகவதம் :- எஸ்.பி. இராமச்சந்திரன், லோட்டஸ் பப்ளிஸிங் ஹவுஸ் சென்னை - 600 026.

10. திருமூலர் திருமந்திரம் :- ஆசிரியர் திரு.ப.இராமநாத பிள்ளை. திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிமிடெட், சென்னை- 600 118.

11. தில்லைத் தலப்புராணம்:- ஆசிரியர் Dr. ச. மெய்யப்பன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 1.

12. யோக ஞான சாஸ்திரத் திரட்டு 10 பாகங்கள்:- பதிப்பாசிரியர்.எஸ்.பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

Koviloor Digital Library

13. போகர் 7000 ஏழு காண்டங்கள்:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 600 026.

14. போகர் ஜெனன சாகரம்:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 600 026.

15. போகர் கற்ப சூத்திரம் 300:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

16. அகஸ்தியர் 12000 முதல் 5 காண்டங்கள்:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

17. அகஸ்தியர் அமுத கலை ஞானம்:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

18. அகஸ்தியர் வாத காவியம் 1000 :- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

19. அகஸ்தியர் ஏம தத்துவம் என்னும் பஞ்ச காவிய நிகண்டு:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

20. கொங்கணவர் வாத காவியம் 3000 :-பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

21கருவூரார் வாதகாவியம் (நொண்டி) 700 :- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

22. சித்தர்கள் வரலாறு கூறும் சதுரகிரி தலப்புராணம்:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

23. நந்தீசர் கலைக்ஞானம் :- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

24. சட்டைமுனி வாத காவியம் 1000:- பதிப்பாசிரியர் எஸ்பி.இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

25. ரோமரிஷி வைத்தியம் 500:- பதிப்பாசிரியர் எஸ்பி. இராமச்சந்திரன், தாமரை நூலகம், சென்னை - 26.

26. காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000:- பதிப்பாசிரியர் எஸ்பி இராமச்சந்திரன். தாமரை நூலகம், சென்னை -26.

Koviloor Digital Library

பொருளடக்கம்

சித்தர் யார்	1
நவநாத சித்தர்கள்	5
திருமூலர்	7
திருமூலர் என்ற பெயர் ஏற்பட்ட வரலாறு	8
இறைவன் அளித்த உடல்	10
சதுரகிரித் தலபுராணத்தில் காணப்படும் கதை	11
மலரை முகர்ந்தால் மரணம்!	12
குணவதியின் கவலை!	14
கல்ப தேகம் கரைந்தது!	17
கல்விச் செறுக்கால் வந்தகேடு	18
திருமூலர் அருளிய நூல்கள்	20
திருமூலர் நூல் தொகுப்பு	21
நூலின் பெருமை	23
நூலின் சிறப்பு	24
திருமூலர் மார்க்கண்டருக்கு உபதேசம் செய்தது	"
சீடர்கள்	28
திருமூலர் காலம்	29
போகர் 7000 கூறும் செய்தி	30
சிதம்பர ரகசியம்	32
காலாங்கி நாதர்	34
மச்சரிஷி கூர்ம ரிஷி	39
வராகரிஷி - நரசிம்மரிஷி	"
காலாங்கிநாதர் வணிகனுக்குக் கோவில் கட்டப் பொருள் கொடுத்தது	42
போகமுனிவர்	47
போகர் பற்றி - அகஸ்தியர்	50
சித்தர்களின் சாதி	53
போகர் தியானத்தில் அமர்ந்தது	56
சிங்கத்துக்குப் போகர் உபதேசஞ் செய்தல்	57
பூனைக்கு உபதேசம்	60
போகர் காராம் பசுவுக்கு உபதேசம் செய்தது	62
போகர் ஆதிரசம் கொண்டு வந்த இரசக் கிணறு	64
சீனாவில் வாழ்ந்த காலத்தில்	68
சித்தர்கள் வழக்குரைத்தல்	69
சித்த மருத்துவத்தின் தந்தை போகரே!	73

Koviloor Digital Library

சித்த மருத்துவம்	74
வேதியியலின் தந்தை போகரே	75
கற்பமூலிகை	"
துரிசி வைப்பு	79
போகர் இயற்றிய நூல்கள்	81
கொங்கணவர்	82
கொக்கென்று.....?	85
சமாதிக்கு இடம் தேடி.....?	87
கௌதமரின் சாபம்	88
தேவரிடம் போ!	"
அண்டத்தில் பாய்ந்தான்	89
செம்பு மூலிகை	91
கொங்கணவர் இயற்றிய நூல்கள்	94
கருவூரார்	96
கருவூரார் பற்றிப் போகர்	99
போகரின் சீடர்	101
வேம்பின் கற்பம்	105
கருவூரார் நூல்கள்	107
இடைக்காடர்	108
கமலமுனி	115
சட்டைமுனி	117
சட்டைமுனியைப் பற்றி போகர் கூறியுள்ளது	119
சுந்தரானந்தர்	128
டமரானந்தர்	131
பாம்பாட்டிச் சித்தர்	133
பிண்ணாக்கீசர்	135
கஞ்சமலைச் சித்தர்	137
கல்லுளிச் சித்தர்	139
குதம்பைச் சித்தர்	141
நல்லொழுக்கம்	142
நல்ல விரதம்	"
சாதிப் பிரிவினை பற்றி	"
கடுவெளிச் சித்தர்	145
அகப்பேய்ச் சித்தர்	147
அழுகண் சித்தர்	149
விளையாட்டுச் சித்தர்	151
குருராஜர்	152

Koviloor Digital Library

கடைப்பிள்ளை	154
புலிப்பாணி	155
சிவ வாக்கியர்	156
தட்சிணாமூர்த்தி	163
கௌபாலர்	166
சுப்பிரமணியர்	167
மேலும் பலர்	170
பூனைக்கண்ணர்	"
நந்தீசர்	171
சித்தர்களின் நூல்களில்	172
வடதேசம் என்தேசம்	174
மாயசத்தி உரைத்த சொல்	176
சித்தர் மறைப்பு (பரிபாஷை)ச் சொற்கள்	178
சுத்த ஜலம்	"
நந்தீசர் கூறும் கற்ப மூலிகைகள்	180
நந்தீசர் காலம்	181
நந்தீசர் அருளிய நூல்கள்	182
தன்வந்திரி	183
அசுவினி தேவர்கள்	186
அகத்தியர்	189
வாதாபி வில்வலன்	192
சிவபெருமானும் ஆரியர்களும்	194
பாண்டிய நாட்டில்	199
பிரளயம்	"
பொதிகைமலையில்	200
நாதரிஷி	201
வேளாள அகத்தியர்	"
குற்றாலநாதர்	202
தைலக் கிணறு	203
கும்பேசுவரர் கோவிலில்	"
அகத்தியர் பெயரால் வழங்கும் நூல்கள்	"
புலத்தியர்	206
புலஸ்தியர் இயற்றிய நூல்கள்	207
தேரையர்	210
அகத்தியரும் தேரையரும்	208
தேரையர் ரசவாதம் செய்தது	216

Koviloor Digital Library

குருவுக்குப் பார்வை கொடுத்தது 217
இராமதேவர் 211
இராமதேவர் இயற்றிய நூல்கள் 226
யாகோபு 227
யாகோபு அருளிய நூல்கள் 231
யூகிமுனி 233
வாதம் செய்ய வேண்டிய கிரமம் 236
வாதம் அறிந்தவர்கள் 238
அயச்செம்புச் சத்துச் செந்தூரம் 239
மச்சமுனி 243
கோரக்கர் 246
அல்லமாப் பிரபு 253
காகபுசுண்டர் 255
காகபுசுண்டர் அருளிய நூல்கள் 261
உரோமரிஷி 262
உரோமரிஷி இயற்றிய நூல்கள் 265
பிரம்மமுனி 266
பிரம்மமுனி எழுதியதாக வழங்கும் நூல்கள் 267
வசிஷ்டர் 268
வசிஷ்டர் செய்த பிரசவ அறுவை சிகிச்சை 269
வருணன் 270
வால்மீகர் 273
பதஞ்சலி முனிவர் 274
வியாக்ரம பாதர் 277
அத்திரி மகரிஷி 278
பரத்துவாச மகரிஷி 280
பராசரர் 281
வேதவியாசர் 283
சுகப்பிரம்மம் 286
ஊர்வசி 287
வரரிஷி 290
பிருகு முனிவர் 293

முற்றும்

Koviloor Digital Library



திருமூலர்- (ஓர் கற்பனை வடிவம்)

Koviloor Digital Library

.போக மாமுனிவர். பழநி.

ஓர் கற்பனை வடிவம்

Koviloor Digital Library

சித்தர் யார்

அறிகுறியா மிருபத்தோ ராயிரத்து
அறுநூறாம் சீவனுரு ஏற்கவேண்டும்
செறிவான சாத்திரமெல்லா முணர்ந்து
செக முழுதும் சணப்பொழுதில் சஞ்சரித்து
சிறிதாகப் பெரிதாகத் தேகந் தன்னை
செய்தொளி கண்மனந் தெரிய வெத்தேசத்தும்
நெறியான பாஷையுடன் நயனபாஷை
நிகழ்த்துவ தோடாகாயத் துலாவு வானே

சுப்.சிவ.39

உலவித் தூரத்திலுள பொருளைக் காணல்
உற்றுலகத் துற்ற பிரகாச மெல்லாம்
பலவிதச் செய்கையு மறிவா ரிலேசதாக
பார்த்தாலும் சாதனத்துக் கிடையூறென்று
புலனடங்கிக் கொண்டு சுயஞ் சோதிபாதம்
போற்றி யீரேழுலகு மிருப்பானென்று
கலசமுனிக் குபதேச உண்மை யோகம்
கந்தவேள் உரைத்த தெனக் கண்டு கொள்ளே. 40

இருபத்தோராயிரத்து அறுநூறு மூச்சையும் இருபத்தோராயிரத்து அறுநூறு உருவாக ஏற்கவேண்டும். ஒரு மூச்சுக்கு ஒரு உரு என்றால் இரவும் பகலும் இடைவிடாமல் செபத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டும்.

பொருள் பொதிந்த சாத்திரங்கள் எல்லாவற்றையும் உணர்ந்திருக்க வேண்டும். ஒரே ஒரு நொடி நேரத்திற்குள் இந்த உலகம் முழுவதையும் சுற்றிவரக் கூடிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

தன்னுடைய உடலை அணுவில் அணு என்று சொல்லத்தக்க அளவில் சிறியதாகவும், பெரியவற்றுள் எல்லாம் மிகப் பெரியதாகவும் செய்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

Koviloor Digital Library

எந்த நாட்டின் எந்த மூலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை, வழக்க மொழியாலும், கண்களாலேயே அறிவுறுத்தவும் அறியவும் கூடிய நயனபாஷையாலும் தான் அறிந்து கொள்ளவும் மற்றவர்களுக்கு அறிவுறுத்தவும் ஆற்றல் படைத்தவனாக இருக்கவேண்டும். அதோடு ஆகாயத்தில் சஞ்சரிக்கும் திறன் பெற்றிருக்கவும் வேண்டும்.

தொலைவிலுள்ள பொருள்களைக் காணும் ஆற்றல்வேண்டும். உலகத்தில் நடைபெறும் எல்லாவிதமான செயல்களையும் இருந்த இடத்திலிருந்தே எளிதாக அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வளவும் பெற்றிருந்தாலும் புலன்களை அடக்கி சுயமான ஒளியாக விளங்கும் பரிபூரணத்தின் பாதம் போற்றி, அது ஈரேழு உலகங்களிலும் நிறைந்திருக்கக் கூடியதாகையால் அந்தப் பரிபூரணத்தின் தன்மையைத் தானும் அடைந்து இருப்பவனே சித்தனாவான் என்று,

கலச முனியாகிய அகத்தியருக்குக் கந்தவேளாகிய முருகப்பெருமான் உபதேசித்த உண்மைப் பொருளாகும் என்பதை உணர்வாயாக.

அணிமாதி சித்திகள் எட்டையும் அடைந்தவனே சித்தன் என்பதை முருகப்பெருமான் கூறுகிறார். சுப்பிரமணியர் சிவயோகம் 20 என்ற நூலில் (யோக ஞான சாஸ்திரத் திரட்டு முதல் பாகம்) உள்ள பாடல்கள் இவை.

அதுமட்டுமல்ல,

மாயத்தைக் கண்ட சித்தர்
மதியதைப் பெருக்கிக் கொண்டு
காயத்திலிருக்கும் போதே
கர்த்தனைக் கலந்து கொள்வார்
நேயத்தை விட்ட போது
நேர்சிவந் தன்னைச் சேர்வார்
மாயத்தைக் கண்டு சூட்ட
வாசியில் வாழு வாரே.

சுப்பிரமணியர் சுத்த ஞானம் நூறில் அறுபத்தொன்றாவது பாடல்

இது

Koviloor Digital Library

சித்தர்கள் தங்கள் ஆன்ம ஞானத்தைப் பெருக்கிக் கொண்டு தாங்கள் உடலுடன் இருக்கும் பொழுதே இறைவனுடன் கலந்து விடுவார்கள். நினைவு செயல் என்பவற்றைத் துறந்து சிவனோடு ஒன்றாகச் சேர்ந்து விடுவார்கள். அவர்கள் வாசியில் வாழ்வார்கள்.

என்றும் கூறுகிறார்.

தாங்கள் உடலுடன் இருக்கும்பொழுதே இறைவனுடன் கலந்து வாழும் தன்மையைப் பெறுபவரே சித்தர் என்பது இதனால் உறுதியாகிறது.

அப்படிப்பட்ட தன்மையடைவதை மறுபிறப்பு என்றே சுப்பிரமணியர் கூறுகிறார். அதன்பிறகு அவருக்குப் பிறப்புமில்லை. இறப்புமில்லை என்கிறார்.

பரத்தோடே சேர்ந்தவர்கள் பரமே யாவார்
பரப்பிரமப் பிறவியதாய் எங்குந் தோன்றும்
வரத்தோடே யருள்பெற்று மனமுந்தேறி
வாசியென்ற குதிரையினால் வீடுகட்டி
சரத்தோடே மனையதனில் அறிவிற் சேர்ந்தால்
தயவான மறுபிறப்பு இதுதானப்பா
திரத்தோடே இந்த வகை அறிந்தாயானால்
சிவத்தோடே சேருவதிற் செயம் பெற்றாயே.

சுப்-சுத் - 94

பரத்தோடு சேர்ந்தவர்கள் பரப்பிரமமாய் எங்கும் நிறைந்தவர்களாகி விடுவார்கள். வாசிஎன்ற வீட்டில் வசிப்பவன் மறுபிறப்புப் பெற்றவனாவான். அதற்குமுன் இருந்த அவனுடைய பிறப்பு பயனற்ற பிறவியாகையால் அதை லட்சியம் செய்ய வேண்டியதில்லை. அவ்வாறு மறுபிறவி யடைந்தவன் சிவத்தோடு சேர்வதில் வெற்றி பெற்றவனாவான்.

உண்மையான சித்தர் நிலை இதுவேயாகும். அவ்வாறில்லாமல்,

பொன்வெள்ளி செய்கிறவன் பெரியோன் அல்ல
புகழான அஷ்ட சித்தி பெரியோனல்ல
முன்நின்ற வயித்தியனும் பெரியோன் அல்ல
மூச்சடக்கி யெழும்பினவன் பெரியோன் அல்ல

Koviloor Digital Library

சின்னமுள்ள குழியிருப்போன் பெரியோன் அல்ல
திறமுடனே கெவனமிட்டோன் பெரியோன் அல்ல
தன்னிலையை அறிந்தவனே பெரியோனாவான்
தனையறியான் வகைகெட்ட சண்டிமாடே. 98

பெரிய வாதி கணப்பொழுதில் பொன் செய்வான். வெள்ளி செய்வான். வாத வித்தையில் எவ்வளவு பெரியவனாக இருந்த போதிலும் பெரியவனாகி விடமாட்டான்

வைத்தியத்தில் மிகப்பெரும் நிபுணனாக இருந்தாலும் பெரிய வனாகி விடமாட்டான். மூச்சை அடக்கி ஆகாயத்தில் எழும்பி நிற்கும் அட யோகியும் பெரியவனாக மாட்டான். சமாதியில் இறங்கிப் பத்தாண்டு இருபதாண்டு கழித்து வந்தாலும் பெரியவனாகிவிட மாட்டான். ஆகாயத்தில் சஞ்சரித்தாலும் பெரியவனாகிவிட மாட்டான். இவ்வளவு சித்திகளை அடைந்த போதிலும் போதாது. தான் யார் என்பதை உணர வேண்டும். தன் நிலையை உணர்ந்தவன் தானே சிவமாகி விடுவான். அப்படியறியாதவன் வெறும் சண்டிமாடு என்று தான் நினைக்கவேண்டும்.

சித்தர் யார் என்பதை இதைவிடச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல யாரால் முடியும்?

இனிச் சித்தர்கள் வரலாறுகளைக் கவனிப்போம்.

Koviloor Digital Library

நவநாத சித்தர்கள்

இமயம் முதல் குமரிவரை பரவிக் கிடந்த பண்டைய தமிழ் நாட்டிலே எத்தனையோ சித்தர்கள் வாழ்ந்தனர். அவர்களின் எண்ணிக்கை எழுபதாயிரம் என்பர் சிலர். எண்பதாயிரம் என்பர் சிலர், ஏழுலட்சம் என்று சொன்னவர்களும் உண்டு.

அட்டமா சித்திகளை அடைந்து வானமே எல்லையாய் விண்வெளியில் உலாவினர். ரோமாபுரி முதல் சீனம் வரை எல்லா நாடுகளுக்கும் சென்று வந்தனர். மக்களின் துன்பங்களைப் போக்கி நல்வாழ்வடையச் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

மனிதன் பிறவி பெற்ற பயனை அடைந்து ஆத்ம ஞானமும் விடுதலையும் பெறவேண்டுமென்றால் அதற்கு இந்த சரீரம் உள்ளபோதே முயற்சி செய்ய வேண்டும். உடலை இழந்து விட்டால் பிறகு ஆன்மாவுக்குப் போக்கிடம் கிடையாது. அதனால் பிறவிப் பிணியை நீக்குவதற்காக முயற்சிக்கவும் முடியாது.

உடம்பார் அழிந்தால் உயிரார் அழிவார்
திடம்படு மெய்ப்பொருள் தேறவும் மாட்டார்

அதனால் உடல் இருக்கும் பொழுதே ஆன்ம சாதனையை அடைந்து விடவேண்டும் என்ற அழுத்தமான கொள்கைப் பிடிப்புடையவராக இருந்தனர்.

அதற்காக இந்த உடல் எப்பொருள்களால்வளர்கிறது. எதனால் வளர்ச்சி தடைப்படுகிறது. எக்காரணங்கள் தசைகள் நரம்புகளில் சோர்வையும் முதுமையையும் உண்டாக்குகின்றன? மனித உடலுக்கு ஏற்படும் நரை, திரை, மூப்பு என்பவற்றின் காரணங்கள் யாவை என்பவற்றை ஆராய்ந்தனர். பிணி, மூப்பு, சாக்காடு என்பவற்றை வெல்ல முடியும் என்பதைத் தங்கள் நீண்ட நெடுங்கால ஆய்வுகளின் பயனாய்க் கண்டறிந்தனர்.

இயற்கையிலிருந்து கிடைத்த மூலிகைகள், உப்புக்கள், உலோகங்கள், பாஷாணங்கள் எல்லாவற்றின் தன்மைகளையும் ஆராய்ந்து அவற்றால் உடலைப் பாதுகாக்கும் கற்ப மருந்துகளைக் கண்டு பிடித்தனர்.

Koviloor Digital Library

ஒவ்வொரு சித்தரும் தாமே முயன்று, தாமே செய்து பயன் கண்டனர் என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்கது. இயம நியமங்களோடியைந்த கடுமையான கட்டுப் பாட்டுடன் கூடிய வாழ்க்கை, எப்பொழுதும் பிறர்க்கு நன்மையே செய்யவேண்டும் என்ற சிந்தனை, எவ்வுயிர்க்கும் துன்பம் ஏற்படக் கூடாதென்ற கனிவினால் உண்டான திட வைராக்கியம் இவையே சித்தர்களின் செம்மையான வாழ்க்கைக்கு அடித்தளங்களாயின.

மூச்சுப் பயிற்சியினால் பெற்ற யோக சாதனையால் கற்ப தேகத்தோடு கூடிய சித்தர்கள் அட்டமா சித்திகளும் பெற முடிந்தது. சித்தர்கள் கடவுள் நிலையை அடைந்து விட்டார்கள் என்றே கூறவேண்டும்.

சித்தர்கள் எல்லோரும் மனிதர்களே! மனிதர்களாக இருந்து மனிதர் நிலையைத் தாண்டியவர்கள். விண்வெளியில் வசிப்பவர்கள் மனிதர் கண்களுக்குப் புலப்படாதவர்கள். எல்லாம் கடந்த பேரின்ப நிலையிலே வசிப்பவர்கள். இப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. இவர்களில் நவநாத சித்தர்கள் என்று அழைக்கப்படும் ஒன்பதின்மர் முக்கியமானவர்கள்.

சத்யநாதர்	வகுளிநாதர்
சதோக நாதர்	மதங்க நாதர்
ஆதி நாதர்	மச்சேந்திர நாதர்
அனாதி நாதர்	கஜேந்திர நாதர்
	கோரக்க நாதர்

இந்த ஒன்பது நவநாத சித்தர்களும் ஒன்பது கோடிச் சித்தர்களுக்குச் சமமானவர்கள் என்று கூறப்படுகிறது.

இவர்கள் எப்பொழுதாவது வானவெளியாகச் செல்லும் பொழுது இனிய கானம் ஒன்று மிதந்து செல்வதைப் போன்ற இனிய உணர்ச்சியைச் சிலர் அடைவர். சித்தர் நெறியில் ஒரு தகுதியை அடைந்தவர் களாலேயே அதைக் கேட்க முடியும்.

சித்தர் என்ற நிலையை அடையத் தகுதியானவர்களுக்கு உதவுவதே இவர்களின் செயல். எல்லாம் அறிந்தவர்களும் உலகத்தின் எந்த மூலையில் ஒரு சிறிய அசைவு ஏற்பட்டாலும் அதை உடனே உணரக் கூடிய ஆற்றல் படைத்தவர்களுமான இவர்களே சித்த மார்க்கத்தின் வழிகாட்டிகள். தோன்றாத் துணைவர்கள் என்று கூறலாம்.

Koviloor Digital Library

திருமூலர்

நந்திகள் நால்வர்

திருமூலர் கைலாய பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர்களில் முதலாமவரும் முதன்மையானவருமான சிவபெருமானிடமும் நந்தீசரிடமும் உபதேசம் பெற்றவர்.

சிவ கணங்களில் முதன்மை பெற்ற நந்தீசரோடு ஒப்பாக வைத்து எண்ணப்படுபவர். திருமூலரே தம்மைப்பற்றிக் கூறும்பொழுது

நந்தி யருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மருமாமே.

திருமந்திரம் 68

என்று கூறுகிறார்.

பாடலில் முதற் சொல் சிவபெருமானையே குறிக்கிறது, திருமந்திரத்தில் பல இடங்களிலும் திருமூலர் பிரான் சிவபெருமானை நந்தி என்றே குறிப்பிடுகிறார்.

நந்தி அருள் பெற்றவர்களே நாதர்கள்! மற்றவர்களுக்கு அத்தகுதி கிடையாது. நாதன் என்றால் தலைவன், மேன்மையானவன் என்று பொருள். அத்தகுதியை அடைவதென்பது சிவ பெருமானின் அருளைப் பெற்றவர்க்கே சாலும். அப்படிச் சிவபெருமான் அருளைப் பெற்று, சிவபெருமானைக் குறிப்பிடுவது போன்றே நந்தி என்ற பெயரால் குறிப்பிடப் படுபவர்கள் நால்வர். அவர்களோடு சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்ரமர் ஆக மூவரோடு என்னையும் சேர்த்து எண்மரும் நந்தியருள் பெற்ற நாதர்களாவோம் எனக் குறிப்பிடுகிறார்.

இங்கு நந்திகள் நால்வர் எனக் குறிப்பிட்டது சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்று கருதப்படுகிறது. நந்திகள் நால்வர் யாவர்

Koviloor Digital Library

என்பதைத் திருமூலரும் குறிப்பிடவில்லை. வேறு பிறரும் குறிப்பிட வில்லை. அதனால் சனக சனந்தனாதிகளே எனக் கொள்வது எவ்வாறும் பொருந்தாதே.

பதஞ்சலி முனிவர் என்று குறிப்பிட்டது வடமொழியில் மகா பாஷ்யம், யோக சூத்திரம் முதலான நூல்களை எழுதியவரே. இவர் தமிழ் நாட்டில் வசித்துத் தமிழிலும் சில நூல்களை இயற்றியுள்ளார்.

திருமூலர் பதஞ்சலி வியாக்ரம பாதரோடு சிதம்பரம் கனகசபையில் இறைவன் திருநடனம் கண்டவர் என்பதை

செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்று
அப்படி நல்கும் அருள்நந்திதாள் பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந்தேனே.

என்னும் திருமந்திரப் பாடலால் அறியலாம்.

கயிலாயத்தில் இருந்த காலத்தில் அவர் நம்பிரான் சுந்தரர் என்ற பெயர் பெற்று விளங்கினார்.

மந்திரங் கொண்டு வழிபடுவோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்
நந்தி என் நாதன் நாவார ஓதினன்
பைந்தொடி மேனிப் பயனது தானே
.....
.....
தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன் மொழிந்தானே.

என்ற பாடல்களால் அவருக்குச் சுந்தரன் என்ற பெயர் வழக்கிலிருந்தது என்பதை அறியலாம்.

திருமூலர் என்ற பெயர் ஏற்பட்ட வரலாறு

சிவபெருமானிடம் உபதேசம் பெற்று நந்திகளில் ஒருவராக எண்ணப்பட்ட சுந்தரர் பூலோகத்திற்குச் சென்று அகஸ்திய முனிவரைச் சந்தித்து அளவளாவ விருப்பம் கொண்டார்.

Koviloor Digital Library

ஆகாயமார்க்கமாக சுந்தர் வந்து கொண்டிருந்தபோது ஒரு மலைச்சாரலில் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் யாவும் ஓரிடத்தில் கூடி நின்று ஓலமிட்டு அழுவதைக் கண்டார். கருணைமிகக் கொண்டு அப்பசுக்களின் துயரத்திற்குக் காரணத்தை அறிய வேண்டி அருகில் சென்று பார்த்தபொழுது அப்பசுக்களை மேய்த்துவந்த இடையன் மரணமடைந்து கிடப்பதைக் கண்டார்.

அவனுடைய உடல் நீலம் பாரித்து இருந்தது. சர்ப்பம தீண்டியதால் அவன் திடீரென்று அகால மரணமடைந்து விட்டான் என்பதைச் சுந்தர் புரிந்து கொண்டார். அவன் முகத்தை நக்கியபடியும் உடலை வருடியபடியும் பசுக்கள் கண்ணீர் பெருக்கியபடி ஆறாத்துயரத்தில் ஆழ்ந்திருந்தன.

சுந்தர் அவற்றின் துயரத்தைப் போக்க நினைத்தார். அம்மலைமீது இருந்த ஒரு குகைக்குள் சென்று தமது உடலைக் கிடத்திவிட்டு சூக்கும தேகத்தில் திரும்பி வந்து இடையனின் உடலில் பிரவேசித்தார்.

இடையன் தூங்கி எழுந்தவன்போல் எழுந்து நின்றான். பசுக்களைத் தடவிக்கொடுத்தான். அவை மகிழ்ச்சியில் பெருக்கால் தாண்ட வாயுன. பிறகு தாமாக வீடு நோக்கித் திரும்பின. இடையனும் அவற்றுடன் சென்று அவையனைவரையும் வேலியிடத்தில் சேர்த்தபின் தனியே ஓர் ஒதுக்குப்புறமாக நின்றான்.

மூலன் என்ற பெயரை உடைய அந்த இடையனின் மனைவி தன் கணவன் வீட்டிற்கு வராமல் ஒதுங்கி நிற்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தவளாக அவனிடம் போய், "உனக்கு என்ன கோபம்? ஏன் இங்கே நிற்கிறாய்? வீட்டுக்கு வா," என்று அழைத்தாள்.

தன் கணவன் ஏதும் பேசாமல் நிற்பதைக் கண்டு அவன் கையைப்பிடித்து சாசமாக அழைக்க முயன்றாள். மூலன் அவள் கையை உதறிவிட்டு, "என் கையைத் தொடாதே! நான் உன் கணவன் அல்ல." என்று கூறி மறுத்தான்.

இடைச்சி விடவில்லை. தன் கணவனுடைய விபரீத நடத்தை அவளுக்கு ஆத்திரத்தையும் அழுகையையும் உண்டாக்கின. கூக்குரலிட்டு அழுதுகொண்டு ஓடிப்போய் அவ்வூர்ப் பெரிய மனிதர்களிடம் முறையிட்டாள்.

சிறிது நேரத்திற்குள் மூலனைச் சுற்றிலும் ஒரு கும்பல் கூடிவிட்டது. மூலனை விசாரித்தவர்கள் அவனுடைய பேச்சிலும்

Koviloor Digital Library

நடத்தையிலும் காணப்பட்ட மாறுதல்களைக் கண்டு தங்கள் முன் இருப்பவர் யாரோ பெரிய சிவயோகி என்பதை உணர்ந்தனர். அவர் காலில் விழுந்து வணங்கி விடை பெற்றுக்கொண்டதோடு மூலன் மனைவியையும் அவருக்குத் தொல்லை கொடுக்காமல் அகலும்படி கட்டளையிட்டனர்.

இறைவன் அளித்த உடல்

மூலன் உடலில் இருந்த சுந்தரர் தம் உடலை மறைத்துவைத்திருந்த குகைக்குச் சென்று பார்த்தபொழுது அது மறைந்து விட்டதைக் கண்டார். தாம் அந்த உடலிலேயே வசிக்க வேண்டும் என்பதுதான் சிவபெருமான் திருவுள்ளம் என்பதைப் புரிந்து கொண்டார். சீவன் கடைத்தேறும் சித்தர் நெறிகளைத் தாம் தமிழில் பாட வேண்டும் என்ற விருப்பத்தாலேயே இறைவன் அவ்வாறு செய்தார் என்று எண்ணிப் பெரும் வியப்பும் பேருவகையும் கொண்டார்.

கயிலாயத் தொரு சித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலா நோயுடன் வீயத் துயர நீடும்
பசுக்களைக் கண்டு அவனுடலில் பாய்ந்து போத
அயலாகப் பண்டையுடல் அருளான்மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொரு பாவாகக்
குயிலாரும் அரசடியிலிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகினாரே.

திருத்தொண்டர் புராண சாரம்.

கயிலாயத்திலிருந்த ஒரு சித்தர் பொதிகை மலையில் போய்ச் சேர்வதற்காகப் புறப்பட்டார். வழியில் காவிரி நதியால் சூழப்பட்ட சாத்தனூரைச் சேர்ந்த மூலன் என்பவன், இன்னதென்று அறியப்படாத நோயால் மரணமடைய-அதைக் கண்டு நீண்ட துயரில் ஆழ்ந்து போயிருந்த பசுக்களைக் கண்டார். உடனே அவன் உடலில் புகுந்தார். பசுக்களை அவ்வவற்றின் வீடுகளில் சேர்த்தபின் தன் பழைய உடலைத் தேடி வர அது காணாமல் போய்விட்டது கண்டு அது இறைவன் திருவருளே என்றெண்ணி ஆவடு துறையை அடைந்து அங்கு ஒரு அரசமரத்தடியில் யோகத்தில் வீற்றிருந்து ஓர் ஆண்டுக்கு ஒரு பாடலாகத் திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கூறிப்பின் கயிலையை அடைந்தார்.

Koviloor Digital Library

திருத்தொண்டர் புராணசாரம் என்ற நூலில் உள்ள மேற்கண்ட பாடல் திருமூலர் வரலாற்றைத் தெளிவாகக் கூறுகிறது. இதே வரலாறு திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலிலும் கூறப்பட்டுள்ளது.

குடி மன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பை புக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டென் உச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூலனாகின்ற அங்கணனே.
-திருவந்தாதி.

நல்லகுடி மக்களால் சிறப்புற்று விளங்கிய சாத்தனூர் என்னும் ஊரில் (கோக்குலம்-பசுக்களின் கூட்டம்) பசுக்களை மேய்ப்பவனான மூலனுடைய உடம்பில் புகுந்து-

தமது திருமுடியிலே விளங்காநின்ற (கூனல்) வளைந்த பிறையை உடைய இறைவனைத் தமிழால் முழுமையாக-

உலகில் நிலைத்து நிற்பவையான (படி-உலகம்) வேதாகமங்களின் படியே பாடி-எனது உச்சந் தலைமீது-

தமது திருவடியை வைத்து ஆட் கொண்ட பிரான் மூலன் என்கிற அழகிய கண்களை உடைய பெருமானே ஆவார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளைக் கூறுவதான சேக்கிழார் பெரிய புராணத்திலும் இதே வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

சதுரகிரித் தலபுராணத்தில் காணப்படும் கதை

திருமூலர் பெருமான் ஒருநாள் வானவெளியாகச் சஞ்சரித்து வரும் காலத்தில்,

குய்யோ முறையோ என்று பலர் அலறி அடித்துக் கொண்டு அழும் குரல் கேட்டுத் திடுக்கிட்டார். உடனே விண்ணிலிருந்து மண்ணை நோக்கி இறங்கினார்.

அவர் இறங்கிய இடம் ஒரு அரண்மனை!

அரண்மனையில் அவலக் குரலா? ஏன்? சூக்கும உடலோடு இருந்த திருமூலர் பிரான் மற்றவர்களுக்குத் தெரியாமல் உள்ளே நுழைந்து பார்த்தபோது அந்த நாட்டு மன்னன்,- கட்டிளம் காளை- வாழத் துடிக்கும் பருவம்- திண்தோள்களும் அகன்ற மார்பும் கொண்ட ஆணழகன்-

Koviloor Digital Library

இறந்து கிடப்பதையும் அவனுடைய பட்டத்துராணியும் மற்ற அரண்மனைப் பெண்டிரும் துக்கம் தாளாமல் ஓலமிட்டு அழுவதையும் கண்டார்.

உடனே மூலர் பிரான் உள்ளம் கசிந்தது. அக்கணமே விண்வெளியில் கிளம்பி மலைகளுக்கிடையே இருந்த தன் குகைக்கு வந்து சேர்ந்தார். தன் அந்தரங்க சீடனான குருராஜன் என்பவனை அழைத்து, "மகனே! நான் சிறிது காலம் பூவுலகில்: ஒரு மனிதனாக, மன்னனாக வாழ விரும்புகிறேன். பாண்டி நாட்டில் இராசேந்திரபுரி என்னும் ஊரை ஆண்டு வந்த மன்னன் வீரசேனன் திடீரென்று மரணமடைந்து விட்டான். அவனுடைய மனைவியும் குடிமக்களும் துயரம் தாளாமல் ஓலமிட்டு அழுத காட்சி என் மனதைத் தொட்டு விட்டது. அந்த வீரசேன மகாராஜன் உடலில் பிரவேசித்து சிறிதுகாலம் உலக வாழ்க்கையில் ஈடுபட விரும்புகிறேன். நான் திரும்பி வருகிறவரை கல்ப சாதனையால் வைரம் பாய்ந்து விளங்கும் இந்த உடலைக் காப்பாற்றி வைத்திருப்பாயாக", என்று கூறினார்.

குரு சொல்லைத் தெய்வ வாக்காக மதிக்கும் சீடன் உடனே அதற்கு ஒப்புக் கொண்டான். திருமூலர் பிரான் குகையில் மறைவான ஓர் இடத்தில் தன் உடலைக் கிடத்திவிட்டுச் சூக்கும உடலோடு விண்வெளியில் பறந்தார்.

2 மலரை முகர்ந்தால் மரணம்!

வீரசேனன் திடுக்கிட்டு எழுபவனைப்போல் விழித்தான்.

திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

பிரேதத்தை அலங்கரித்திருந்த மலர்மாலைகள் சிதறி விழுந்தன. சட்டென்று எல்லாவற்றையும் பிடுங்கிப் போட்டு விட்டு எழுந்து உட்கார்ந்தான்.

ஓலமிட்டு அழுதவர்களின் ஒப்பாரி நின்றது.

வியப்பில் கண்கள் விரிந்தன. திகைத்தவர் வாய்களை மூடவே இல்லை. "ஆ...ஓ....அம்மா.... அரசே....சுவாமீ..... "ஏக காலத்தில் குரல்கள் ஒலித்தன. "சுவாமீ.... தாங்கள்.... கடவுள் என்னைக் காப்பாற்றி விட்டார். நான் செய்த தவம் பலித்து விட்டது. என் கணவர் இறக்கவில்லை," என்று கூவிய பட்டத்துராணி மூர்ச்சித்து அரசன் மார்மேல் சாய்ந்தாள்.

அவளை மெதுவாகத் தட்டிக் கொடுத்துவிட்டு எழுந்து நின்ற அரசன், "நான் தான் எழுந்து விட்டேனே? இன்னும் என்ன கூட்டம்?

Koviloor Digital Library

எல்லோரும் போங்கள்.. அவரவர் பணியைக் கவனியுங்கள்," என்று உத்தரவிட்டான்.

எத்தனையோ கேள்விகள்- மந்திரிகள் கேட்க நினைத்தனர் கேட்கவில்லை!

எத்தனையோ சந்தேகங்கள்-கூடியிருந்தவர் உள்ளங்களில்! ஆயினும் ஊமைகளைப் போல் கலைந்து சென்றனர்.

"சுவாமீ... என்ன நேர்ந்தது? எதனால் மயக்கமுற்றீர்கள்? ஐயய்யோ.... தாங்கள் இறந்துபோய் விட்டதாக அல்லவா அரண்மனை வைத்தியரும் கூறிவிட்டார்...." மகாராணி கேட்டாள்.

"எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. பிறகு பேசுவோம்....." அரசர் ராணியை அழைத்துக் கொண்டு நடந்தார். ராணிதான் அவரைப் பள்ளியறைக்கு அழைத்துச் சென்றாள்.

மறுநாள் அரசவையில் அதே கேள்விகள் எழுந்தன.

"மகாராஜா நாங்கள் தவறு செய்து விட்டோம். அரண்மனை வைத்தியன் தாங்கள் இறந்துவிட்டதாகக் கூறினான். அவனை உடனே கழுவில் ஏற்ற வேண்டும்.." என்று முழங்கினார் முதல் அமைச்சர்.

"வேண்டாம் வேண்டாம்... அவர் சொன்னது உண்மையே!"

"மகாராஜா....?"

"ஆம். அரண்மனை வைத்தியர் சொன்னது உண்மை என்றேன்....."

"எப்படி மகாராஜா! எப்படி? தாங்கள் ஆரோக்கியமாகத் தானே அரசவையிலிருந்து சென்றீர்கள்? இரண்டு நாழிகை நேரத்திற்குள் நீங்கள் மூச்சுப் பேச்சற்றுக் கிடப்பதாகக் கூறினார்களே?..."

"அதுவும் உண்மை!"

"மகாராஜா... உண்மையைத் தாங்கள் கூறினால் தான் தெரிந்து கொள்ள முடியும். இந்த அரசவையின் ஐயத்தைப் போக்க வேண்டியது தங்கள் கடமை...."

"நான் இறந்து போனது உண்மை. பிறகு பிழைத்துக் கொண்டதும் உண்மை....."

Koviloor Digital Library

"எப்படி மகாராஜா? நம் நாட்டில் இப்படி ஒரு சம்பவம் இதன் முன் நிகழ்ந்ததில்லையே...."

"விதியின் எத்தனையோ விளையாடல்களுக்கு விடை காண முடியாது அமைச்சரே...."

"இந்த நாட்டு மக்களுக்குத் தாங்கள் ஏதாவது கூறியாகவேண்டும். இல்லாவிட்டால் மன்னருக்கு நடந்தது நாளை நமக்கு நடவாதா என்று எல்லோரும் அஞ்சுவார்கள்....."

"ஆம் அமைச்சரே! அவையிலிருந்து சென்ற நான் சிறிதுநேரம் பூங்காவில் உலாவச் சென்றேன். கண்ணைக் கவரும் அற்புத மலர் ஒன்று ஆடி அசைந்து என் உள்ளத்தை அள்ளியது. அதன் மணம் மெல்லத் தவழ்ந்து வந்து என் ஆவலைத் தூண்டியது. அதைப் பறித்து முகர்ந்தேன். உடனே தலை சுழன்றது. கண்கள் இருண்டன. நான் இறந்து விட்டேன்..."

"மகாராஜா மலரை முகர்ந்தால் மரணமா? என்னால் நம்ப முடியவில்லையே..."

"ஆம் அமைச்சரே! அதுதான் விதியின் விந்தை!அந்த மலரில் கார்க்கோடகன் என்னும் கரிய நாகம் தன் கொடிய விஷத்தை உமிழ்ந்து வைத்திருந்தது. அதை நான் அறியவில்லை....."

அரசவையில் ஏற்பட்ட பரபரப்புக்கும், குழப்பத்துக்கும் அளவே இல்லை. அன்று அரசவை கலைந்த பின்னும் எல்லோரும் அதைப் பற்றியே பேசினர். அதன்பின் பலநாள் வரைகூட அந்தப் பேச்சு ஓயவில்லை.

3. குணவதியின் கவலை!

திருமூல-வீரசேன மகாராஜன் ஆட்சியில் நாட்டில் செல்வம் கொழித்தது. நீதி தழைத்தது. குற்றங்கள் குறைந்தன. மக்கள் அனைவரும் எவ்விதக் குறையுமின்றி மன நிறைவோடு வாழ்ந்தனர்.

அரண்மனை உல்லாசப் பூங்காவாகத் திகழ்ந்தது. எல்லோரும் நன்கு கவனிக்கப்பட்டனர். அதனால் அமைச்சர்கள் முதல் பணியாட்கள் வரை அத்தனை பேரும் கடமையில் தவறாத கண்ணியர்களாய், பண்பும் ஒழுக்கமும் மிக்க புண்ணியர்களாய்த் திகழ்ந்தனர்.

எல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருந்தனர். ஆனால் மகாராணியின் மனம் மட்டும் சந்தேகப் புழுவால் அரிக்கப்பட்டுக்

Koviloor Digital Library

கொண்டிருந்தது. சஞ்சலத்தால் அவள் தத்தளித்தாள். அரசன் தன் அருகில் இருக்கும் சமயங்களில் உலகையே மறந்து விடுவாள். அவன் ஒரே ஒரு கணம் அப்பால் சென்றுவிட்டால் கூட எல்லாவற்றையுமே இழந்து விட்டது போல் தவிப்பாள்.

அவள் உள்ளத்துள் துளிர்த்த அந்த சந்தேகம் கிளைவிட்டு, இலைவிட்டு, பூவும் காயும் கனியுமாய்ப் பூதாகாரமாக வளர்ந்து விட்டது. இனி மேலும் தாமதமானால் தாங்க முடியாது. அரசரிடம் அதைப் பற்றிக் கேட்டே ஆக வேண்டும் என்று தீர்மானித்து விட்டாள்.

ஒரு இரவு! இரண்டுபேரும் தனிமையாக இருந்த நேரத்தில்....."கண்ணாளா..... நான் ஒன்று கேட்பேன். கோபித்துக் கொள்ள மாட்டீர்களே.....?" என்று ஆரம்பித்தாள்.

"நான் எப்போதாவது யாரிடமாவது கோபித்துப் பார்த்திருக்கிறாயா?"

"அதுதான் என் சந்தேகம். முன்பெல்லாம் சட்டென்று கோபம் கொள்வீர்கள். யாராவது குற்றம் செய்தால் மன்னிக்கவே மாட்டீர்கள்?"

"இப்போது தான் யாரும் குற்றம் செய்வதே இல்லையே"

"கடுமையாகத் தண்டிப்பீர்கள். இரக்கமே காட்ட மாட்டீர்கள்...?"

"கருணை இறைவனின் பண்பல்லவா?"

"ஆம்.... ஆனால் அது தங்கள் பண்பாக இருந்ததில்லை....?"

"நான் நல்லவனாகிவிட்டேன். அதற்காக வருந்துகிறாயா?"

மகாராணி விழித்தாள். உடனே பேச்சை வேறு முனையிலிருந்து ஆரம்பித்தாள். "ஆம் மக்கள் எல்லோரும் நல்லவர்களாகி விட்டார்கள். நாடும் நல்லதாகிவிட்டது... எதனால்? எப்படி? அதுதான் என் கேள்வி...?"

"இதற்கெல்லாம் யாராவது கேள்வி கேட்டுக் கொண்டிருப்பார்களா...? வா. போகலாம். இனிய இரவும் நறுமணத் தென்றலும் வீண் போகின்றன".

"பிரபு! தாங்கள் யார்? நாட்டையும் மக்களையும் அடியோடு மாற்றிவிட்ட தாங்கள் யார்...? தாங்கள் பழைய மகாராஜா அல்லவே

Koviloor Digital Library

அல்ல. தங்களுடன் இருக்கும்போது ஒவ்வொரு கணமும் நான் அதை உணர்கிறேன்...".

திருமூல வீரசேனர் யோசித்தார். தன் நடத்தை மாறுபட்டிருப்பதை அவள் உணர்ந்து கொண்டாள். இனியும் அவளை ஏமாற்ற முடியாது என்று நினைத்தார். "நீ நினைப்பது உண்மைதான்! உன் கணவன் வீரசேனன் இறந்து விட்டான். அன்று புயலில் அகப்பட்ட பூங்கொடிபோல் நீ அழுது தவித்ததைப் பார்த்து நான் இரக்கம் கொண்டேன். உறவும் அதனால் உண்டாகும் பயன்களும் உடலுக்கு மட்டுமே அல்லாமல் உயிருக்குக் கிடையாது. ஆன்மாவுக்குக் களங்கம் என்பதே ஏற்பட முடியாது. அதனால் வீரசேனன் உடலில் நான் உன்னோடு பழகுவதால் தவறில்லை என்று நினைத்தேன்...."

"நான் தங்களை என் கணவராகவே கருதுகிறேன். என் கற்புக்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டதாக நினைக்கவே இல்லை. தாங்கள் ஒரு மகா புருஷர்.... உலக பந்தங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதை நான் யூகித்து விட்டேன். தாங்கள் யார்? எப்படி இந்த உடலில் பிவேசித்தீர்கள்? தங்களுடைய பழைய உடல் என்னவாயிற்று...? பிரபு... தங்கள் மேல் உள்ள அக்கரையில் கேட்கிறேன். உண்மையைச் சொல்ல வேண்டும்...."

திருமூல வீரசேனர் சற்றும் தயங்கவில்லை. தம் உடலை மறைத்து வைத்திருப்பதையும் தான் கூடுவிட்டுக் கூடுபாயும் உத்தியில் மன்னனின் உடலில் தங்கியிருப்பதையும் கூறினார்.

மகாராணி குணவதி பதறினாள். "ஐயோ! என்ன செய்வீர்கள்? கல்ப தேகமாகிய தங்கள் உடலை யாராவது பிணம் என்று கருதி எரித்து விட்டால் என்ன செய்வீர்கள்? இந்த உடல் நரை திரை மூப்புக்கு ஆளாகி அழியக் கூடியது அல்லவா? அழியக் கூடிய இந்த உடலுக்காக அழியாத் தன்மை கொண்ட உடலை யாராவது இழப்பார்களா?"

"பயப்படாதே! என் சீடன் குருராஜன் அதை நன்றாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறான். தவிர கற்பதேகத்தை சாதாரணத் தீயால் எரிக்க முடியாது. அதன்மேல் வெடியுப்பும், குங்கிலியமும், பொரிகாரமும் போட்டு நிரப்பி விராலி இலைகளால் மூடி அகில் கட்டைகளை அடுக்கி எரி முட்டினால் தான் அது எரிந்து சாம்பலாகும். அதனால் என் உடலைப் பற்றி நீ கவலைப்படவே வேண்டாம்", என்றார் திருமூல வீரசேனர்.

Koviloor Digital Library

4 கல்ப தேகம் கரைந்தது!

நாளெல்லாம் குணவதி அதைப் பற்றியே சிந்தித்தாள்.

சித்த புருஷர் தன் பழைய உடலைத் தேடிப் போய்விட்டால் உடனே தன்னுடன் இருக்கும் வீரசேன மகாராஜா இறந்து போவார். தான் விதவையாகி விட நேரிடும். சுகபோக வாழ்க்கை எல்லாம் நாசமாகிவிடும். மன்னனின் சிற்றன்னை மகனான தன்மார்க்கன் மன்னனாவான். அதன்பிறகு தன்னை யாருமே கவனிக்க மாட்டார்கள்...

அப்படி ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமா? குணவதியின் உள்ளம் கொந்தளித்தது. யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். குகையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சித்த புருஷரின் கல்ப தேகத்தைக் கண்டு பிடித்து எரித்துச் சாம்பலாக்கிவிடுவது ஒன்றே தன் வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ள வழி என்று தீர்மானித்தாள்.

மலைவாசிகளான சில பளிங்கர்களை அழைத்து அவர்களுக்கு நிறையப் பொன்னும் பொருளும் கொடுத்து குகையில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சித்தரின் உடலைத் தேடிக் கண்டு பிடித்து எரித்து விடும்படிக் கட்டளையிட்டாள். அந்த உடலை எப்படி எரிக்கவேண்டும் என்பதற்கான வழியையும் கூறி அனுப்பினாள்.

குகையில் குருநாதரின் உடலுக்குக் காவலாக இருந்த குருராஜன் என்ற சீடன் தன் குருநாதர் திரும்பி வந்துவிடுவார். வந்துவிடுவார் என்று எதிர் பார்த்து ஏமாற்றமடைந்தான்.

நாட்கள் மாதங்களாயின. மாதங்கள் வருஷங்களாயின. தன் குரு திரும்பி வருவார் என்ற நம்பிக்கையே அவன் உள்ளத்திலிருந்து மறையத் தொடங்கிவிட்டது, அரண்மனைச் சுகங்களில் அமிழ்ந்து போய்த் தன்னையே மறந்து விட்டாரோ? தவநெறியில் யோக வாழ்க்கை மேற் கொண்டிருந்த தன் குருநாதர் அரச போகத்தின் அவல வாழ்க்கையில் அழிந்து போக விட்டு விட்டால் அது தவறல்லவா?

குருராஜன் தன் குருநாதரைத் தேடிக் கொண்டு புறப்பட்டான்.

அதே சமயம் பளிங்கர்கள் அந்த குகைக்கு வந்து சேர்ந்தனர். காவல் இல்லாதது கண்டு களி கூர்ந்தனர். உடலை எடுத்துக் கொண்டு போய் அந்தக் குகையின் அருகிலேயே அகில் கட்டைகளின் மேல் கிடத்தி, வெடியுப்பு, குங்கிலியம், பொரிகாரம் போட்டு மூடி மேலே விராலி இலைகளைப் பரப்பித் தீயை வைத்து விட்டனர்.

Koviloor Digital Library

திருமூலரின் கல்ப தேகம் எரிந்து சாம்பலாகி விட்டது.

குணவதி எதையோ பறிகொடுத்தவள் போல் எப்போதும் யோசித்துக் கொண்டே இருப்பதைக் கண்ட திருமூல வீரசேனர் வேட்டைக்குப் போவதாகக் கூறி வெளியே கிளம்பினார்.

கானக வழியில் குருராஜனைக் கண்டதும் திடுக்கிட்டார். இரண்டு பேரும் மலைக்குகைக்கு விரைந்தனர்.

தன் உடல் எரிந்து சாம்பலாகிவிட்டது என்பதை அறிந்ததும், ஒரு நொடியில் அவருக்கு எல்லா உண்மைகளும் விளங்கிவிட்டன. குருராஜனுக்கு ஆறுதல் கூறித் தவம் செய்ய அனுப்பிவிட்டுத் தான் மட்டும் அரண்மனைக்குத் திரும்பினார்.

திருமூல வீரசேனரின் உள்ளம் அமைதி அடையவில்லை. அரண்மனையைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. குணவதி இருக்குமிடத்தை நாடவும் முடியவில்லை. தன் மாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் இருப்பது மிகவும் கடினமாக இருந்தது.

ஒரு இரவு யாருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டுப் புறப்பட்டுவிட்டார்.

5. கல்விச் செறுக்கால் வந்தகேடு.

கொள்ளிடமும் காவிரியும் மலர்மாலைபோல் சூழ விளங்கும் திருவரங்கத் தீவின் ஒரு புறமாகச் சிவபெருமான் அப்பு லிங்கமாக எழுந்தருளியிருக்கும் திருத்தலம் திருவானைக்காவல். அதற்கு சம்புகேசுவரம் என்றும் பெயர். நாவல் (சம்பு) மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசனுக்குச் சம்புகேசுவரர் என்றே பெயர். அவ்வூரில் சம்புகேசுவரர் என்ற இறைவனின் திருநாமத்தையே பெயராகக் கொண்ட ஒரு அந்தணன் வசித்துவந்தான். கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கிய அவனுக்கு நாளுக்கு நாள் கர்வம் தலைக்கேறத் தொடங்கியது, எதையும் சட்டென்று கிரகித்துக் கொள்ளும் சக்தி பெற்றிருந்த அவன் தனக்கு எல்லாம் தெரிந்துவிட்டதாக நினைக்கத் தொடங்கிவிட்டான்.

அவனைக்கண்ட மற்ற அந்தணர்கள் பயப்பட்டனர். அவனோடு பேசுவதற்கு அஞ்சினர். விதண்டா வாதம் செய்யத் தொடங்கிவிட்டால் விடவே மாட்டான் என்பதால் அவனைக் கண்டாலே ஒதுங்கி மறைந்து கொள்ளத் தொடங்கினர்.

Koviloor Digital Library

சம்புகேசன் கல்விச் செருக்கால் குருவின் துணையில்லாமலேயே யோக ஞானமார்க்கங்களில் வெற்றிபெற முடியும் என்று கருதியவனாக பிராணாயாமம் முதலான அப்பியாசங்களைச் செய்து வந்தான். சில நாட்களுக்குப்பின் தான் கானகம் சென்று தவம் செய்யவேண்டும், அற்புத சக்திகளைப் பெறவேண்டுமென்று விருப்பம் கொண்டவனாக சித்தர்கள் வாழும் சதுரகிரி மலையை நோக்கிப் பயணம் தொடங்கினான்.

சதுரகிரியின் வனப்பும் அமைதியும் அவன் நெஞ்சை ஆட்கொண்டு விட்டன. ஓர் அருவிக் கரையில் தங்கி அங்கேயே தான் வழக்கமாகச் செய்யும் பிராணாயாமம் முதலான பயிற்சிகளை செய்தவனாக வாழ்ந்திருந்தான். ஒருநாள் அதிகாலையில் மூச்சைக் கட்டுப்படுத்தி கும்பகம் செய்த நிலையில் சிறிது தாமதித்த அவன் சரியான பயிற்சி இல்லாததால் அப்படியே மூச்சுவாங்ச மறந்துவிட்டான். அந்நிலையிலேயே அவன் உயிர் பிரிந்து விட்டது.

அரண்மனையில் இருந்து யாருக்கும் தெரியாமல் நடுநிசியில் கிளம்பிய திருமூல வீரசேன மகாராஜர் தான் முன்பு வசித்த குகையை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தார். பொழுது புலரும் தருணம் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நதியில் இறங்கி நீராடிக் கரை ஏறியவர் அங்கே ஒரு பிராமணன் அசையாமல் கற்சிலைபோல் உட்கார்ந்து கொண்டிருப் பதைப் பார்த்து வியப்படைந்தார். அருகில் சென்று பார்த்தபோது அவனுடைய கண்கள் நிலைத்துப் போயிருந்ததைக் கண்டார். மூச்சு ஓடவில்லை தொட்டவுடன் அவன் உடல் அப்படியே கீழே விழுந்துவிட்டது.

உடல் இன்னும் சூடாக இருந்தது. அவன் அப்பொழுது தான் இறந்து போயிருக்க வேண்டும் என்பதை அறிந்த திருமூல வீரசேனர் "இறைவனே தனக்கு அந்த உடலை அளித்திருப்பதாகக் கருதினார் உடனே தன் அரச சரீரத்தை விட்டு வெளியே கிளம்பி அந்தண சரீரத்தில் பிரவேசித்து விட்டார்.

சம்புகேசத் திருமூலர் சற்றுமுன் வரை தான் தங்கியிருந்த அரசனின் உடலைப் பரிதாபமாகப் பார்த்தார். சிறிது காலமேனும் தான் தங்கியிருந்த கூடாகையால் அதற்கு இழுக்கு நேரக் கூடாது என்ற எண்ணத்தால் அந்த உடலைத் தூக்கிக் கொண்டு போய் அருகில் பருத்துக் கிளைத்து வளர்ந்திருந்த ஒரு பெரிய மரத்தின் பொந்தில் வைத்து அதன் மேற் புறத்தைப் பட்டைகள், இலைகள், கிளைகளால் மூடினார் திருமூலர் கை பட்டதால் அந்தப் பொந்து தானாக மூடிக் கொண்டது

அரசனின் உடலைத் தன்னுள் வைத்திருக்கும் அந்த மரம் அரசமரம் என்று வழங்குவதாக என்று வாழ்த்தி விட்டு மீண்டும் தன் தவவாழ்க்கையைத் தொடர்வதற்காக அந்த மலைமேல் மேலும் சென்றார்.

Koviloor Digital Library

சதுரகிரியின் மிக அடர்ந்த கானகப் பகுதியில் சம்புகேச திருமூலர், நீண்ட நாள் கடும் தவம் மேற்கொண்டிருந்தார். அவரிடம் இருந்து கிளம்பிய ஞானஒளி எங்கும் வியாபித்தது. அதன் காந்தசக்தியால் ஈர்க்கப்பட்ட பல நல்லவர்கள் அவர் இருக்கும் இடம் தேடி வந்தனர். அதனால் அவருக்குப் பல சீடர்கள் ஏற்பட்டனர்.

சம்புகேச திருமூலர் அவர்களுக்கு யோக ஞானமார்க்கங்களைப் பல பாடல்கள் மூலம் உபதேசித்தருளினார். அவை திருமூலர் பெயராலேயே வழங்கப்படுகின்றன.

திருமூலர் அருளிய நூல்கள்

திருமூலர் எண்ணாயிரம் திருமந்திரங்கள் இயற்றியதாக அகத்தியர் தமது சௌமிய சாகரம் என்னும் நூலில் கூறுகிறார்.

வாருமிது திருமூலர் பாடியதோர் நூல்கேள்
வசனித்தார் திருமந்திர மெண்ணாயிரந்தான்
காருமிது நாலாயிரம் வாதக்காடு
நளினமதாய்க் கருவிடையம் நன்னூலது வாமே.
சௌ-881

என்று கூறுகிறார்.

திருமூலர் பாடிய 8000 பாடல்களில் 4000 வாதக்காடு - வாதம் பற்றி காடுபோல் அடர்ந்த ஏராளமான செய்திகளைக் கொண்டவை என்று அகத்தியர் கூறுகிறார்.

திருமூலர் பாடிய அந்த நான்காயிரம் பாடல்கள் எங்கே? அவை வாதம் பற்றியவை என்றால் எவ்வளவு அரிய செய்திகள் அவற்றில் அடங்கியிருக்க வேண்டும்.

ஊர்வசியாரும் தன் பஞ்சரத்தினத்தில்

பக்ஷம் வைத்துத் திருமூல வர்க்கமது
பானுமா மலையில் வாசமாய்
திரையிலாமல் விழியாய் விளங்கிடும்
தெளிவாய் மொழிந்தனர் எண்ணாயிரம்.

என்று கூறுகிறாள்.

Koviloor Digital Library

மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே.

திருமந்திரம் மூவாயிரம் பாயிரச் செய்யுளில் திருமூலர் இவ்வாறு கூறுகிறார்.

உபதேசம்	30
மந்திரம்	300
தமிழ்	3000

என்ற நூல்களைத் தாம் இயற்றியுள்ளதாகவும் இவை மூன்றும் ஒரு தன்மையுடையன என்றும் திருமூலர் கூறுகிறார். அப்படியென்றால் மற்ற பொருள்களைப் பற்றி மேலும் அதிகமாகத் தாம் பாடியுள்ளதாகக் குறிப்பிடுவதாக எண்ணவும் முடியும்.

உபதேசம் முப்பது ஞானநூல். மந்திரம் முன்னூறு மாந்திரிக நூல். புவனை கக்கிஷம் என்ற பெயரில் தாமரை நூலகத்தால் வெளி யிடப் பட்டுள்ளது. திருமந்திரம் மூவாயிரத்துக்குத் தமிழ் மூவாயிரம் என்றே பெயர்.

ஆனால் அகஸ்தியர் பனிரெண்டாயிரம் என்னும் பெருநூல் காவியம் முதல் காண்டத்தில் திருமூலர் மேலும் அநேக நூல்களைப் பாடியிருப்பதாகக் கூறுகிறார். அந்நூலால் பெயர்களை மட்டும் அறிய முடிகிறதே தவிர அவற்றில் பெரும்பாலானவை கிடைக்கவில்லை. இருப்பினும் திருமூலர் இயற்றியதாகச் சொல்லப்படும் நூல்களின் பெயர்களை மட்டுமாவது தெரிந்து வைப்போமே!

திருமூலர் நூல் தொகுப்பு

அகத்தியர் பனிரெண்டாயிரம் முதல் காண்டத்தில் உள்ளபடி

கோடியாம் புலஸ்தியனே யின்னங்கேளு
கூறுவேன் திருமூல வர்க்க நூல்கள்
நாடியாங் கிரந்தமது யெண்ணாயிரந்தான்
நலமான சிற்ப நூலாயிரந்தான்
ஆடியே ஜோசியமு முன்னூறாகும்
அப்பனே மாந்திரீக மறுநூறாகும்
தேடியே சல்லியங்க ளாயிரந்தான்
தெளிவான காவியமுங் கருக்கிடையுமாமே. 474

Koviloor Digital Library

கருக்கிடையா மறுநூறு சொன்னார்பாரு
கருவான திருமூல ராயிரந்தான்
சுருக்கமது யிருநூறு நான்கு கோவை
சூட்சமாம் ஞானமது நூறுமாகும்
பெருக்கமுள்ள காவிய மாயிரத்தைந்நூறு
பேரான தீட்சைவிதி நூறுமாகும்
வருக்கமுடன் கோர்வைபதி னாறுமாகும்
வாகான கோர்வையது வெவ்வேறாமே. 475

வேறான தீட்சைவிதி யெட்டுமாகும்
வெவ்வேறாய் தீட்சைவிதி பதினெட்டுமாகும்
கூறான சன்மார்க்க யோகஞானம்
குறிப்பான சோடசமும் பதினாறாகும்
ஆறான விதிநூலா மிருபத்திநான்கு
அடவான சாத்திரத்தின் தொகுப்பேழாகும்
தீறான வாராதார மறுபத்துநான்கு
திறமான பச்சை நூலிருபத்தினான்கே. 476

நான்கான திருமூலர் மூவாயிரந்தான்
நலமான திருமந்திரம் பெருநூலாகும்
பான்மையாம் வேத நூ லறுபத்தினாலு
பாங்கான வாகமங்கள் நூற்றியெட்டு
மான்மையுள்ள யிதிகாசப் புராணமப்பா
மகத்தான சிலேடையது வாயிரந்தான்
மேன்மையாம் பதினெண்பேர் தர்க்கநூலாம்
மேதினியில் திருமூலர் நூலுமாமே. 477

காவியம்	(கிரந்தம்)	8000
சிற்பநூல்		1000
சோதிடம்		300
மாந்திரிகம்		600
சல்லியம்		1000
காவியம்	(வைத்தியம்)	1000
கருக்கிடை	(வைத்தியம்)	600
வைத்தியச் சுருக்கம்		200
சூக்கும ஞானம்		100
பெருங்காவியம்		1500
தீட்சைவிதி		100

Koviloor Digital Library

கோர்வைவிதி		16
தீட்சைவிதி		8
தீட்சைவிதி		18
யோகஞானம்		16
விதிநூல்		24
ஆறாதாரம்		64
பச்சைநூல்		24
திருமந்திரம்	(பெருநூல்)	3000

மேலே கூறப்பட்ட நூல்களில் திருமூலர் வைத்தியம் ஆயிரம், கருக்கிடை வைத்தியம் அறுநூறு என்ற நூல்களைத் தாமரை நூலகம் இருநூல்களாக வெளியிட்டுள்ளது.

மேலும் யோக ஞான சாஸ்திரத் திரட்டு முதல் பாகத்தில் திருமூலர் ஞானம் 84, ஞானோபதேசம் 30, நடுவணை ஞானம் 30, ஞானக்குறி 30, சோடச ஞானம் 16, ஞானம் 11 என்ற நூல்களையும்,

யோக ஞான சாஸ்திரத் திரட்டு எட்டாம் பாகத்தில் திருமூலர் குளிகை 11, திருமூலர் பூஜாவிதி 41, வியாதிக் கூறு 100 என்ற நூல்களையும்,

ஒன்பதாம் பாகத்தில் குருநூல் முப்பு சூத்திரம் 200 என்ற நூலையும் தாமரை நூலகம் வெளியிட்டுள்ளது.

நூலின் பெருமை

நாயன்மார் அனைவரும் பக்தர்களே! ஆனால் திருமூலரோ ஒரு சித்தர்! நாயன்மார் வரிசையில் சேர்க்கப்பட்டவர்.

பக்தர்களுக்கும் சித்தர்களுக்கும் பெரிய வேறுபாடு உள்ளது. இறைவன் திருவருளால் பக்தி வசப்பட்டு மெய்மறந்து தம் வாழ்நாளை இறைப்பணிக்கே அர்ப்பணித்தவர்கள் பக்தர்கள். இவர்களுக்கு வேறு கடமை கிடையாது.

ஆனால் சித்தர்களோ ஒரு சீரிய வாழ்க்கை நெறியைக் கைக்கொண்டு, வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்று முறையாகப் பயிற்சிகளும் செயல்களும் மேற்கொண்டு வாழ்ந்தவர்கள்.

பகதர்கள் இறைவனுடனேயே வாழ்ந்தார்கள்.

சித்தர்கள் மனிதகுல நன்மைக்காக மனிதரிடையே வாழ்ந்து, கடுமையான வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்தும், மருத்துவம்

Koviloor Digital Library

முதலான அருங்கலைகளைப் பயின்றும் யோக சாதனையால் சித்திகளை அடைந்தார்கள்.

பக்தர்கள் வாழ்வில் இறையருளால் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. அவற்றை அவர்கள் விரும்பிச் செய்யவில்லை. அப்படிச் செய்ய முடியும் என்று அவர்கள் எதிர்பார்த்தவர்களும் அல்லர்.

ஆனால் சித்தர்கள் இன்னபடி நடக்கவேண்டும் என்று விரும்பித் தம் அறிவாற்றலாலும் தவ வலிமையாலும் நடத்திக் காட்டியவர்கள்.

பக்தர்களின் நிலை வேறு. சித்தர்களின் நிலை வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

சித்தரான திருமூலர் பக்தர்களான நாயன்மாரோடு வைத்து எண்ணப்பட்ட காரணம் அவர் இயற்றிய திருமந்திரமே என்று துணிந்து கூறலாம். திருமந்திரம் சித்தர் நெறிகளான வைத்திய, வாத யோக ஞானங்களைப் பற்றிப் பேசுவதோடு இறைவனின் பெருமையையும் இடையறாது நினைவூட்டிக் கொண்டே செல்கிறது. இக்காரணத்தால் நாயன்மார்கள் பாடிய திருமுறைகள் வரிசையில் திருமந்திரமும் சேர்க்கப்பட்டுப் பத்தாம் திருமுறை என்று வழங்கப்படுகிறது.

நூலின் சிறப்பு

திருமந்திரப் பாடல்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பக்திப் பெருக்கால் பரவசமடையச் செய்யும் பாடல்கள் அல்ல. மனிதர் வாழவேண்டிய நெறியையும் அடையக்கூடிய பயனையும் உணர்த்தும் பாடல்கள்! இறைவன் பெருமையையும் இறையருள் கூட்டி வைத்தால் மட்டுமே மனிதன் எதையும் சாதிக்க முடியும் என்பதையும் உணர்த்தக்கூடிய பாடல்கள்!

வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்னும் நான்கு துறைகளைப் பற்றியுமே திருமூலர் பாடியுள்ளார். அவற்றின் தனிச்சிறப்புக்களைக் கற்றோர் மட்டுமே உணரமுடியும். பாடல்களின் இனிமையும் கருத்தின் ஆழமும் படிக்கப்படிக்கச் சுவையூட்டுவன.

திருமூலர் மார்க்கண்டருக்கு உபதேசம் செய்தது

அகஸ்தியர் பனிரெண்டாயிரம் இரண்டாம் காண்டத்தில் திருமூலர் பிரான் மேருமலையின் வடபாகத்தில் செய்த தவத்தையும், துவாரகாபதியான கிருஷ்ணனுக்கு உபதேசம் செய்ததையும் கூறுகிறார்.

Koviloor Digital Library

பிறகு மூலர் பிரான் மீண்டும் தவத்தில் ஈடுபட்டிருந்த போது மார்க்கண்டர் அவரைக் கண்டு உபதேசம் பெற்றதைக் கூறுகிறார்.

சொல்லவென்றால் மேருவுக்கு வடபாகத்தில்
தோற்றமுடன் சுனையுண்டு மலைதானுண்டு
கொல்லவரு மாளியுடன் சிங்கமுண்டு
கொடூரமான காட்டானை கரடியுண்டு
அல்லது இல்லாத அடவியப்பா
ஆஆஆ சித்தர்களு மறியாக் காடு
புல்லறிவால் திருமூலர் முதற் பாட்டர்தான்
புகழான அடவிதனைக் கண்டார் தானே. 951

கண்டுமே அவ்வனத்தில் சித்து தாமும்
கருவான மலைதனிலே யாகம் செய்து
விண்டுமே யுலகுபதி யாசை விட்டு
வினையகற்றித் தவக்கியான மதிகம் பூண்டு
தொண்டுமிகு சித்தருக் கெல்லா மோதி
கொற்றவனே யடவிக்குச் சென்று தானும்
பண்டுளவு கிருஷ்ண பூபாலனுக்கு
பார்தனில் உபதேசம் செய்தார் பாரே. 952

மேருவுக்கு வடபாகத்தில் இருந்த மலையையும் சுனையையும் அங்கு வசித்த பெருவிலங்குகளையும் அகத்தியர் வர்ணிக்கிறார்.

அங்கே பெரிய யாளிகள் வசித்தன. சிங்கங்களும் கொடிய காட்டானைகளும் கரடிகளும் வாழ்ந்தன. (அல் = இரவு) இரவு பகல் தெரியாத இருண்ட காடு. அந்தக்காட்டைப் பற்றி விண்வெளியில் சஞ்சரிக்கக் கூடிய சித்தர்களும் அறியமாட்டார்கள். அந்தக் காட்டைத் தமது நுண் அறிவால் சித்தர்களில் முதலாமவரான பாட்டர் திருமூலர் கண்டார்.

அந்த வனத்தில் திருமூலர் பிரான் ஒரு யாகம் செய்தார். உலகஆசை க்ளைத் துறந்து, வினைப் பயன்களையும் விட்டு மேலான தவத்தால் ஏற்பட்ட ஞான வைராக்கியம் பூண்டவராகத் தமக்குத் தொண்டு புரிந்து யாகத்திற்கு உதவியாக இருந்த சித்தர்களுக்கெல்லாம் உபதேசம் செய்தார். கண்ணபிரானுக்கும் உபதேசம் செய்தார்.

கண்ணபெருமான் திருமூலரைச் சந்தித்ததாகவோ அவரிடம் உபதேசம் பெற்றதாகவோ புராணங்களில் எங்கும் கூறப்படவில்லை.

Koviloor Digital Library

கிருஷ்ணன் துவாபரயுகத்தைச் சேர்ந்தவர். மகாபாரத காலத்தில் இருந்தவர். அக்காலத்திலேயே திருமூலர் இருந்தார் என்று அகத்தியர் கூறுகிறார். அது மட்டுமல்ல. மார்க்கண்டேயருக்கும் உபதேசித்ததாகக் கூறுகிறார். இதை ஏற்றுக் கொள்வது இக்கால அறிஞர்களுக்குக் கடினமாகத்தான் இருக்கும்.

ஏன் என்றால் அவர்களுக்குச் சித்தர்களின் தன்மை பற்றி ஒன்றும் தெரியாதே!

சித்தர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல. அழிந்து போகக் கூடிய உடலை என்றுமே அழியாத கற்ப தேகமாக்கி காலம் கடந்து வாழக் கூடிய தன்மை பெற்றவர்கள். பரிணாம ரீதியாக மனித நிலையைக் கடந்து அதற்கு அடுத்த கட்டத்தை அடைந்தவர்கள்.

உடலுக்குத்தான் முதுமை மரணம் என்பவை எல்லாம் ஏற்படமுடியுமே தவிர ஆன்மாவுக்கு ஏற்படி முடியாது. ஒரு மனிதன் உயிரோடிருக்கும் காலத்தில் ஞானம் பெற்றுத் தன் உடலை உதறிவிட்ட பிறகும் அதே ஞானத்தோடு வாழக்கூடிய தகுதி பெற்றுவிட்டால் அவன் யுக யுகங்களாக வாழ்ந்து கொண்டே இருக்கலாம். திருமூலர் திருமந்திரத்தில்,

" எண்ணிலி கோடி யுகமிருந்தேனே"

என்று சொல்வதன் பொருள் இதுதான். பிறகு அந்த ஆன்மா தான் வேண்டும் போது ஒரு உடலைத் தேடிக் கொள்ளவும் முடியும். வேண்டாத போது உதறிவிடவும் முடியும். அத்தகைய உயர்ந்த நிலையை அது அடைந்து விடுகிறது.

திருமூலர் அத்தகைய உயர்ந்த நிலையை அடைந்திருந்தார் என்பதை இந்த வரலாறே சுட்டிக் காட்டுகிறது. அவர் இரண்டு முறை கூடுவிட்டுக் கூடு பாய்ந்து வெவ்வேறு உடல்களில் வசித்தார்

சித்தர்களின் இந்த செயற்கரிய சாதனையைப் புரிந்து கொண்டால் மட்டுமே சித்தர்களின் வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியும். சித்தர்களின் காலத்தைப் பற்றியும் ஒருவாறு உணர முடியும்.

கிருஷ்ணன் திருமூலரிடம் உபதேசம் பெற்றதைக் கூறாது விட்டதுபோல் மார்க்கண்டேயன் திருமூலரைச் சந்தித்ததையும் வேறெந்த நூலிலும் படிக்க முடியாது.

Koviloor Digital Library

செய்துமே மேருகிரி யடவி தன்னில்
செப்பமுடன் தவக்கியான மருளுங் கொண்டு
பையவே உபதேசம் மிகவும் பூண்டு
பார்தனிலே கைதனையே ஊன்றிக்கொண்டு
வையகங்கள் தான் புகழச் சித்து தாமும்
வண்மையுடன் தவமிருக்கும் போதிலப்பா
வெய்யபுகழ் மார்க்கண்டனவ் வனத்தில்
விட்டகுறை இருந்ததினால் சென்றான் காணே. 953

மார்க்கண்டர் அவ்வனத்தின் வழியாகச் செல்ல நேர்ந்தது?

ஏதோ விட்டகுறை இருந்ததினால் திருமூலரைத் தரிசிக்கவும் அவரால் பயன் பெறவும் மார்க்கண்டருக்கு விதி இருந்தது. இல்லாவிட்டால் அவர் அவ்வழியாகச் செல்ல நேருமா?

இரண்டு கைகளையும் ஊன்றியபடி, உடம்பு தரை மேல் படாமல் ஆசன நிலையில் தவம் செய்து கொண்டிருக்கும் ஒளிமயமான திருமூலர் பிரானை மார்க்கண்டர் கண்டார்.

ஞானமும் அருளும் கொண்ட சித்தர், உலகங்கள் எல்லாம் புகழும் சித்தர் என்றெல்லாம் அடை மொழிகளைச் சூட்டித் திருமூலர் பிரானைப் பற்றி அகத்திய முனிவர் கூறுகிறார்.

காணவே மார்க்கண்டன் தானுமப்பா
கடிதான காட்டகத்தே செல்லும்போது
ஊணவே இருகரந்தான் பூமியூன்றி
உத்தமனார் தானிருக்கும் தவசைக் கண்டு
பாணம்போல் மனந்துடித்துப் பாலன் தானும்
பயந்துமே நடுநடுங்கி அடிபணிந்து
ஆணவங்கள் தானொடுங்கி ஐயன் தன்னை
அபயமென்று தாள் பணிந்தான் மகிமை பாரே. 954

தவநிலையிலிருக்கும் திருமூலர். பிரானைக் கண்டவுடன் மார்க்கண்டன் மனம் துடித்தது. என்றும் பதினாறு வயதுப் பாலனா கையால் மிகவும் பயந்து போய் விட்டான். நடுநடுங்கியபடி திருமூலர் கால்களிலே விழுந்து "ஐயனே யான் உமக்கு அபயம்", என்று பணிந்தான்.

.....

சார்த்தகி யாழ்வாரையல்லோ யானுங் கண்டேன்
சார்பான சித்தர்களைக் கண்டதில்லை

Koviloor Digital Library

இறைவனடியார்களையெல்லாம் பார்த்திருக்கிறேன்.சித்தர்களைப் பார்த்ததில்லை. தாங்கள் எனக்கு அபயமளிக்கவேண்டும் என்று வேண்டி நின்றான்.

மார்க்கண்டரைப் பார்த்த திருமூலர் மிகவும் மகிழ்ச்சி யடைந்தவராக, "அப்பனே மார்க்கண்டா, நீடாழியுலகு மட்டும் மூச்சடங்கி நெடுங்கால மிருப்பதற்கு வரம்பெற்றாய். ஆனால் நீ பெற்ற வரம் நிலைக்க வேண்டுமென்றால்,"

பழிபடா தேகமது பாரிலப்பா
பான்மைபெற உந்தனுக்குத் தருவேன் யானும்
சுழிமுனையை உள்ளடக்கும் பதும நாபா
சூட்சமென்ற சரீரத்தை அழியாமற்றான்
வழியோடே நெடுங்கால மிருக்க வென்று
மகதேவர் சித்துமுனி கூறுவாரே. 959

உடல் நிலைக்க வேண்டுமென்றால் சுழிமுனையை உள்ளடக்கித் தவம் செய் என்று திருமூலர் பிரான் உபதேசம் செய்தார்.

சீடர்கள்

நந்தியருள் பெற்ற நாதனை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மருமாமே-

என்று சிவலோகத்தில் ஈசனிடம் உபதேசம் பெற்ற எண்மரைப் பற்றிக் கூறிய திருமூலர் அடுத்துத் தம் வழித் தோன்றல்களாகிய சீடர்களைப் பற்றிக் கூறுகிறார்.

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என் வழியாமே.

மாலாங்கன், இந்திரன், சோமன் (சந்திரன்), பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்சமலையன் இந்த எழுவரும் என் சீடர்கள் என்று கூறுகிறார்.

இவர்களில் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், ருத்திரன் ஆகிய ஐவரும் திருமூலர் சிவலோகத்தில் இருந்த காலத்திலும் மற்ற

Koviloor Digital Library

இருவர் பூலோகத்தில் வசித்த காலத்திலும் சீடர்களானார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

அகத்தியர் பனிரெண்டாயிரம் முதல் காண்டத்தில்,

தொட்டகுறி போலாகத் திருமூலத்தார்
தோற்றாத திருவடியா முறையாயெல்லாம்
வட்டமுடன் யாமுரைத்தோம் பெருநூலாக
வாகுடனே மடாதிபதி பனிரெண்டாகும்
திட்டமுள்ள சீடவர்க்கம் பதினாறாகும்
திறமையுடன் நெடுங்காலம் இருந்தார்தானே. 328

என்று கூறுகிறார்.

திருமூலர் பனிரெண்டு மடங்களை நிறுவி அவற்றுக்குத் தலைவர்களையும் நியமித்தார். அவருக்குச் சீடர்கள் பதினாறுபேர் என்று கூறுகிறார்.

அப்பதினாறு சீடர்களில் காலாங்கியும் கஞ்சமலைச் சித்நருமே முக்கியமானவர்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

காலாங்கி நாதரின் வழியாகப் போகமுனிவரும் அவருக்கு ஏற்பட்ட அநேகம் சீடர்களும் சித்தர் நெறியை வெகுவாகப் பரவச் செய்தார்கள். அவர்கள் எல்லோருக்குமாகச் சேர்த்து திருமூலவர்க்கத்தார் என்ற பெயரே ஏற்பட்டது: அதனால் திருமூலரின் புகழ் என்றும் நிலைப்பதாயிற்று.

கலந்தரு காலாங்கர் தம்பால்அ கோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூலர் நிரா மயத்தோரே.

காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போகதேவர் முதலானோர் தமதருளால் அழியாமை பெற்றவர்கள் என்று திருமூலர் பிரான் கூறுகிறார்.

திருமூலர் காலம்

பதஞ்சலியும் வியாக்ரமரும் தம்மோடு தில்லையில் திருநடனம் கண்டவர்கள் என்று திருமூலர் கூறுகிறார்.

Koviloor Digital Library

வடமொழியில் மகா பாஷ்யம் இயற்றிய பதஞ்சலியார் கி.மு.150ல் இருந்தவர் என்று டாக்டர் கீத் என்ற ஆங்கிலேய அறிஞர் கூறுகிறார். ஆனால் யோகசூத்திரம் எழுதிய பதஞ்சலி கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இருந்ததாகவும் அவர் முற்கூறிய பதஞ்சலி அல்ல என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். அது தவறு.

ஏனென்றால் சித்தர்கள் ரிஷிகள் யாவரும் பல நூற்றாண்டுகள் வாழும் ஆற்றல் பெற்றவர்கள்.

கி.மு.75 முதல் கி.பி.36 வரை வாழ்ந்ததாகக் கருதப்படும் தமிழ்மறை கண்ட திருவள்ளுவப் பெருமான் பல குறள்களில் திருமூலர் கருத்தை எடுத்துக் கையாண்டுள்ளார்.

இவற்றால் கயிலாய பரம்பரையைச்சேர்ந்த சுந்தரர் திருமூலர் என்ற பெயரில் தமிழ்நாட்டில் வசித்த காலம் கிறிஸ்து பிறப்பதற்கு முன் நூற்றைம்பது இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாக இருக்கலாம் என்று துணியலாம்.

போகர் 7000 கூறும் செய்தி

நாடியே திருமூல வர்க்கத்தார்கள்
நலமான ஜாதியது மரபே தென்றால்
தேடியே வேளாள ஜாதி யாகும்
திருக் கூட்டம் மெத்தவுண்டு சொல்லொண்ணாது
ஆடியதோர் தலைமுறைகள் ஏதென்றாக்கால்
அப்பனே ரெண்டு பத்து ஒன்று தானே. 5737

திருமூலர் வேளாண் குலத்தைச் சேர்ந்தவர் என்பதும் அவர்கள் பல ஆயிரம் பேர் கொண்ட பெருங்குடி மக்கள் என்றும் திருமூலர் மூதாதையர் இருபத்தொரு தலைமுறைகள் வரை அறியப் பட்டவர்கள் என்றும் போகர் இப்பாடலில் கூறுகிறார்.

ஏச்சலது வாராமல் இருந்த சித்து
எழிலான திருமூலர் என்னலாகும்
பாச்சலென்ற வயததும் ஏதென்றாக்கால்
பாரினிலே ஆயிரத்துச் சொச்சமாகும்
மூச்சடக்கிச் சமாதிமுகம் தன்னிலப்பா
மூதுலகில் நெடுங்காலம் இருந்த சித்தே. 5862

திருமூலர் பிரான் உலகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். அவர் மூச்சை அடக்கிச் சமாதியிலே நெடுங்காலம் இருந்தவராவார்.

Koviloor Digital Library

உய்யவே திருமூலர் என்ற சித்து
உலகமதில் தான் பிறந்த சேதி வண்ணம்
பையவே புரட்டாசித் திங்களப்பா
பாலகனார் வந்துதித்த மாதமாகும்
வெய்யவே அவிட்டம் பிறை மூன்றாம் காலாம்
மேதினியில் வந்துதித்த சித்து மாச்சே.

திருமூலர் பிரான் புரட்டாசித் திங்கள் அவிட்ட நட்சத்திரம் மூன்றாம் காலில் கும்பராசியில் பிறந்தவர் என்றும் போக முனிவர் கூறுகிறார்.

நானென்ற மேலச் சிதம்பரத்தில்
நாடி நின்ற திருமூலர் நாட்டந் தானே.-

என்று போக முனிவர் தமது ஜனனசாகரம் 312வது பாடலில் திருமூலர் திருச்சமாதியில் வீற்றிருக்கும் இடத்தைக் குறிப்பிடுகிறார்.

திருமூலர் பிரான் தாம் பதஞ்சலி வியாக்ரமரோடு திரு நடனம் கண்ட தில்லைப்பதியில் சமாதி கொண்டு இன்றும் வீற்றிருக்கிறார் என்று கொள்ளலாகும்.

ஆட்டமுடன் பதினெட்டுச் சித்தரெல்லாம்
அஷ்டாங்க யோகத்தால் எட்டெட்டாகி
கூட்டமுடன் ஒவ்வொருவர் சித்துக்காட்டிக்
குவலயத்தில் லிங்கமதாய் முளைத்தார் பாரே. ஜன-313

சித்தர்களெல்லோரும் உலகத்திலிருந்த காலத்தில் பலவிதமான சித்துக்களை ஆடி உலகிற்கு நன்மை செய்தபின் இறைவன் வதியும் திருத்தலம் ஏதாவதொன்றில் லிங்கவடிவாய் எழுந்தருளியுள்ளார்கள் என்று போக முனிவர் தமது ஜனன சாகரம் 313வது பாடலில் கூறியுள்ளபடி திருமூலர் பிரான் சிதம்பரத்தில் லிங்க வடிவமாய் எழுந்தருளியுள்ளார் என்று கூறலாம்.

அவ்வாறு திருமூலர் பிரான் லிங்க வடிவாய் அமர்ந்துள்ள இடமே தில்லைத் திருக் கோவிலில் உள்ள ஸ்ரீமூலன் சந்நதி என்று கருத இடமுள்ளது.

ஸ்ரீமூலர் சந்நதியில் உள்ள லிங்கம் சுயம்புவாகத் தானாக உண்டாகியது என்று கூறப்படுகிறது. இங்கு பதஞ்சலி வியாக்ர பாதர்களும் சிலா ரூபமாக எழுந்தருளியுள்ளனர்.

Koviloor Digital Library

பிற்காலத்தில் திருமூலர் லிங்க வடிவமாக எழுந்தருளிய இடம் என்பது மறைக்கப்பட்டுச் சிவபெருமான் சுயம்பு லிங்கமாக எழுந்தருளியுள்ள இடமாகக் கற்பிக்கப்பட்டு, உமய பார்வதி என்ற பெயரில் ஒரு அம்மன் சந்நதியையும் இக்கோயிலில் சேர்த்து விட்டார்கள்.

இவ்விடத்தில் பேரறிஞர் டி.வி. சாம்பசிவம் பிள்ளையவர்களின் அகராதியில் கூறப்பட்டிருப்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

.... சித்தர்கள் தங்கள் உருவத்தை லிங்க வடிவமாக்கி நிலையுற்று இருப்பார்கள். இதுதான் சித்தர் சமாதி. இவ்விதமான சமாதிகள் இந்திய நாடு முழுவதிலும் உண்டு. ஆயினும் தமிழ்நாடாகிய தட்சண பாகத்தில் விசேஷமாய்க் காணலாம். இச்சமாதிகளின்மேல் கோயில் கட்டி விந்து நாதக் கூறாகவுள்ள லிங்கத்தையும் ஆவுடையார் என வழங்கும் சத்தி பீடத்தையும் சேர்த்து சிவ ரூபமாகக் கொண்டு நிலை நிறுத்துவார்கள்.

மேற்கூறிய எடுத்துக் காட்டிலிருந்து மூலர் சந்நிதியை மையமாகக் கொண்டு பாண்டிய மன்னனால் கட்டப்பட்டது தான் சிதம்பரம் என்று அறியலாம்.

சிதம்பரத்தின் முக்கியத்துவம் பற்றித்தனி ஆய்வே நடத்தலாம். அவ்வளவு இரகசியங்கள் அடங்கியுள்ளன. சித்தர்களின் மந்திர சாஸ்திரப்படி பிரதான மாந்திரிக சக்கரம் சிதம்பரச் சக்கரம். தவிர அக்காலத்தில் - ரோமாபுரி முதல் சீனம் வரை உள்ள பழைய உலகம் மட்டுமே அறியப்பட்டிருந்த காலத்தில் சிதம்பரமே உலகத்தின் மையமாகக் கருதப்பட்டது. டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் சிதம்பரம் என்பதற்குக் கீழ்க்கண்டவாறு பொருள் கூறப்பட்டுள்ளது.

சிதம்பரம் : சுழிமுனை பூர்வ பூகோள நூற்படி அண்டத்தின் வடக்கு எல்லைக்கும் தெற்கெல்லைக்கும் நடுவாக உள்ளது, சிதம்பரமாகையால் அதுபோலவே பிண்டத்திலுள்ள இட்கலைக்கும் பிங்கலைக்கும் நடுவாக உள்ளது சுழிமுனையாகையால் இதற்குவமையாகக் கூறப்பட்டுள்ளது

சிதம்பர ரகசியம்

பாண்டிய மன்னன் ஆணைப்படி சிதம்பரம் கோவிலை அமைத்த கருவூரார், திருமூலர் வழித் தோன்றலாகையால் மூல குருவின் பெருமை நிலைக்கும்படியாக சித்தர்கள் கூறும் உடல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே கோவிலை அமைத்துள்ளார்.

Koviloor Digital Library

மனிதன் நாள் ஒன்றுக்கு 21,600 மூச்சு விடுகிறான். கனக சபையின் மேல் 21,000 தங்க ஓடுகள் பொறுத்தப்பட்டுள்ளன.

மனித உடலில் 72,000 நாடிகள் உள்ளன. தங்க ஓடுகளைப் பொருத்த அடிக்கப்பட்டுள்ள ஆணிகளின் எண்ணிக்கை 72,000.

கனக சபையின் முன் உள்ள ஐந்து படிகள் பஞ்சபூதங்கள். தொண்ணூற்றாறு வெள்ளிப் பல கணிகள் தொண்ணூற்றாறு உடல் தத்துவங்கள்.

மனித உடலில் இருதயம் இடது பக்கம் சற்றுத் தள்ளி யிருப்பதுபோல் நடராஜர் சன்னதி சற்று இடப்புறமாக ஒதுங்கியுள்ளது. இருதயம் துடித்துக் கொண்டே இருப்பது போல் நடராஜர் ஆடிக் கொண்டே இருக்கிறார். இருதயத்திற்குப் பக்கவாட்டில் கபாடங்கள் இருப்பதுபோல் சிதம்பரத்திலும் கருவறையில் பக்கவாட்டில் இரண்டு பக்கங்களிலும் வழிகள் உள்ளன.

இக்கோவிலில் உள்ள ஐந்து சபைகளும் மனித உடலுடன் ஒப்பிடத் தக்க வகையில்

அன்னமய கோசம்
மனோமய கோசம்
விஞ்ஞான மய கோசம்
ஆனந்த மய கோசம்
பிராணமய கோசம்

என்று பஞ்ச கோசங்களாகவே வர்ணிக்கப்படுகின்றன.

சித்தான கருவூரார் என்ற சித்து
சின்மயத்தில் பேரின்பம் கொண்ட சித்து
முத்தான வயததுவும் முன்னூறாண்டு
மூதுலகில் பாண்டியனுக்கு உகந்த சித்து
பக்தியுடன் சிதம்பரமாம் தேவஸ்தானம்
பட்சமுடன் நிர்மித்த ஞான்சித்து.

போ. 7000 / 5769.

என்று போகர் கூறுவதால் கருவூராரே சிதம்பரம் கோவிலை அமைத்தவர் என்பது விளங்குகிறது.

***

Koviloor Digital Library

காலாங்கி நாதர்

திருமூலர் பிரானின் சீடர்களில் முதன்மையானவர் காலாங்கிநாதர்.

கால் = காற்று. அங்கி= இங்கு உடல் எனும் பொருளில் உள்ளது. அதாவது காற்றையே உடலாகக் கொண்டவர். கத்தி ஊடாடும்படியான உடல். அந்தரத்தில் சஞ்சரிக்கும் உடல் என்றும் கொள்ளலாம்.

இவர் பெயரை காலாக்னிநாதர் என்றும் சொல்வதுண்டு. தீ்லனைப் போன்ற நெருப்பானவர். அல்லது காலனுக்கே நெருப்பானவர். அதாவது காலனால் நெருங்க முடியாதவர் என்றும் கொள்ளலாம்.

இவர் சிவபெருமானின் அம்சமான அட்ட பைரவர்களிலே ஒருவர் என்றும் கூறுவர்.

இவர் சீன நாட்டவர் என்பது பொதுவான கருத்து. உலோகங்களை உருக்கிக் (கலப்பு உலோகங்களாகச் செய்து) வார்ப்பதைத் தொழிலாகக் கொண்ட கன்னார் குலத்தில் பிறந்தவர் என்று கூறுவர்.

தசமான காலாங்கி நாதர் தாமும்
தாக்கான மயன்சாதி என்னலாகும்
கசடான தலைமுறைகள் பத்தேயாகும்
காசினியில் கண்டவரை உரைத்திட்டோமே.

போகர் 7000/ 5698

மயன் அசுரர்களின் சிற்பி விசுவகர்மனின் மகன்.

புகழான காலாங்கி நாதர் தாமும்
புண்ணியனார் வெகுகாலம் இருந்தசித்து
அகந்தனிலே மூன்றுயுகம் சமாதி சென்று
அப்பனே முயற்சியுடன் வந்த சித்து
செகந்தனிலே சீனபதி தேசந்தன்னில்
சிறப்புடனே குளிகை கொண்டு போன சித்தே. 5741

Koviloor Digital Library

சித்தான காலாங்கி முனிவர் தானும்
சிறப்புடனே சீனபதி தன்னில் சென்று
முத்தான காலனது அருளும் பெற்று
முனையான சமாதிதனில் இறங்கியல்லோ
பக்தியுள சீனபதி மாந்தருக்கு
பலகாலும் தரிசனைகள் புரிகுவாரே. 5742

காலாங்கி நாதர் ககன குளிகையின் உதவியால் விண்வெளியாகச் சீனநாடு சென்றார். காலனுடைய அருள் பெற்று - தான் சமாதியில் இருக்கும் காலத்தில் காலன் தன்னை அணுகாதிருக்கும்படி அருள் பெற்று சமாதியில் அமர்ந்தார்.

பக்தியுள்ள சீனமக்களுக்கு அவ்வப்போது காட்சிதந்து அருளும் ஆசியும் வழங்குவார் என்று போகமுனிவர் கூறுகிறார்.

நூலான நூல் இதுதான் நுணுக்கம் மெத்த
நுட்பமுடன் காலாங்கி பிறந்த வண்ணம்
பாலான சித்திரையாம் மாதமப்பா
பாங்கான அசுவினியாம் நாலாம் காலாம்
சேலான செகத்குரு மைந்தன் அப்பா
செயலான பாக்கியமும் பெற்ற மைந்தன். 5889

காலாங்கிநாதர் சித்திரைமாதம் அசுவினி நட்சத்திரம் நான்காம் பாதத்தில் பிறந்தவர். செகத் குருவான திருமூலர் பிரானின் சீடராகும் மகத்தான பேறு பெற்ற மைந்தனாவார் என்றும்,

புரிகுவார் வயதினுட மார்க்கம் தன்னை
புகலுவேன் காலாங்கி நாதருக்கு
சரியுடனே மூவாயிரம் சொச்சமப்பா
சாங்கமுடன் வயதுதான் என்னலாகும். 5743

காலாங்கி நாதர் மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்திருந்ததாகவும் போகமுனிவர் கூறுகிறார்.

காலாங்கி நாதர் சீனத்துக்குச் சென்றதாகத் தான் போகர் கூறுகிறார். ஆனால் காலாங்கி நாதர் சீனதேசத்தவர் என்றே கருதப்படுவதன் காரணம் புரியவில்லை.

Koviloor Digital Library

காலாங்கிநாதர் சித்தர்களில் மிகவும் ஆற்றல் வாய்ந்தவர். ஆனால் அவருடைய பெயர் அதிகமாகப் புகழ் அடையவில்லை. காலாங்கி என்ற தமிழ்ச் சித்தர் இருந்தார் என்பது கூடப் பலருக்குத் தெரியாது. காரணம் அவர் இயற்றிய நூல்கள் அதிகம் கிடைக்காததாலும் இருக்கலாம்.

காலாங்கிநாதர் சீனாவில் சமாதி கொண்டதாகக் கண்டோம். போகமுனிவர் பல இடங்களில் அதைப்பற்றிக் கூறியுள்ளார்.

போகர் சீனநாட்டில் வாழ்ந்த காலத்தில் அடிக்கடி உலக சஞ்சாரம் மேற்கொண்டு காடுமலைகளைக் கடந்தும், கடல்கள் நதிகளைத் தாண்டியும் ஆங்காங்குள்ள அதிசயங்களைக் கண்டு வந்து சீனமக்களுக்குக் கூறியதாகத் தமது சத்த காண்டத்தில் (7000) கூறுகிறார்.

அவ்வாறு சுற்றுப் பயணம் செய்து திரும்பி வரும் ஒவ்வொரு சமயமும் காலாங்கிநாதர் சமாதிக்குச் சென்று வணங்கி அவரிடம் ஆசி பெற்றுச் சென்றதாகக் கூறுகிறார்.

ஆச்சப்பா கைலாச மர்மம் எல்லாம்
அடைவுடனே போகரிஷி முனிவர் தாமும்
பேச்சு மொழியாய் ஞானம் தன்னில் தானும்
பேரான உபதேசம் அனைத்தும் கொண்டு
பாச்சலுடன் விடையதுவும் பெற்றுக் கொண்டு
பாங்கான குளிகையது பூண்டுமேதான்
ஆச்சரியமாக வல்லோ சீனதேசம்
அன்புடனே தம் பதிக்கு வந்திட்டாரே. 4637

போகமுனிவர் இப்பாடலில் சீனத்தைத் தமது நாடு என்றே குறிப்பிடுவதைக் கவனிக்கவும்.

வந்தாரே சீனபதி தன்னில் சென்று
வளமுடனே முக்காதக் கோட்டைக்குள்ளே
அந்தமுடன் போகரிஷி முனிவர் தானும்
அகங்களித்து மனதுவந்து குளிகை விட்டு
சொந்தமுடன் காலாங்கி சமாதி பக்கல்
சுத்தமுடன் மேற்புரத்து வாசல் நின்று
சிந்தனையாய் அஞ்ச்லிகள் மிகவும் செய்து
சிறப்புடனே சிரங் குனிந்து வணங்கிட்டாரே. 4638

Koviloor Digital Library

போகமுனிவர் பல நாடுகளிலும் சுற்றித் திரிந்து பலவிதமான மர்மங்களையும் அறிந்து கொண்டும், ரிஷிகள் பலரிடத்திலும் வாய் மொழியாக உபதேசங்கள் பெற்றும் ஞானம் கொண்டவராக-

அந்த ரிஷிகளிடம் விடைபெற்றுக் கொண்டு குளிகை பூண்டு விண் வழியாகத் தமது இருப்பிடமாகிய சீனநாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

சீனநாட்டிற்கு வந்ததும் தமது குருவான காலாங்கி நாதர் சமாதியடைந்திருக்கும் முக்காதக் கோட்டைக்குள் மிகவும் மகிழ்ச்சியுடனும், பூரிப்புடனும் நுழைந்து மேற்புற வாசல் வழியாகச் சமாதியின் அருகில் சென்று நின்று கரங் கூப்பி வணங்கித் துதித்தார்.

உடனே சமாதியின் கதவு திறந்தது. வாத்தியங்கள் முழங்கின. ஒளிமயமாகக் காலாங்கிநாதர் தோன்றி போகருக்குத் தரிசனம் தந்தார்

என்று பாடல்கள் தொடர்கின்றன.

இதேபோல் பிறிதோரிடத்திலும்,

சாகமுடன் சைனபதிக் கேகியல்லோ
சட்டமுடன் காலாங்கி நாதர் தம்மை
வேகமுடன் சமாதியிடம் கண்டுமல்லோ
விருப்பமுடன் எந்தன்குரு நாதா என்று. 4788

போகமுனிவர் காலாங்கி நாதர் சமாதியில் சென்று வணங்கியதைக் குறிப்பிடுகிறார். இம்மாதிரிப் பல இடங்களிலும் கூறியிருப்பது கொண்டு காலாங்கி நாதர் சீன நாட்டவர் என்று துணிய வேண்டியதாக ஏற்படுகின்றது.

போகமுனிவரும் சீன நாட்டவரே என்று கருதுபவர்களும் உளர். த்மிழ்நாட்டிலிருந்து சீனாவுக்குச் சென்று அங்கு நெடுங்காலம் தங்கியிருந்து பின் தமிழகத்திற்கு மீண்டார் என்றும் கருதுவார் உளர்.

போக முனிவர் சீனத்துக்குச் செல்வதையும் வருவதையும் பற்றிக் கூறும் பொழுது ஏதோ பக்கத்து வீட்டுக்குப் போய்விட்டு வருவதைப் பற்றிப் பேசுவதைப் போன்ற மயக்கம் ஏற்படுகிறது. கொங்கணவர், கருவூரார், சுந்தரானந்தர் போன்ற சித்தர்களும் சீனம் சென்று

Koviloor Digital Library

காலாங்கியின் சமாதியைத் தரிசித்ததாகக் கூறுகின்றனர். இதிலிருந்து அக்காலம் சீனத்துடன் போக்குவரத்து அதிகமாக இருந்த காலமாக இருந்திருக்கவேண்டும் என்று எண்ண இடமேற்படுகிறது. இச்சித்தர் களின் காலம் இமயம்வரைத் தமிழகம் பரவிக் கிடந்த மிகத் தொன்மையான காலமாக இருக்கலாம் என்று எண்ணுவதற்கும் இடமுள்ளது.

காலாங்கி நாதரைப் பற்றிப் பல அரிய செய்திகளை போகமுனிவர் தமது சத்த காண்டத்தில் (7000) கூறியுள்ளார். அவற்றில் சிலவற்றையேனும் இங்கே குறிப்பிட வேண்டும்.

ஒரு சமயம் ஒரு கொடிய பிரளயம் ஏற்பட்டது. விடாது பெய்த மழையால் உலகம் வெள்ளத்தில் மூழ்கியது. மரம் செடி கொடிகள், பிராணிகள் யாவும் அழிந்தன. காலாங்கிநாதர் ஒரு பெரிய மலைமேல் ஏறினார். வெள்ளம் மேலே ஏற ஏற அவரும் மேலே ஏறிக் கொண்டே போனார்.

வெள்ளத்தில் மூழ்கியும் கடுங்குளிரைத் தாங்கமாட்டாமலும் மக்கள் மடிந்தனர். உலகமே அழிந்து போய் விட்ட மாதிரித் தோன்றியது. மனதை அழுத்தும் துயரச் சுமையுடன் மேலேமேலே ஏறிச் சென்ற காலாங்கி நாதர் ஓரிடத்தில் பல ரிஷிகள் கூடியிருப்பதைக் கண்டார்.

ரிஷிகள் அவரிடம், "எங்களுக்கு மேலே செல்லச் சக்தி இல்லை. உன்னால் முடிந்தால் இன்னும் மேலே போய் விடு. வினாடிக்கு வினாடி வெள்ளம் ஏறிக் கொண்டே இருக்கிறது," என்று கூவினர்.

காலாங்கிநாதர் அந்த நல்லவர்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு மேலே சென்றார். திடீரென்று அவர் எதிரே மிகப் பெரிய புலி ஒன்று படுத்துக் கிடப்பதைக் கண்டார். அதை உற்றுப் பார்த்தார். அது உண்மையில் புலி அல்ல. யாரோ ஒரு சித்தர் மனிதர்களால் தமக்குத் தொல்லை ஏற்படாமல் இருப்பதற்காகப் புலி உருவம் கொண்டு படுத்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டார்.

சித்தான வேங்கை என்ற மனித சித்து
ஜெகதலத்தில் யாரேனும் கண்டதில்லை
புத்தியுள்ள என்தேவர் காலாங்கி நாதர்
பாங்கான திரேதாயின் யுகத்திலப்பா
வெற்றியுடன் கண்டதொரு மகிமை தன்னை
வேதாந்த சித்தெனக்கு வெளியிட்டார்காண். 6867

Koviloor Digital Library

காலாங்கிநாதர் எனக்குப் புலி உருவத்தில் இருந்த சித்தரைச் சந்தித்ததைப் பற்றிக் கூறினார். இது திரேதா யுகத்தில் நடந்த நிகழ்ச்சி.

மச்சரிஷி கூர்ம ரிஷி

கூறான கோடிவகை அதிசயங்கள்
கொற்றவனே காலாங்கி மலையிலப்பா
நீறான மலைமுனியாம் தவசியப்பா
நெடுங்காலம் தானிருக்கும் கொடிய சித்து
வாறான மச்சமென்ற தேகமப்பா
வளமான திருமுகந்தான் மனிதரூப்பம்
சேறாகும் சுனையோரம் மலை ஓரத்தில்
செம்மலுடன் தவமிருப்பார் ரிஷியார் தானே. 6868

காலாங்கிநாதர் திரேதாயுகத்தில் அம்மலைமேல் மேலும் பல அபூர்வமான ரிஷிகளைக் கண்டார். அவர்களில் ஒருவருக்கு மீனின் உடல். மனித முகம். அவர் ஒரு சுனை ஓரத்தில் தவத்தில் ஆழ்ந்து போயிருந்தார்.

மற்றோரிடத்தில் இன்னொரு ரிஷி. அவருக்கு ஆமை போன்ற உடல். மனிதமுகம்.

கேளப்பா தேகமது கூர்மம் போலாம்
கெடியான திருமுகந்தான் மனிதரூபம். 6871.

வராகரிஷி - நரசிம்மரிஷி

ஏறினார் காலாங்கி மலையின்மேலே
எழிலான பிரளயங்கள் வந்தபோது
மீறியே யாகங்கள் செய்து கொண்டு
மிக்கான மலைதனில் இருக்கும்போது
கூறியதோர் வராகமென்ற ரிஷியார் தாமும்
கொற்றவனார் மலைதனிலே தவமிருந்தார். 6873

தவம் செய்து கொண்டிருந்த வராக ரிஷியை வணங்கி நின்ற காலாங்கி நாதரைப் பார்த்து வராகரிஷி கூறுவார்.

தானான காலாங்கி நாதரே கேள்
தகைமையுடன் திரேதாயின் யுகத்திலப்பா
தேனான மனோன்மணியாள் கிருபையாலே
திரளான பிரளயங்கள் வந்தபோது

Koviloor Digital Library

மானான மகதேவர் கடாட்சத்தாலே
மன்னவனே நெடுங்காலம் தவமிருந்தேன்
மானான வையகத்தில் யாரேனுந்தான்
பக்கல் வந்து கேட்டதில்லை என்றிட்டாரே. 6976

அப்பா காலாங்கிநாதா! நான் இந்த மலைமேல் நெடுங்காலமாகத் தவமிருக்கிறேன். இதுவரை யாரும் இங்கே வந்ததும் இல்லை. என் அருகில் வந்து கேட்டதும் இல்லை.

இட்டாரே வராக ரிஷி முனிவர்தாமும்
எழிலான காலாங்கி தன்னைக் கண்டு
விட்டகுறை இருந்த தொரு புண்ணியத்தால்
விருப்பமுடன் எந்தனையும் காணலாச்சு
சட்டமுடன் உந்தனுக்கு உபதேசங்கள்
சாங்கமுடன் போதிப்பேன் என்று சொல்லி
திட்டமுடன் உலகத்தின் மகிமையெல்லாம்
தீர்க்கமுடன் காலாங்கிக்கு ஓதினாரே. 6877

வராக ரிஷியிடம் உபதேசம் பெற்றபின் ஒருநாள் காலாங்கி நாதர் அம்மலை மேல் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது நரசிம்ம ரிஷியைக் கண்டார்.

பார்த்தாரே நரசிம்ம ரிஷியார் தம்மை
பட்சமுடன் காலாங்கி காணும்போது
தீர்க்கமுடன் ரிஷியாரின் தவசின் வேடம்
திரேகமெல்லாம் சிம்மத்தின் ரூபமாகும்
நேர்த்தியுள்ள வர்ணமது தங்க வர்ணம்
நேர்மையுடன் வையகத்தில் இருந்த சித்து
ஆர்த்ததொரு திருமுகம் மனிதரூபம்
அப்பனே தவநிலையை அறிந்திட்டாரே. 6881

இவ்வாறே காலாங்கிநாதர் அம்மலையின்மீது வாமனரிஷி, பரசுராமரிஷி, ராமரிஷி, பலராமரிஷி, பௌத்தரிஷி, கல்கிரிஷி என்ற ரிஷிகளையும் கண்டார்.

முத்தான மோட்ச வழி பெறுவதற்கு
முனையான பத்துமகா ரிஷியார் தாமும்
சுத்தமுடன் திரேதாயி னுகத்திலப்பா
சுந்தரனே தவசிருந்த சித்து பாரே. 6907

Koviloor Digital Library

பாரேதான் காலாங்கிநாதர் தாமும்
பட்சமுடன் எந்தனுக்குச் சொன்னநீதி
நேரேதான் அவர்களுந்தான் மனிதர் அன்றி
நெடிதான தேவதா அவதாரமல்ல
சீரேதான் கலியுகத்து மாண்பரெல்லாம்
சிறப்புடனே தசாவதாரக் கடவுளென்று
வேறேதான் இன்னமொரு தெய்வமுண்டோ
வித்தகனே என்றல்லோ விதிக்கின்றாரே. 6908

வித்தகனே இவர்களெல்லாம் தெய்வமல்ல
விண்ணுலகம் பதிப்பதற்குக் கூடுமோதான்
செத்தவர்கள் கோடிமனு மாண்பருண்டு
தேவாதி தேவரிஷியான பேரும்
கைத்தவர்கள் தான் மறந்து மண்ணாய்ப் போனார்
காசினியில் யாவரும் இப்படியே போனார்
மெய்த்தவங்கள் செய்து மல்லோ காயம்பூண்டு
வெகுகோடி மாண்பர்களும் இருக்கின்றாரே. 6909

மேற்கூறிய பத்து ரிஷிகளும் மோட்சம் பெறுவதற்காக திரேதா யுகத்திலிருந்து தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தான் கலியுகத்து மாந்தர்கள் கடவுளின் பத்து அவதாரங்கள் என்று பேசுகின்றார்கள்.

இவர்கள் தெய்வங்கள் அல்ல.

மனிதர்கள் தேவர்கள் ரிஷிகள் எல்லோருமே மாண்டு போகக் கூடியவர்களே! ஏனென்றால் இவர்களில் யாரும் உண்மையான தவம் செய்தவர்கள் அல்ல. உண்மையான தவத்தைச் செய்து இறவாநிலை பெற்றவர்கள் அநேகர் உண்டு.

என்றிவ்வாறு காலாங்கிநாதர் மலைமேல் கண்ட அதிசய மனிதர்களைப் பற்றிக் கூறி உபதேசம் செய்கிறார்.

காலாங்கிநாதர் இயற்றிய நூல்கள்

வைத்திய காவியம்	1000
ஞானசாராம்சம்	500
வகாரத்திரவியம்	200

Koviloor Digital Library

ஞானம்	100
கற்பவிதி	84
ஞான பூஜாவிதி	80
தண்டகம்	80
பக்ஷணி	51
இந்திர ஜால ஞானம்	46
தீட்சாவிதி	35
உபதேசஞானம்	34
சூத்திரம்	33
ஞானவிந்த ரகசியம்	30
ஞானசூத்திரம்	29

இன்னும் பல நூல்கள் இயற்றியிருப்பதாகக் கருதப்படுகிறது. இவற்றில் பெரும்பாலானவை கிடைக்கவில்லை.

காலாங்கிநாதர் உபதேசஞானம்	34
" ஞானசூத்திரம்	29
" ஞானவிந்த ரகசியம்	30
" இந்திரஜால ஞானம்	48
" ஞான சைதன்யம்	18
" மறைப்பு சூஸ்திரம்	36
" கற்பவிதி சூஸ்திரம்	32
" பூஜாவிதி	85
" தீட்சைவிதி	36

என்ற நூல்கள் மட்டும் தாமரை நூலகத்தால் வெளியிடட் பட்டுள்ளன. இவற்றுள் முதற் கூறிய நான்கு நூல்கள் யோகஞான சாஸ்திரத் திரட்டு இரண்டாம் பாகத்திலும் மற்றநூல்கள் கைலாசநாதர் சூத்திரம் என்ற நூலோடு சேர்த்தும் வெளியிடப்பட்டுள்ளன.

காலாங்கிநாதர் வணிகனுக்குக் கோவில் கட்டப் பொருள் கொடுத்தது.

காலாங்கி நாதர் நீண்ட காலம் சதுரகிரிமேல் தவம் செய்து கொண்டிருந்தார். சதுரகிரியின் பல பகுதிகளிலும் சென்று ஆராய்ந்து ஆங்காங்கு தவம் செய்த சித்தர்களைக் கண்டு தரிசித்தார். அதைப்பற்றிக் காலாங்கிநாதர் தமது ஞானவிந்த ரகசியம் 30 என்ற நூலில் அற்புதமாகப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

தானான வேதங்கள் நான்கும் ஒன்றாய்ச்
சார்ந்திங்கு ஓர் உருவாய்ச் சமைந்ததாலே
வேனான பெயர் சதுரகிரி யீதென்றே
விண்ணவரும் மண்ணவரும் எண்ணியாரும்
தேனான மகாலிங்கர் அடியைப் போற்றி
செய்து சதாசேவித்து யோக நிஷ்டை
ஊனான உடல்எடுத்தோர் புரிவதாலே
உயர் முனிவர் சித்தர் எனப் பேருற்றாரே. 9.

பேருற்ற சதுரகிரி நாலுபக்கம்
பிரிவுண்டு அவ்வழியும் மெத்தக் கடினமப்பா
சேருற்ற மூன்று பக்கம் பாதை தானும்
சிவசிவா அடவி வழிச் சிரமம் மெத்த
நேருற்ற தெற்கு வழிப் பாதை சற்றே
நிகழ்த்துவேன் மலையின் அடிவாரந்தன்னில்
நீருற்ற ஓடை உள தோணிப்பாறை
நிலைகண்டு ஆற்றோரம் சென்று பாரே. 10

சென்றந்த ஆற்றுவழி திரமதாகச்
சேர்ந்திருக்குஞ் சிறுமலைகள் அநேகமுண்டு
குன்றந்தச் சாய்வோரம் செல்லும் பாதை
கூடினால் நவசித்தர் குகை ஒன்றுண்டு
நின்றந்தச் சித்தர்களை மனத்துள் எண்ணி
நிதானமாய் அவ்வழியே போக வேண்டும்
ஒன்றந்த வழிவடக்கே கொஞ்சந்தூரம்
உயர்ந்திருக்கும் மலையருகே குகையைப் பாரே. 11

பாரப்பா அக்குகையின் உள்ளே செல்லப்
பாம்பாட்டிச் சித்தரும் அங்கிருப்பார்
தேரப்பா நீவணங்கி அதன் மேற்காகத்
திரும்பவே அத்திரியின் குகைதானுண்டு
நேரப்பா ஆற்றூடே சத்தி ஊற்றாம்
நிலை காணா ரங்கேற்றம் நெடுங்காடப்பா
ஆரப்பா அறிவார்கள் அதைக் கடக்க
அதிகமாய்க் கற்காட்டின் பாதைதானே. 12

Koviloor Digital Library

பாதைவழி நேராய் நாதாந்த சித்தர்
பதியான குகைதெரியும் பார்த்துக் கொண்டு
வேதைநீ அடையாமல் உள்ளே சென்றால்
வேதாந்தச் சித்தருடன் குதம்பைச் சித்தர்
போதையுள்ள ஞானசித்தர் அடிவணங்கிப்
போற்றிவிடை பெற்றுவர மிருகண்டேயர்
வாதையில்லா வழியில் மகாதவமே செய்து
மகப்பேறு பெறுதற்குத் தவம் செய்தாரே. 13

மகம் செய்த இடத்தைவிட்டு வழியே கூடில்
வரரிஷியின் குகையாகும் ரிஷிகட் கெல்லாம்
அகஞ் செய்த குகையிதப்பா அதனுள் சென்றால்
அத்தமிகு காதவழி வெளியாய்த் தோன்றும்
பகஞ் செய்த தவசித்தர் யோகசித்தர்
பதஞ்சலியார் வியாக்கிரமர் அகப்பைச்சித்தர்
ஜெகஞ்செய்த நாதரிஷி வியாசர் தாமும்
சிறப்பாக அதிலிருந்து தெளிந்தார் பாரே. 14

பாடல்கள் மேலும் தொடர்கின்றன.

இந்த ஆறு பாடல்களிலேயே மலைப்பாதையின் அருமையும் அங்கே தவஞ்செய்த பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், ஞானசித்தர், வேதாந்தசித்தர், தவசித்தர், யோகசித்தர் முதலிய சித்தர்களைப் பற்றியும் வரரிஷி, மிருகண்டேயர், பதஞ்சலி, வியாக்ரமர், நாதரிஷி, வேத வியாசர் முதலியவர்களைப் பற்றியும் கூறுகிறார்.

இந்த ரிஷிகள் அனைவரும் இம்மலைமேல் தவம் செய்ததால் தெளிவுற்றார்கள் என்கிறார். மேலும் பல சித்தர்கள் ரிஷிகளைப் பற்றியும் தொடர்ந்து வரும் பாடல்களில் கூறுகிறார்.

காலாங்கிநாதர் சதுரகிரியில் தவமியற்றிக் கொண்டிருக்கையில் வணிகன் ஒருவன் ஓடோடி வந்து அவர் காலில் விழுந்து அழுதான். "ஐயனே... ! ஒரு சிவாலயம் கட்டிப் பிரதிட்டை செய்யவேண்டும் என்பதைத் தவிர அடியேன் மனதில் வேறு ஆசை கிடையாது. வேலையையும் தொடங்கி விட்டேன். கைப்பொருள் எல்லாவற்றையும், வீடு வாசல் அனைத்தும் விற்றுச் செலவு செய்து விட்டேன். ஆலயம் கட்டி முடிந்த பாடில்லை. தொழிலை விட்டு விட்டதால் சோற்றுக்கும்

Koviloor Digital Library

வழியின்றித் திண்டாடுகிறேன். எப்படியாவது அந்த ஆலயத்தைக் கட்டி முடித்துவிட வேண்டும் என்பதைத்தவிர வேறு ஆசை கிடையாது. செல்வந்தர்கள் காசே குறியாய் இருக்கிறார்கள். அரசனும் செலவழிக்க மறுத்து விட்டான். எனக்குத் தாங்கள் தான் உதவி செய்யவேண்டும்," என்று கூறி அழுதான்.

கோவில் கட்டுகிறேன், குளம் வெட்டுகிறேன் என்று கூறிப்பணம் திரட்டிக் கொண்டு ஓடிப் போகிறவர்கள் அநேகர் என்பதால் காலாங்கி நாதர் பதிலே சொல்லவில்லை. மௌனமாக இருந்தார்.

வணிகன் அந்த இடத்தை விட்டுப் போகவில்லை. அங்கேயே தங்கிவிட்டான். இரவும் பகலும் முனிவருக்குத் தொண்டு செய்தான். என்றாவது அவர் மனம் இரங்கும் என்ற எண்ணத்துடன் காத்திருந்தான்.

ஓர் இரவு அவன் எப்போது கோயில் கட்டுவேன்? எப்போது என் ஐயனைப் பிரதிட்டை செய்வேன்? என்று பிதற்றிக் கொண்டிருந்ததைக் கேட்ட காலாங்கிநாதர் அவன் உண்மையிலேயே ஆலயத் திருப்பணி செய்ய விரும்புகிறான் என்பதைத் தெரிந்து கொண்டார்.

மலை மேலிருந்த அரிய மூலிகைகளைச் சேகரித்து ஒரு தைலம் இறக்கினார். அந்த வகாரத் தைலத்தால் பொன்னை உண்டாக்கினார். வணிகனைப் பார்த்து "உனக்கு வேண்டியவரை எடுத்துக் கொண்டு போய்க் கோவிலைக் கட்டி முடி," என்றார்.

வணிகன் மகிழ்ச்சிப் பெருக்கால் திக்கு முக்காடியவனாய் முனிவரைப் பலமுறை விழுந்து விழுந்து வணங்கி விட்டுப் பொன்னை எடுத்துக் கொண்டு சென்றான். கோவிலையும் கட்டி முடித்தான்.

வகாரத் தைலம் மேலும் பொங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட காலாங்கி நாதர், அதை ஒரு கிணற்றில் தேங்கச் செய்தார். செம் பொன் உண்டாக்கக் கூடிய அத்தைலம் சிறுமதியாளர்களிடம் அகப்பட்டுவிடக் கூடாதென்பதற்காக அக்கிணற்றின்மேல் ஒரு பாறையைப் போட்டு மூடிவிட்டு, அதன் நாலு திசைகளுக்கும், வராகி, காளி, பேச்சியம்மை, கறுப்பண்ணன் ஆகிய தெய்வங்களைக் காவலுக்கு நியமித்து விட்டுத் தவம் செய்வதற்காக வேறிடத்திற்குச் சென்றுவிட்டார்.

இந்த வரலாறு சதுரகிரித் தலபுராணத்தில் காணப்படுகிறது.

Koviloor Digital Library

காலாங்கி நாதர் சீனநாட்டில் சமாதி கொண்டிருப்பதாகப் பல இடங்களில் கூறியிருந்த போதிலும் போகர் ஜனன சாகரம் என்ற நூலில்.

ஆதியென்ற சிதம்பரமே திருமூலராச்சு
அவருடன் பதினெண் பேரதிலே யாச்சு
சோதியென்ற காலாங்கி நாதர் தாமும்
துலங்குகின்ற காஞ்சிபுரந் தனிலே யாகும்
ஜனன - 306.

என்று கூறுகிறார். சீனம் முதல் யவனம் வரை, சித்தர்கள் எங்கெங்கு சுற்றிய போதிலும் எங்கெங்கு சமாதிகளில் அமர்ந்த போதிலும் கடைசியாக முக்தியடைவதற்காகத் தமிழ்நாட்டிற்கே வந்து சேர்ந்துள்ளார்கள் என்பதை இதிலிருந்து அறியலாம்.

✡ ✡ ✡

Koviloor Digital Library

போகமுனிவர்

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போகதேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத்தோரே.

- திருமந்திரம் சிறப்புப் பாயிரம்

மெய்வழிகண்டவர் என்று திருமூலர் பிரானால் தம்மோடொப்பாக வைத்துச் சிறப்பிக்கப்பட்ட போகமுனிவர் திருமூலர் காலத்தைச் சேர்ந்தவராகத்தானே இருக்க வேண்டும்?

ஆனால் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் அறிஞர் மு.அருணாசலம் போகர் பதினாறாம் நூற்றாண்டில் பழனியில் வசித்ததாகக் கூறுகிறாரே?

எது உண்மை?

இந்த ஐயம் தோன்றுவது இயல்பே.

போகர் தமிழகத்தில் இருந்தார். சீனத்துக்குச் சென்றார். அங்கே பல காலம் வாழ்ந்திருந்து சீனமொழியில் பல நூல்களைச் செய்தார். பின் தமிழ் நாட்டுக்குத் திரும்பிவந்தார். பழனிமலையில் வசித்து பழனி தண்டபாணி சிலையை நவபாஷாணக் கட்டால் அமைத்தார் என்று எடுத்துக் கொள்வது சரியாக இருக்கலாம்.

போகமுனிவர் தமிழில் ஏராளமான நூல்களை இயற்றியிருந்தபோதிலும் அவற்றைவிட மிகமிக அதிகமாகச் சீனமொழியில் இயற்றியுள்ளார். சீனாவில் அவருக்கு போ-யாங் என்று பெயர் என்றும் வா-ஓ-சியூ என்ற பெயரில் சீனாவின் தலை சிறந்த ஞானி என்று கொண்டாடப்படுகிறார் என்றும் போகரைப் பற்றி நீண்ட ஆய்வுகள் செய்துள்ள பேராசிரியர் இராமையா யோகி அவர்கள் தமது போகர் சத்தகாண்டம் நூலின் பதிப்புரையில் கூறியுள்ளார். இவர்

Koviloor Digital Library

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் பேராசிரியராக இருந்தவராகையால் இவர் கூற்றில் ஐயப்பாட்டிற்கு இடமிராது என்று நம்புகிறோம்.

போ-யாங்= போகர்

போகமுனிவர் சீன நாட்டில் போ-யாங் என்ற சீனரின் உடலில் கூடுவிட்டுக் கூடுபாய்ந்து சீன நாட்டவராகவே வாழ்ந்தார் என்றும் கூறப்படுகிறது.

சீனநாட்டில் நெடுங்காலம் வாழ்ந்தபின் தமிழ்நாட்டுக்கு வந்தபோது சீனத்து உடலிலேயே வந்தாரா அல்லது தமது பழைய உடலோடு வந்தாரா என்பதும் தெரியவில்லை.

போகமுனிவர் சீனநாட்டுக்குச் செல்வதற்கு முன்புதான் கொங்கணவர், கருவூரார், இடைக்காடர், சட்டைமுனி போன்ற சீடர்கள் அவருடன் இருந்தார்கள்.

சீனத்திலிருந்து அவரோடு வந்தவர் புலிப்பாணி என்பர். புலிப்பாணியே சீனாவுக்குச் சென்று அவரைக் கண்டு பிடித்து அழைத்து வந்ததாகவும் முதுமை காரணமாக போக முனிவரால் நடக்க முடியாததால் புலிப்பாணி அவரைத் தமது முதுகில் சுமந்து வந்ததாகவும் கூறுபவர்களும் உண்டு.

ஆனால் சித்தரின் உடலுக்கு முதுமை என்பது ஏது?

போகர் சீனாவிலிருந்து திரும்பி வந்தது பற்றி வேறொரு வரலாறும் கூறப்படுகிறது.

போகர் சீனாவிலிருந்து மூன்று சீடர்களோடு தமிழ் நாட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். நன்றியுள்ள ஒரு நாயும் அவர்களை விடாமல் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

இமய மலைகளின் கொடிய குளிரும் நெடிய பயணமும் அவர்களை வருத்தின. குளிரைத் தாங்கவும் நடைக் களைப்பால் சோர்ந்து போகாமலிருக்கவும் போகர் பல அரிய மூலிகைகளைக் கொண்டு காய கல்பக் குளிகைகளைச் செய்து கொண்டு வந்திருந்தார்.

அந்தக் குளிகைகளில் ஒன்றை முதலில் அந்த நாய்க்குக் கொடுத்தார். குளிகையை விழுங்கியவுடன் நாய் சுருண்டு மடங்கி விழுந்தது. பிறகு ஒரு சீடனுக்குக் கொடுத்தார். அவனும் விழுந்து

Koviloor Digital Library

பிணம் போல் கிடந்தான். பிறகு மற்ற சீடர்கள் இருவருக்கும் கொடுத்தார்.

சீடர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுக்குச் சாக மனம் வரவில்லை. குளிகையை விழுங்குவது போல் பாசாங்கு செய்து விட்டு மறைத்து வைத்துக் கொண்டனர்.

போகமுனிவர் தாமும் ஒரு குளிகையை விழுங்கினார். அதே இடத்தில் இறந்தவர் போல் விழுந்துவிட்டார்.

சீடர்கள் குளிகைகளை வீசி எறிந்தனர். "ஐயோ குருநாதா! போய்விட்டீர்களே" என்று அடித்துக் கொண்டு அலறி அழுதனர். பிறகு இறந்தவர்களை நல்லபடி அடக்கம் செய்யவேண்டும் என்று நினைத்தவர்களாகப் பெட்டிகள் வாங்கிக் கொண்டு வருவதற்காகச் சென்றனர்.

அவர்கள் திரும்பி வந்து பார்த்த போது இறந்து கிடந்தவர்களைக் காணவில்லை. போகமுனிவரும் அவருடைய உண்மையுள்ள சீடனும், நாயும் வெகு தொலைவில் போய்க் கொண்டிருந்தனர்.

காய கல்பக் குளிகையின் வேகம் தாங்காமல் மூர்ச்சித்து விழுந்தபின் அந்தக் குளிகை உடலில் வேலை செய்து பல மாற்றங்களை உண்டாக்கிப் புதிய தெம்புடனும் ஆற்றலுடனும் அவர்களை எழச் செய்திருக்கிறது. மூடர்களான சீடர்கள் அதை உணரவில்லை. தமது அறியாமையை நினைத்து வருத்தியபடி சீடர்கள் வந்த வழியே திரும்பினர்.

சீனாவிலிருந்து போகமுனிவரை புலிப்பாணி சுமந்து கொண்டு வந்தார் என்று சொல்வதை விட இந்தக் கதையே பொருத்தமாக இருக்கிறது.

போகமுனிவர் பழனியில் வாழ்ந்தார். தண்டபாணி சிலையை நவ பாஷாணக் கட்டால் சமைத்தார். கோவிலில் பிரதிஷ்டை செய்தார். தமக்குப் பின் புலிப்பாணியை பூஜை முதலானவற்றைக் கவனித்துக் கொள்ளும்படி நியமித்துவிட்டுச் சமாதியடைந்தார். (பழனியாண்டவர் சந்நிதிக்குப் பின்புறத்திலேயே போகர் சமாதி இருக்கிறது) என்பவை கண்கூடாகத் தெரியும் உண்மைகள். ஆயினும் போகர் வாழ்வாறு மிகவும்

Koviloor Digital Library

சர்ச்சைக் கிடமளிப்பதொன்றாகும். அவரைப் பற்றி வழங்கப்பட்ட கட்டுக் கதைகளும் ஏராளம்.

போகர் பற்றி - அகஸ்தியர்

அகஸ்திய முனிவர் போகரை சீனாக்காரர் என்றே கூறுகிறார். அகஸ்தியர் பனிரெண்டாயிரம் நான்காம் காண்டத்தில்,

சித்தான சித்துமுனி போகநாதன்
சிறந்த பதினெண்பேரில் உயர்ந்த சீலன்
கத்தனெனும் காலாங்கி நாதர் சீடன்
கனமான சீனபதிக் குகந்த பாலன்
முத்தான அதிசயங்கள் யாவற்றுந்தான்
மூதுலகில் கண்டறிந்த முதல்வன் சித்தன்
நித்தமுமே மாசிலாக் கடவுள் தன்னை
நீணிலத்தில் மறவாத போகர் தானே. 12/4 487

தானே கேள் புலிப்பாணி சித்தருக்கு
தனியான குருபரனா ரிவரே என்பார்
கோனே தானிவருடைய தந்தை தாய்கள்
கொற்றவனே நெடுங்கால முன்னேயப்பா. 488

ஆமேதான் சீனபதி தேசந்தன்னில்
அப்பனே சீனபதிப் பெண்களுக்கு
போமேதான் ஏவல்பணி ஏதென்றாக்கால்
பொங்கமுட னுடுகரைகள் வெளுக்கு மாண்பர்
தாமேதான் சவுக்கார வழலை கண்டோர்
..... 489

போகமுனிவர் சீனபதிக்கு உகந்தபாலர். காலாங்கியின் சீடர். சித்தர்களில் முதன்மையானவர். புலிப்பாணியின் குரு. இவருடைய தாய் தந்தையர்கள் சீனாவில் பெண்களுக்குத் துணிகள் வெளுத்துக் கொடுத்துப் பிழைத்து வந்தனர் என்கிறார் அகஸ்தியர். போகர் சலவைத் தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்தவர் என்கிறார்.

அதோடு சவர்க்காரம் - சித்தர்கள் அறியவேண்டிய முதன்மையான பொருள். போகரின் தாய் தந்தையர் அதன் தன்மையை உணர்ந்தவர்கள்

Koviloor Digital Library

என்று கூறி எதிர்காலத்தில் போகர் சவர்க்கார வழலை மார்க்கம் கண்டதற்கு ஒரு அடிப்படையையும் உண்டாக்கியுள்ளார்.

பாரேதான் சீனபதி வெள்ளை மாண்பர்
பாருலகில் போகருட மரபென்பார்கள்
நேரேதான் பதினெட்டு வெள்ளை மாண்பர்
நெடிதான பூவுலகில் வாழ்ந்தாரப்பா. 491

சீன நாட்டிலுள்ள வெள்ளை நிற மக்கள் போகரின் மரபு என்பார்கள். உலகத்தில் பதினெட்டு வகையான வெள்ளை மனிதர்கள் உண்டு. அவர்களிலே சீனர்களும் ஒருவகையாவர்.

கேளப்பா போகரவர் சிறுவன் பாலன்
கெடியான விளமையிலே அதிசயங்கள்
தாளப்பா தாய்ப்பாலை உண்ணும் போதும்
தகைமையுடன் ஆறுதிங்கள் நடக்கும் போதும்
வாளான ரம்பம்போல் வார்த்தை கூறும்
வளமான லோக அதிசயங்கள் கூறும்
மீளப்பா ஞானப்பால் தானே கேட்கும்
விட்டகுறை வாய்த்த தென்று கூறும் பாரே. 495

கூறுமே வேதாந்த சின்மயத்தை
குறிப்புடனே லோகத்தார் பிரமை கொள்ள
தாறுமா றாகவேதான் அட்சரங்கள்
தனித்தனியே அறியாத தன்மை போலும்
வேறுடனே லோகமதை வெறுத்தார் போலும்
வேதாந்தத் தாயினுட வார்த்தை கூறும்
மாறுடனே வார்த்தையது கண்டபோதே
மாதாவும் மெத்தவுந்தான் துக்கிப்பாளே. 496

பால்குடிக்கும் பச்சிளங் குழவிப் பருவத்திலும், ஆறேழு மாதங்கள் உடைய இளம் சிசுவாக இருந்த போதும்- குழந்தை பேசும் சொற்களைக் கேட்டுத் தாயார் திடுக்கிடுவாள். உலக அதிசயங்களில் ஒன்று போல் தன் வயதுக்கு மீறிய சொற்களைக் கூறும்.

மந்திரச் சொற்களை மழலை மொழியில் தாறுமாறாக உச்சரிக்கும். உலகத்தின் நிலையாமை பற்றியும் எல்லோர்க்கும் தாயான ஒருத்தி

Koviloor Digital Library

இருக்கிறாள் என்றும் கூறும். குழந்தை இப்படிப் பேசுவதைக் கண்ட தாயானவள், "இது என்னமோ ஏதோ தெரியவில்லையே?" என்று மிகுந்த துக்கம் அடைவாள்.

துக்கித்த தாயாரும் மெச்சவேதான்
துப்புரவாய் சேயதுவும் ஏதுரைப்பான்
தக்கபடி உத்தாரம் விடையும் கூறும்
தனியான வேதாந்தத்; தன்மையோடும்
சிக்கமுடன் யோகத்தைக் காணவேண்டும்
சிதாகாசப் பொருளனைத்தும் அறியவேண்டும்
மிக்கவே சத்த சாகரத்தை யானும்
மீட்சியுடன் காணவென்று பேசும் பாரே. 495

அவ்வாறு தாயார் துக்க மடையும் சமயங்களில், "அம்மா நீ ஏன் கவலைப் படுகிறாய்? என்னைச் சாதாரண மனிதன் என்று நினைத்துக் கொள்ளாதே. நான் பிறவிக் கடலைத் தாண்டிப் பெரும் பேறடையப் பிறந்தவன். இந்த உலகம் எல்லாம் சுற்றி வரப்போகிறேன். ஏழுகடல்களையும் தாண்டிப் போகப் போகிறேன்," என்றெல்லாம் வித்தாரம் பேசும்

நவிலவே பலவாறாய் ஞானங் கூர்வான்
நாதாக்கள் தெளிவதுவும் மிகவே பேசும்
புவிதனிலே நெடுங்காலம் இருந்த சித்து
புங்க சித்து போதனிலை யறிந்து மேதான்
கவியான சாத்திரங்கள் இதிகாசங்கள்
கற்றறிந்து சமாதிநிலை கொண்டுமேதான்
பவிதமென்ற ஞானப்பால் தன்னிலேதான்
பரவுலகில் நெடுங்காலமிருந்தார் காணே. 497

சிறு குழந்தையாக இருந்தபோதே ஞானத்தை உபதேசிப்பவர் போல் பேசுவார். பெரிய ஞானிபோல் பேசுவார், பிற்காலத்தில் உலகத்திற்கு அநேகம் நூல்களை அளிக்கப் போகிறவர் அல்லவா? அவர் இந்த உலகத்தின்மேல் நெடுங்காலம் இருந்தார்.

அகத்தியமுனிவர் போகரைப்பற்றி இவ்வாறு கூறுகிறார். அகத்தியர் பனிரெண்டாயிரம் என்ற நூல் மட்டும் கிடைக்காமலிருந்தால் போகரைப் பற்றிய இந்த வரலாறு உலகிற்குத் தெரியாமலே போயிருக்கும்.

Koviloor Digital Library

அது மட்டுமன்று, போ-யாங் என்ற சீனப் பெயரே போகர் என மருவியது என்று துணிவாரும் உளர். உலகத்தில் எங்குமே இல்லாத பெயராக போகர் என்ற பெயரை உண்டாக்கி போகத்தில் ஆழ்ந்து போனவர். ஆகையால் அப்பெயர் ஏற்பட்டது என்ற வதந்தியை உண்டாக்கி அவதூறுக் குள்ளாக்கப் பட்டார். அதற்குத் தக்கபடி கதைகளும் உண்டாக்கப் பட்டன என்று கருதுவார் பலர்.

போகர் என்ற பெயருக்கு நியாயமான, ஒரு காரணம் கற்பிக்க விரும்புபவர் சகலத்துறைகளிலும் துறை போயவர் ஆகையால் போகர் என்ற பெயர் ஏற்பட்டது என்றும் கூறுவர்.

போ-யாங் என்ற பெயர் போ-யர் என்று மரியாதை நிமித்தம் அழைக்கப்பட்டு போகர் என்று மருவியிருக்கலாம் என்பதே ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

சித்தர்களின் சாதி

போகர் ஏழாயிரத்தில் போகர் தம்மைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்.

உரைத்தோமே எந்தனிட சாதிமார்க்கம்
உத்தமனே விஸ்வகர்மன் என்னலாகும்
திரைத்ததொரு எந்தனது தலைமுறைதானப்பா
திரளான பதினெட்டுத் தலைமுறையேயாகும்.

போகர் தாம் விஸ்வகர்ம குலத்தில் ஐந்து பிரிவுகளில் ஒன்றில் பிறந்ததாக கூறுகிறார். அதில் இருந்து போகர் பொற்கொல்லர் குலத்தில் பிறந்தவர் என்று கூறப்படுகின்றது. ஆனால் கருவூரார் தமது வாதகாவியம் 700- ல்

பாரப்பா போக நாதர் பண்புள மட்குலாலர்
நேரப்பா ஜெனித்து யிந்த நீணிலமதனி லேதான்

மட்குலாலர்=குயவர்

என்று கூறுகிறார்.

அகஸ்தியரும் தமது அமுத கலைக் ஞானம் 1200 என்ற நூலில்.

உறுதியுள்ள போகனுமே குசவன் சாதி
ஓகோகோ அவன்பாடல் லக்கோ இல்லை.

அ.அ. கலை - 218

என்று கூறுகிறார்.

Koviloor Digital Library

இவ்வாறு சித்தர்கள் ஜாதி விஷயத்தில் வேறுபாடு ஏற்படுவதல் காரணம், கருவூராரே கூறுகிறபடி,

பிரியமுடன் பரகாயப் பிரவே சந்தான்
பெரியோருஞ் சித்தர்களுஞ் செய்து கொள்வார்
உரியபடி கூடுவிட்டுக் கூடுபாய்தல்
உலகத்தில் சித்தருக்கு வழக்கமாமே.

வருவதும் போவதுவு மாயிருந்தால்
வகுத்துரைக்கச் சாதிவகை முடியுமோ தான்
அறிவுவர உலகோர்க்காய் ஜாதி சொன்னேன்
அல்லாரு மொருஜாதி யல்லால் வேறோ.

கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்ற உத்தி மூலம் சித்தர்கள் வெவ்வேறு உடலில் பிரவேசித்து வாழும் பழக்கம் உடையவர்களாக இருந்ததால் அவர்களுக்கு சாதி கூறுவது கடினம் என்று கருவூரார் கூறுகிறார்.

போகர் ஏழாயிரத்தில் மட்டுமே எல்லா சித்தர்களுக்கும் ஜாதி கூறப்பட்டிருக்கின்றது. சித்தர்களை பற்றிய ஆய்வு நடத்து பவர்களுக்கு அதைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். ஆகையால் இங்கு எடுத்தக்காட்ட விரும்புகிறோம்.

காலாங்கிநாதர்	-	மயன் சாதி (சிற்பி - கன்னார்)
போகர்	-	விஸ்வகர்மா (பொற்கொல்லர்)
ரோமரிஷி	-	மீனவர்
மச்சமுனி	-	கல்லுடையார் (செம்படவர்)
சட்டைமுனி	-	சிங்களவர்
இடைக்காடர்	-	கோனார்
தன்வந்திரி	-	மகாவிஷ்ணு
மூலத்தீசர்	-	வேளாளர்
அகத்தீசர்	-	வேளாளர்
சிவவாக்கியர்	-	சங்கரகுலம்
இராமதேவர்	-	விஷ்ணுகுலம்
புசுண்டர்	-	அக்னிகுலம் (வன்னியர்)
கருவூரார்	-	கன்னார்.
பிண்ணாக்கீசர்	-	கன்னடியர்
புலிப்பாணி	-	வேடர்
நந்தீசர்	-	மிருகமகாரிஷி

Koviloor Digital Library

புலஸ்தியர்	-	சிங்களவர்
வியாசர்	-	சந்திரகுலம்
தேரையர்	-	பிரம்மகுலம்
யாகோபு	-	ராமதேவர்குலம்
கொங்கணவர்	-	யாதவகுலம் (அகஸ்தியர் கொல்லர் கருமான் என்று கூறுகிறார்)
தட்சிணாமூர்த்தி	-	கவுண்டர்
கோரக்கர்	-	மராட்டியர்
கௌபாலர்	-	பப்பரவர் - பொற்கொல்லர்
சோதிமுனி	-	பள்ளர்
டமரகர்	-	மறவர்
சுந்தரானந்தர்	-	ரெட்டி-அகமுடையார் (தேவர்)
வரரிஷி	-	கள்ளர்சாதி
வால்மிகி	-	வேடர்
ஊர்வசி	-	தேவமடந்தை
கமலமுனி	-	குறவர்
அறிவானந்தர்	-	வள்ளுவர்
அகப்பேய்ச்சித்தர்	-	நாயனார் சாதி
குதம்பைச்சித்தர்	-	கோனார்
பாம்பாட்டிச் சித்தர்	-	ஜோகி
காலகண்டர்	-	கள்ளர்
சுப்பிரமணியர்	-	சைவபீடம்
யூகிமுனி	-	குறும்பர்
ஜமதக்கினி	-	சைனர்
திருணாக்கியமுனி	-	சைனர்
சண்டேசர்	-	வள்ளுவர்
திருமூலர்		வேளாளர்
பூனைக்கண்ணர்		எகிப்தியர்

சித்தர்கள் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்பதில்லாமல் எல்லா சாதிகளிலும் பிறந்தவர்களாக இருப்பதைக் காண்கிறோம். அதைப்போல் இந்த நாட்டைச் சேர்ந்தவர் அந்த நாட்டைச் சேர்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் சீனத்தில் பிறந்தவர். சிங்களத்தில் பிறந்தவர், கன்னடியர், மராட்டியர், தேவர்குலத்தில் பிறந்தவர் என்றில்லாமல் எல்லோரும் சித்தர் என்ற நிலையை அடைந்து சித்தர்களாக வாழ்ந்திருப்பதைக் காண்கிறோம்.

Koviloor Digital Library

போகமுனிவருடைய வாழ்க்கையைப் பற்றி அறிவதற்கு போகர் ஏழாயிரத்தைத் தவிர வேறு ஆதாரம் கிடையாது.

போகர் ஏழாயிரத்தில் தம் வாழ்வில் நடந்த சம்பவங்களையும் ஆங்காங்கு கூறியிருக்கிறார். அவற்றைப் பற்றி அறிவதால் சித்தர்களின் தன்மை, கற்பசித்தி, காயசித்தி, யோக சித்தி முறைகளால் அவர்கள் அடையக் கூடிய நிலைகள் முதலியவற்றைப் பற்றி அறிய முடிகிறது என்பதால் இங்கே அவற்றை எடுத்துக் காட்டுவோம்

போகர் தியானத்தில் அமர்ந்தது.

பரவியே காலாங்கி நாதர் சொன்ன
பக்குவத்தால் அடியேனும் பார்த்துத் தேறிப்
புரவியே பொதிகைக்கு வாயு மூலை
பெருத்ததோர் சுணங்கவிருக் கத்தின் கீழே
அரவியே அறுபத்து மூன்று பேர்க்கு அங்கு
அட்டாங்க யோகத்தைப் போதித் தேன்யான்
பரவியே அறுபத்து மூன்று பேர்க்கும்
பலித்ததே அட்டாங்க சித்தி தானே. 348

சித்தியாய் அறுபத்து மூன்று பேரும்
தேசம் எங்கும் திரிந்திட்டு விண்ணில் ஏறி
அத்தியாய் அடுக்காறு தலமும் புக்கி
அதிசயங்கள் எல்லாம் தாம் அளைந்து பார்த்து
நத்தியாய் நடனத்தின் புதுமை கண்டு
நாதாந்தத் தசநாத நாட்டம் பார்த்துப்
புத்தியாய் பூமிக்குள் மேருவலம் வந்து
போந்தாரே பிள்ளைகள் தான் புகழ்ந்தேன் காணே.349

காணவே பிள்ளைகள் தான் வணக்கம் செய்தார்
கை அமர்த்திச் சமாதிக்குள் செல்லும் என்றேன்
ஊணவே காலாங்கி நாதர் பாதம்
உகந்துமே நெஞ்சில் வைத்து மூலநாதர்
தோணவே பாதம் என்றன் சிரசில் வைத்துச்
சிவயோக மார்க்கத்தில் தெளிய என்று
வேணவே சுணங்க விருக்கத்தின் கீழே
வேட்டிதனை விரித்துமே விரைந்தேன் பாரே. 350

Koviloor Digital Library

போகமுனிவருக்கு அறுபத்து மூன்று சீடர்கள் இருந்தனர். அவர்களுக்கு அட்டாங்க யோகங்களையும் கற்பித்து இனி நீங்கள் வெளியில் போய்க் கற்றுக் கொண்ட வித்தைகளைப் பரிசோதித்துப் பாருங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்.

அறுபத்து மூன்று பேரும் நாடெல்லாம் சுற்றிப் பார்த்த பின் விண்வெளியில் தாவி ஆங்கு உள்ள ஆறு தலங்களையும் நன்றாகப் பார்த்துக் கொண்டு மனோண்மணிதேவி எழுந்தருளியிருக்கும் இடம் வரை சென்று சிலம்பொலி கேட்டுப்பின் பூவுலகை நோக்கித் திரும்பினர். பூவுலகில் மேருமலையை வலம் வந்து வணங்கிப் பின் கீழே இறங்கி வந்து போகமுனிவரை வணங்கினார்கள்.

போக முனிவர் மிக மகிழ்ச்சி அடைந்தவராக இனிச் சிறிது காலம் சமாதியில் இருங்கள் என்று கூறி அனுப்பி விட்டுத் தாமும் சுணங்க மரத்தின் கீழ் வேட்டியை விரித்துப் போட்டுச் சிவயோகத்தில் அமர்ந்தார்.

சிங்கத்துக்குப் போகர் உபதேசஞ் செய்தல்

விரைந்துமே நூறாண்டு சிவயோ கத்தில்
வெளி ஒளிப்பாழ தனில் மனம் விரவிப் போச்சு
திரைந்துமே ஆண்பெண் ஆம் சிங்கம் ரெண்டுஞ்
சிலையென்று நமை எண்ணிச் சிறக்கு நாளில்
புரைந்துமே வெகு நாளாய்ப் பிள்ளைகளைப் பெற்றுப்
பெருக்கங் களாகியே சிங்கக் கூட்டம்
நரைந்துமே நமைச் சுற்றி இருந்து கொண்டு
நாட்டமாய் இரை கொண்டு புசிக்கும்பாரே. 351

பார்க்கவே வெகுநாளாய் இருக்கும் போது
பரிவாக அதில் ஒருநாள் நமக்குத் தானும்
ஆர்க்கவே ஆனந்தக் கண்ணீர் தானும்
அருவிபோல் திவலை சிந்த மடியின் மேலே
தீர்க்கவே சிங்கமது படுத்தி ருக்கத்
திவலை தான் சிங்கத்தின் வாயில் வீழ
ஆர்க்கவே எழுந்திருந்து விழித்துப் பார்த்து அங்கு
ஆனந்த வாரியினால் ஞான மாச்சே. 352

Koviloor Digital Library

ஞானமாய்ப் பந்துசனந்தமை அழைத்து
நாதாந்த சிவயோகி தன்னை நாமும்
கானமாய்க் கல் என்றே அருகு இருந்தோம்
கடுஞ்சாபம் நமக்குவரப் போகுது என்று
தூனமாய் அவ்விடத்தைச் சுத்தி பண்ணிச்
சுற்றிலும் தன் பிள்ளைகளைக் காவல் வைத்துத்
தானமாய்த் தங்களுக்கு இடந்தான் வேறே
சவுதரித்துச் சதாநித்தம் போற்றி செய்தே 353

போற்றியே அர்ச்சித்து அஞ்சலிதான் பண்ணிப்
பேரான சீவசெந்தைப் புசித்தி டாமல்
தேற்றியே புல்சருகு களைப் புசித்துச்
சிவசிந்தை மறவாமல் காத்திருக்கும்
ஆற்றியே இப்படித்தான் அநேக காலம்
அர்ச்சித்துக் காத்திருக்கும் நாளில் நானும்
வேற்றியே வெளியொளிப்பாழ் தன்னை விட்டு
வெளியிலே மனந்தன்னை விரைந்திட்டேனே. 354

விரைந்திட்டுக் கண் விழித்துப் பார்க்கும் போது
மிருகம் என்ற சிங்கம் எலாம் நடுநடுங்கி
அரைந்திட்ட அடிவணங்கி நிற்கும் போதில்
ஆர்நீங்கள் என்று சொல்லி யான்தான் கேட்கத்
திரைந்திட்ட மிருகமென்ற சிங்கம் நாங்கள்
செயலறியாப் புத்தியினால் சிலை என்று எண்ணி
முறைந்திட்ட மூர்த்தியின் பாதத்தில் நின்றோம்
முதிர்ந்த கண்ணீர்த் திவலையினால் அறிவு உண்டாச்சே.355

போகமுனிவர் ஒரு சுணங்க மரத்தின் கீழ் வேட்டியை விரித்துப் போட்டு தியானத்தில் அமர்ந்தார். அவருடைய மனம் வெளி ஒளிப்பாழில் லயித்துப் போய் பிரம்ம நிலையில் அப்படியே தங்கிவிட்டது.

நாட்கள் கடந்தன. ஆண் ஒன்று பெண் ஒன்றுமாக இரண்டு சிங்கங்கள் அவ்வழியாக வந்தன. அந்த இடம் வாழ்க்கை நடத்த ஏற்றதாக இருப்பதாக நினைத்தன.

ஏதோ ஒரு கற்சிலை இருக்கிறது. அதுவும் நல்லதுதான் என்று நினைத்துக் கொண்டன.

Koviloor Digital Library

அங்கேயே விலங்குகளை அடித்துக் கொண்டு வந்து தின்றன. அங்கேயே ஆணும் பெண்ணும் விளையாடிக் கலவியில் ஈடுபட்டன. குட்டிகளை ஈன்றன. காலப்போக்கில் அங்கு ஒரு சிங்கக் கூட்டமே உண்டாகிவிட்டது.

ஒருநாள் ஆண்சிங்கம் கற்சிலையின் மடியில் படுத்து நாவில் வாயைத் தடவிக் கொண்டிருக்கையில் சிலையின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளி ஒன்று அதன் வாயில் விழுந்தது. வெளிஒளிப் பாழில் அனுபவித்த அளவு கடந்த ஆனந்த நிலையின் காரணமாக உண்டான கண்ணீர் அது, சிங்கம் திடுக்கிட்டுப் போய்க் கீழே குதித்தது. சித்தர் முகத்தைப் பார்த்தது.

சித்தரின் உடலில் சற்றும் கூடச் சலனமில்லை. ஆனால் கண்களில் மட்டும் கண்ணீர்த் துளிகள் சொட்டுச் சொட்டாக உருண்டு உதிர்ந்து கொண்டிருந்தன. சித்தரின் கண்ணீர்த் துளியை உண்டதால் அதற்கு ஞானம் உண்டாகிவிட்டது.

உடனே தன் மனைவி மக்களை அழைத்தது. "ஐயகோ! நாம் கற்சிலை என்று நினைத்தது சிலையல்ல. இதோ பாருங்கள். கற்சிலை கண்ணீர் விடுமா? இது சிலை அல்ல. யாரோ மகான்! சமாதி யோகத்தில் அமர்ந்திருக்கிறார். இந்த இடத்தை எப்படியெல்லாம் அசிங்கப்படுத்தி வைத்திருக்கிறோம். என்னென்ன தப்புத் தண்டாக்களை யெல்லாம் இங்கேயே செய்தோம்!

"ஐயகோ! ஐயகோ! முனிவர் விழித்துக் கொண்டால், நம்மைச் சபிக்கப் போகிறார்....." என்று புலம்பியது.

உடனே நிலைமையைப் புரிந்து கொண்ட பெண் சிங்கம் அந்த இடத்தைச் சுத்தப் படுத்தத் தொடங்கியது. மற்ற சிங்கங்களும் உதவிபுரிந்தன, எலும்புகளும், தோல்களுமாகக் கிடந்த அந்த இடத்திலிருந்த அசுத்தங்களையெல்லாம் போக்கித் தண்ணீர் தெளித்து நறுமண மலர்களைக் கொண்டுவந்து குவித்து மங்களகரமான இடமாக மாற்றிவிட்டன.

அன்று முதல் சிங்கங்கள் புலால் உண்ணுவதை விட்டுவிட்டன. ரிஷிகள் உண்பதைப் போன்று காய்கனி இலை சருகுகளைப் புசித்து வாழ்ந்தன. அவையும் சிவ சிந்தை நெறியில் நின்றன.

இப்படி இருக்கும் காலத்தில் போகமுனிவர் வெளி ஒளிப்பாழில் பதிந்திருந்த தம் மனதைமீட்டு உலகிற்குக் கொண்டுவந்தார். தன் அருகிலிருந்த சிங்கத்தைப் பார்த்து "நீ யார்?" என்று கேட்டார்.

Koviloor Digital Library

சிங்கம் தான் விலங்காக வாழ்ந்த காலத்தில் பல தவறுகள் செய்ததையும் அவருடைய கண்ணீர்த் திவலை தன் வாயில் விழுந்ததால், ஞானம்பெற்று அன்று முதல் தூய வாழ்க்கை நடத்தி வருவதையும் கூறித் தான் செய்த பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டது.

போகமுனிவரின் அருளால் சிங்கம் ராஜ குடும்பத்தில் பிறந்து நீதியுடன் அரசாண்டு முத்திபெற்றது.

பூனைக்கு உபதேசம்

தரித்திட்டுப் பானமொடு சமைத்துண் டேன்பின்
தாகித்துத் தண்ணீர்தான் தேடிக் கொண்டு
விரித்திட்டு விப்பிராள் வீதி சென்றேன்
வேதந்தான் ஓதிவெகு விப்பி ராள்தான்
துரித்திட்டுச் சொல்லையிலே தண்ணீர் கேட்டேன்
துர்க்கந்தம் வீசுதென்று பார்ப்பா ரெல்லாம்
அரித்திட்டே அகத்துக்குள் போய்விட்டார்கள்
ஆக்கிரமாய்ப் பூனைஒன்று அழைத்திட்டேனே. 657

அழைத்திட்டுப் பூனை தனக்கு உபதேசத்தை
அருள் செய்யப் பூனையது நாலு வேதம்
பழைத்திட்ட பார்ப்பார் போல் தீர்க்க மாகப்
படித்தவர் போல் நால்வேதம் பகரும்போது
சழைத்திட்ட பார்ப்பார்கள் ஓடிவந்து
சாங்கமாய்த் தண்டனிட்டு அஞ்சல் பண்ணிப்
பிழைத்திட்ட அடியேங் கட்கு என்ன புத்தி
போதிப் பீர்எங்குருவே போதிப்பீரே. 658

குருவென்றே தாகத்துக்கு அமுதம் ஈந்தார்
கொண்டுமே வத்துவொடு சுத்தி ஈந்தே
அருவென்றே பாத்திரங்கள் ஈந்து ஐயா
ஆயி அவள் உபதேசம் அனுக்கிர கித்துத்
தருவென்றே அவரவர் தம்வீட்டில் உள்ள
தவலைசெம்பு மண்வெட்டி உழவுப் பாறை
வெருவென்றே வெளிதன்னில் குவிக்கச் சொல்லி
விராட்டிப்போர் தனையடுக்கி நெருப்பிட்டேனே. 659

Koviloor Digital Library

இட்டுமே சிவந்தபின்பு கொணர்ந்த சூதம்
எள் அளவாய் எடுத்துமே திவலை வீச
கட்டுமே கனகம்பத் தரையுமாச்சு
கணக்காக அவரவர்கள் எடுத்துக் கொண்டார்
கெட்டுமே குளிகை இட்டுக் கமன மாகிக்
கெடியான பொதிகைக்கு நிருதி மூலை
துட்டுமே சுணங்க விருட் சத்தின் கீழே
சோதியாம் பர்வதமும் கிட்டத் தானே. 660

பொதிகை மலைச் சாரலில் தங்கியிருந்த போகர் ஒருநாள் உணவு சமைத்து உண்டபின் நீர் வேட்கையால் அருகிலிருந்த சிற்றூருக்குச் சென்றார். பார்ப்பனர்கள் வசிக்கும் தெரு அது. ஒரு வீட்டுத் திண்ணையில் கும்பலாகப் பார்ப்பனர்கள் அமர்ந்து வேதம் ஓதிக் கொண்டிருந்தார்கள். போகர் அவர்களிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டார்.

"யாரடா நீ.... போ போ போ..... கிட்ட வந்தாலே நாற்றம் அடிக்கிறது", என்று சொல்லிக்கொண்டு அத்தனை பார்ப்பனர்களும் எழுந்து வீட்டிற்குள் போய் விட்டார்கள்.

போகர் அவ்வழியாக வந்த பூனை ஒன்றை அழைத்தார். அதன் காதில் வேதத்தை ஓதிவிட்டார். பூனை நன்றாக உட்கார்ந்து கொண்டு உரத்த குரலில் வேதத்தை ஓதத் தொடங்கிற்று.

பார்ப்பனர்கள் எட்டிப் பார்த்தார்கள். ஓடிவந்து போகரின் கால்களில் விழுந்து, "தெரியாமல் அபச்சாரம் செய்து விட்டோம். எங்களை மன்னித்து விடுங்கள்", என்று கூறித் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

வந்திருப்பவர் போகர் என்பது தெரிந்ததும், "ஐயனே! நாங்கள் எல்லோரும் நீண்டகாலமாக வறுமையால் வாடுகிறோம். எங்கள் வறுமை நீங்க வழி செய்ய வேண்டும்", என்று வேண்டிக் கொண்டாகள்.

போகர் அவர்களுடைய வீடுகளில் இருந்த உலோகங்களால் ஆன பொருள்களையெல்லாம் கொண்டுவந்து குவிக்கச் சொன்னார்.

அண்டா, குண்டா, அடுக்குப் பாத்திரம், தவலை, சொம்பு, மண்வெட்டி, கடப்பாறை எல்லாவற்றையும் கொண்டுவந்து குவித்தார்கள். போகர் அவற்றின்மேல் விரட்டிகளை அடுக்கி நெருப்பு வைத்தார்.

Koviloor Digital Library

உலோகங்கள் பழுக்கக் காய்ந்தபின் தாம் கொண்டு வந்திருந்த ஆதிரசத்தை எடுத்துச் சில துளிகள் தெளிக்க அத்தனையும் பத்தரை மாற்றுத் தங்கம் ஆகிவிட்டன. அந்தணர்கள் மிக மகிழ்ச்சியோடு அவரவர் பொருள்களை எடுத்துக் கொண்டார்கள்.

அதன்பின் போகர் பொதிகை மலைச் சாரலில் தாம் வசித்த சுணங்க மரத்தடிக்குச் சென்றார்.

போகர் காராம் பசுவுக்கு உபதேசம் செய்தது

அறிவுண்டாய்ச் சுரபிசன்ம ஆரண்ணியத்தில்
ஆயன் தான் மேய்க்கின்ற காலந்தன்னில்
நெறியுண்டாய்ப் புலிஒன்றங்கு ஆவின்மேலே
நீச்சாகப் பாய்ந்திடவே ஆவுதப்பி
மறியுண்டாய் மலை முழைஞ்சில் புகுந்து போச்சு
மடையனாம் இடையன்தான் மாட்டைத்தேடி
வெறியனாய்த் தேடிவிட்டுக் காணாமல்தான்
மீண்டுவந்து மனஞ்சலிப்பாய் விரைந்திட்டானே. 553

விரைந்தபின்பு ஆவுக்குப் புல்இல் லாமல்
வீழி என்ற இலைதன்னைத் தின்று கொண்டு
அரைந்தபின்பு அனேகநாள் புசிக்கும்போது அங்கு
ஆவுக்குப் புலிப்பாயி லப்போ தானும்
முரைந்தபின் புமூன்று திங்கள் வயிற்றில் கர்ப்பம்
மூர்க்கமாய் இலையதுதின்று ஏழு மாதம்
கரைந்தபின்பு கன்று ஈன்று பெரிய தாகிக்
கறுப்பான வீழியிலை தின்னும் பாரே. 554

தின்னுமே யுகாந்தவரைச் சடமிருக்கில்
சிறப்பான மூலிகையால் சித்தி ஆச்சு
தென்னுமே இப்படியாய் இருக்கும்போது
ஏகமாய்நான் ஒருநாள் இலைக்குப் போந்தேன்
கண்ணுமே கருவீழி தன்னைப் பறிக்கில்
கருதியே தாய் பிள்ளை இரண்டும் வந்தே
அண்ணியே யென்னை மோந்து அடியில் நிற்க
ஆதரவாய் அனுபூதி உரைத்திட் டேனே. 555

Koviloor Digital Library

உரைத்திடவே வாய்பேசி பூர்வ சரிதை
உரைக்கலுமே மனமகிழ்ந்து தாய்பிள் ளைக்கும்
புரைத்திடவே பூரணத்தின் விலாசஞ் சொல்லிப்
பிரமநிட்டை யோகத்தைப் போதித் தேனான்
திரைத்திடவே திண்ணமிகு மாசு தானும்
திருந்தியுமே காயமது தூய்தாகும்
மிரைத்திடவே யோகத்தில் நின்று தேறி
நிலையான காயசித்தி யோகசித்தி யாச்சே. 556

யோகசித்தி காயசித்தி பண்ணிக் கொண்டு
உற்றபசி அடக்குதற்கு வீழி யாகுந்
தாகசித்தி சுனைத் தண்ணீர் தனைக் குடித்துத்
தன்முலைப்பால் தன்னையே கன்றுக் கீந்தே
ஆகசித்தி அனேகமாங் கோடி காலம்
அடுக்கான மலைமுழைஞ்சில் புக்கு நின்று
காகசித்தி போற்பறந்து காம தேனாய்க்
கற்பாந்தந் தாய்பிள்ளை இருந்திட்டாரே. 557

ஒரு இடையன் காட்டில் பசுக்களை மேயவிட்டு விட்டுப் போய்ப் படுத்துக்கொண்டான். தனியாக மேய்ந்து வந்த ஒரு பசுவைப் புலி ஒன்று பார்த்து விட்டது. உடனே பசுவை நோக்கிப் பாய்ந்தது.

பசு படுவேகமாகப் பாய்ந்து சென்று ஒருமலைக் குகைக்குள் புகுந்து தப்பிவிட்டது.

இடையன் பசுவைத் தேடினான். வெறி பிடித்தவன் போல் தேடி அலைந்தான். பசுவைக் காணவில்லை. மனம் சலித்துப் போய் வீடு திரும்பிவிட்டான்.

அது முதல் அந்தப் பசு அந்த மலையிலேயே வசித்தது. பசிக்கு அம்மலைமேல் அடர்ந்து வளர்ந்திருந்த கருவீழி இலையைத் தின்றது. அதன் வயிற்றிலிருந்த கன்றும் கருவீழி இலைச் சத்தையே உண்டு வளர்ந்தது.

கன்று ஈன்ற பின்பும் தாய்ப்பசுவும் கன்றும் கருவீழி இலை யையே தின்று வாழ்ந்தன. அதனால் அவை கற்ப தேகங்களைப் பெற்றுவிட்டன.

ஒருநாள் மூலிகை தேடிச் சென்ற போகர் பசுவையும் கன்றையும் கண்டு அவற்றின் மகத்துவத்தை உணர்ந்து அவற்றுக்கு உபதேசம்

Koviloor Digital Library

செய்தார். அதன் பயனாக அவை தெய்வலோகம் சென்று காமதேனுக்களாய் வாழ்ந்தன.

போகர் ஆதிரசம் கொண்டு வந்தது இரசக் கிணறு

வைத்துமே இப்படித்தான் குளிகை ரெண்டு
வாயில் ஒன்று கரத்தில் ஒன்று வைத்துக்கொண்டு
கெய்த்துமே ககனத்திலோடி நீதான்
கெடியான கிழக்கென்ற சமுத்திரத்தில்
எய்த்துமே ஈசான மூலைக் குள்ளே
ஏற்றமாம் உரோமபுரிப் பட்டணத்துள்
தெய்த்துமே தெற்காக விரத கூபந்
தேடியே ஆதிரசக் கிணற்றைப் பாரே. 647

கிணற்றடியில் இராட்சதரைக் காவல் வைத்துக்
கெட்டியாய்த் தேவர்களும் காத்து நிற்பார்
மணத்தடியில் சூதத்தை மனிதர் சித்தர்
மகத்தான கமனிகள் தாம் எடுப்பார் என்று
சணத்தடியில் சதநித்தம் காவலாகும்
தாக்கான பஞ்சகிர்த்தியம் சாட்சியாக
நிணத்தடியில் போகாமல் சிவன்தான் முன்னே
நிறுத்தினார் காவலாய்க் கிணற்றில் தானே. 648

தானான ரிசிசித்தர் யோகி தாமும்
தவசுபண்ணி அனேகநாள் தவமிருந்தார்
கோனான குளிகைக்கு ரசமெடுக்கக்
ககனத்திற் பாய்ந்துகிணற் றடியில் போனேன்
தூனான சூதமது கடுஞ்சு ருக்காய்த்
துரந்தெடுத்து பாய்கையிலே சுருக்கா யோடி
நானான ரவி தன்னில் சொக்கிக் கொண்டு
நாதாந்தத் தாய்பதத்தை நாடி னேனே. 649

நாடியே தாய்தன்னைக் கேட்கும்போது
நாட்டமொன்று சொல்லிடவே நம்பி நானும்
பாடியே பரமனைத்தான் தோத்தரித்துப்
பாங்கான தம்பனையா மந்திரத்தைத்

Koviloor Digital Library

தேடியே செபம்பண்ணச் சூதந் தானும்
துரத்தாமல் அடங்கிற்றுச் சீக்கிரமாய்த் தானும்
ஆடியே தேங்காயின் குடுக்கைக் குள்ளே
அடைத்துமே கக்கத்தில் அமைத்திட்டேனே. 650

அமைத்திட்டுக் ககனத்தில் எழும்பும்போது அங்கு
அழும்பான கமனியவன் மறித்துக் கொண்டு
திமைத்திட்டுச் சிவனுடைய பொக்கிசத்தைத்
திருடியே போவானேன் என்று சொல்லிப்
பமைத்திட்ட குடுக்கை யைத்தான் பறிக்கவந்தான்
பறியாதே திருமூலர் பேரன் யான்தான்
குமைத்திட்ட குளிகைகட்டக் கொண்டு போறேன்
கொடுமூலர் சபித்தால் கல்லா வாயே. 651

கல்லானால் அனேகம்பேர் காவலுண்டு
கயிலையுறை சிவனுடைய பொக்கி சத்தை
எல்லாரும் எடுப்பார்கள் என்றே எண்ணி
எங்களைத்தான் காவல்வைத் தார்ஏற்றமாகத்
தில்லானால் சிவனுத்தா ரப்படிக்குச்
செய்கிறதே அல்லாமல் மற்றொன் றில்லை
வல்லானாற் கொடுபோநீ என்று சொல்லி
மறிக்கவே அனைவருந்தான் வந்திட்டாரே. 652

வந்திட்டுச் சுற்றிலுமே வளைத்துக் கொண்டார்
வசியமா மந்திரத்தை உச்சரித்தேன்
அந்திட்டங் கடிவணங்கி எல்லோருந்தான்
அய்யாநீ ராருடைய மரபென் றார்கள்
முந்திட்டு மூலரவர் மூன்றாம் பேரன்
முக்கியமாம் போகரென்று மொழிந்திட் டேன்யான்
கொந்திட்டுக் கொடுமூலர் பேரன் என்றால்
குளிகையதின் குணப்பாட்டைக் காட்டு என்றாரே.653

காட்டென்று சொன்னதுமே குளிகை தன்னைக்
கடலில்விட்டுச் சங்கிலியைப் பிடித்துக் கொண்டேன்
ஓட்டென்று யோசனையாம் தூரம் தானும்
உறக்குடித்து மண்தெரிந்து பள்ளமாச்சு

Koviloor Digital Library

நாட்டென்றே எல்லோரும் நடுநடுங்கி
நமக்கெல்லாம் ஆக்கினைதான் ஆகும் என்று
மூட்டென்று முன்போல ஆக என்று
முனிந்துமே தெண்டனிட்டு மொழிந்தார் காணே. 654

காணவே சுரபியென்ற குளிகை தன்னைக்
கசங்காமல் சங்கிலியில் கயிறு கட்டி
முணவே முன்குளிகை தன்னில் விட்டேன்
முதிர்ந்துநின்ற குளிகையைத்தான் சுரபி தீண்டில்
தாணவே நீரெல்லாங் கக்கி முன்போற்
சமரசமாங் கடல் எப்போதும்போல் ஆயிற்று
ஆணவே ராட்ச தரும் அடிவணங்கி
அஞ்சல்பண் ணிக்குளிகை ஒன்று கேட்டிட்டாரே. 655

கேட்கவே குளிகைபண்ணித் தாரேன் என்றேன்
கெட்டியாம் தேங்காயின் குடுக்கை தன்னில்
வேட்கவே வேணும் என்ற சூதம் தானும்
விரைந்து கொடுத்து அஞ்சலிதான் செய்து நின்றார்
வாட்கவே மண்டலத்தில் குளிகை கொண்டு
வருவன்என அடிதொழுது அனுப்பிவிட்டார்
நாட்கவே சமுத்திரத்தைத் தாண்டிப் பின்பு
சாங்கமாய்ப் பொதிகைகீழ்த் தரித்திட்டேனே. 656

போகர் தாம் செய்து முடித்த இரச குளிகை (இரசமணி) களின் ஆற்றல் கண்டு மிகவும் வியப்படைந்தார். அதே மாதிரி குளிகைகளைச் செய்து மற்ற சித்தர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டார். அதற்காக ரோமாபுரி சென்று மிகத் தூய்மையான ஆதிரசம் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தார்.

உடனே குளிகைகளில் ஒன்றை வாயில் போட்டுக்கொண்டு மற்றொன்றைக் கையில் வைத்துக் கொண்டு விண்வெளியில் பறக்கத் தொடங்கினார்.

கீழ்க்கடலைத் தாண்டி ஈசான்ய மூலையில் உரோமாபுரிப் பட்டணத்தின் தென்புறமாக இருந்த இரசக் கிணற்றைத் தேடிக் கண்டுபிடித்தார்.

விண்வெளியாய்ச் சஞ்சரித்து வரும் சித்தர்கள் இரசத்தை எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள் என்பதால், சிவபெருமான்

Koviloor Digital Library

கட்டளைப்படி அந்தக் கிணற்றுக்கு - இரவும் பகலுமாக ராட்சதர்கள் காவல் இருந்தார்கள். அவர்கள் கண்களுக்குப் படாமல் தம்மை மறைத்துக் கொண்டு போகர் கிணற்றருகில் சென்று ஒரு தேங்காய்க் குடுக்கையில் இரசத்தை எடுக்க முயன்றார்.

உடனே இரசம் அவர் கைக்குக் கிட்டாமல் சுருண்டு பின் வாங்கியது. போகர் அதை நெருங்க நெருங்க அவர் கைக்குக் கிட்டாமல் இரசம் ஓடிக் கொண்டே இருந்தது. போகர் கண்களை மூடிக்கொண்டு அன்னையைத் தியானம் செய்தார். தாயின் உத்தரவு பிறந்தது. அதன்படி சிவனைத் தியானம் செய்து தம்பன மந்திரத்தைப் பிரயோகம் செய்தார்.

இரசம் ஓடாமல் நின்றது. அதைத் தேங்காய்க் குடுவையில் நிரப்பிக் கொண்டு விண்ணில் தாவினார். உடனே காவல் நின்ற ராட்சதன் ஒருவன் வழி மறித்தான். "சிவன் சொத்தைக் கொள்ளை யடித்துக் கொண்டு போகவா பார்க்கிறாய்?" என்று அதட்டியபடி குடுவையைப் பிடுங்க வந்தான்.

"நான் திருமூலரின் பேரன் என்பதைத் தெரிந்து கொள், குளிகை செய்வதற்காக இரசம் கொண்டு போக வந்தேன். மூலர் சபித்தால் நீ கல்லாகப் போவாய்", என்று போகர் எச்சரித்தார்.

"நான் ஒருவன் கல் ஆனால் என்ன? என்னைப் போல் ஆயிரம்பேர் இங்கு காவல் இருக்கிறார்கள். சிவபெருமான் உத்தரவுப்படி நாங்கள் நடக்கிறோம். உனக்குத் துணிவிருந்தால் எங்களை மீறி இரசத்தைக் கொண்டு போ", என்றான் அந்த வீரன் அதற்குள் மற்ற வீரர்கள் எல்லோரும் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

உடனே போகர் வசிய மந்திரத்தை உச்சரித்தார். ஆத்திரத்துடன் அவரைத் தாக்க வந்தவர்கள் சாதுக்களாக மாறி விட்டார்கள். "நீ திருமூலரின் பேரன் என்றால் குளிகையின் சக்தியை எங்களுக்குக் காட்டு, பார்க்கலாம்", என்றார்கள்.

அவர்கள் காட்டு என்று சொன்னவுடன் போகர் தம் கரத்திலிருந்த குளிகையைக் கடலில் போட்டு விட்டு ஒரு சங்கிலியைப் பிடித்துக் கொண்டார். குளிகை கடல் நீரைக் குடிக்க ஒரு யோசனை தூரம் வரை தண்ணீர் வற்றிப் பள்ளமாய்த் தரை தெரிந்தது.

இராட்சசர்கள் பயந்து போய் விட்டார்கள். சிவனுக்குத் தெரிந்தால் நாம் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்று நினைத்து

Koviloor Digital Library

நடுங்கியவர்களாய், "போதும் போதும். முன் போலே செய்து விடுங்கள்," என்று கெஞ்சினார்கள்.

போகர் தம்மிடமிருந்த மற்றொரு குளிகையைக் கயிற்றில் கட்டி சங்கிலியில் கோர்த்து முன் குளிகையை நோக்கி எறிந்தார். உடனே முன் குளிகை நீரை எல்லாம் கக்கி விட்டது. இரண்டு குளிகைகளும் போகரின் கைக்கு வந்து சேர்ந்தன.

இராட்சசன் ஒரு தேங்காய்க் குடுவை நிறைய இரசம் கொடுத்து அடிவணங்கி, "நீங்கள் எனக்கும் ஒரு குளிகை செய்து கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். அவ்வாறே தருவதாக வாக்களித்து விண்வெளியில் கிளம்பிப் போகர் பொதிகைமலைச் சாரலுக்கு வந்து சேர்ந்தார்.

சீனாவில் வாழ்ந்த காலத்தில்

போகர் சீனாவில் வாழ்ந்த காலத்தில் பலமுறை உலகைச் சுற்றிவந்து ஆங்காங்கு தாம்கண்ட அதிசயங்களை சீனமக்களுக்குக் கூறினார். தாம் கண்டவை போன்ற அதிசய இயந்திரங்களையும் சீனமக்களுக்கு உண்டு பண்ணிக் கொடுத்தார்.

அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிப்பிடுவோம்.

அறியவே ஐந்தாவதான காண்டம்
அவனிதனில் அதிசயங்கள் இதிலடக்கம் 4003

என்ற பாடலில் ஐந்தாவது காண்டத்தில் தாம் சொல்லப் போகும் பொருளை தெளிவாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

போகமுனிவர் விண்வெளியாக உலகத்தைச் சுற்றி வந்ததால் உலகத்தின் அமைப்பைக் கண்டறிவதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

கொள்ளவே பிருதிவி என்ற பூமிதானும்
குவலயத்தில் நான்கிலோர் பங்குமாகும்
விள்ளவே சத்தசாகரமும் அப்பா
மிக்கான மூன்று பங்கு என்னலாகும். 4005

நிலம் ஒரு பங்கு - நீர் மூன்று பங்கு - உலகத்தின் அமைப்பு இது. இதைத் தாம் நேரிலேயே கண்டதாகப் போகர் கூறுகிறார்.

Koviloor Digital Library

போகர் ஆணிமுத்து விளையும் கடலைக் கண்டார். சீனர்களிடம் ஒரு முத்து கொண்டுவந்து காண்பிக்க அவர்களும் அக் கடலைக் காணவிரும்பினர்.

போகர் அவர்களுக்கு நீராவிக்கப்பல் கட்டிக் கொடுத்து கடற் பயணம் செய்து முத்துக் கடலைக் காண உதவினார்.

போகர் செய்த கப்பலில் கடலுக்குள்ளே இருக்கும் பாறைகளைக் காண்பதற்கு உதவியாக ஒரு கண்ணாடியைச் செய்து அமைத்திருந்தார். அதனால் சீனர்கள் அபாயம் இல்லாமல் கடற்பயணம் செய்ய முடிந்தது.

போகர் கடல்களின் மேல் விண்வெளியில் பறந்து செல்லும் காலத்தில் கடலில் பச்சைமலை¿ (மரகதமணியால் ஆன மலை): ,ஒன்றைக் கண்டார்.

சிவப்பு நிறமான கெம்பு என்ற இரத்தினங்கள் விளையும் ஆற்றைக் கண்டார். பவளம் விளையும் காட்டைக் கண்டார். யானைத் தலைகளைப் போன்ற பெரிய பெரிய வண்டுகள் - கதண்டுகள் - அவற்றில் ஒன்று கொட்டினாலும் ஆள் பிழைக்க முடியாது - அப்படிப்பட்ட வண்டுகள் மொய்க்கும் காட்டைக் கண்டார். அசுவினி தேவர்களுக்குச் சொந்தமான பறக்கும் குதிரையைக் கண்டார். அதே போல் பறக்கும் இயந்திரம் ஒன்றைச் சீன மக்களுக்கு உண்டாக்கிக் கொடுத்தார். இப்படிப் பல வரலாறுகள் ஐந்தாம் காண்டத்தில் கூறப்பட்டுள்ளன.

போகர் சந்தித்த பல ரிஷிகள் சித்தர்களைப் பற்றியும், தேவர்கள் அசுரர்களைப் பற்றியும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது. கற்பனையோ என்று ஐயப்படத்தக்க பல நிகழ்ச்சிகள் ஐந்தாம் காண்டத்தில் இருந்த போதிலும் அவற்றை அடியோடு ஒதுக்கித் தள்ளிவிட முடியாது என்ற எண்ணமும் ஏற்படுகின்றது.

சித்தர்கள் வழக்குரைத்தல்

போகர் வாழ்க்கை வரலாற்றில் முக்கியமான பகுதி சித்தர்கள் தட்சிணாமூர்த்தி (சிவபெருமான்) யிடம் போகரைப் பற்றிப் புகார் கூறியதும் அதைத் தொடர்ந்து நடந்த விசாரணை முதலானவையும் ஆம்.

தானென்ற சவுக்காரச் சுண்ணம் தன்னை
சதாசிவன்தான் சொன்னபடி தாய்க்குத் தானும்
வானென்ற மனோன்மணித்தாய் நந்திக்குச் சொன்னர்ள்
மகத்தான நந்திகேசுவரனார் தாமும்

Koviloor Digital Library

தூனென்ற திருமூலர்க்கு உபதேசித்தார்
திருமூலர் காலாங்கிக்கு அருள்தான் செய்தார்
ஆனென்ற காலாங்கி ஐயர் தாமும்
அடியேனுக்கு அனுக்கிரகம் பண்ணினாரே. 7000/1 - 821

பண்ணியதோர் பலாபலத்தைப் பார்த்துத் தேறிப்
பண்பாக வாதவித்தை கடிதாம் என்று
எண்ணி ஏழாயிரத்தில் சவுக்காரத்தை
எல்லோரும் அறியவென்று எழுதிப்போட்டேன்
நண்ணியே ரிஷிசித்தர் வேதாந்த யோகி
நாதாந்த முனிவர் எல்லாம் முறையைப் பார்த்து
ஒண்ணியே மனதொன்றாய்ச் சவுக்காரத்தை
ஒளியாமல் சொன்னவரார் சொல் என்றாரே. 822

சிவபெருமான் சவுக்காரத்தின் பெருமையை அன்னைக்குச் சொன்னார். அன்னை அதை நந்திக்கு உபதேசித்தாள். நந்தி திருமூலருக்கு உபதேசிக்க அதை அவர் காலாங்கிக்கு உபதேசித்தார். காலாங்கி போகமுனிவருக்கு உபதேசித்தார்.

போகர் பார்த்தார். இந்த வாத வித்தை மிகவும் கடினமாக இருக்கிறது என்று நினைத்தார். எல்லோரும் அறிந்து கொள்ளட்டுமே என்ற எண்ணத்தால் எல்லோருக்கும் புரியும் படியாக வெளிப்படையாக எழுதிவிட்டார்.

மற்ற சித்தர்கள் நூலைப் பார்த்தனர். பொறாமை! ஆத்திரம்.... ! இப்படி வெளிப்படையாகப் பாடினது யார் என்று பலபேர் கூச்சல் போட்டார்கள்.

கூர்மமுனி என்பவர் எழுந்து, "திருமூலரின் பேரனான போக முனி என்பவரே, இந்தக் காரியத்தைச் செய்தார். இதனால் உலகம் எல்லாம் சித்தர் மயமாகப் போய்விடும். இதை இப்படியே விட்டு விடக் கூடாது" என்றார்.

சித்தர்கள் எல்லோரும் கலந்து பேசி அகத்தியர் தான் இதற்கு ஒரு வழிகண்டு பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்து அகத்தியரிடம் சென்று முறையிட்டார்கள்.

"இதை எம்மால் தீர்க்க முடியாது. சிவபெருமானிடமே போவோம்", என்று கூறி அகத்தியர் சித்தர்களை அழைத்துக் கொண்டு தட்சிணாமூர்த்தியிடம் சென்றார்.

Koviloor Digital Library

தம்மை வணங்கி நின்ற சித்தர்களைப் பார்த்துக் கயிலாய தட்சிணாமூர்த்தியானவர், "எல்லோரும் இப்படி ஒன்றாகக் கூடி வந்திருக்கிறீர்களே என்ன விஷயம்? " என்று கேட்டார்.

"பிழைவென்ற போகரென்ற முனிவர்தாமும்
பேரான சாத்திரந்தான் புகன்றிட்டாரே..."

என்று சித்தர்கள் ஒரே குரலில் கூச்சலிட்டார்கள்.

"அதனால் என்ன?" என்று தட்சிணாமூர்த்தி கேட்க,

இட்டதொரு சாத்திரத்தில் சுத்தமாக
ஏற்றமாம் ஆதிஎன்ற வெடியுப்பு வழலை
திட்டமாங் கல்லுப்புச் செயமாம் வீரம்
சொல்லாத தீட்சைவிதி யோகமார்க்கம்
விட்டதொரு அட்டகன்மம் சக்கரத்தாபிதம் தான்
மேன்மையாம் தேவியுடைக் கிரியா மார்க்கம்
நட்டதொரு முத்திரைகள் மவுன நேர்மை
நாட்டாத கருவெல்லாம் நாட்டினாரே. 826

நாட்டினார் குளிகை தன்னை வெட்ட வெளியாக
நலமாகும் சாரணைகள் கிராவணங்கள் குடோரி
சூட்டினார் அநேக வித்தை சொல்லப் போகா
சுருக்கிலே அவர் தம்மை அழைத்து வந்து
நீட்டினார் சாத்திரத்தை வாங்கிப் பார்த்துச்
சேகரிச்சுப் போடுதற்கு வந்தோம் என்றார்
தூட்டினார் தட்சிணாமூர்த்தி தானும்
சோதித்துப் பார்ப்போம் என்று மொழிந்திட்டாரே. 827

சித்தர்கள் குற்றச் சாட்டுகளை அடுக்கினார்கள்.

"வெடியுப்பைப். பற்றி வெளிப்படையாகச் சொல்லி விட்டார்", என்றார் ஒருவர்.

"கல்லுப்பை மட்டும் விட்டு விட்டாரா..? அதையும் சொல்லிவிட் டாரே?"

"வீரத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்".

"தீட்சைவிதி, யோக மார்க்கம் எல்லாவற்றையும் தான் சொல்லிவிட்டாரே

Koviloor Digital Library

குற்றப் பத்திரிகை நீண்டது. "அவரை நீங்கள் கூப்பிட்டு விசாரித்து, அந்த நூலை வெளிவிடாமல் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் அதற்காகத்தான் வந்தோம்", என்றார்கள்.

தட்சிணாமூர்த்தி பார்த்தார். கூர்ம முனியை அழைத்து "நீ போய் போக முனிவரை அழைத்துவா", என்று கட்டளையிட்டார்.

கூர்மமுனி போகரிடம் சென்றார். அவரை வணங்கி நின்றார். போகர் வந்தவரை உபசரித்து, அன்னம் தண்ணீர் கொடுத்து, "என்ன விஷயமாக வந்தீர்?" என்று கேட்டார்.

"கயிலாய தட்சிணாமூர்த்தி உங்களை அழைத்து வரச் சொன்னார். அதற்காக வந்தேன்", என்றார் கூர்மமுனி.

"அப்படியா? எதற்காக என்னை அழைத்துவரச் சொன்னார்?"

"சித்தர்கள் எல்லோரும், அகத்தியமாமுனிவரும், எல்லோருமே சொன்னதால் உங்களை அழைத்துவரச் சொன்னார்."

போகருக்கு விஷயம் புரிந்தது. உடனே தக்கபடி ஆடை அணிந்து சித்தம் செய்து கொண்டு குளிகையின் உதவியால் விரைந்து சென்று தட்சிணாமூர்த்தியைப் பணிந்து நின்றார்.

போகர் வந்த களைப்புத் தீர வேண்டியபடி உபசரித்த பின்னர் தட்சிணாமூர்த்தி, "போகரே நீர் பூனைக்கு நான்கு வேதங்களையும் உபதேசித்து ஓதச் செய்தீர். சிங்கத்திற்கு ஞானம் நல்கி அரசனாக்கினீர். மேரு மலைக்குச் சென்று தாதுக்களைக் கொண்டு வந்தீர், ரோமாபுரி சென்று ஆதி ரசம் கொண்டு வந்தீர். எல்லாம் சரிதான்.

சோதித்தீர் என்று சொல்லிச் சித்தர் சொன்னார்
சுயம்பான சாத்திரந்தான் ஏழுகாண்டம்
வாதித்த சூத்திரந்தான் ஏழுநூற்றுச் சொச்சம்
வண்மையாய் நிகண்டதுவும் பத்தேழுநூறு
வேதித்து வெகுவித்தை சவுக்காரச் சுண்ணம்
வெடியுப்புச் சுண்ணமாம் மிடுக்காம் வீரம்
ஓதித்த உப்பான கட்டுத் தானும்
உண்மையான தீட்சைவிதி உரைசெய்தீரே. 834

"எங்கே அதையெல்லாம் கொடுங்கள். நான் படித்துப் பார்க்கிறேன்", என்று கேட்டார் தட்சிணாமூர்த்தி.

Koviloor Digital Library

போகர் அவர் அருகில் சென்று நின்றபடி ஒவ்வொன்றாய்ப் படித்துக் காட்டினார். கேட்கக் கேட்க ஒரே ஆனந்தம். பெருமகிழ்ச்சி. புளகாங்கிதம் அடைந்தவராக, "எல்லாம் மிகவும் நன்றாக இருக்கிறது. இவற்றிலெல்லாம் வெளிப் படையாக இருப்பதால் மலைக் குகையில் வைத்துப் பத்திரம் செய்வோம்", என்றார் தட்சிணாமூர்த்தி.

"பகவானே... இவற்றையெல்லாம் நான் ஏற்கனவே மக்களிடம் இறைத்து விட்டேன்", என்றார் போகர்.

"ஆகா அப்படியா? நல்லது செய்தீர்", என்று கூறிய தட்சிணாமூர்த்தி.

தென்றதோர் சின்மயமாந் தேவர் தாமும்
சித்தர் யோகிகளை அழைத்துச் சொல்வார்
அன்றதோர் அகத்தியரே நீர்தாம் கேளும்
அவரவர்கள் கற்றகல்வி ஆண்மைதானே. 837

ஆண்மைதான் அவர் சொன்னார் நம்மால் தானும்
அல்லவென்று சொல்வதற்கு நம்மால் ஆமோ
தாண்மைகள் நமக்காரும் ரிசிகள் சித்தர்
தற்காரம் உங்களுக்கு வேண்டாம் என்று
வேண்மைதான் அவரவர் குகைக்குப் போங்கோள்
விரைந்துமே என்று சொல்லி யனுப்பி விட்டுக்
காண்மைதான் சமாதியில் இருந்து விட்டார்
கயிலாய சின்மயமாந் தேவர் தானே. 838

கயிலாய தட்சிணாமூர்த்தி பகவான் சித்தர்களுக்குப் புத்திமதி கூறினார். "அவரவர் தாங்கள் கற்ற கல்வியின் பெருமையை வெளியே காட்டுவது தவறல்ல. உங்களுக்குள் போட்டி பொறாமை வேண்டாம். அவரவர் குகைக்குப் போங்கள்", என்று கூறி அகத்தியரையும் மற்ற சித்தர்களையும் அனுப்பிவிட்டுச் சமாதியில் ஆழ்ந்துவிட்டார்.

இங்கே குறிப்பாகக் கவனிக்க வேண்டியது, "நீதிபதியாக அமர்ந்தவர் அகத்தியர் அல்ல சிவபெருமானே", என்பதே.

சித்த மருத்துவத்தின் தந்தை போகரே!

மேலே கூறப்பட்ட வரலாற்றிலிருந்து, எல்லாவிதமான பாஷாணங்கள், உபரசங்களைப் பற்றியும் முழுமையான விளக்கம் அளித்துள்ள போகர் ஏழாயிரம்:-

ஒவ்வொரு மூலிகையின் ஒவ்வொரு பாகத்தையும் ஆய்வுசெய்து அம்மூலிகையின் வேர், தண்டு, இலை, பூ, காய், கொட்டைகளின் தனித்

Koviloor Digital Library

தனி வேதியல் பண்புகளை விரிவாக ஆராய்ந்துள்ள போகர் நிகண்டு, போகர் கற்பம் 300 போன்ற நூல்கள் அக்காலத்தில் அகத்தியராலோ மற்றவர்களாலோ எழுதப்படவில்லை என்ற உண்மை புலனாகிறது.

ஏன்? இன்றுவரை கூட போகரைப் போல் இப்பொருள்களைப் பற்றி முழுமையாக ஆய்வு செய்தவர் எவரும் இல்லை.

போகர் கூறியவற்றை வைத்துக் கொண்டு போகரின் சீடர்களான கொங்கணவரும், சட்டைமுனியும் மேலும் விரிவாக ஆய்வு செய்து பல வேதியல் உண்மைகளை வெளியிட்டார்கள் என்று கூறுவது பொருந்தும்.

சித்த மருத்துவம்

சித்த மருத்துவத்தின் தனித் தன்மையை உணர வேண்டுமென்றால் திருமூலரிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். குழந்தை கருத்தரிக்கும்போது தாய் தந்தையரின் மனநிலை உடல் நிலைகளிலிருந்தே சித்த வைத்தியத்தின் நோய் நாடல் தொடங்குகிறது.

கணவனும் மனைவியும் கலவியில் ஈடுபடும் காலத்தில் கணவனின் வலது நாசித்துளை வழியாக மூச்சு ஓடினால் ஆண் குழந்தை பிறக்கும். இடது நாசித் துளை வழியாக ஓடினால் பெண் குழந்தை. சுழினை (நடுவாக) வழியாக மூச்சு நடைபெற்றால் அலி.. மூச்சு ஐம்பூதங்களிலும் பிறந்து முழுமையாக ஓடினால் குழந்தை நூறு வயது. ஆரோக்கியமாக இருக்கும். பத்துவரை ஓடினால் ஐம்பது வயது . இதே போல் வயதைக் கணக்கிட வேண்டும்.

ஓடுகிற மூச்சு குறுகி ஓடினால் பிறக்கும் குழந்தை குட்டையாக இருக்கும். வளைந்து ஓடினால் முடமாகும். நடுவில் தாமதித்தால் கூனாகும். இவை எல்லாம் ஆண்களுக்கு.

பெண்ணின் வயிற்றில் மலம் தங்கியிருந்தால் மந்த புத்தியுடைய குழந்தை பிறக்கும். நீர் தங்கியிருந்தால் ஊமையாகப் பிறக்கும். இரண்டும் தங்கியிருந்தால் குருடாகப் பிறக்கும்.

இருவருக்கும் ஒரே மாதிரி நல்ல முறையில் சுவாசம் ஓடினால் அழகும் அறிவும் உள்ள குழந்தை பிறக்கும் என்று திருமூலர் கூறுகிறார். (திருமூலர் கருக்கிடை வைத்தியம் 600 - பாடல்கள் 7முதல் 13 வரை)

திருமூலரின் வழியில் வைத்தியத்தைப் பற்றி விரிவாகப் பாடியவர் போகமுனிவர். போகர் 700ல் அவர் பாடியுள்ள மேக ராஜாங்க எண்ணெய், தூது கண்டன் கிருதம் போன்ற மருந்துகளுக்கு இணையே

Koviloor Digital Library

கிடையாது. மைசூர் (ராஜ) வைத்தியர்கள் இம்மருந்துகளை உபயோகித்துப்பெரும் புகழ் பெற்றிருந்தனர் (சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்) போகரைத் தொடர்ந்து புலிப்பாணியும் அருமையான மருந்துகளைக் கூறியுள்ளார்.

போகர் ஏழாயிரத்தில் பாஷாணங்களைப் பற்றிய ஆராய்ச்சி அனுபவங்கள் கொட்டிக் கிடக்கின்றன. போகர் நிகண்டு 1200, கருக்கிடை நிகண்டு 500 இரண்டு நூல்களும் வாத வைத்தியங்களுக்கு மூல பாடங்கள் என்று கூறவேண்டும்.

அகத்தியர், தேரையர், யூகிமுனி ஆகியவர்கள் ஆயுள் வேத வைத்திய முறைகளையே பாடினர். சில இடங்களில் சித்த மருத்துவத்தின் கலப்பும் காணப்படும். (இதுபற்றி இந்நூலின் அகத்தியர் பகுதியில் காண்க)

வேதியியலின் தந்தை போகரே

வேதியியல் துறையில் மேல் நாட்டவர்கள் மிகுந்த முன்னேற்றம் அடைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். இந்த முன்னேற்றத்திற்குக் காரணம் ஒருவர் அல்லர். பலர்! இந்த முன்னேற்றம் ஏற்பட்டது ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் அல்ல. துவக்க காலம் பதினாறாம் நூற்றாண்டு என்று வைத்துக் கொண்டால் கூட ஐநூறு ஆண்டுகள் நடைபெற்ற அறிவின் பயணத்தின் விளைவே அது என்று உறுதியாகக் கூறலாம்.

அதிலும் பலவகையான ஆய்வுக் கருவிகளை உண்டாக்கி அவற்றின் மூலம் செய்யப்பட்ட சோதனைகளின் பயனே அவை.

அவை எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்தாலும் போகர் என்ற ஒரு தனி மனிதர் தமது நூல்களில் கூறியுள்ள அறிவியல் உண்மைகளில் அரைப்பங்கு கூடத் தேறாது.

கற்பமூலிகைகள்

கேளென்ற 1 கருநெல்லி 2 கருத்த நொச்சி
கெடியான 3 கருவீழி 4 கருத்த வாழை
காளென்ற 5 கரிய கரிசாலையோடு
6 கருப்பான நீலியொடு 7 கரிய வேலி
கோளென்ற 8 கரூமத்தைத் 9 தீபச் சோதி
10 கொடுதிரணச் சோதி 11 சாயா விருட்சம்
ஏளென்ற 12 எருமைகனைச்சான் 13 ரோம விருட்சம்
ஏற்றமாம் 14 சுணங்க விருட்சம் 15 செந்திரா. 559

Koviloor Digital Library

செந்திராய் 16 செங்கள்ளி 17 செம்மல்லியோடு
18 சிவந்த கற்றாழை 19 செஞ்சித்திர மூலம்
நந்திராய் சிவப்பப்பா மார்க்கத்தோடு
நலமான 20 கற்பிரமி 21 கற்சேம் பாகும்
பந்திராய் 22 கல்லுத்தா மரையினோடு
பாய்ந்த 23 குழல் ஆதொண்டை 24 மகாபொற் சீந்தில்
25 வெந்திராய் 26 வெண்புரசு 27 வெள்ளைத்துத்தி
மிகு 28 வெள்ளைத் தூதுவளை மிடுக்கு மாமே. 560

மிடுக்கான குண்டலமாம் 29 பாலை யோடு
30 வெள்ளை நீர்முள்ளி 31 வெண் விண்டுக் காந்தி
கடுக்கான 32 வெண்கண்டங் காரி யோடு
33 கசப்பான பசளையொடு 34 மதுர வேம்பு
கிடுக்கான 35 கிளிமூக்குத் துவரை 36 அழு கண்ணி
கெடியான 37 பொன்மத்தை 38 மதுரக் கோவை
படுக்கான39 பொன்வன்னச் சாலி யோடு
40 பாங்கான கருந்தும்பை 41 மதனத் தண்டே. 561

தண்டோடு 42 மூவிலையாங் குருத்து மாகும்
தணலான 43 சிவத்ததில்லை 44 கருத்த வேம்பு
45 இண்டோடே இவ்வகைகள் நாற்பத் தைந்தும்
ஏற்றமாம் மலைகளிலே மிகுதி உண்டு
பண்டோடு பாடாணம் அறுபத்து நாலும்
பட்டுடனே கட்டுண்டு படுதீப் பற்றும்
துண்டோடு சூதமது கட்டும் ஆகும்
சுயம்பான உபரசங்கள் சத்தும் ஆமே. 562

சத்தான மூலிகையில் சுருக்குச் சித்தி
சாப்பிட்டால் மண்டலந்தான் சாவோ இல்லை
மத்தான மன்மதன்போல் தேகமாகும்
மாசற்று நரைதிரைக ளெல்லாம் மாறும்
எத்தான வாசியெல்லாம் இறுகிப் போகும்
ஏறலாம் ககனத்தில் ஏற்றமாக
அத்தான அடுக்கெல்லாம் சோதித் தேறி
அண்டரண்ட பதமெல்லாம் அறிப லாமே. 563

போகமுனிவர் இப்பாடல்களில் நாற்பத்தைந்து கற்ப மூலிகைகளைப் பற்றிக் கூறியிருக்கிறார். இவற்றை முறையாக

Koviloor Digital Library

உட்கொண்டால் மனிதனுடைய வயது ஏறினாலும் வாலிபம் குன்றாது. முடி நரைக்காது. தோல் சுருங்காது. உடல் மூப்பு அடையாது. உழைக்கும் போது மூச்சு இரைக்காது. மலைகளில் ஏறலாம். விண்வெளியில் சஞ்சரிக்கலாம். வான மண்டலத்தில் உள்ள பல அடுக்குகளையும் பார்க்கலாம் என்று கூறுகிறார்.

அதுமட்டுமா? இந்த மூலிகைகளின் சாற்றால் அறுபத்து நான்கு பாஷாணங்களும் கட்டு ஆகும். ரசம் கட்டியாய் மணி ஆகும். உபரசங்கள் எல்லாம் சத்தும் ஆகும் என்றும் கூறுகிறார்.

மனிதனுடைய உடம்பில் உள்ள இரத்த அணுக்கள், தசை அணுக்கள், எலும்பணுக்கள், நரம்பணுக்கள் எல்லாம் முதிர்ச்சி யடையாமல் இருக்கும் என்று கூறியிருக்கிறாரே? இன்றுவரை இவை பற்றிச் சோதனைகள் நடத்தப் பட்டதுண்டா? பாதரசத்தை இறுகி மணியாகச் செய்யும்படியான ஆற்றலை இம்மூலிகைச் சாறுகளுக்கு அளிக்கும்வேதியியல்பொருள் என்ன என்பதைக் கண்டு பிடிக்க முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

இவை மட்டுமல்ல.

அறிந்தேனே பொன்னின் ஆவாரையப்பா
அழகான மலைதோறும் சுனைகள் தோறும்
செறிந்துமே மூலிகையின் உளவு பார்த்து
செம்மலுடன் முப்பூவும் களஞ்செடுத்து
முறிந்துமே போகாமல் தைலமாக்கி
.....
கொற்றவனே குடவனிலே பூசிடாயே. 6126

(குடவன் = பித்தளை)

பூசிடவே குடவனது என்ன சொல்வேன்
புகழான நாதாக்கள் கூறவில்லை
காசியென்ற செம்பதுவும் காணும்போது
கனமான மாற்றதுவும் இருநூற்றெட்டு
மாசுபடாத் தங்கமது என்ன சொல்வேன்
மகத்தான பிருதிவென்ற தங்கமாச்சு
ஊசியென்னும்இரும்பினிலே தாக்கினாக்கால்
உத்தமனே சுயத்தங்கம் அயத்தங்கமாமே. 6127

Koviloor Digital Library

பொன்னாவாரை மூலிகை எங்கும் காணப்படுவது. அதை வேரோடு (சமூலம் பிடுங்கிக் கொண்டுவந்து ஒரு களஞ்சு முப்புவும் சேர்த்துத் தைலம் இறக்கி அத்தைலத்தை பித்தளையின் மேல் பூசினால் 208 மாற்றுத் தங்கமாகும். அதை இரும்பிலே தாக்கினால் அயத்தங்கம் (இரும்பிலிருந்து செய்யப்பட்ட தங்கமாகும்).

இதே போல் வசளை, பொன் முசுட்டை, பொன்னூமத்தை, கறுப்புக் கையாந்தகரை, சிறியாநங்கை, பெரியா நங்கை முதலிய செடிகள் மட்டமான உலோகத்தை மாற்றித் தங்கமாகச் செய்யும் விந்தையை போகர் அடுத்த பாடல்களில் கூறியிருக்கிறார்.

மூலிகைச் சாறு ஒரு உலோகத்தை வேறு உலோகமாக மாற்றும் என்ற உண்மையைப் பிறநாட்டு அறிவியலார் கண்டு பிடித்துள்ளனரா? இது எப்படிப்பட்ட மகத்தான சாதனை?

ஆதிகாலத்தில் பூவுலகின்மேல் நீரும் காற்றும் உண்டாகி, நீரில் பாசி முதலாக புல் பூண்டுகள் முளைத்துத் தாவர இனமும், பூச்சி புழுக்கள் முதலாகப் பிராணியினமும் தோன்றிய காலத்தை எடுத்துக் கொள்வோம்.

பூமியின் உட்பகுதி இரும்பு, நிக்கல் துத்த நாகம் போன்ற உலோகக் கலவையிலானது என்று கூறுகின்றனர். மழை வெள்ளம், பூகம்பம் போன்ற காரணங்களால் தாவரங்கள் புதையுண்டு அவற்றின் சத்து பூமிக்குள்ளிருக்கும் உலோகக் கலப்பின் மேல் பட்டதால் உலோகங்கள் ஒன்றிலிருந்து ஒன்றாக மாறியிருக்க வேண்டும்.

போகமுனிவர் நாகத்தை, ஈயமாக்க - ஈயத்தை வெள்ளியாக்க - வெள்ளியைச் செம்பாக்க - செம்பைத் தங்கமாக்க - செடிகொடிகளின் சத்தால் முடியும் என்பதைப் பல பாடல்களில் கூறியிருக்கிறார்.

மிக எளிதாக இருக்கிறதே என்று யாரும் தங்கம் செய்து பார்க்க முயற்சிக்க வேண்டாம். இது சித்தர்களாலேயே முடியும். அதுவும் போகரைப் போல் தவ வலிமை மிக உடைய சித்தராக இருக்கவேண்டும்.

தாவரங்களை மட்டுமல்லாமல், கல், மண், பாறை, அவற்றின்மேல் உப்புக் கலந்த காற்றும், நீரும் பட்டதால் ஏற்பட்ட பாஷாணங்கள், உப்புக்கள், பிராணிகளின் உறுப்புக்களான நகம், பல், எலும்பு, தோல், முட்டை ஓடு, சிப்பி ஓடு இப்படி ஒன்று கூட விடாமல் எல்லாப் பொருள்களையும் ஆய்வு செய்து அவற்றின் வேதியல் பண்புகளை விளக்கியுள்ளார்.

Koviloor Digital Library

பாஷாணங்கள் அறுபத்துநான்கு வகை என்று இனம் கண்டு பிடித்து அவற்றில் முப்பத்திரண்டு வகைகளைச் செயற்கை முறையில் வைப்புச் சரக்காகத் தயார் செய்ய முடியும் என்றும் கூறியிருக்கிறார்.

துரிசி வைப்பு

பாரென்ற துரிசியுடை வைப்புக் கேளு
பாங்கான கல்லுப்புப் பலமும் நூறு
நேரென்ற சீனமது பலமும் பத்து
நெறியதாம் வெடியுப்புப் பலமும் பத்து
தேரென்ற செம்பான பாத்திரத்தில்
சிறப்பாகப் பொடித்துமே அதிலே போட்டுக்
காரென்ற பழச்சாறும் தயிரும் விட்டுக்
கலந்து நின்ற பூமிக்குள் குழிதான் வெட்டே. 1107

வெட்டியே குழிக்குள்ளே குதிரை லத்தி
மிதித்துமே யதன் மேலே பாண்டம் வைத்துக்
தெட்டியே மேல்மூடி லத்தி போட்டுச்
சிறப்பாக மண்போட்டு மூடிப் போடு
அட்டியே ஆறுமாசம் முற்றத் தான்சென்று
அப்புறந்தான் எடுத்திடவே துரிசியாகும்
வட்டியே இதனுடைய மார்க்கஞ் சொல்ல
மகத்தான ரிஷி சித்தர் வழி காணாரே. 1108

துரிசு என்பது செம்பின் களிம்பு. கொடிய நச்சுத்தன்மை கொண்டது. சாதாரணமாக செம்புப் பாத்திரங்களில் சமைக்க மாட்டார்கள். உள்ளே கலாய் (ஈயம்) பூசினால் மட்டுமே பாத்திரமாக உபயோகப் படுத்துவார்கள்.

துரிசைச் சுண்ணம் செய்தால் ரசத்தைக் கட்டும். துரிசு வெளிப்பூச்சு மருந்தாகவும் பயன்படும். தவிர ரசவாதத்தில் துரிசைக் கொண்டு எளியமுறையில் தங்கம் செய்யமுடியும்.

கந்தகக் கலப்பற்ற சுத்தமான துரிசு வேண்டுமென்றால் அதை வைப்பு முறையாகத் தயாரித்துக் கொள்வதே நல்லது, அப்படித் தயாரிக்கும்முறையைப்போகமுனிவர் இந்தப் பாடல்களில் கூறியிருக்கிறார்

கல்லுப்பு	100 பலம்
சீனம்	10 "
வெடியுப்பு	10 "

Koviloor Digital Library

இவற்றை நன்றாகப் பொடித்து ஒரு செம்புப் பாத்திரத்தில் போட்டு (பழச்சாறு = காடி) அதில் காடியும் தயிரும் விட்டுத் தயார் செய்து கொள்ளவேண்டும்.

பூமியில் ஒரு குழி தோண்டி அதற்குள் குதிரை லத்தியைப் போட்டு நன்றாக மிதித்துச் சமன் செய்து கொண்டு அதன்மேல் செம்புப் பாத்திரத்தை வைத்து மூடி அதன் மேலும் குதிரை லத்தியைப் போட்டு மூடிவிட வேண்டும்.

ஆறு மாதம் கழித்து எடுத்துப் பார்த்தால் சரக்குகள் ஒன்று சேர்ந்து துரிசாக மாறியிருப்பதைக் காணலாம்.

இதே போல் முப்பத்திரண்டு பாஷாணங்களையும் தயாரிக்கும் முறைகளை போகர் ஏழாயிரத்தில் கூறியிருக்கிறார். அப்படித் தயாரிக்கப்பட்ட பாஷாணங்களைக் குருவாக மாற்றவும் அதைக் கொண்டு தங்கம் செய்யவும் வழிகளைக் கூறியிருக்கிறார்.

இந்தக் காலத்திலும் போகர் கூறியுள்ள முறைப்படி பாஷாணங்களை வைப்புச் சரக்குகளாக வைத்து எடுத்து மருந்தாக - மருந்துகளில் பயன்படுத்துபவர்கள் உண்டு

போகரின் நூல்களில் எண்ணற்ற வேதியியல் முறைகள் கூறப்பட்டுள்ளன. போகரின் சீடர்களான கொங்கணவரும், சட்டை முனியும் தத்தமது வாத காவியங்களில் அவற்றை மேலும் விரிவு படுத்திப் பாடியுள்ளனர். அவை எல்லாவற்றையும் சோதனைக் கூடங்களில் விரிவாக ஆராய வேண்டும். அதனால் தமிழின் பெருமை உலகெங்கும் பரவும் என்பது திண்ணம்.

வாக்கியென்றால் வாக்கியன் போகநாதன்
மானிலத்திற் சொல்லியது எல்லாம் கேட்டேன்
ஆக்கியநூல் யாவுமே அமுதமாகும்
அம்மம்மா வாயாலே சொல்லப் போமோ.

காக- 144

போகரின் நூல்கள் யாவுமே அமுதமாகும் என்று காகபுசுண்டர் பெருமான் தமது பெருநூல் காவியம் 144வது பாடலில் கூறியுள்ளார்.

அதுவான நூலதனில் தேறும் நவகோடி
யார் சொன்னார் அவருடைய பெருமைதனை மைந்தா
மதுவான பூமலரின் வாசம் போலே
வசனித்தோ மவருடைய நேர்மையது பாரீர்

Koviloor Digital Library

பதுவான வவருடைய சீடரவர் கேளும்
பன்மைபெறும் போகரிஷி மார்க்கமது மெத்த
எதுவான வவர்பெருமை பாடியதோர் நூல்கேள்
இருபத்தோராயிரம் இயம்பினார் பாரே.

அ. சௌமியம் 882

அகஸ்தியர் தமது சௌமிய சாகரத்தில் போகரின் நூல்களைப் பற்றி இவ்வாறு புகழ்ந்து பாடியுள்ளார்.

போகர் இயற்றிய நூல்கள்'

போகர்	12000
சப்த காண்டம்	7000
நிகண்டு	1700
வைத்தியம்	1000
"	700
சரக்கு வைப்பு	800
ஜெனன சாகரம்	550
கற்பம்	360
உபதேசம்	150
இரண வாகடம்	100
ஞான சாராம்சம்	100
கற்ப சூத்திரம்	54
வைத்திய சூத்திரம்	77
முப்பு சூத்திரம்	51
ஞான சூத்திரம்	37
அட்டாங்க யோகம்	24
பூஜாவிதி	20

இவற்றில் போகர் பனிரெண்டாயிரம் இரண வாகடம் நூல்கள் கிடைக்க வில்லை. அநேகமாக மற்றவை எல்லாம் தாமரை நூலகம் வெளியீடுகளாக் வந்துள்ளன.

போகமுனிவர் பழனி மலையில் வசித்தார். தண்டாயகபாணி சிலையை நவபாஷாணக் கட்டால் செய்து மலைமேல் பிரதிஷ்டை செய்தார். போக முனிவரின் சமாதி பழனியில் : தண்டபாணி சந்நிதிக்குப் பின்புறம் உள்ளது.

✪✪✪

Koviloor Digital Library

கொங்கணவர்

கொங்கு நாட்டில் பிறந்தவராகையால் இவர் கொங்கணவர் என்றழைக்கப்பட்டார். அபிதான சிந்தாமணியில் இவர் கோயம்புத்தூருக்கு அருகில் வசித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தில் தாராபுரத்தையடுத்த ஒதிய மலையில் வசித்ததாகக் கூறுவர்.

திட்டமுடன் கொங்கணனார் பிறந்த நேர்மை
தீர்க்கமுடன் யானுரைப்பேன் சுகந்த மாரா
வட்டமுடன் சித்திரையாம் திங்களப்பா
வளமான உத்திராடம் முதற்கால் தன்னில்
அட்டதிசைதான் புகழப் பிறந்த பாலன்
அன்பான கொணங்கணவர் என்னலாமே.

போகர் 7000/ 5908

என்னவே அவர் பிறந்த நேர்மையப்பா
எழிலான சங்கர குலத்து தித்த
பன்னவே கானீனன் பெற்ற பாலன். 5909

போகர் ஏழாயிரத்தில் கொங்கணவர் சித்திரை மாதம் உத்திராட நட்சத்திரத்தில் சங்கர குலத்தில் பிறந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

ஆயினும் கொங்கணவரின் பிறப்பு வளர்ப்பு பற்றி அகஸ்தியர் 12000 என்னும் பெருநூல் காவியத்தில் மட்டுமே விரிவான செய்தி இடம் பெற்றுள்ளது, அகத்தியர் பனிரெண்டாயிரத்தில் முதல் ஐந்து காண்டங்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றுத் தாமரை நூலகம் வெளியிட்டுள்ளது. அதில் நான்காம் காண்டத்தில் பல சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் இடம் பெற்றுள்ளன.

ஆச்சப்பா கொங்கணவர் இருந்த வண்ணம்
அப்பனே அவர்பாடு முறைபாடெல்லாம்
மூச்சடங்கித் தவநிலைக்குச் செல்லா முன்னம்
மூதுலகி லிவர் தந்தை தாயின் வள்ளல்

Koviloor Digital Library

பேச்சரிய முழுமக்கள் இருவர் தானும்
பேருலகில் ஈசரது கோட்டை வாசல்
மாச்சலுடன் இரும்புருக்கிக் கலங்கள் செய்து
மன்னவனே விற்றுண்ட புனிதராமே.

அக.12000/4/406

அகஸ்தியர் பனிரெண்டாயிரம் நாலாம் காண்டம் நானூற்றாறாவது பாடல் இவ்வாறு கூறுகிறது.

கொங்கணவரின் தாய் தந்தையர் இரும்பை உருக்கிக் கலங்கள் செய்து கோவில் வாசலிலே வைத்து விற்றுப் பிழைத்து வந்தனர். ஏழ்மையில் வாழ்ந்த போதிலும் யோகிகளையும் சாது சனங்களையும் கண்டால் அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்தும் ஏவல் கேட்டும் உபசாரங்கள் செய்தும் பண்போடு வாழ்ந்து வந்தனர்.

அதைக்கண்ட ரிஷிகள் தேவர் அவர்களிடம் இரக்கம் கொண்டு "மிக்கான தனமதுவும் மிகவும் தந்து கொங்கணவர் பாலன்" சிறப்பாக வளர உதவி செய்தார்கள்.

பூணவே கொங்கணவர் வயதுமாகி
பூவுலகில் பதினாறு பாலனாகி
தோணவே கைத் தொழிலாங் கலங்கள் செய்து
தோராமல் வர்த்தகத்தில் நிபுணனாகி
ஆணவங்கள் உள்ளடக்கி அரிய பாலன்
அவனிதனில் வர்த்தகனா யிருந்தார் தாமே.

12000/4/411

கொங்கணவர் இரும்புக் கலங்கள் செய்து வியாபாரம் செய்தார் பணம் தேடினார். மணம் புரிந்து கொண்டார். மாடமாளிகைகள் கட்டி வாழ்ந்தார். தம்மை நாடி வந்த அகதி பரதேசிகளுக்கும், சாது சனங்களுக்கும் பால் பழத்தோடு அன்னம் போட்டு உபசரித்தார்.

அவருடைய உபசாரத்தால் மனமகிழ்ந்த ரிஷிகள்,

தெள்ளமிர்த மானதொரு பால் பழத்தால்
தேற்றமுடன் கொங்கணற்கு மனதுவந்து
உள்ளபடி மெய்ஞானப் பாலை ஐயா
உந்தமற்கு உபதேசம் செய்ததாலே
கள்ளமிலாக் கொங்கணரும் மனதுவந்து
காசினியில் சமுசாரம் துறந்திட்டாரே. 414

Koviloor Digital Library

கொங்கணவர் ரிஷிகளுக்கு ஆவின் பாலைக் கொடுத்தார். அவர்கள் அவருக்கு ஞானப்பாலைப் புகட்டினார்கள். அஞ்ஞானம் அழிந்தது. மெய்ஞ்ஞானம் பிறந்தது. சம்சார வாழ்க்கையைத் துறந்து சந்யாசியானார். "அட்டதிசை தான் புகழச் சித்தர் மெச்ச அருந்தவசி யோகிய தாய் அமர்ந்திட்டாரே".

யோகியான கொங்கணவர் ஒரு நாள் மலைக் காடுகளில் மூலிகைகளைத் தேடி வந்து கொண்டிருந்தார்.

வந்திடும் போதங்கே தான்
மலைப் பளிங்கனுமே செத்து
விந்தையாய்ப் போகப் பார்த்து
மிகவேதான் இரக்கம் கொண்டு
சந்தோஷமாகத் தம்தன்
சரீரத்தை வைத்துவிட்டு
இந்த நற் சரீரந் தன்னில்
இயல்புடன் பாய்ந்து விட்டார். கரு.வாத, 217

யோகியாய் வாழ்ந்த கொங்கணவரின் வரலாற்றைக் கருவூரார் தொடர்கிறார்.

மலைக்காடுகளில் மூலிகைகளைத் தேடிவந்து கொண்டிருந்த கொங்கணவர் ஒரு சிற்றூரில் பரிதாபகரமான காட்சியைக் கண்டார்.

மலை வாசிகளான பளிங்கர்களின் சிறிய ஊர் அது. அதில் இளவயதினனான ஒரு பளிங்கன் இறந்து போய் விட்டான். அவனுடைய பெற்றோர்களும் உற்றார் உறவினர்களும் குய்யோ முறையோ என்று கதறிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய துக்கத்தைப் பார்த்த கொங்கணவரால் தாங்க முடியவில்லை. உடனே தமது உடலைத் துறந்து விட்டுப் பளிங்கனின் உடலில் புகுந்து அவனாக உயிர் பெற்றெழுந்து விட்டார்.

விட்டதைப் பளிங்கர் கண்டு
மிக்கவே கொங்கணர் தேகத்தை
கட்டையில் வேகவைத்துக்
களிப்புடன் இருந்து விட்டார்
திட்டமாய்ப் பளிங்கரோடு
சேர்ந்திலை செடிகள் கண்டு
சட்டமாய்த் தெரிந்து கற்பம்
தானுண்டு மலையில் வாழ்ந்தார். கரு.வாத.218

Koviloor Digital Library

இறந்து கிடந்த பளிங்கன் எழுந்து விட்டதைக் கண்ட உறவினர் திகைத்தனர். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையும் உண்டா?

அவர்களில் பெரியவர்கள் இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று ஐயம் கொண்டனர். சித்தரின் உடலைக் கண்டனர். உடனே அதற்குத் தீ மூட்டி எரித்து விட்டனர்.

அதன்பின் கொங்கணவர் பளிங்கரோடு பளிங்கராக மலைகளில் சுற்றி அலைந்தார். கற்ப மூலிகைகளைத் தேடிக் கண்டு பிடித்தார். அவற்றை உட்கொண்டு காய சித்தி செய்து கொண்டார். மலை வாசியாகவே வாழ்ந்து கொண்டிருந்தார்.

போகரை எப்போது சந்தித்தார். எப்படி அவருடைய சீடரானார் என்பதற்குப் பாடல்கள் இல்லை. ஆனால் போகரைப் பற்றிக் கூறும் பொழுது உள்ளம் புளகித்து உணர்ச்சி பொங்க "எனை ஈன்ற போகர்", என்று பெருமிதத்துடன் பாடுகிறார். ஞானிகளுக்கு ஞானம் பெறுவதற்கு முன் வாழ்ந்த வாழ்க்கை வாழ்க்கையே அல்ல. ஞானம் பெற்றபின் தம் ஞான ஆசானையே தந்தையாகக் கருதி அவருடைய மகனே தான் என்று கூறிக் கொள்வது மரபு. ஏனென்றால் அதன் பிறகுதான் தங்களுடைய உண்மையான வாழ்க்கையே ஆரம்பிப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

போகரிடம் உபதேச காலம் முடிந்தபின் அகத்தியரிடமும் சிறிது காலம் உபதேசம் பெற்றார். சித்தர்களின் வழக்கம் அது, சட்டைமுனி இடைக்காடர் எல்லோருமே போகரிடம் தங்கள் குருகுல வாசம் முடிந்தபின் ஏதாவதொரு சமயத்தில் அகத்தியரிடம் உபதேசம் பெற்றுள்ளனர்.

போகரிடமிருந்து முற்றும் கற்றுணர்ந்த சித்தராக வெளியேறிய பிறகுதான் கொங்கணவர் வாழ்க்கையில் இரண்டு சோதனைகள் ஏற்பட்டன.

கொக்கென்று.....?

கொங்கணவர் ஒருநாள் ஆழ்ந்து நிட்டையில் இருக்கும் பொழுது மேலே பறந்து சென்ற ஒரு பறவை எச்சமிட அது கொங்கணவர் மேல் விழுந்து விட்டது. நிட்டை கலைந்து சட்டென்று அவர் விழித்துப் பார்க்க அக்கணமே கொக்கு எரிந்து சாம்பலாயிற்று.

Koviloor Digital Library

நீண்டகாலம் நிட்டையில் இருந்து விட்டதால் சிறிது ஆகாரம் கொள்வோம் என்று கருதி கொங்கணவர் ஒரு இல்லத்தின் முன் நின்று உணவு கேட்டார். அப்போது அந்த இல்லத்தரசி பதிசேவையில் ஈடுபட்டிருந்தாள். தன் கடமைகளை முடித்துக் கொண்டு உணவு எடுத்து வரத் தாமதம் ஆகிவிட்டது. பசியோடு கோபமும் சேர்ந்து கொண்டது. கொங்கணவர் அம்மாது சிரோன்மணியை விழித்துப் பார்த்தார். அவள் சிறிது கூடச் சட்டை செய்ய வில்லை. புன்முறுவலுடன்.

"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா?" என்று கேட்டாள்.

கொங்கணவர் வெட்கிக் குன்றிப் போய்விட்டார். இச்சம்பவம் கொங்கணவர் வாத காவியத்திலேயே இடம் பெற்றுள்ளது.

திருமூலருக்கும் கொங்கணவர்க்கும் நடந்த தர்க்கம் பற்றிய ஒரு பகுதி கொங்கண்வர் வாத காவியம் மூன்றாம் காண்டத்தில் 213 வது பாடல் முதலாக அமைந்துள்ளது, திருமூலர் கொங்கணவரைப் பார்த்துக் கேட்கிறார்.

சபித்தாய் நீ கொக்கை அன்று
தனிக் கோபம் பெண்ணின் மேலே
எபித்தாய்நீ ஏறா தேனோ
விதமென்ன ஊணிப் பாரு. 238

"கொக்கிடம் நீ வித்தை காட்டினாயே? அது அந்தப் பெண்ணிடம் பலித்ததா?" என்று கிண்டல் செய்வது போல் பாடல் அமைந்துள்ளது.

அதன்பின் கொங்கணவர் தமது வழிப் பயணத்தில் திருமழிசை ஆழ்வாரைச் சந்தித்தார். தம்மிடம் உள்ள குளிகையைக் காண்பித்து, "இது காணி கோடியைப் பேதிக்கும்", என்றார்.

ஆழ்வாரோ தமது உடம்பிலிருந்த அழுக்கை உருட்டிக் கொடுத்து இது காணி கோடா கோடியைப் பேதிக்கும் என்றார்.

கொங்கணவர் ஆழ்வாரின் பெருமையை உணர்ந்து அவரை வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

தம்முடைய தவவலிமையை மேலும் பெருக்கிக் கொள்வதற்காக ஒரு யாகம் செய்ய வேண்டும் என்று கொங்கணவர் விரும்பினார். அதற்குத் தகுதியான ஒரு இடத்தைத் தேடிக் காடு மலையெல்லாம் சுற்றி அலைந்தார்.

Koviloor Digital Library

சமாதிக்கு இடம் தேடி.....!

கானகத்தில் ஒரு இடத்தில் விசாலமான பாறை ஒன்று காணப்பட்டது. அங்கு வந்ததும் கொங்கணவர் மனதில் ஒரு நிம்மதி உண்டாயிற்று. அந்தப் பாறைமேல் நீட்டிப் படுத்துக் கொண்டு ஆகாயத்தைப் பார்த்தார். தாயே நீதான் வழி காட்ட வேண்டும் என்று பராபரியைத் தியானிக்கத் தொடங்கினார்.

அவர் கண்களில் விசித்திரமான தோற்றங்கள் உண்டாயின. காதுகளில் சங்கு சேகண்டிகள் முழங்க மத்தளமும் பேரிகையும் ஒலிக்கப் பலவிதமான வாத்தியக் கருவிகளின் ஓசைகள் கேட்டன.

பார்க்கையிலே பலப்பலவாம் தோற்றம் காணும்
பாரினிலே அதிசயங்கள் மிகவாய்த் தோற்றும்
ஏர்க்கையிலே குன்றருகே சப்தம் காணும்
எழிலான வாத்தியங்கள் மிகவே கேட்கும்
தீர்க்கமுடன் தேவதா கோஷ்டம் தானும்
தீரமுடன் செவிதனிலே கேட்கும்பாரு
ஆர்க்கவே கொங்கணரும் மிகவே கேட்டு
அப்பனே மதிமயங்கி நின்றார் பாரே.

போ7000/ 3661

கொங்கணவர் மதிமயங்கிப்போய் நின்று விட்டார். அவர் கண் எதிரில் ஒரு சமாதி தெரிந்தது. கொங்கணவர் பக்தி பரவசத்துடன் மலர்களைப் பறித்துச் சென்று அந்தச் சமாதி முன் போட்டு கை கூப்பி வணங்கி நின்றார். உடனே சமாதி படீர் என்று வெடித்துத் திறந்தது. அதனுள்ளிருந்து சோதி ரூபமாக கௌதம மகரிஷி வெளியே வந்தார்.

கொங்கணவர் தன் வரலாறு முழுவதும் கூறித் தாயின் அருளால் அவரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது என்றும் கூறினார். கௌதம ரிஷி மகிழ்ச்சியடைந்தவராக கொங்கணவருக்கு உபதேசம் செய்து, "மகனே! உன் விருப்பம்போல் செய்யலாம்", என்று கூறி சமாதிக்கு இடம் காட்டிவிட்டுச் சென்றார்.

கொங்கணவர் அந்த இடத்தில் சமாதியில் இறங்கினார். மழைபெய்து பூமி மூடிக் கொண்டது. பருவ மாறுதல்கள் எதையும் உணராதவராக ஆடாமல் அசையாமல் பனிரெண்டு ஆண்டுகள் சமாதியில் இருந்தார். பிறகு வெளியே வந்தார்.

Koviloor Digital Library

மறுபடியும் யாகம் செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகி விட்டது, உடனே ஆரம்பித்துவிட்டார்.

கௌதமரின் சாபம்

கொங்கணவர் யாகம் செய்து கொண்டிருக்கும் பொழுது திடீரென்று கௌதம ரிஷி அங்கே வந்தார்.

"யாகமா செய்கிறாய்? நீ எப்படிச் செய்யலாம். என்னைப்போல் பெரிய ரிஷிகள் அல்லவா யாகம் செய்யவேண்டும்? அதிகப் பிரசங்கித்தனமாக நீ இக்காரியம் செய்ததால் பிடி சாபத்தை", என்றார்.

கொங்கணவர் பயந்து நடுங்கிப் போய் விட்டார். "ஐயனே.... சாபத்திற்கு விமோசனம் என்ன? கருணை புரிய வேண்டும்", என்று ரிஷியின் கால்களைப் பிடித்துக் கொண்டார்.

"தில்லை வனத்துக்குப் போ. சாப விமோசனம் கிடைக்கும்," என்று கூறிவிட்டுக் கௌதமர் போய் விட்டார்.

கொங்கணவர் தில்லை வனத்துக்கு வந்து தாயாரைத் துதித்தபடி வாழ்ந்து கொண்டிருந்தார். ஒருநாள் அவர் தியானத்தில் அமர்ந்திருந்தபோது பராசரர் அங்கு வந்தார், பராசர ரிஷியைக் கண்டதும் கொங்கணவர் எழுந்து ஓடோடிப் போய் அவரை வணங்கி நின்றார். ஞான திருட்டியால் கொங்கணவர் வரலாற்றை உணர்ந்து கொண்ட பராசரர், மனமிறங்கி கௌதமரால் அவருக்கு ஏற்பட்ட சாபத்தை நிவர்த்தி செய்து அவர் விருப்பம் போல் யாகம் செய்ய வரமும் அளித்தார்.

கொங்கணவர் யாகம் செய்து முடிக்க, கௌதமர் மீண்டும் தோன்றி அவருக்கு உபதேசம் செய்து வாழ்த்தி யருளினார்.

கொங்கணவர் மீண்டும் தேச சஞ்சாரம் செய்யத் தொடங்கினார். அவர் மனதில் ஏதோ ஒரு குறை இருப்பது போல் தோன்றிக் கொண்டே இருந்தது. அதனால் மறுபடியும் தமது குருநாதரான போகரைச் சந்தித்துத் தம் மனக்குறையைக் கூறினார்.

தேவரிடம் போ!

போக முனிவர் கனிவுடன் கொங்கணவரைப் பார்த்து "நீ திருமாளிகைத் தேவரைச் சந்தித்து அவரிடம் தீட்சை பெற்றுக்கொள். உன் மனக்குறை தீரும்", என்று கூறினார்.

Koviloor Digital Library

கொங்கணவர் உடனே சென்று திருமாளிகைத் தேவரைச் சந்தித்தார். கொங்கணவரை எதிர் கொண்டழைத்து வரவேற்று வணங்கி உபசரித்த திருமாளிகைத் தேவர், "இரண்டு முறை யாகம் செய்து அளவு கடந்த தவவலிமை பெற்ற கொங்கணவரே! தங்களின் பெருமையும் தவ வலிமையும் உலகெல்லாம் அறியும். அடியேனை நாடி வந்த காரணம் என்ன? " என்று கேட்டார்.

"குருவின் கட்டளைப்படி தங்களிடம் வந்தேன். தங்களிடம் தீட்சை பெற்றுக் கொள்ளும்படி குருநாதர் கட்டளையிட்டார்." என்றார் கொங்கணவர்.

திருமாளிகைத் தேவர் கொங்கணவருக்குப் பல இரகசியமான சாதனை முறைகளை உபதேசித்ததுடன் சமய தீட்சை நிர்வாண தீட்சை முதலானவற்றையும் அளித்தார்.

அதன்பின் கொங்கணவர் ஓரிடத்தில் தங்கி யோக நெறியில் வாழ்ந்தார். அக்காலத்தில் கொங்கணவருக்கு அநேக சீடர்கள் ஏற்பட்டனர். கொங்கணவரின் புகழ் எங்கும் பரவியது. அவருடைய ஞானஒளி சூரியனைப் போல் பிரகாசித்தது. அதனால் ஈர்க்கப்பட்டு வெகு தொலைவில் இருந்தெல்லாம் சீடர்கள் வந்து சேர்ந்தனர் கொங்கணவரின் சீடர்கள் ஞான மார்க்கத்திலும் குளிகை மார்க்கத்திலும் மிகவும் சிறந்தவர்களாய் விளங்கினார்கள். கடைப்பிள்ளை கொங்கணவரின் சீடர்களிலே முக்கியமானவர்.

கொங்கணவரின் சீடர்களின் சிறப்பைக் காட்டும் வரலாறு ஒன்று கொங்கணவர் வாத காவியத்தில் உள்ளது.

அண்டத்தில் பாய்ந்தான்

ஒருநாள் கொங்கணவரின் சீடன் ஒருவன் ரிஷப யோகியின் சீடனைச் சந்தித்தான். இரண்டு பேருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது. "நான் அண்டம் வரைப் பாய்வேன், உன்னால் என்ன முடியும்?" என்று ஏளனமாகக் கேட்டான் ரிஷப யோகியின் சீடன்.

"ஆஹா அப்படியா? அப்படியானால் நான் அண்டத்தில் பாய்கிறேன். என்னை வந்து பிடி" என்று கூறிக் கொங்கணவரின் சீடன் அண்டத்தில் பாய்ந்தான்.

Koviloor Digital Library

ரிஷப யோகியின் சீடன் அவர் பின்னால் பாய்ந்தான். "குறித்து நின்ற அடியோடே கூடச் சென்றான். கூடு முன்னே கோடிசங்கம் கொள்கினானே " ரிஷபயோகியின் சீடன் தன் அருகில் வருவதற்கு முன் கொங்கணவரின் சீடன் பூரணத்தில் புகுந்து விட்டான். ரிஷப யோகியின் சீடன் சுற்றிச் சுற்றி அலைந்தும் காண மாட்டாதவனாய் வெட்கி நின்றான். "ஆஹாஹா....." இதுதானா உன் சாமர்த்தியம்? " என்று கொங்கணவ சீடன் ஏளனம் செய்தான்.

ரிஷப யோகியின் சீடன் அழுது கொண்டு தன் குருநாதர் முன் வந்து நின்றான். கொங்கணவரின் சீடனிடம் தான் தோல்வி யடைந்ததைக் கூறி அழுதான். அதைக் கேட்ட ரிஷப யோகி,

"காணப்பா யேனழுவாய் மூலயோகி
கைகடந்த சொரூப சித்தி குளிகை சித்தி
தோணப்பா ரெண்டாலே சுருக்கு மெத்த
சொரூப மொன்றே நமக்கல்லால் வேறே யில்லை
பூணப்பா அவனோடே நமக்கேன் வாது
போட்டுவிடு கோபத்தை போ போ பிள்ளாய்"

கொ.வா- 302

"திருமூல யோகியின் பிள்ளைகள் அநேக விதமான குளிகைகளையும் அநேக விதமான சித்திகளையும் அடைந்துள்ளார்கள். அவர்களிடம் வாது செய்யக் கூடாது, வீண் கோபம் விதண்டாவாதம் இவையெல்லாம் யோக வாழ்க்கைக்கு உதவாது. அவற்றை விட்டுவிட்டு நீ போய் உன் வேலையைப் பார்," என்றார்.

அது மட்டுமல்லாமல்,

மைந்தனே இந்த மணி மூலருக்கு
மருவியதோர் நந்தி சொன்ன மார்க்கம் மார்க்கம்
மைந்தனே மூலர் வித்தை நமக்கோ இல்லை
வாக்கடங்காப் புருவமைய வழிதானாமே. 304

"மூலருக்கு நந்தி உபதேசித்த இந்த மணியைச் செய்வதற்கு மற்றவர்களால் முடியாது. அது நமக்கு வேண்டாம். நம்முடைய வழி புருவ மையத்தில் ஏறி நிற்பதேயாகும். நீ அதனையே பின்பற்றுவாயாக", என்றும் கூறினார்.

Koviloor Digital Library

இதற்கிடையில் கொங்கணவரின் சீடன் தன் குருவிடம் வந்தான். ரிஷப யோகியின் சீடனுக்கும் தனக்கும் நேர்ந்த வாதத்தையும், தான் வெற்றி கொண்டதையும் கூறினான். அதைக் கேட்டு மனம் வருந்திய கொங்கணவர்.

"மகனே நீ தவறு செய்துவிட்டாய். ரிஷபயோகி சாதாரணமானவர் அல்ல. அவர் சீடனிடம் நீ வாது செய்திருக்கக் கூடாது. வா அவரிடம் போய் மன்னிப்புக் கேட்டுக் கொள்வோம்", என்று கூறித் தம் சீடனையும் அழைத்துக் கொண்டு ரிஷப யோகியிடம் வந்தார்.

"கோனென்ற கொங்கணரே மூலர் பேரா
கோடி தவம் பெற்றவரே வந்ததேது?"

என்று ரிஷபயோகி கேட்க,

பானென்ற மதத்தாலே எந்தன் பிள்ளை
படுவாயன் சண்டையிட்டான் என வந்தேனே. 308

என்று கொங்கணவர் அடக்கமாகப் பதில் கூறினார்.

"வந்த தென்ன நீர்வேறோ நாம்தான் வேறோ
மைந்த ரெல்லா மொன்றன்றி வெவ்வே றுண்டோ".309

அதைக்கேட்ட ரிஷபயோகி, "நான் நீ என்ற பேதமெல்லாம் நமக்குள் ஏது? நாமும் நீங்களும் ஒன்றேயல்லவா? நமது பிள்ளைகளும் ஓர் தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போன்றவர்களே யல்லவா?" என்று கூறிச் சமாதானம் செய்கிறார்.

கொங்கணவரின் பாடல்கள் எல்லாம் மிகவும் இனிமையானவை. அற்புதமான கவிநயம் மிக்க பாடல்களை அவர் பாடியிருக்கிறார். தமிழின்பம் துய்த்துணர்ந்த சான்றோருக்குக் கொங்கணவரின் பாடல்கள் படிக்கப் படிக்க இன்பம் சேர்க்கும்.

செம்பு மூலிகை

காணப்பா மூலிகையிற் செம்பு சொல்வேன்
1 கலந்தவுரி 2 ஓரிதழ்த் தாமரையும் கேளு
பூணப்பா 3 புளியரணை 4 கோவை யோடே
புகழ் 5 சிவந்த கொடிவேலி 6 சிறிய கீரை

Koviloor Digital Library

ஆணப்பா 7 செந்திராயிப் 8 பிடாரடுக்கி
யப்பனே 9 கரிசாலை 10 அங்கபாதி
தோணப்பா 11 செவ்வல்லி 12 கறுத்த செம்பை
சுகமான 13 செங்கீரை 14 கௌதும்பையாமே. 736

1. அவுரி
2. ஓரிதழ்த் தாமரை
3. புளியரணை
4. கோவை
5. சிகப்புக் கொடிவேலி
6. சிறுக்கீரை
7. செந்திராய்
8. பிடாரடுக்கி
9. கரிசாலை
10. அங்கபாதி
11. செவ்வல்லி
12. கறுத்தசெம்பை
13. செங்கீரை
14. கௌதும்பை

தும்பையோடு பொற்றலையுங் கேளு மக்காள்
சுகமாகப் பதினஞ்சும் வெவ்வேறு சாறு. 737

பொற்றலை இந்தப் பதினைந்து மூலிகைகளிலும் செம்பு இருக்கிறது. இந்த மூலிகைகளைத் தனித்தனியாகப் பிழிந்து சாறெடுத்து மூன்று நாள் வைத்திருந்து திரிமித்திரம் சேர்த்தும் பிறகு நான்கு வகை மித்திரம் சேர்த்தும் பிசைந்து உருட்டிப் புடம் போடவும்.

புடம் ஆறியபின் எடுத்துப் பார்த்தால் பற்பமாக இருக்கும். அதனுடன் ஐந்து வகை மித்திரம் சேர்த்துப் பத்துக்கொரு பங்கு குடோரி சேர்த்து வில்லை தட்டி நிழலில் உலர்த்தி வங்க நாளத்தில் ஊதினால் செம்பு கிட்டும்.

கொங்கணவர் மூலிகைச் சாற்றிலிருந்து செம்பு என்ற உலோகத்தைப் பிரித்து எடுக்க முடியும் என்று கூறுகிறார். மிக அரிய அறிவியல் செய்தி இது.

கொங்கணவரின் வாத காவியத்தில் இதுபோன்ற பல அரிய வேதியியல்இரகசியங்கள் கூறப்பட்டுள்ளன. தமிழ் அரசு இவை பற்றி ஆய்வு நடத்தவேண்டும். தமிழ்ச் சித்தர்களின் அறிவியல் திறனை உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டும்.

ரெண்டாகி நின்றெழுத்தை யொன்றாய்க் கூட்ட
நிலையில்லை கரையில்லை நேசமில்லை
ஒண்டான மனமில்லை உயரமில்லை
ஓகோகோ தாழ்த்தியில்லை யொன்றுமில்லை

Koviloor Digital Library

கண்டான வெளியில்லை யொளியுமில்லை
காண்பதுவும் காணாத ரெண்டு மில்லை
மண்டான முதற்கொண்டு விண்ணுமில்லை
மாசுமில்லை தேசுமில்லை மதித்திலேனே. 760

இரண்டாக இருக்கும் அகார உகாரங்களை ஒன்று சேர்க்கக் கற்றுக் கொண்டால் அதில் உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. எல்லையும் இல்லை. மனம் என்பதும் இல்லாமல் போகும். உயர்வுமில்லை. தாழ்வுமில்லை. வெளியுமில்லை, ஒளியுமில்லை. காண்பன காணப்படாதன என்பவையும் இல்லை. மண்ணும் இல்லை, விண்ணும் இல்லை. குற்றமும் இல்லை. குற்றமில்லாததும் இல்லை.

மதிப்பற்று நிதிப்பற்று மனமும் அற்று
மருவியதோர் யோகமற்று ஞானமற்று
கொதிப்பற்று கூச்சமற்று லச்சையற்று
கூடுவதும் கூடாதும் ரெண்டுமற்று
பதிப்பற்று போதமற்றுப் பரவுமற்று
பாழ்வெளிக்குள் மூடிவைத்துப் பார்ப்பதற்று
உதிப்பற்று வொடுக்கமற்று வொன்றாய் நின்ற
உத்தமனே ஒருபொருளை உணர்ந்திலேனே. 761

இந்நிலையில் அறிவு, அறியும் பொருள், மனம், யோகம், ஞானம், மானம், அவமானம், செய்யக்கூடியது, கூடாதது, உண்மை, பொய், ஒழுக்கம் இவை ஒன்றுமே இல்லாத ஒரு பொருளை உணராமல் தவிக்கின்றேனே.

உணர்வற்று அறிவற்று உண்மையற்று
ஒன்றென்ற சொல்லற்று ஒன்றுமற்று
பணர்வற்றுக் கொம்பற்றுக் காமப்பூவற்று
பதித்துநின்ற மூவரற்றுப் பரப்புமற்றுச்
சுணர்வற்றுச் சூட்சமற்றுச் சோதியற்று
சுத்தவெளிக் காடுமற்று அரியுமற்று
எணர்வற்ற தேதோ யானும் காணேன்
என்மக்காள் ரிஷிசித்தர் இயம்பிலரே. 762

உணர்வு, அறிவு, உண்மை, பொய், ஒன்று என்று சொல்வதற்கும் ஒன்றுமில்லாமல் கொம்பு, காய், பூ என்பவையுமல்லாமல், வேர் தூருமில்லாமல், மறைப்பு வெளிப்படை என்பவையுமில்லாமல்

Koviloor Digital Library

சுத்தவெளியுமல்லாமல் மறைந்து நின்றது ஏதோ அதை என்னால் காணமுடியவில்லை. ரிஷிகள் சித்தர்களும் கூறவில்லை.

இயம்பரிதாம் பூரணத்திற் றானே ஞானம்
இதற்கு மக்காள் கரையில்லை யிலக்கமில்லை.

சொல்வதற்கரிதானது பூரணம். மக்காள் இதற்குத் தொகையுமில்லை. வகையுமில்லை. இதைப்பற்றிச சொல்லவே முடியாது என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறுகிறார்.

கொங்கணவர் தமது ஐநூறுக்கு மேற்பட்ட சீடர்களுக்கும் யோக ஞான சித்திகளைப் பெற வழிகாட்டினார். பின் திருப்பதி நோக்கிப் புறப்பட்டார்.

திருத்தணியில் அவர் வீராட்டகாச மூர்த்தியின் தலைமேல் குளிகையை வைத்துத் தியானம் செய்தார். மூர்த்தி குளிகையைத் தமக்குள் இழுத்துக் கொண்டார். அதைக் கண்ட கொங்கணவர் வருந்தி மூர்த்தியைத் தியானம் செய்யக் குளிகையைத் திருப்பிக் கொடுத்தார்.

அதன்பின் கொங்கணவர் திருவேங்கட மலையை அடைந்து தவம் செய்தார். வனேந்திரன் என்ற சிற்றரசன் அவரிடம் வந்து சீடனானான். அவனுக்காகப் பல பாடல்களை எளிய முறையில் கூறி உபதேசம் செய்தார். பிறகு திருவேங்கடத்திலேயே யோக சமாதியில் அமர்ந்தார். வேங்கடநாதனின் சிலைக்குக் கீழே இன்றும் யோக சமாதியில் கொங்கணவர் அமர்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கொங்கணவர் இயற்றிய நூல்கள்

வாத காவியம்	3000
முக்காண்டங்கள் (முதல் நடுகடை)	1500
தனிக்குணம்	200
வைத்தியம்	200
வாதசூத்திரம்	200
தண்டகம்	120
ஞான சைதன்னியம்	109
சரக்கு வைப்பு	111

Koviloor Digital Library

கற்ப சூத்திரம்	100
வாலைக்கும்மி	100
ஞானமுக்காண்ட சூத்திரம்	80
முதற்காண்ட சூத்திரம்	50
நடுக்காண்ட	50
கடைக்காண்ட	50
ஞானவெண்பா	49
ஆதியந்த சூத்திரம்	45
முப்பு சூத்திரம்	40
உற்பத்தி ஞானம்	21
சுத்தஞானம்	16

இவற்றில் பெரும்பாலானவை தாமரை நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

★ ★ ★

Koviloor Digital Library

கருவூரார்

அகஸ்தியர் தமது பனிரெண்டாயிரம் என்னும் பெருநூல் காவியம், நான்காவது காண்டம் (452) நானூற்று ஐம்பத்திரண்டாவது பாடலில் கருவூராரின் தாய் தந்தையரைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

துணிந்துமே சிலைக்கருவு செய்ய வென்று
துப்புரவாய்க் குடிகளிட மார்க்கம் சென்று
மணியான மணியுடனே குடவன் தானும்
மன்னவனே நவலோகம் ஒன்றாய்ச் சேர்த்து
அணியான கருவுதனி லமைத்துமே தான்
அப்பனே பிரதமைக ளுருவு செய்து
தணியான கருவுதனை விற்று வுண்டு
சதாகாலஞ் சீவனங்கள் செய்திட்டாரே!
இட்டாரே கருவூரார் தந்தை தாய்மார்
எழில்பெரிய தேவதா ஸ்தானங்கள் தேடி.....

கருவூராரின் தாய் தந்தையர் ஊர்ஊராகச் சென்று ஆங்காங்குள்ள கோயில்களில் பஞ்சலோகச் சிலைகளைச்செப்பனிட்டுக் கொடுத்தும் புதிய சிலைகளை உண்டாக்கிக் கொடுத்தும் தொழில் செய்து பிழைத்து வந்தார்கள் என்று அகஸ்தியர் கூறுகிறார். பிற நூல்களிலும் கருவூரார் கன்னார வகுப்பைச் சேர்ந்தவர். அதாவது செம்பு, பித்தளை உலோகங்களைக் கொண்டு தொழில் செய்யும் குலத்தைச் சேர்ந்தவர் என்றே கூறப் பட்டுள்ளது. இவர் போகரின் மாணாக்கர். அதை இந்த நூலில் பல இடங்களில் அவரே கூறியுள்ளார்.

ஆனால் கருவூர்த் தேவர் என்று வழங்கப்பட்ட சிவனடியாரின் வரலாற்றினை இவர் மேல் ஏற்றிக் கதைகள் புனைந்து கூறுவோரும் உளர். சரியாக ஆராயாத சிலர் கருவூரார் என்னும் சித்தர் பிராமண குலத்தினைச் சேர்ந்தவர் என்று கூறுகின்றனர். இருவருக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக அறிந்து கொள்ளுதற் பொருட்டு கருவூர்த் தேவர் பற்றி அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளதனை இங்கே எடுத்துக் காட்டுகின்றோம்.

Koviloor Digital Library

இவர் கருவூரில் பிராமண குலத்திலுதித்து ஞான நூலாய்ந்து சைவ சமயத்தைக் கடைப்பிடித்துச் சிவயோக சித்தி அடைந்து சாதி குலம் நீத்துச் சிவத்தல யாத்திரை செய்து திருவிசைப்பா பதிகம் பாடி வந்தனர்.

இவர் பல தலங்களை வணங்கிக் கஜேந்திர மோக்ஷமெனும் தலமடைந்து அவ்விடமிருந்த முன்றீசரை அழைக்க அவர் தரிசனந்தந்து என்ன வேண்டுமென்றார், தேவர் தமக்குக் கள் வேண்டுமென்று கேட்டார். முன்றீசர் காளிக்குக் கட்டளையிடக் காளி மதுக் குடமளித்தனள். பின்னுந் தேவர், காளியை மீன் வேண்டுமெனக் காளி கோட்டவாசிகளைக் கேட்க அவர்கள் தேடியும் மீன் அகப்படாமை கண்டு தேவர் அங்கிருந்த வன்னி மரத்தினை நோக்கினார். அம்மரம் மீன்மாரி வருஷித்தது.

அவ்விடம் விட்டு ஒரு விஷ்ணு வாலயத்தை யடைந்து பெருமாளையழைக்க அவர் வராமையால் கோயில் பூசையிலா திருக்கச் சபித்துத் திருக்குற்றாலமடைந்து சிவதரிசனஞ் செய்து திருவிசைப்பா பாடிப் பொதிகையி லெழுந்தருளி யிருந்தனர். இவர் அவ்விட மிருக்கையில் நெல்வேலியப்பன் சந்நிதானத்து முன்னின்று நிவேதன காலமென்றறியாமல் "நெல்லையப்பா" என்று மூன்று முறையழைக்க மறுமொழி பெறாததனால் கடவுள் இங்கு இல்லையென்று நீங்க ஆலயத்தில் எருக்கு முதலியவை முளைத்தன. நெல்லையப்பர், தேவரை மானூரில் சந்தித்துத் தரிசனந்தந்து அடிக்கொரு பொன் கொடுத்து நெல்வேலிக்கழைத்து வந்து காட்சி தந்தனர். அதனால் முன் முளைத்த எருக்கு முதலிய தகாத பூண்டுகள் ஒழிந்தன.

இவரை அநாசாரமுள்ளவர் என்ற மானூர் வேதியர்க்கு அவ்வூரில் வீடில்லாமற் போகச் சாபமளித்தனர். இவர் அவ்விடமிருந்த காலையில் தஞ்சாவூர் அரசன் செய்த சிவப்பிரதிட்டையில் அஷ்ட பந்தனம் பலமுறை இளகிப் பந்தனம் ஆகாமற் போயிற்று. இதனால் அரசன் வருந்த அசரீரி கருவூர்த் தேவர் வரின் பந்தனமாம் என்றது. இதனை உருமறைந்தவ்விடம் வந்திருந்த போகநாதர் காக்கையின் கழுத்தில் சீட்டெழுதி யனுப்பித் தேவரை வருவித்தனர். அங்கிருந்தார் தேவரை வேண்டத் தேவர் அங்கிருந்தார் சம்மதமேற்கொண்டு கோயிலுக்குள் சென்று சிவலிங்கத்தை அஷ்ட பந்தனஞ் செய்தனர்.

அங்கிருந்து திருவரங்கஞ் சென்றனர். அவ்விடமிருந்த தாசி அவரது தேகப் பொலிவைக் கண்டு தன் கருத்தை அறிவித்த அதற்கிசைந்து அவளிடமிரண்டு நாளிருந்து நீங்கிப் பெருமாளைக்

Koviloor Digital Library

தரிசித்து அவர் தந்த இரத்தினப் பதக்கத்தைத் தாசிக்குத் தந்து நீங்கத் தொடங்கினர். அந்த தாசி பிரிவாற்றாது வருந்தியது கண்டு நீ எப்பொழுது நினைக்கினும் வருவேன் என்று தல யாத்திரை செய்தனர்.

தாசி அவர் தந்த பதக்கத்தைப் பூண்டு வெளிவரக் கோயிற்றானிகர் அவளிடம் அந்தப் பதக்கம் ஏதென்ன, இது எனக்கு ஒரு வேதியராற் கொடுக்கப்பட்ட தென்றனள். கோயிலதிகாரிகள் அவள் வீட்டைக் காவலிட தாசி தேவரை நினைத்தனள். தேவர் வந்தனர். அதிகாரிகள் அப்பதக்கம் ஏதென்னத் தேவர் பெருமாளை அழைக்கப் பெருமாள் அனைவருங் காண ஆகாயவீதியில் தரிசனந்தந்து நாமே கொடுத்தோமென்று திருவாய் மலர்ந்து அந்தர்த்தானமாயினர். அவ்வற்புதங் கண்டார் அஞ்சி அபராதக்ஷமை வேண்ட அநுக்கிரகித்துக் கருவூரடைந்தனர்.

அவ்விடமிருந்த வேதியரிற் 'சிலர் அரசனிடம் அவர் அநாசாரமுள்ளவர் என்று குறை கூறி அரசனைத் தேவர் வீட்டைச் சோதிக்க ஏவினர். அந்தப்படி அரசன் உடன் பட்டுத் தேவரிருக்கை சென்று சோதிக்க எவ்விடத்தும் வைதிகப் பொருள்களே நிறைந்திருக்கக் கண்டு அஞ்சி நிற்கத் தேவர் அரசனை நோக்கிக் குறை கூறிய வேதியர் வீடுகளைச் சோதிக்க ஏவினர். அந்தப்படி அரசன் அந்த வேதியர்களின் வீடுகளைச் சோதிக்கையில் மதுமாமிச முதலிய அநாசாரப் பொருள்களைக் கண்டு வெறுத்து வேதியர்களை ஊரைவிட்டு ஓட்டினார்.

நீங்கிய வேதியர் ஒருங்கு கூடிக் கருவூர்த் தேவருக்குத் துன்பஞ் செய்யத் தொடங்குகையில் தேவர் பயந்தவர் போல் திரு ஆனிலைக் கோயிலையடைந்து, சிவமூர்த்தியைத் தழுவிக் கொள்ளச் சிவமூர்த்தி அவரைத் தம்மில் ஒடுக்கினர்.

இவர் போக ரிஷியின் மாணாக்கருள் ஒருவர். இவரைக் கருவூரார் என்றுங் கூறுவர். இவர் செய்த நூல் திருவிசைப்பா பல வைத்திய நூல்கள்.

இதிலிருந்து கருவூரார் என்ற சித்தரையும், கருவூர்த் தேவர் என்ற பக்தரையும் இணைத்துப் பேசும் வழக்கம் நெடுநாட்களுக்கு முன்பே ஏற்பட்டு விட்டது என்று அறியலாம்.

கருவூர்த் தேவர் இயற்றிய திருவிசைப்பா பக்திப் பெருக்கால் விளைந்த அற்புதமாக பாடல்களைக் கொண்டது. கருவூரார்ன் பாடல்களோ எளிய நடையிலும் சந்தங்களிலும் அமைந்தவை. இரண்டையும் இயற்றியவர் ஒருவராக இருக்கமுடியாது.

Koviloor Digital Library

கருவூரார் பற்றிப் போகர்

போக முனிவர் கருவூராரைப் பற்றிக் கூறியுள்ளவற்றை இங்கே காண்போம்.

சீரான கருவூரார் பிறந்த நேர்மை
செப்புகிறேன் செம்பவள வாய்யா கேளீர்
கூறான சித்திரையாம் மாதமப்பா
குறிப்பான அஸ்தமது ரெண்டாம் காலாம்
தேரான நாள்தனிலே பிறந்த சித்து
தேற்றமுடன் கருவூரார் என்னலாமே. 5890

ஆமேதான் தேவதச்சன் என்று சொல்லி
அப்பனே அவன் மைந்தன் மயனென்பார்கள்
நாமேதான் சொன்னபடி மயனுக்கல்லோ
நாடான கருவூரார் பிறந்தாரல்லோ
போமேதான் பொன்னுலக தேவதச்சர்
பொங்கமுடன் கருவூரார்க் கீடுமல்லோ
ஆமேதான் பாண்டியற்கு உருவு செய்து
அப்பனே தான் கொடுத்த சித்து மாமே 5891

தகனான கருவூரார் ஜாதி பேதம்
தாக்கான பஞ்சணத்தின் குலத்தில் ஒன்று
கோனான கன்னார ஜாதியாகும்
கொற்றவனே நூல் தனிலே கண்டவாறே 5705

கருவூரார் கன்னார வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை இட் பாடல்களில் போகர் தெளிவாகக் கூறியிருக்கிறார். தேவ தச்சன் விஸ்வகர்மாவின் மகனான மயன் குலத்தில் பிறந்தவர். அந்த தேவதச்சன் கூடத் தொழில் திறமையில் கருவூரார்க்கு ஈடாக மாட்டார் என்றும் கூறுகிறார்

அகஸ்தியர் பனிரெண்டாயிரத்தில் இன்னும் விரிவாக கூறியுள்ளார்.

இட்டாரே கருவூரார் தந்தை தாய்மார்
எழில் பெரிய தேவதாஸ்தலங்கள் தேடி
மட்டமாம் விக்கிரகங்கள் மிகப் புரிந்து
மகதேவ சித்தருக்குப் பணியும் செய்து

Koviloor Digital Library

தொட்டதொரு பொருள்களெல்லாம் சித்தருக்கு
தோறாமல் தான் கொடுப்பார் தந்தைதாய்மார்
அட்டதிசை தான் புகழ முனிவர் சித்தர்
அன்புடனே அவர்தமக்கு அருள் செய்வாரே. 451

கருவூராரின் தாய்தந்தையர் ஊர் ஊராகச் சென்று ஆங்காங்குள்ள கோயில்களில் விக்கிரகங்கள் செய்து கொடுத்து வாழ்ந்தார்கள். அதனால் கிடைத்த பொருள் கொண்டு முனிவர் சித்தர்களுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் வாங்கிக் கொடுப்பார்கள்.

சித்தர்களும் முனிவர்களும் அன்பு கொண்டால் என்ன செய்வார்கள்?

கற்கவே கருவூரார் பாலனுக்கு
கருவான ஞானப்பால் அளித்த போதே

கருவூராருக்கு ஞானப்பாலை ஊட்டினார்கள். இளமையிலே ஞானம் பெறும் நற்பயன் அடைந்த கருவூரார்

அற்பமென்ற தேகமது வாழ்க்கை தன்னை
அக்கணமே தான் வெறுத்து மதியம்பூண்டு
விற்பனன்போற் சொற்சொரூப மிகவுண்டாகி
விண்ணுலகில் கருவூரார் சித்தானாரே. 454

தேக வாழ்க்கை அற்பம் என்று துணிந்து சித்தராகி விட்டார்.

காணவே கருவூரார் சித்து தாமும்
கருவான வடதிசை தென்திசையில் தானும்
பூணவே குடதிசையாம் குண திசையில் தானும்
புகழுடனே சென்றுமல்லோ அற்புதங்கள்
வேணபடி தானமைக்கக் கருத்தி லெண்ணி
வேகமுடன் கருவூரார் மனது வைத்து
தோணவே செந்தூரந் தனையெடுத்து
தோறாமல் தேவதாஸ்தலஞ் சென்றாரே. 466

சித்தராகிவிட்ட கருவூரார் நாற்றிசைகளிலும் சென்று ஆங்காங்குள்ள சிவாலயங்களில் தங்கத்தால் சிவலிங்கங்களை உண்டாக்கி வைத்தார். பார்த்தால் செம்பு போல் இருக்கும். தங்கம் போலும் தோன்றும். காசிக்குச் சென்று விசுவநாதர் ஆலயத்திலும் தாமிரத்தில் வேதை செய்து தங்கமயமான லிங்கத்தை உண்டு பண்ணி வைத்தார்.

Koviloor Digital Library

போகரின் சீடர்

கருவூரார் தன் வாத காவியம் 700ல் காப்புச் செய்யுளில் தான் போகரின் சீடர் என்பதைத் தெளிவு படக் கூறுகிறார்.

பாடுவேன் பல சந்தங்கள் சிந்ததாய்
நாடுவேனினி நற்குரு பாதத்தை
தேடு வேனினிச் சிந்தை மகிழ்வொடு
கூடுவேன் குரு போகர் தன் பாதமே. கரு.வாத- 4

பக்தர்கள் ஊர் ஊராகச் சென்று ஆங்காங்கு உள்ள சிவத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தரிசித்துப் பாசுரம் பாடி மகிழ்வர். பக்தி நெறியை வளர்ப்பர். சித்தர்களோ ஊர் ஊராகச் சென்று ஆங்காங்கு மக்களுக்கு நேரும் குறைகளையும் துன்பங்களையும் அறிந்து அவற்றைத் தீர்க்க முயல்வர்.

கருவூரார் அவ்வாறு தேச சஞ்சாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் ஒரு காகம் அவர் முன் வந்து நின்று ஒரு ஓலையை அவர் முன் வைத்தது. கருவூரார் எடுத்துப் பார்த்தார். குருதேவர் போகநாதர் எழுதிய ஓலை அது. கண்களில் ஒற்றிக் கொண்டார். ஓலையைப் படித்தார்.

"கருவூரா உடனே தஞ்சைக்கு வந்து சேர்". என்று ஓலையில் எழுதப்பட்டிருந்தது. கருவூரார் அக்கணமே புறப்பட்டு விட்டார்.

தஞ்சையை ஆண்ட சோழமன்னன் ஒரு பெரிய ஆலயம் நிர்மாணித்தான், அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் . நிறைந்ததும் மிகவும் பெரியதுமான அந்த ஆலயத்தில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்து சிவலிங்கத்தை நிறுத்த முயன்ற பொழுது, பந்தனம் செய்யமுடியாமல் கட்டு அவிழ்ந்து கொண்டே இருந்தது.

மன்னன் கதறினான். "இறைவா! நான் உனக்கு என்ன குறை வைத்தேன்? ஏன் நான் கட்டிய ஆலயத்தில் எழுந்தருள மறுக்கிறாய்?" என்று கண்ணீர் வடித்தான்.

கூட்டத்தில் ஒருவராக மறைந்து நின்று கொண்டிருந்த போகமுனிவர் அந்த ஓலையை எழுதிக் காகத்தின் காலில் கட்டியனுப்பினார். அந்த ஓலைதான் இப்பொழுது கருவூராரைத் தஞ்சைக்கு இழுத்து வந்தது.

Koviloor Digital Library

கோவில் கும்பாபிஷேகம் தடைப்பட்டு நிற்பதைக் கருவூரார் அறிந்தார். உடனே சிவலிங்கத்தை நோக்கிச் சென்றார். பந்தனம் செய்யவிடாமல் தடுத்துக் கொண்டிருந்த பிரம்மராட்சசின் மேல் காறியுமிழ்ந்தார். உடனே அது தீப்பட்டாற்போல் பொசுங்கி மறைந்தது. அதன் பின் கருவூரார் எளிதாக அஷ்ட பந்தனம் செய்து சிவலிங்கப் பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் செய்து வைத்தார்.

மன்னன் கொண்டாடினான். மக்கள் மகிழ்ச்சியால், ஆரவாரம் செய்தனர். இறைவனும் மனம் களித்தான்.

கருவூரார் செய்த இறைபணிகளில் குறிப்பிடத்தக்கது இது ஒன்று மட்டுமல்ல. இன்னொரு சமயம்; ஒரு சோழமன்னன் தான் மனக்கண்ணால் தரிசித்தது போன்ற அற்புதமான நடராஜர் சிலை ஒன்று செய்ய நினைத்தான். பொன்னாலேயே அதைச் செய்து முடிக்க வேண்டும் என்று நினைத்த சோழன் சிற்பிகளை வரவழைத்து ஒரு தூலம் பொன்னையும் நிறுத்துக் கொடுத்தான்.

சிற்பிகள் பொன்னை உருக்கிச் சிலை வார்க்க முயன்றார்கள். அவர்களால் முடியவில்லை. வார்ப்பு நிற்கவில்லை, உடைந்து கொண்டே இருந்தது. "கடவுளே! இது என்ன சோதனை? காலம் காலமாக உன் உருவத்தைச் செய்வதே தொழிலாகக் கொண்ட எங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லையே? நாங்கள் கற்றது அவ்வளவும் வீணா? அல்லது உன் சோதனையா? இறைவா கருணை செய். இந்தத் தங்கத்தில் எழுந்தருளி எங்கள் தாபத்தைத் தணித்து வை", என்று வேண்டினர்.

இறைவன் மனம் இரங்கவில்லை.

மன்னன் வைத்த கெடு முடியப்போகிறது. தங்களால் சிலை செய்ய முடியவில்லை. மன்னன் தங்களைக் கழுவில் ஏற்றிக் கொன்று விடப் போகிறான் என்று சிற்பிகள் பதைத்துக் கொண்டிருந்தனர்.

கருவூரார் அங்கு வந்தார். "நீங்கள் எல்லோரும் வெளியே போய் இருங்கள். நான் சிலையை வார்த்துத் தருகிறேன்", என்று கூறி அவர்களை வெளியே போகச் சொன்னார். தங்கத்தை உருக்கி அதில் ஒரு துளி செந்தூரத்தைப் போட்டார். பிறகு அச்சில் வார்த்தார்.

நடராஜர் சிலை அற்புதம்! அற்புதம்! என்று கண்டோர் வியந்தனர்.

Koviloor Digital Library

மறுநாள் காலையில் மன்னன் வந்தான். சிலையின் ஒளியில் மன்னனின் கண் கூசியது. "இறைவா! இங்கு நீ எழுந்தருளிய கோலம் என்னே! என்று வியந்தான்." அங்கம் அங்கமாகத் தங்கச் சிலையைப் பார்த்து வியந்தான்.

திடீரென்று அவன் முகம் சுருங்கியது. "நான் பத்தரைமாற்றுத் தங்கம் அல்லவா கொடுத்தேன். தங்கத்தைத் திருடி வைத்துக் கொண்டு செம்பால் சிலை செய்து வைத்துவிட்டீர்களா? என்னை ஏமாற்றவா நினைக்கிறீர்கள்?" என்று ஆவேசமாகக் கர்ஜித்தான்.

சிற்பிகள் பயந்து நடுங்கினார்கள்."சிலையை நாங்கள் செய்யவில்லை. யாரோ ஒரு யோகி வந்தார். அவரே செய்தார்....." என்றார்கள்.

"எங்கே அந்த யோகி?"

சிற்பிகள் கருவூராரை அழைத்து வந்த காட்டினர். மன்னன் கருவூராரைச் சிறையில் அடைக்கும்படிக் கட்டளையிட்டான்.

கொங்கணவர் சிலை செய்யக் கருவூராரை அனுப்பியவர், திருமூலரே என்று கூறுகிறார். கொங்கணவர் வாத காவியத்தில் இந்த அழகான பகுதி காணப்படுகிறது.

கோபித்த சோழன் முன்னே
கொள்ளென மூல மூர்த்தி
யாபித்த தங்கமல்லா
வடியென்ன வடைவு மென்ன
தாபித்த தங்கம் வேண்டிற்
றனிவெள்ளி கொணர்வாய் நீயும்
நேபித்த வெள்ளி வைத்து
நிமிர நீ உருக் கென்றாரே. கொங்/வாத/கா/ 798

திருமூலர் அங்கு வந்தார். சோழ மன்னனைப் பார்த்து, "உனக்குத் தங்கம் தானே வேண்டும்? நீ கொடுத்த எடைக்குச் சமமாக வெள்ளியைக் கொண்டுவா. அதை உருக்கு", என்றார்.

உருக்கிய வெள்ளிக்குள்ளே
உத்தம மூல நாயன்
சொருக்கினார் வீசந் தானும்
துலங்கிற்று தச மாற்றாகப்

Koviloor Digital Library

பருக்கிய வேதை யோடும்
பாவித்துப் பார்த்துக் கொள்ளு
தருக்கிய இந்தச் செம்பு
தாழ்த்திறேன் பாருபாரே. 799

உருக்கிய வெள்ளியில் ஒரு துளி செந்தூரம் போட அது பத்தரை மாற்றுத் தங்கம் ஆகிவிட்டது.

"காரு நீ சோழா உன்றன்
கனகத்தை யெடு போ", என்றார்.

"சோழா உன் தங்கத்தை எடுத்துக் கொண்டு போ. அது மட்டுமல்ல, இந்தச் செம்பை எந்த உலோகத்துடன் சேர்த்தாலும் அது தங்கமாகிவிடும். தெரிந்து கொள்" என்றார்.

"சோழா நீ ஆசை என்ற பெரிய மலைக்குள் வாழ்கிறாய். ஆசை போய் விட்டால் உண்மையான பர வெளியை உணர்ந்து கொள்வாய். அப்போது உனக்கு எல்லாப் பொருள்களும் ஒரே பொருளாகத் தோன்றும். அதுதான் மூல முழுமுதற் பொருள்" என்று மூலர் உரைத்தார்.

சோழன் அவர் திருவடிகளில் விழுந்து விட்டான்.

பாரென்ற வார்த்தைக் குள்ளே
பளிச்சென்று தோன்றினிரே! 802

தோன்றிய வெளியு நீர்தான்
சுருதி யானந்தம் நீர்தான்
கான்றிய போதம் நீர்தான்
கரையில்லை அருளும் நீர்தான்
ஊன்றிய மனமும் நீர்தான்
உண்மை வேறெங்கும் காணேன்
வேன்றிய பொருளும் நீராய்
விரவினீர் வெளியானீரே. 803

என்று உள்ளம் உருக, உடம்பெல்லாம் பூரிக்க, கண்களில் நீர் மல்கக் கைகூப்பித் தொழுதான்.

அதன்பின் சோழன் முற்றும் துறந்த யோகியாகி விட்டான்.

Koviloor Digital Library

இவ்வாறு பலவித அற்புதங்கள் நிகழக் காரணமாகவிருந்த கருவூராரின் கவிநயம் மிக்க பாடல்களில் ஒன்றை இங்கே எடுத்துக் காட்டுவோம். கற்ப மூலிகைகளைப் பாடவந்த கருவூரார் வேம்பின் பயன் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

வேம்பின் கற்பம்

தானவனாம் வேம்பினுட கற்பந்தன்னை
தாரணியில் சித்தர்களே சாற்றக் கேளும்
ஆனதொரு கார்த்திகையாம் மாதந் தன்னில்
வாழ் மிருக சீரிசமும் பூசந் தன்னில்
ஏன முதற் ஜலமிக்க கொழுந்தைக் கிள்ளி
இன்பமுடன் தின்றுவா இருபத் தேழ்நாள்
ஆனதொரு சர்ப்பங்கள் தீண்டினாலும்
அது பட்டுப் போகுமப்பா அறிந்து கொள்ளே.
கரு.வாதகாவியம்.695

கொள்ளப்பா மாதமொன்று கொண்டாயாகில்
குஷ்டமென்ற பதினெட்டு வகையுந் தீரும்
துள்ளுகின்ற பூதமொடு பிசாசு தானும்
துடிதுடித்துக் கண்டவுட னோடிப் போகும்
விள்ளுகிறேன் பொடி செய்து கொழுந்து தன்னை
வெருகடியாய்த் தேனில் அரை வருடங் கொண்டால்
வள்ளலே நரையோடு திரையும் மாறும்
வாலிபமுந் நூறு வயதிருப்பான் காணே. 696

இருப்பதொரு வேம்பினைத் துளைத்துத் தானே
இன்பமுடன் மேல் நோக்கிச் சிலாகை தாக்கி
திருப்பாணி யாகுமப்பா மற்றொன்றாகா
திதன் கீழே மற்ற தோர் பாண்டம் வைத்து
மருப்பிலா துபாயமா யதனை மூடி
மண்டலந்தான் சென்ற பின்பு தயிலந்தானும்
விருப்பமுடன் தயிலமங்கே இறங்கி நிற்கும்
மீண்டு நீ தயிலமதை எடுத்துக் கொள்ளே. 697

எடுத்துவந்த தயிலமப்பா களஞ்சி மூன்று
இந்த இடை தேன் கூட்டிக் குழப்பிக் கொண்டு
திடமாக மண்டலமே கொண்டாயானால்
திரையுமில்லை நரையுமில்லை செப்பக்கேளு

Koviloor Digital Library

அடவாக அதிசயங்க ளநேகம் காணும்
ஆறாதாரங்களெல்லாம் வெளியாய்க் காணும்
இடமாகக் காரியங்கள் ஜயங் கொள்வாய் நீ
இன்ப மனோகரனாய் இருப்பா யென்னே. 698

என்னே கேளவ்வண்ணந் தானே யாவாய்
இயல்பாக அரைவருடங் கொண்டாயானால்
உன்னிலே பதினாறு வயதுபோலே
உறுதியாய் வயிரசடம் உமிழ்நீர் வேதை
மன்னனே யாகாச கவுன சித்தி
வல்லமையாய்ப் பூவுலகில் வசிக்கலாகும்
சொன்னபடி ஒருவருடம் கொண்டாயாகில்
தொலையாத காய சித்தி வேம்பின் கற்பம். 699

இப்பாடல்களில் எவ்வளவு அற்புதமான விஷயத்தைக் கூறியிருக்கிறார் கருவூரார்.

கார்த்திகைத் திங்கள் மிருகசீரிடம் அல்லது பூச நாளில் ஆரம்பித்து வேம்பின் கொழுந்தைக் கிள்ளி இருபத்தேழு நாட்கள் தின்றால் அவ்வாறு தின்றவரைப் பாம்பு கடித்தாலும் விஷம் ஏறாது. ஒரு மாதம் தின்றால் குஷ்ட நோய்கள் பறந்து போய்விடும். கொழுந்தை நிழலில் உலர்த்திப் பொடி செய்து வெருகடி (மூன்று விரல்களால் எடுக்கும் அளவு) வீதம் தேனில் குழைத்துத் தின்று வந்தால் நரை திரைகள் மாறிப் போகும். குன்றாத இளமையுடன் முந்நூறு வயது வரை இருக்கலாம்.

வேப்பமரத்தைத் துளைக்கும்படித் திருகாணியைச் செலுத்தி அதில் ஒரு சிலாகையை அடித்துக் கீழே ஒரு பழகிய மண்பாண்டம் வைத்து பால் அதில் விழும்படியாக வைத்து மூடிவிட வேண்டும். நாற்பத்தெட்டு நாள் சென்றபின் மட்பாண்டத்தில் இறங்கியிருக்கும் தைலத்தை எடுத்து,

மூன்று களஞ்சு தைலம் மூன்று களஞ்சு தேன் சேர்த்துக் குழப்பிக் கொண்டு ஒரு மண்டலம் உட்கொண்டால் முதுமை வராது, உடம்பில் உள்ள ஆதாரங்கள் ஆறும் தெளிவாய்ப் புலப்படும். இதை அரை வருடம் உட்கொண்டு விட்டால் உடல் வச்சிர காயம் ஆகிவிடும். உமிழ் நீர் வேதை யுடையதாகிவிடும். காயசித்தி ஏற்படும். விண்வெளி சஞ்சாரமும் சாத்தியமாகும்.

கருவூரார் இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடி வைத்துள்ளார். கொங்கணவர் கருவூரார் இவர்களுடைய பாடல்கள் படியெடுப்

Koviloor Digital Library

பவர்களால் சிதைவு படாமலும், இடைச் செறுகல்கள் இல்லாமலும் கிடைப்பதால் நல்ல தமிழில் நயமான பாடல்களாகவே கிடைக்கின்றன

கருவூரார் நூல்கள்

வாதகாவியம்	700	மெய்ச்சுருக்கம்	52
வைத்தியம்	500	சிவஞான போதம்	42
யோக ஞானம்	500	கற்பவிதி	39
பலதிரட்டு	300	முப்பு சூத்திரம்	32
குருநூல் சூத்திரம்	105	பூஜாவிதி	30
பூரண ஞானம்	100		

கருவூரார் கடைசியாக மீண்டும் தாம் பிறந்த ஊராகிய கருவூர் வந்து சேர அங்கிருந்த வேதியர் பழம்பகை காரணமாக மன்னனிடம் சென்று முறையிட்டனர். கருவூரார் குற்றமிலாதவர் என்பதை உணர்ந்து மன்னன் கோபிக்க அவ்வேதியர் தாங்களே கருவூராரைக் கொன்றுவிடத் தீர்மானித்துக் கத்தி கம்புகளோடு புறப்பட்டனர்.

கருவூரார் இறைவன் சித்தம் என்ன என்பதை உணர்ந்து கொண்டவராகப் பயந்தவர் போல் கோவிலை நோக்கி ஓடினார். வேதியர்கள் துரத்தினர். கருவூரார் ஓடிப் போய்ச் சிவ லிங்கத்தைத் தழுவிக் கொள்ள இறைவன் அவ்வண்ணமே அவரைத் தம்மோடு ஐக்கியப்படுத்திக் கொண்டான்.

கருவூர் ஆலயத்தில் கருவூரார் சிலை பிரதிட்டை செய்யப் பட்டுள்ளது. தஞ்சை ஆலயத்திலும் கருவூராருக்குச் சிலை உள்ளது.

கருவூரார் பிரம்ம ஞானியாக இருந்ததால் அவரை மகா சித்தர் என்றே கூறுவார்கள்.

✣ ✣ ✣

Koviloor Digital Library

இடைக்காடர்

தாம் திமி திமி தந்தக் கோனாரே
தீம் திமி திமி திந்தக் கோனாரே
ஆனந்தக் கோனாரே - அருள்
ஆனந்தக் கோனாரே.

நாட்டுப் புறங்களில் திருவிழாக் காலங்களில் இன்றும் இப்பாடல்களைப் பாடிக் கொண்டு ஒயிலாட்டம் முதலான கூத்துக்களை ஆடுபவர்களைக் காணலாம்.

அந்த அளவுக்குச் சித்தர் நெறியையும் சமய உணர்வையும் ஆழப் பதிக்கும் பாடல்களில் இடைக்காடர் பாடல்களையும் சேர்க்கலாம். எளிய சொற்கள், ஆழமான கருத்துக்கள், இனிய சந்தங்கள் இவையே இடைக்காடரின் தனிச் சிறப்புக்கள் எனலாம்.

போகர் அகஸ்தியரின் பாடல்களைப் போல் கேட்டு எழுதியவர்களாலும் படி எடுப்பவர்களாலும் சிதைக்கப்படாமல் சொல்லொழுங்கோடு ஆற்றொழுக்காகப் பெருகிவரும் இப்பாடல்கள் உள்ளத்தைத் திறந்து காட்டுவது போல் அவ்வளவு தூய்மையாக, மனதிற் பதிந்து ஊடுருவித் தைப்பவையாக விளங்குவது கற்போர் இதயம் களி கூறச் செய்யும் எனலாம்.

இடைக்காடர் கோனார் வகுப்பைச் சேர்ந்தவர். இவருடைய பிறப்பைப் பற்றிப் போகமுனிவர்,

மட்டான இடைக் காடர் ஜாதி பேதம்
மகத்தான கோனாரே என்னலாகும்
திட்டமுள்ள கோத்திரங்கள் பதினெட்டாகும்
திகழான நூலதனில் கண்டமட்டும். 5701

தாலமுடன் இடைக்காடர் பிறந்த நேர்மை
சட்டமுடன் சொல்லுகிறேன் தன்மை பாரே. 5875

Koviloor Digital Library

KOVILOOR ADIGALAR LIBRARY, KOVILOOR A. No. 44964

தண்மையாம் புரட்டாசி மாதமப்பா
தாழ்வாக இரணியனைக் கொன்ற மாதம்
வண்மையாம் திருவாதிரை இரண்டாம் காலம்
வளப்பமுடன் அவதரித்த சிசு பாலன் தானே. 5876

என்று கூறுகிறார்.

வாமமுடன் தேவதா சாபத்தலே
வையகத்தில் பிறந்த தொரு சித்து மாச்சே. 5752

என்றும் கூறுகிறார்.

நவக்கிரகங்களையே ஆட்டிவைக்கப் போகும் இந்தக் கோனார் தேவதா சாபத்தால்தான் இடையர் குலத்தில் பிறந்து எழுத்தறிவில்லாமல் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தார் என்று சொல்கிறார். விட்டகுறை தொட்டகுறை உள்ளவர்களுக்கே சித்தர் நெறி வாய்க்கும் என்ற உண்மையை இதன் மூலம் எடுத்துக் காட்டுகிறார் போகமுனிவர்.

இவர் மதுரைக்குக் கிழக்கே உள்ள இடைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர் என்று கூறுவர் சிலர். தொண்டை மண்டலத்தில் இடையன்மேடு என்ற சிற்றூரில் வாழ்ந்தார் எனவும் கூறுவர். இடைக்காடர் தினசரி காலையில் ஆடுகளை மேய்த்துக் கொண்டு அருகிலிருந்த மலைச் சரிவை நோக்கிச் செல்வார். ஆடுகளை மேயவிட்டு விட்டு ஒரு மரத்தடியில் சிந்தை ஒடுங்கியவராய்ச் சிவயோக நிலையில் கொம்பை ஊன்றிக் கொண்டு நின்று விடுவார். உடல் மட்டும் அங்கே இருக்கும். உயிர் எங்கோ பறந்து கொண்டிருக்கும்.

மெய்மறந்த நிலையில் ஒருநாள் அவ்வாறு நின்று கொண்டிருக்கையில் விண்வெளியாகச் சென்று கொண்டிருந்த நவநாதச் சித்தர்களில் ஒருவர் இடைக்காடரைக் கண்டார். எழுத்தறிவில்லாத இந்தப் பாமர மனிதனுக்குச் சிவத்தில் ஒடுங்கி நிற்கும் இந்தச் சித்து எவ்வாறு ஏற்பட்டது என்று வியந்தார். விண்ணிலிருந்து இறங்கி வந்து இடைக் காடர் முன் நின்றார். "மகனே! அங்கு நீ எதைப் பார்க்கிறாய்? எதனோடு பேசுகிறாய்? எதனோடு உறவாடுகிறாய்?" என்று கேட்டார்.

இடைக்காடர் திடுக்கிட்டு விழித்தார். எதிரில் நிற்கும் சித்தரைக் கண்டதும் பொங்கிய உவகையால் தடுமாறினார். "ஐயனே! தாங்கள்..... தாங்கள்... ஐயகோ.. நிற்கிறீர்களே.....! " அமருங்கள். அமருங்கள்!"

Koviloor Digital Library

என்று தர்ப்பைப் புல் விரிப்புப் போட்டு உபசரித்தார். ஆட்டுப்பால் கறந்து கொண்டுவந்து கொடுத்து, "ஐயனே ! இந்த ஏழையிடம் உள்ளது இதுதான். ஏற்றுக் கொள்ளுங்கள். எற்றுக் கொள்ளுங்கள்", என்று வேண்டினார்.

சித்தரின் மனம் கனிந்தது, ஆட்டுப்பாலை வாங்கிப் பருகினார், ஞானப்பாலை வழங்கத் திருவுள்ளம் கொண்டார். அன்று வரை எழுத்தறிவில்லாதவராக இருந்த இடைக்காடர் அறிவென்னும் ஒளிவெள்ளம் பாயக் கண்டார். அதில் மூழ்கி விட்டார். வைத்தியம். வாதம், யோகம், ஞானம் எல்லாம் வெகு விரைவில் கற்றுக் கொண்டார். விட்டகுறை இருந்ததாலேயே அவ்வளவு விரைவில் ஞானம் வாய்க்கப் பெற்றார் என்று துணிந்து கூறலாம்.

கற்பிக்க வேண்டிய அனைத்தையும் கற்பித்து முடித்தபின் சித்தர் மறைந்து விட்டார். இடைக்காடர் வருந்தினார். ஆனால்

ஆயிரத் தெட்டு வட்டமும் கண்டேன்
அந்த வட்டத் துள்ளே நின்றதும் கண்டேன்
மாயிரு ஞாலத்து நூற்றெட்டும் பார்த்தேன்
மந்த மனத்தூறும் சந்தேகம் தீர்த்தேன்.

என்று மனந் தெளிந்தவராக இறை நெறியில் நின்று மனித குலம் உய்வதற்காகத் தாம் உணர்ந்த ஞானத்தை நூல்களாகப் பாடத் தொடங் கினார்.

இடைக்காடருக்கு உபதேசித்தவர் போக முனிவரே என்றும், போகர் சமாதி கொள்ளப்போகும் முன் புலிப்பாணியைப் பழனியிலும் இடைக்காடரைத் திருவண்ணாமலையிலும் இருந்து இறைபணி செய்து வருமாறுக் கட்டளையிட்டதாகவும் கூறப்படுகிறது. இதற்குச் சான்றாக இடைக்காடர் சமாதி திருவண்ணாமலையில் உள்ளது.

இடைக்காடர் பாடியவை எண்ணற்ற நூல்கள் என்று கூறப்படுகிறது. ஊர்வசி பஞ்ச ரத்தினத்தில்,

பெருமையோர்க ளிடைக்காட்டுச் சித்தர் மொழி
பேசினார்கள் உலகந்தன்னில்
பேணியானறிவ தேழு காண்டம் பெரு
நூலிதற்குச் சரியாகுமோ. ஊர் -68

Koviloor Digital Library

ஏழுகாண்ட மேழாயிரங்கவி
யல்லாம லெண்ணூறது யேழுநூற்
அஞ்சு நூறதற் கஞ்சு நூறதிலும்
ஏழதற்கு மேல் ஏழுநூறு
வாழு மூன்று நூறாயுதக் கலை
மாறி ஏழு நூறாவது

என்று பல நூல்களைப் பற்றிக் கூறுகிறார்.

இடைக்காடர் சோதிடக் கலையிலும் மிகச் சிறந்து விளங்கினார். இன்றும் பஞ்சாங்கங்களில் அந்த ஆண்டுக்குரிய பொதுப் பலனைக் கூறும் தனிப்பாடல் இடைக்காடர் பாடலாகவே அமைந்துள்ளதைக் காணலாம்.

வெகுதான்ய வருடம் மேதினியில் எல்லாம்
தருமாரி பின் பெய்யும் / தான் முன் - முகில் சோர்ந்து
கொஞ்ச மழை பெய்யும் குலவு கழை தழைக்கும்
பஞ்சம் பருத்தி உப்பு பாழ்

வெகுதான்ய வருடத்தில் மழை மிகத் தாமதமாகப் பெய்யும். பருத்தி விளைச்சல் குறையும். உப்பு விலை ஏறும் என்று இடைக்காடர் அன்று சொன்னவை உண்மையாகி விட்டதை இன்று கண் கூடாகப் பார்க்கிறோ மல்லவா?

இடைக்காடர் தமது சோதிட ஆராய்ச்சி அறிவால் சிறிது காலத்தில் ஒரு கொடிய பஞ்சம் வரப் போகிறது என்பதை உணர்ந்தார். முன் ஏற்பாடாகத் தமது ஆடுகளுக்கு எக்காலத்திலும் கிடைக்கக் கூடிய எருக்கிலை போன்றவற்றைத் தின்னக் கொடுத்துப் பழக்கினார். குறுவரகு என்னும் தான்யத்தை மண்ணோடு சேர்த்துப் பிசைந்து சுவர்களை எழுப்பிக் குடிசை கட்டிக் கொண்டார். எருக்கிலை தின்பதால் உடலில் அரிப்பெடுத்து ஆடுகள் சுவற்றில் உராயும் போது உதிரும் தான்யங்களை மட்டும் கஞ்சி காய்ச்சி உண்டு வாழ்ந்தார். இவ்வாறு வரப்போகும் பஞ்சத்தை எதிர்கொள்ளத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டார்.

பஞ்சம் வந்தது. உணவும் தண்ணீரும் இல்லாமல் மக்கள் மடிந்தனர். ஊர்கள் பாழாயின. நாடே ஜன சந்தடியில்லாமல் பாலைவனம் போல் காட்சி யளித்தது.

ஆயினும் இடைக்காடர் மட்டும் என்றும் போல் தம் ஆடுகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்!

Koviloor Digital Library

நவக்கிரகங்களின் நாயகர்களுக்கு ஆச்சரியம்! இது என்ன விந்தையாக இருக்கிறது. இதன் காரணத்தை அறிய வேண்டும் என்று நினைத்தவர்களாக ஒன்பது பேரும் கூடி இடைக்காடரின் குடிசைக்கு வந்தார்கள்.

இடைக்காடருக்குச் சொல்லவொண்ணா ஆனந்தம். "ஐயோ விண்ணுலக வாசிகளான நீங்கள் என் குடிசைக்கு வந்து விட்டீர்களே! முதலில் கொஞ்சம் சாப்பிடுங்கள். இந்த ஏழையிடம் என்ன இருக்கிறது? வரகு ரொட்டியும் ஆட்டுப்பாலும்தான். எளியவை என்று இகழாதீர்கள். என் உள்ளம் நிறைந்த அன்பால் உயிரையே கலந்து தருகிறேன். உண்ணுங்கள். உண்டு சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். பிறகு பேசுவோம்", என்று உபசரித்தார்.

சித்தரின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் வரகு ரொட்டியைத் தின்று பாலைப் பருகினார்கள். எருக்கிலைச் சத்துக் கலந்த பால் அல்லவா? உடனே அவர்களுக்கு மயக்கம் வந்து விட்டது.

கிரகங்கள் மயங்கிக் கிடப்பதைப் பார்த்ததும் இடைக்காடர் அவை எந்த அமைப்பில் இருந்தால் மழை பொழியுமோ அந்த அமைப்பில் மாற்றிப் படுக்க வைத்து விட்டார்.

வானம் இருண்டது, மழை பொழிந்தது. வரண்டு கிடந்த பூமியின் தாகம் தணிந்தது, ஆறு குளம் குட்டைகள் நிரம்பின.

நவக்கிரக நாயகர்கள் விழித்துப் பார்த்தார்கள். நொடிப் பொழுதில் சித்தர் செய்த அற்புதம் அவர்களுக்கு விளங்கி விட்டது. நாட்டின் பஞ்சத்தை நீக்கிய சித்தரின் நுண்ணறிவை மெச்சி அவருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து விடை பெற்று மீண்டனர்.

இடைக்காட்டுச் சித்தரின் புகழ் வளர்ந்தது. அவரைத் தரிசிக்கவும் உபதேசம் பெறவும் எங்கெங்கோ மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் மக்கள் வந்து கூடினர்.

ஒரு சமயம் விஷ்ணு பகவானை வழிபடுகிறவர்களுக்கு ஓர் ஐயம் ஏற்பட்டது. விஷ்ணு பத்து அவதாரம் எடுத்திருக்கிறாரே? இதில் எந்த அவதாரத்தை வழிபடுவதால் விரைவில் பலன் கிட்டும் என்று யோசித்தனர். சித்தரிடம் கேட்போம் என்று இடைக் காடரிடம் வந்து கேட்டார்கள்.

Koviloor Digital Library

சித்தரோ "ஏழை இடையன் இளிச்சவாயன்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

வந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. நெடுநேரம் யோசித்தபின் இடையன் என்றால் கிருஷ்ணன். இளிச்சவாயன் என்றால் நரசிம்மர். ஏழை என்றால் சக்கரவர்த்தித் திருமகனாகப் பிறந்தும் ஏழையாகவே வாழ்ந்தாரே அந்த இராமன் தான் என்று முடிவு செய்தனர். சித்தரின் நுண்ணறிவுத் திறனை மெச்சிய வாறு சென்றனர்.

இவர் காலம் கடைச்சங்க காலம் என்றும் திருவள்ளுவ மாலையில் "கடுகைத் துளைத் தெழுகடலைப் புகுத்தி" என வரும் திருக்குறளின் பெருமை கூறும் பாடல் இவர் இயற்றியது எனவும் கூறுவார் உளர் .

இவர் குலசேகர பாண்டியன் காலத்திருந்தவர் என்றும் கபிலருடன் சேர்ந்து அரசனைக் காணவர அரசன் மரியாதை செய்யாததால் கோபித்து நீங்க, கபிலர் முதலான புலவர்களும் உடன் நீங்க அரசன் இடைக்காடரிடம் மன்னிப்புக் கோரி அழைத்து வர மற்ற புலவர்களும் அரசவைக்குத் திரும்பினர் என்பர். இவருடைய பாடல்கள் அகநானூறு 274 - 284- நற்றிணை 142 - 326. குறுந்தொகை, புறநானூறு முதலான சங்ககால நூல்களிலும் இடம் பெற்றுள்ளன. (இந்த இடைக்காடர் வேறு என்பாரும் உளர்.)

மலையாள நாட்டில் உள்ள இடைக்காடு என்னும் ஊரில் பிறந்தவரும் ஊசிமுறி என்னும் நூலை இயற்றியவரும் இவரே என்பாரும் உளர்.

இவர் விஷ்ணுவின் அவதாரம் என்று கூறுபவர்களும் உளர்.

இடைக்காடர் தமது ஞான சூத்திரம் 70 என்ற நூலின் காப்புப் பாடலில்

காப்பு முதல் காட்சி யென்று கடையில் நின்று
கடைச் சரக்கைக் கண்டு கொள்ளக் காப்பிற் பாடி
காப்பு முதல் முதற்சேர்த்து நடுவில் நின்று
கணபதி தாளிருசரணங் காப்பாம் என்று

Koviloor Digital Library

காப்பு முதல் மூலர் கோரக்க நாதர்
கமலமுனி போகரிஷி பாதங் காப்பு

என்று பாடியுள்ளதால் போகரே இவர் குருநாதர் என்றும், ஆடு மேய்த்துக் கொண்டிருந்த இடைக்காடருக்கு உபதேசம் செய்தவர் போகரே என்றும் துணியலாம்.

இடைக்காடர் திருவிடைமருதூரில் சமாதியில் வீற்றிருப்பதாக போகர் ஜனன சாகரத்தில் கூறியுள்ளார்.

***

Koviloor Digital Library

கமலமுனி

ஆதியாம் கமலமுனி என்ற சித்து
அன்பான குறவரிட ஜாதியாகும்
நீதியாம் தலைமுறைகள் ஆறெட்டாகும்
நிஷ்களங்க மாகவல்லோ சாத்திரத்தில்
பாதிமதி சடையணிந்த தம்பிரானும்
பாடிவைத்த நூல் தனிலே காணலாமே. 5725

கூறவென்றால் கமலமுனி பிறந்த நேர்மை
கூறுவேன் வைகாசித் திங்களப்பா
மாறலுடன் பூசமது ரெண்டாங்காலாம்
மகத்தான கமலமுனி பிறந்த நாள் தான். 5929

பாரேதான் கமலமுனி வயதே தென்றால்
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க் கேளு
நேரேதான் வயததுவும் நாலாயிரந்தான்
நேர்மையுடன் முன்னூற்று சொச்சமாகும்
சீரேதான் சீனபதி தன்னிலப்பா
சிறப்புடனே நெடுங்காலம் இருந்தசித்து. 5841

போகர் ஏழாயிரத்தில் உள்ள மேற்கண்ட பாடல்களால் கமலமுனி குறவர் சாதி. வைகாசி மாதம் பூச நட்சத்திரத்தில் பிறந்தவர். சீனாவில் நெடுங்காலம் வாழ்ந்தவர் என்பவற்றை அறிகிறோம்.

ஆனால் கருவூரார் தமது வாத காவியத்தில்

திரமதா யிருந்து வாழ்ந்து சடமது பெலக்கச் செய்தார்
வரமதா யுறுங்கமல மாமுனி கன்னார் ஜாதி
பரமதா யிருந்து இந்தப் பாரினில் வேதை செய்து
தரமதாய்க் கற்பம் கொண்டு சடமதை வலுக்கச் செய்தார். 584

என்று கூறுகிறார்.

Koviloor Digital Library

காலாங்கி நாதர் கன்னார் ஜாதி என்பதை முதலிலேயே பார்த்தோம். காலாங்கி நாதரே கமலமுனி என்று கருதுவார் உளர். அதற்குச் சான்றாக,

கமலமுனி சூத்திரம் 76 என்ற நூலில் 63வது பாடலில்,

கமலம தாயிரத் தெட்டையுங் கண்டபின்
கமல முனியென்றும் காலாங்கி என்றும்
விமல னுரைத்தார் மெய்ச்சித்த னென்று
நிமல னென்நந்தி நேர் கொண்ட வாறே

என்று கூறியுள்ளதை எடுத்துக் காட்டலாம்.

கமலமுனி மதுரை யம்பதியில் சமாதியில் வீற்றிருப்பதாகப் போகர் ஜனன சாகரத்தில் கூறப் பட்டுள்ளது.

* * *

Koviloor Digital Library

சட்டைமுனி

சட்டைமுனி சிங்கள நாட்டைச் சேர்ந்தவர். ஆவணி மாதம் மிருகசீரிடம் நட்சத்திரம் மூன்றாம் காலில் பிறந்தவர் என்று போக முனிவர் தமது சத்த காண்டத்தில் (போகர் 7000) கூறுகிறார்.

சிங்கள நாட்டுத் தேவதாசியின் வயிற்றில் பிறந்தவர் என்று போகர் கூறுகிறார். பிள்ளை பிறந்தபின் அவள் தன் பிள்ளையோடும் கணவராக ஏற்றுக் கொண்டவரோடும் தமிழ் நாட்டில் வந்து குடியேறியிருக்க வேண்டும். பிழைக்க வந்த இடத்தில் சட்டைமுனி கோயில்களின் வாசலில் தட்டை ஏந்திக் கொண்டு நின்று யாசகம் பெற்றுத் தம் தாய் தந்தையருக்கு உதவிவந்தார். அவர்களும் வேளாண் குடிகளாக, அதாவது விவசாயக் கூலிகளாகத் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

அகஸ்தியர் பனிரெண்டாயிரத்தில் சட்டைமுனியின் தாய் தந்தையர் வேளாண் குடிமக்கள் என்றும் சட்டைமுனி கோயில் வாசலில் நின்று யாசகம் பெற்றுத் தம் தாய் தந்தையரைக் காப்பாற்றி வந்தார் என்றும் கூறுகிறார். ஆனால் அமுதகலைக் ஞானத்தில்,

கருதினான் சட்டைமுனி அனந்தங் கோடி
கருவாக அவன் குலந்தான் "சேணியனாகும்"

என்று கூறுகிறார்.

சட்டைமுனி சிறிது காலம் இல்லறத்திலும் ஈடுபட்டிருந்தார். ஆனால் அவர்மனம் இல்லறத்தில் லயிக்கவில்லை, ஒருநாள் கோவில் வாசலில் யாசகத்திற்காக நின்று கொண்டிருந்த போது வட நாட்டிலிருந்து வந்த சங்கு பூண்ட ஒரு தவசியைக் கண்டார். எளிதில் அவரால் கவரப்பட்ட சட்டைமுனி அவருடனேயே புறப்பட்டுவிட்டார்.

அத்தவசியிடம் உபதேசம் பெற்றபடி அவருடனேயே சுற்றித்திரிந்த சட்டைமுனி சத்த சாகரங்களையும் சுற்றி வந்தார் என்று கூறுகிறார் அகஸ்தியர். கடல்கள் மலைகள் அனைத்தும் கடந்து

Koviloor Digital Library

சுற்றியலைந்து திரிந்து வந்த சட்டைமுனி எவ்வாறோ போக முனிவரைக் கண்டு அவருடைய அடிதொழுது சித்தர் மார்க்கத்தில் இணைந்தார்.

போகருடன் சீடராக் வாழ்ந்த காலத்தில், கொங்கணவர், கருவூரார் முதலான பல சித்தர்களின் தொடர்பு ஏற்பட்டது. சிறிது காலம் அகஸ்தியரிடமும் சீடராக இருந்தார். சித்தர் நெறியை முற்றும் கற்றுக் கொண்ட சட்டைமுனி, இயற்கையாகவே தயாள குணமும் மனிதாபிமானமும் மிகுந்தவராதலால் நாம் கற்றுக் கொண்ட உண்மைகளை உலகம் பூராவும் அறிய வேண்டும். மனித இனம் முழுவதுமே கடைத்தேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக நூல்களை எழுதத் தொடங்கினார்.

சித்தர்கள் தாம் எழுதும் நூல்களைத் தீயவர் கற்றுக் கொண்டு தவறாகப் பயன்படுத்தி உலக மக்களுக்குக் கெடுதல் செய்துவிடக் கூடாது என்பதற்காகப் பரிபாஷை (மறைப்பு மொழி) யிலேயே எழுதுவது வழக்கம். ஆனால் சட்டை முனி எல்லாவற்றையும் வெளிப்படையாகக் கொட்டிவிட்டார்.

திருமூலர் இவர் எழுதிய தீட்சாவிதி என்ற நூலைக் கிழித்தெறிந்தார் என்று கூறுவர். உரோமரிஷி சில நூல்களைக் கிழித்து விட்டதாகவும் கூறுவர். இவர் பதிலுக்கு உரோமரிஷியின் நூல்களைக் கிழித்து விடாமலிருக்க அவர் காகபுசுண்டரிடம் கொடுக்க அவர் தமது காக்கைச் சிறகுகளினடியில் அவற்றை மறைத்துக் காப்பாற்றி வைத்திருந்து அகத்தியரிடம் கொடுத்தார் என்றும் கூறப்படுகிறது.

கயிலாயத் திருச்சபையில் சிவபெருமான் முன்னிலையில் இவரைப் பற்றி விசாரணை நடைபெற்றதாகவும் சிவபெருமான் இவருடைய நூல்களைக் குகையில் வைத்துப் பாதுகாக்கும்படி உத்தரவிட்டதாகவும் கூறப்படுகிறது.

சட்டைமுனி சிவபெருமானோடு நெருங்கிய தொடர்புடையவர் என்பதை அவருடைய பெயருடன் அடைமொழியாக, கயிலாயக் கம்பளிச் சட்டைமுனி என்று வழங்கப் படுவதிலிருந்தே அறியலாம். கயிலாயத்தின் குளிர்தாங்க முடியாததால் எப்பொழுதும் கம்பளிச் சட்டை அணிந்து கொண்டிருக்கும் பழக்கமுடையவராக இருந்திருக்கலாம். போகர் 7000 என்னும் பெருநூலில் ஆறாவது காண்டத்தில் போகர் சட்டைமுனியைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்.

Koviloor Digital Library

சட்டைமுனியைப் பற்றி போகர் கூறியுள்ளது

நாமே தான் சொன்னபடி சட்டைநாதர்
நன்மையுடன் பிறந்ததொரு நேர்மைதானும்
போமேதான் ஆவணியாம் திங்களப்பா
பொங்கமுடன் மிருகசீரிடமு மாகும்
வேமேதான் விட்டகுறை மூன்றாங் காலாம்
விருப்பமுடன் அவதரித்த பாலனாமே. 5874

பாலனாம் சிங்களவ தேவதாசி
பட்சமுடன் பயின்றெடுத்த புத்திரன்தான்
சீலமுடன் சட்டைமுனி என்று சொல்லி
சிறப்புடனே குவலயத்தில் பேருண்டாச்சு. 5875

மேலும்,

மலையான சட்டைமுனி சாதிபேதம்
மகத்தான சிங்களவர் என்னலாகும்
சிலையான கோத்திரங்கள் பதினாலாகும்
சிற்பரனே கண்டநூல் அறிந்தமட்டே.

என்றும் கூறுகிறார்.

சட்டைமுனியைப் பற்றி அகஸ்தியர் 12000 என்னும் தமது பெருநூல் காவியத்தில் கூறியுள்ளவை.

இருந்தாரே புலஸ்தியனே யின்னங் கூர்வேன்
யெழிலான சட்டை முனிவரைத்தான் கேண்மோ
பொருந்தவே தாய் தந்தை வளங்கள் கூர்வேன்
பொங்கமுடன் பயிரிடுங் குடிகளப்பா
திருந்தவே காணிவள மெத்தவுண்டு
தீர்க்கமுடன் யேனாதிக் கூட்டமென்பார்
அருந்தவத்தி லுதித்த தொரு சட்டைதானும்
அப்பனே சமாதி முகம் கொண்டசித்தே. 431

சித்தான சட்டைமுனி நாதரப்பா
சிறப்பான பூமிவளம் திரிந்து மேதான்
சுத்தமுடன் கைலாச ரிடிகள் கூட்டம்
சுந்தரனார் தாமடுத்து பணிகள் செய்து

Koviloor Digital Library

நித்தியமும் மாசிலாக் கடவுள் தம்மை
நேம நிஷ்டைகளோடு வதீதந் தீர்ந்து
சத்தியத்தை யனுதினமு மனு சரித்து
சாங்கமுடன் திருக்கோயில் காப்பார்தானே. 432

தானான தேவதா ஸ்தலத்தின் வாசல்
தண்மையுடன் கரந்தனிலே தாம்பாளந்தான்
கோனேதான் கைப்பிடித்து யிதவு கூறி
கொற்றவனே முகம்பார்த்து தனமே கேட்பார்
மானே கேள் மானிடராம் கோடிசங்க
மகத்தான பரமாத்மா வென்று கூறி
தேனே கேள் சட்டைமுனி நாதருக்கு
தெகிட்டாதே பொன்காசு தருவார் காணே. 433

காணவே சட்டைமுனி நாதர் தாமும்
கருவாக யாசகா விர்த்தி செய்து
தோணவே சம்சார வாழ்க்கை யோடும்
தொல்லுலகில் தாய்தந்தை வணக்கத் தோடும்
பூனவே யுபசார வஞ்சலோடும்
புகழ்ச்சியாய் அனுதினமு நமஸ்கரித்து
வேணபடி தனந்தேடி சமுசாரத்தில்
வீற்றிருந்தார் சித்து முனிநாதர் பாரே. 434

பாரப்பா சட்டைமுனி மைந்தரோடு
பாலகனே நெடுகாலங் கூடிருந்தார்
நேரப்பா வடகோடி கானகத்தில்
நேர்மையுடன் தவசியராம் சங்குபூண்ட
தேரப்பா சந்நியாசி ஞானவானாந்
தெளிவான யோகியாம் சங்குநாதன்
ஆரப்பா வவருடைய ஆசீர்மத்தில்
அப்பனே சிலகாலம் வாழந்தார் தாமே. 435

போகர் சிங்களவர் என்றார். அகஸ்தியர் வேளாண குடிமகன் என்றார். கருவூரார் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

பெற்றுடன் வாழ்ந்தா ரந்தப் பேர் பெற்ற சட்டைநாதர்
உற்ற சேணியர் குலத்தில் உதித்து நெய் தொழிற் படித்து

Koviloor Digital Library

நற்றமிழ் தேர்ந்து இந்த நானிலம் மெய்க்க ஞானம்
கற்றுமே கற்பங் கொண்டு காசினி தனை விட்டேகி.
க.வா. 586

விட்டுடன் மலையிலேறி வேதை களநேகஞ் செய்து
சட்டமதாகவேதான் சதுரமாகிரியில் வந்து
மட்டுடன் பிராமண தேகமதனிலே நுழைந்து கந்து
திட்டமாய்க் கற்பங் கொண்டு சிறப்புட னிருந்தார் பாரே. 587

சட்டைமுனி சேணியர் குலத்திற் பிறந்தார், நெய்தல் தொழில் புரிந்தார். தமிழ் கற்றார். ஞானம் கொண்டார். சதுரகிரி சென்று சேர்ந்தார். வாதம்புரிந்து அநேகம் வேதியல் விந்தைகள் செய்தார். பின் ஒரு பிராமணனின் தேகத்தில் கூடு விட்டுக் கூடு பாய்ந்தார். கற்ப மூலிகைகளை உண்டார், காயசித்தி செய்து கொண்டு அதிலேயே வாழ்ந்தார் என்று கருவூரார் கூறுகிறார்.

வேதியியல் சட்டைமுனி மிகப் பெரிய நிபுணராக விளங்கினார், போகமுனிவருடனும் கொங்கணவருடனும் கூடி வாழ்ந்ததால் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட வேதியியல் மேலும் நுணுக ஆய்ந்து அற்புதமான முடிவுகளைக் கண்டார் எனலாம்.

இங்கு சட்டைமுனி வாத காவியத்திற்கு எழுதிய பதிப்புரையை அப்படியே எடுத்துக் காட்டுவது ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறோம்.

தமிழர் கண்டவேதியியல்அற்புதங்களைத் தரணியிலுள்ளோர்க்கு எடுத்துக் காட்ட இந்தச் சட்டைமுனி வாத காவியம் ஒன்றே போதும்!

இதிலுள்ள வேதியியல் விந்தைகளை, விவரிக்க வொண்ணாத அதிசயங்களை - அற்புதங்களை - ஒரு சிறிதளவேனும் எடுத்துக் காட்ட வென்றாலும் அது மலையைத் தகர்க்க ஒரு சிற்றுளியை எடுத்துக் கொண்டு கிளம்பிய கதையாகவே முடியும்.

துத்தநாகத்தை வங்கமாக்கு - வங்கத்தை வெள்ளியாக்கு வெள்ளியை இரும்பாக்கு - இரும்பைச் செம்பாக்கு - செம்பைத் தங்கமாக்கு என்று எடுத்த எடுப்பிலேயே இரசவாதத்தை அலசத் தொடங்கி விடுகிறார் சட்டைமுனி.

Koviloor Digital Library

தங்கம் செய்வதா? செய்தவர் யார்? சித்தர்களின் புரட்டு இது என்று எரிந்து விழுகிறவர்களையும் காணலாம். எத்தனையோ பேர் இருந்த சொத்தெல்லாம் இழந்து ஓட்டாண்டிகளாகியுள்ளனர். இந்தப் பேச்சைக் கேட்டு, என்று சிலர் கூறுவதும் பொய் அல்ல!

ஆனால், வாதத்தைத் தொடுவதற்கு முன்னால் ஒருவர் என்னென்ன 'கடமைகளைச் செய்ய வேண்டும். விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பவற்றையெல்லாம் விட்டுவிட்டு - ஏட்டில் உள்ளபடி உருக்கினேன், ஊதினேன், எல்லாம் கரியாகிவிட்டது, என்று கண்ணீர் வடிப்பவர்களைப் பார்த்து- பரிதாபப்படுவது கூடத் தவறு என்பதே சரியானது. பேராசை பெருநஷ்டம் என்ற பழமொழியைக் கூட நினைவு கொள்ளாத இவர்களைத் தண்டிப்பதால் கூடத் தவறில்லை.

இந்த நூலில் இரசவாதம் மட்டும் கூறப்படவில்லை. அதற்கு அப்பாற்பட்ட அநேகம் வேதியியல் மர்மங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த நூல்களை ஜெர்மானியர் கொள்ளை யடித்துக் கொண்டு போய் - அரும்பாடுபட்டு உட்பொருள்களை உணர்ந்து - அற்புதமான விஞ்ஞான முன்னேற்றங்களை அடைந்துள்ளனர் என்று இன்னும் நாம் கதை பேசிக் கொண்டிருக்கத்தான் போகிறோமென்றால் - நம்மைவிடப் பேதைகள் - முட்டாள்கள் - எதற்குமே உதவாத ஜடங்கள் இனி இந்த உலகத்தில் பிறக்கப் போவதில்லை என்று பட்டயமே எழுதி வைத்து விடலாம்.

வேதியியல் உண்மைகள் எங்கே இருக்கின்றன?
எப்படி இருக்கின்றன?
அவற்றை ஆய்வு நடத்தத்தான் வேண்டுமா?
நடத்தினால் ஏதாவது தேறுமா?

இந்த அரசாங்கத்தைத் தட்டி எழுப்புவது என்பது நடக்கக் கூடிய காரியமா?

அவநம்பிக்கையோடு முகத்தைத் திருப்பிக் கொள்கிறவர்களைத் தான் என்னால் காண முடிகிறது.

முன்பே எழுதினேன். பெரும் செல்வந்தர்கள் தங்களிடம் ஏராளமாக இருக்கும் செல்வத்தில் ஒரு பகுதியை சித்தர் இலக்கியங்களில் காணப்படும் வேதியியல் உண்மைகளை ஆய்வதற்காக ஒதுக்கினால் அவர்களும் பெரும்பயன் அடைவார்கள் என்று.

Koviloor Digital Library

என்னுடைய எழுத்து பொய்யாகவில்லை. இன்று சில தொழிலதிபர்கள் இம்முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் எனக்குத் தெரியும்.

ஆனால் நிலைமைகள் கட்டுக்கு மீறிப்போவதற்கு முன் அரசாங்கம் விழித்துக் கொண்டு - சித்த மருத்துவக் கல்லூரிகளில் விரிவான சோதனைக் கூடங்களை நிறுவி மருத்துவக் கல்லூரிகள் வெறும் ஏட்டுப் படிப்பு நடத்தும் உயிரற்ற சொற்கூடங்களாக இல்லாமல்,

நேரடியாக ஆய்வுகள் நடத்தி விளைவுகளை எடுத்துக் காட்டும் செயற்களங்களாக மாற வேண்டும் என்பதே நமது அவா.

மருந்தை அரைப்பது, குகைகள் செய்து, புடம் போடுவது இதையெல்லாம் செய்யச் சோதனைக் கூடங்கள் அவசியமா என்று இளக்காரம் பேசுகிறவர்களை - நேராக ஜெர்மனிக்கே அனுப்பி வைப்பதாலும் தவறில்லை. ஏனென்றால் பிறநாட்டவர்கள் எதை எப்படிச் சாதித்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்வார்களல்லவா?

சட்டைமுனி இந்த நூலில் இரசவாதம் மட்டுமா கூறியிருக்கிறார்.

இரசமணிகள் என்ற பெயரால் விற்கப்படும் சில உருண்டைகளை நாம் பார்த்திருக்கிறோம். இரசமணிக்கு அளவுக்கு மீறிய ஆற்றல் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த ரச உருண்டைகளுக்கு எந்த விதமான ஆற்றலும் இருக்காது.

இரசத்தை மணியாக்கி அதற்கு உலோகங்கள் இரத்தினங்கள், உபரசங்கள் எல்லாவற்றினுடைய சத்துக்களையும் கொடுத்து அவற்றை உயிருள்ள இரசமணிகளாக்கும் விதத்தை சட்டைமுனி இந்த நூலில் கூறுகிறார்.

சொரூபமணி, ஸ்தம்பனமணி, கமலினிமணி போன்ற ரசமணி வகைகளும் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு சாரணை ஏற்ற வேண்டும், எவ்வளவு எடை இருக்க வேண்டும் என்பன போன்ற விவரங்களை எல்லாம் கூறுகிறார்.

ரசமணி மனிதனுக்கு அளவற்ற ஆற்றலைத் தருகிறது. அலுப்பில்லாமல் நாட்கணக்காக நடந்து கொண்டே இருக்க அல்லது

Koviloor Digital Library

வேலை செய்யவும் சக்தியளிக்கிறது. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ஆற்றலையும் அளிக்கிறது. சோதனைக் கூடத்தில் இதைத் தயார் செய்து பார்க்க முடியுமா? முயற்சி செய்யலாம். அதில் தவறே இல்லையல்லவா?

இவை எல்லாவற்றுக்கும் மேலாக எத்தனை விதமான அற்புதமான மருந்துகளை இந்நூலில் வாரிவழங்கியிருக்கிறார் சட்டைமுனி! உலோகங்கள், இரத்தினங்கள், பாஷாணங்கள் எல்லாவற்றையும் - தனித்தனியே சுண்ணமாகவும், செந்தூரமாகவும், பஸ்பமாகவும் செய்யும் முறைகளைக் கூறுகிறார். நோய்களை அழிப்பதோடன்றி, இவை மனிதனுக்கு நரை, திரை, மூப்பு ஏற்படாமல் தடுத்து என்றும் இளமையோடிருக்கவும் உதவக் கூடியவை.

அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய தகவல்கள் இந்த நூலில் கொட்டிக்கிடக்கின்றன. இதையெல்லாம் நம்மால் செய்ய முடியுமா? நாம் எதற்காகச் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையில் இன்னும் நாம் உட்கார்ந்து கொண்டிருந்தால்,

தின்கின்ற சோற்றுக்கு கூட அமெரிக்காக்காரன் காப்புரிமை கேட்கும் நிலைமை ஏற்பட்டுவிட்ட பிறகு (நம் நாட்டில் விளையும் பாஸ்மதி அரிசிக்கு அமெரிக்காவில் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது, மஞ்சளையும் வேப்பிலையையும் உபயோகிப்பதற்குக் கூட வெளி நாட்டார் அனுமதி பெற வேண்டும் என்பது போல் நமது நாட்டின் அரிய செல்வங்களான மூவா மருந்து சாவா மருந்து முதலானவற்றையும் இழந்து விட்டு ஆண்டிகளாக அலைய நேரிடும்.

சட்டைமுனி தமது குருநாதர் யார் என்பதை எவ்விடத்திலும் கூறவில்லை. சட்டைமுனி வாதகாவியம் காப்புச் செய்யுளில்,

அகண்ட பரிபூரணமா முமையாள் பாதம்
அப்புரத்தே நின்றதொரு ஐயர் பாதம்
புகன்று நின்று கணேசனொடு நாதாக்கள் பாதம்
புகழான வாக்குடைய வாணிபாதம்
நிகண்டெனவே எனையாண்ட குருவின் பாதம்
நிறைநிறையாய்ச் சொரூபத்தில் நின்றோர் பாதம்
முகன்றெனை ஈன்றெடுத்த சின்மயத்தின் பாதம்
மூவுலகும் மெச்சுதற்குக் காப்புத் தானே.

என்றே கூறுகிறார்.

Koviloor Digital Library

ஆனால், கொங்கணவரும் சட்டைமுனியும் ஒருவர்மேல் ஒருவர் அளவு கடந்த மதிப்பும் பற்றும் வைத்திருந்தார். தமது நூலில் பல இடங்களில் கொங்கணவரைப் பற்றி உணர்ச்சியுடன் மிகவும் பெருமையாகக் கூறுகிறார் சட்டைமுனி. அதே போல் கொங்கணவரும் சட்டைமுனியைப் பற்றிப் புகழ்ந்து பேசியுள்ளார். கொங்கணவரே சட்டைமுனியின் குருவென்று கூறுவாரும் உளர். அதைவிடப் போகரே சட்டைமுனியின் குரு என்று கூறுவதே சாலப் பொருந்தும்.

அகஸ்தியர் பனிரெண்டாயிரத்தில் சட்டைமுனி அசுவனி தேவர்களைச் சந்தித்த நிகழ்ச்சி வருகிறது. அசுவனி தேவர்கள் சட்டைமுனியைப் பார்த்து "நீ யார்" என்று கேட்கிறார்கள்.

பாரேதான் அசுவனியார் பாதம் காண
பரிவுடனே சட்டைமுனி தன்னைக் கண்டு
கூரேதான் யார் என்று வினவிக் கேட்க
கொற்றவனார் சட்டைமுனி வார்த்தை சொல்வார்
ஆரோதான் என்றுமே எண்ண வேண்டாம்
அப்பனே போகருட சீடன் என்றார்.

அ.12000/5/102

"நான் யாரோ என்று எண்ண வேண்டாம். நான் போகருடைய சீடன்" என்று சட்டைமுனி பதில் கூறுகிறார். சட்டைமுனி போகருடைய சீடன் என்று எடுத்துக் கொள்வதே பொருந்தும்.

சட்டைமுனி தம் நூல்களில் "சுந்தரர் " என்று சுந்தரானந்தரை அழைத்துப் பாடுகிறார். சுந்தரானந்தரும் தாம் சட்டைமுனியின் சீடர் என்றே கூறுகிறார்.

அப்பான உப்பு ஆதி கணபதி
தப்பாமல் பாதந் தானது போற்றி
செப்பாத ரகசியம் செப்பினேன் சுந்தரா
முப்பான உப்பு மூலமும் காப்பே.

இது சட்டைமுனி குரு சூத்திரம் 25 ல் முதலாவது பாடல்.

ஆதியென்ற சட்டைமுனி பதத்தைப் போற்றி
அறிவாகச் சூத்திரந்தான் ஆறு சொன்னேன்

இது சுந்தரானந்தர் வாக்கிய சூத்திரம் 64ல் முதல் பாடல்.

Koviloor Digital Library

சட்டை முனி இயற்றிய நூல்கள்:

சட்டைமுனி	வாத காவியம்	1000
"	நிகண்டு	1200
"	சரக்கு வைப்பு	500
சட்டமுனி	நவரத்தின வைப்பு	500
"	வகாரம்	200
"	தீட்சை	200
"	முன்ஞானம் பின் ஞானம்	200
"	சடாட்சரக் கோவை	108
"	கற்பம்	100
"	நிகண்டு சூத்திரம்	51
"	தண்டகம்	81
"	மேற்படி சூத்திரம்	52
"	ஞான விளக்கம்	51
"	குரு சூத்திரம்	25

இவற்றில் வாத காவியம் நிகண்டு, இரண்டும் தனிநூல்களாக வெளிவந்துள்ளன. கற்பம் முதல் மற்றைய சில நூல்கள் யோக ஞான சாஸ்திரத் திரட்டில் இடம் பெற்றுள்ளன.

சட்டைமுனி சீர்காழியில் சித்தி பெற்றார் என்று போகர் ஜனன சாகரம் கூறுகிறது. திருவரங்கத்தில் வீற்றுள்ளார் என்று கூறுவாரும் உளர்.

சட்டைமுனி திருவரங்கத்தில் சித்தி பெற்றதாகக் கூறப்படுவதை யொட்டி வழங்கப்படும் கதை ஒன்று மரு.க.ச. உத்தமராயன் அவர்களால் எழுதப்பட்ட தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் என்ற நூலில் காணப்படுகிறது. அது வருமாறு:

சட்டைமுனி கால்நடையாக ஊர் ஊராகச் சஞ்சாரம் செய்து வரும் காலத்தில் தூரத்திலிருந்து தெரியும் திருவரங்கக் கோயில் கலசங்களைக் கண்டு இரவு வருவதற்குள் எப்படியும் அரங்கனைத் தரிசித்துவிட வேண்டும் என்ற ஆவலில் வேகம் வேகமாக நடந்தார்.

ஆனால் அவர் வந்து சேர்வதற்குள் நள்ளிரவு பூசையும் முடிந்து கோயில் கதவுகள் அடைக்கப் பட்டு விட்டன. மிகுந்த தாபத்துட ன் சட்டைமுனி கோவில் வாசலில் நின்று "அரங்கா ! அரங்கா! அரங்கா ! " என்று மும்முறை கூவினார்.

Koviloor Digital Library

உடனே கோவில் மணிகள் முழங்கின. மேளதாளங்கள் ஒலித்தன. முரசுகள் அதிர்ந்தன. கோவில் கதவுகள் தாமாகத் திறந்து கொண்டன.

நள்ளிரவில் ஏற்பட்ட ஒலிகள் கேட்டு பட்டர்களும் ஊர்மக்களும் திரண்டு ஓடிவந்தனர். திறந்து கிடந்த கதவுகள் வழியாக உள்ளே சென்று பார்த்தனர். சட்டைமுனி அரங்கன் அருகில் அமர்ந்திருந்தார். அரங்கன் அணிந்திருந்த ஆபரணங்கள் சங்கு சக்கரங்கள் எல்லாம் சட்டைமுனியின் மேல் இருக்கக் கண்டனர்.

யாரோ கள்வன் என்று நினைத்துக் கொண்ட பட்டர்கள் சட்டைமுனியின் மேலிருந்த ஆபரணங்களைப் பறித்து சுத்தி செய்து அரங்கனுக்குச் சாத்தினர். சட்டைமுனியை அரசன் முன் கொண்டு போய் நிறுத்தினர்.

அரசன் சட்டைமுனியை விசாரித்தான். அவர் தமக்கு ஏதும் தெரியாது. அரங்கனுக்குத்தான் தெரியும் என்றார். அரசன் கட்டளைப்படி சட்டைமுனியை கோவிலுக்கு இழுத்துச் சென்றனர். கோவில் வாசலருகில் வந்ததும் சட்டைமுனி தம்மையும் மறந்து " அரங்கா அரங்கா அரங்கா " என்று மும்முறை கூவினார்.

உடனே கோவில் மணிகள் ஒலித்தன. மேளதாளங்கள் முழங்கின. முரசுகள் அதிர்ந்தன. சட்டைமுனி அரங்கன் அருகில் இருந்தார். அரங்கனுடைய ஆபரணங்கள் ஒவ்வொன்றாகக் கழன்று சட்டைமுனியின் மேல் வந்து சேர்ந்தன.

இந்த அதிசயத்தைக் கண்ட எல்லோரும் அடியார்க்கு அடியனான ஆண்டவன் தாமும் சட்டைமுனியும் வேறு வேறல்லர் என்பதைக் காட்டுவதற்காகவே அவ்வாறு செய்ததாக உணர்ந்து சட்டைமுனியை வழிபட்டார்கள்.

சட்டைமுனி அங்கேயே இறைவனுடன் ஒன்றாகக் கலந்து மறைந்தார். இன்றும்அவர் அங்கேயே இருக்கிறார்.

☆☆☆

Koviloor Digital Library

சுந்தரானந்தர்

சுந்தரானந்தர் சட்டைமுனியின் சீடர். அகத்தியர் பூசித்துவந்த லிங்கத்தை வாங்கிச் சதுரகிரியில் பிரதிட்டை செய்து வழிபட்டவர். இவரும் சட்டைமுனியும் சதுரகிரியில் ஒன்றாகவே வசித்ததாகக் கூறுவர்.

சுந்தரானந்தரைப் பற்றிப் போகமுனிவர்,

சொல்லவே சுந்தரானந்த ரப்பா
தொல்லுலகில் கேசரியாம் வித்தை தன்னை
புல்லவே அதீதமென்ற மாண்பருக்கு
புகழுடனே புகட்டியதோர் சித்து மாகும். 5828

நாமேதான் சொன்னபடி குளிகைபூண்டு
நலமான கேசரிமேல் சென்ற சித்து
போமேதான் வையகத்தில் இருந்துமல்லோ
பொங்கமுடன் சமாதி முகம் சென்றசித்து. 5829

என்று கூறுகிறார். இப்பாடல்களிலிருந்து சுந்தரானந்தர் விண்வெளிப் பயணத்தில் மிகவும் சிறந்து விளங்கினார் என்பதும் சமாதி யோகத்திலும் வீற்றிருந்து வெளியே வந்தவர் என்பதும் தெரியவருகிறது.

சீரான சுந்தர ஆனந்தர் தாமும்
சிறப்பான மரபு அது ஏதென்றாக்கால்
ஆரியனார் தாம் உரைத்த நூலில் தாமும்
அப்பனே அகமுடையார் என்னலாகும். 5721

சுத்தமுள்ள ஆவணியாம் திங்களப்பா
சுடரான சுந்தரனார் பிறந்தார் தானே. 5920

தானான ரேவதியாம் மூன்றாம் காலாம்
தன்மையுடன் பிறந்த தொரு நாளுமாச்சு
கோனான சுந்தரனார் உணர்வு கேட்டால்
கொற்றவனே கிக்கிந்தா மலையின் உச்சி
தேனான நவகண்ட ரிடியார் தம்மின்
சிறப்பாக அவர் தமக்குப் பேரனாகும். 5921

Koviloor Digital Library

சுந்தரானந்தர் ஆவணிமாதம் ரேவதி மூன்றாம் காலில் பிறந்தவர் என்றும் கிக்கிந்தா மலை உச்சியில் வசிக்கும் நவகண்ட ரிஷியின் பேரன் என்றும் அகமுடையார் (தேவர்) குலத்தைச் சேர்ந்தவர் என்றும் போகர் கூறுவார்.

ஆனால் கருவூரார்,

இருந்தவர் பேரும் பெற்று இயல்புடன் குகையில் வாழ்ந்தார்.
அருந்தவம் செய்யும் சுந்தரானந்தர் ரெட்டிச் சாதி. 582

என்று கூறுகிறார். அகத்தியரும் தமது அமுத கலைக்ஞானம் என்ற நூலில்,

பகுதியுள்ள சுந்தரனோ ரெட்டியாமே அ.அ. 218

என்று கூறுகிறார்.

சுந்தரானந்தர் சோதிட காவியம் என்ற நூல் தாமரை நூலகத்தால் வெளியிடப் பட்டுள்ளது, இதில் ஜாதக பலன், ருது ஜனன ஜாதகம், இன்னமாதம் இன்ன தேதியில் பிறந்த குழந்தையின் சிறப்பியல்பு இது என்று கூறும் பொதுப்பலன், தென்னை, மா, பலா, வாழை, அவரை, துவரை, நெல், கரும்பு போன்ற பயிர் வகை ஒவ்வொன்றும் இன்ன நட்சத்திரம் இன்ன நாளில் பயிரிட்டால் நல்ல பலன் தரும் என்ற விவரம், மனையடி சாஸ்திரம் முதலான பல விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. மேலும்,

சுந்தரானந்தர் வைத்தியத் திரட்டு	1500
" " காவியம்	1000
" மேற்படி சூத்திரம்	500
" வகாரம்	200
" அதீத சூத்திரம்	104
" வாத சூத்திரம்	100
" விஷநிவாரணி	100
" வாக்கிய சூத்திரம்	66
சுந்தரானந்தர் கேசரி	55
" சுத்த ஞானம்	51
" தீட்சாவிதி	50
" தண்டகம்	47

Koviloor Digital Library

சுந்தரானந்தா கேசரி	பூஜாவிதி	37
"	அதிசய காரணம்	36
"	சிவயோக ஞானம்	32
"	முப்பூ	25
"	சிவஞான போதம்	16

என்ற நுல்களையும் இயற்றியுள்ளதாகக் கூறுவர். பெருநூல்கள் கிடைக்கவில்லை. சிறுநூல்கள் அநேகமாக யாவுமே தாமரை நூலகம் யோக ஞான சாஸ்திரத் திரட்டு ஐந்தாம் பாகம் எட்டாம் பாகங்களில் இடம் பெற்றுள்ளன.

இவர் மதுரையம்பதியில் சமாதியில் வீற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

***

Koviloor Digital Library

டமரானந்தர்

காணவே ஜெகஜால டமரகர் தான்
காசினியில் அதீத வித்தை செய்த சித்து
பூணவே நீர்மேலே நடந்த சித்து
புகழான வாசியை நடத்தும் சித்து
தோணவே கூடு விட்டுக் கூடு பாய்ந்து
தொல் உலகில் வித்தை தனைச் செய்த சித்து
ஆணவங்கள் தான் ஒடுங்கிக் காயந் தின்று
அன்புடனே வீற்றிருந்த சித்துதானே.
போ.7000 / 5824.

போக முனிவர் எடுத்த எடுப்பிலேயே ஜெகஜால டமரகர் என்கிறார். அநேக வித்தைகளைச் செய்தவர் என்கிறார். நீர்மேலே நடந்தவர். வாசியோகத்தில் வல்லவர். கூடுவிட்டுக் கூடு பாய்ந்தவர். ஆனால் சற்றும் ஆணவம் இல்லாதவர் என்று டமரகரைப் பற்றிப் புகழ்ந்து தள்ளுகிறார் போகமுனிவர்.

டமரகரின் தாய்தந்தையரைப் பற்றியோ மற்ற விபரங்களைப் பற்றியோ எதுவும் கூறப்படவில்லை.

பிறந்தாரே டமரகர் யார் என்றாக்கால்
பேரான சுந்தரனார் மைந்தனப்பா
சிறந்ததொரு சுந்தரற்கு மைந்தனப்பா
எழிலான பிள்ளையது இரண்டாம்பிள்ளை
துறந்த தொரு ஞானியப்பா சைவ ஞானி
சுத்தமுள்ள வீராதி வீரனப்பா
மறந்த தொரு மார்க்கமெல்லாம் மாந்திரிகத்தால்
மகத்தான புத்தியினால் அறிந்த சித்தே. 5919

டமரகர் சுந்தரானந்தரின் பிள்ளை. அதாவது சீடர். இரண்டாவது சீடர். நல்ல ஞானி, வீரம் மிக்கவர். மறந்துவிடப்பட்ட உண்மைகளை

Koviloor Digital Library

யெல்லாம் தன் மாந்திரிக சக்தியினால் அறிந்தவர் என்றும் போக முனிவர் கூறுகிறார்.

டமரகரின் பிறப்பு வளர்ப்பைப் பற்றி அறியக் கூடிய ஒரே செய்தி

மூச்சடங்கி நின்ற தொரு டமரகர் தானும்
முனையுடனே தான் பிறந்த வண்ணம் கேளீர்
மாச்சலென்ற மார்கழியாம் திங்களப்பா
மகத்தான உத்திரட்டாதி தானும்
வீச்சுடனே நாலாங்கால் என்னலாகும்
விரைவான நாள்தனிலே பிறந்தார் தாமே. 5918

டமரகர் மார்கழி மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர் என்பதே.

டமரானந்தர் சிவநூல் சூஸ்கிரம் 17 என்ற நூல் மட்டும் யோக ஞான சாஸ்திரத் திரட்டு இரண்டாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளது. ஞானம் 35 கிரந்தம் 100 போன்ற நூல்களைப் பாடியிருப்பதாக டமரகர் கூறுகிறார். அவை கிடைக்கவில்லை.

Koviloor Digital Library

பாம்பாட்டிச் சித்தர்

தமிழ் மக்களுக்கு அதிகம் தெரிந்த சித்தர்களில் இவரும் ஒருவர். பாம்புகளைப் பிடிப்பது, படமெடுத்து ஆடச் செய்து வேடிக்கை காட்டுவது அவர் தொழில்!

எவ்வளவு பெரிய பாம்பானாலும் சரி! எவ்வளவு கொடிய நாகமானாலும் சரி. பிடித்து விடுவார். அவற்றின் விஷத்தைக் கக்க வைத்துச் சாதாரணமான தண்ணீர்ப் பாம்பு போல் ஆக்கிவிடுவார்.

விஷத்தை முறிக்கும் மூலிகைகளை யெல்லாம் நன்கு தெரிந்து வைத்திருந்தார். விஷ வைத்திய ஆராய்ச்சியாளர் என்றே அவரைக் கூறலாம். மருதமலையில் விஷ வைத்திய ஆய்வுக் கூடமே நடத்தியதாகவும் கூறுவர்.

ஒரு நாள் மலைமேல் பெரிய நவரத்தினப் பாம்பைக் கண்டு அதைப் பிடிப்பதற்கு விரைந்தார். பாம்பைப் பிடிக்கப் போகும் போது சட்டைமுனியைக் கண்டார்.

புற்றருகில் சென்று மல்லோ சித்தர் தாமும்
புனிதமுள்ள நவரத்தினப் பாம்பு தன்னை
வெற்றியுடன் தான் பிடிக்கப் போகும்போது
வேதாந்தச் சட்டைமுனி அங்கிருந்தார்.

போ/7000/3577

சட்டைமுனி பாம்பாட்டிக்கு உபதேசம் செய்தார். காடுகளில் பாம்புகளைப் பிடித்து நாடு நகரில் சென்று அவற்றை ஆட்டிக் காட்டிப் பிழைத்துக் கொண்டிருந்த பாம்பாட்டி ஞானப் பால் உண்டு நானிலம் மெச்சும் சித்தராகி விட்டார்.

நாட்டமுடன் தாமறிந்த ஞானமெல்லாம்
நன்மையுடன் சீடருக்கு உபதேசித்தார்
வாட்டமுடன் சீடருக்கு உபதேசித்து
வாகாகச் சமாதியிலே அடைந்தார் பாரே. 3882

Koviloor Digital Library

சிறிது காலம் சமாதியில் இருந்தார். பிறகு வெளியே வந்தார். சித்துகள் புரிந்தபடி தேச சஞ்சாரம் செய்து வந்தார்.

இவர் ஒரு அரசன் இறந்த போது அவன் உடலிற் புகுந்து அவன் மனைவியுடன் இருந்து செத்த பாம்பொன்றை ஆட்டியதால் இப்பெயர் பெற்றனர் என்பர். வேறு சிலர் இவர் அரசன் மனைவியுடன் அதிக நாள் தங்கிவிட இவருடைய சீடர்கள் பாம்பாட்டிகளைப் போல வேடம் பூண்டு அரண்மனைக்கு வந்து பாம்புகளை ஆட்டும் போது பாடிய பாடல்களை கேட்டுத் தாம் யார் என்ற உண்மை நிலை உணர்ந்து தமது பழைய உடலில் பிரவேசித்தார் என்றும் கூறுவர்.

மத்திய அரசின் ஆசிய கல்வித்துறை வெளியிட்டுள்ள நா. கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழியகராதியில் பாம்பாட்டிச் சித்தரைப் பற்றி:- "இவர் திருக்கோகர்ணத்தைத் தமக்குச் சமஸ்த்தாநமாகவுடைய ஒரு சித்தர், இவர் காலம் நன்கு புலப்படாதாயினும் சமீப காலத்தவரென்பது எளிதிற் துணியப்படும். இவர் "ஆடு பாம்பே யெழுந்தாடு பாம்பே" என்று பாம்பை முன்னிலை யாக்கிப் பாடல் செய்திருக்கிறாராகையால் இவர்க்குப் பாம்பாட்டிச் சித்தரென்றும் பெயர் வழங்கி வருகின்றது. இவர் பாடல் கூத்தர் பாடல்போல் வெள்ளையாயிருப்பினும் தத்துவார்த்தங்களின் மேலதாகிய அற்புத ஞானக் கருத்தைவுட் கொண்டிருக்கும். இவர் பாம்பென்று கூறுவது பாம்புருவாக மண்டலமிட்டுக் கிடக்குங்குண்டலினி சத்தியை. அதை யெழுப்புதல் யோகிகளுக்கு அத்யாவசியமாதலால் அதனையெழுப்புவாராயினர்." என்று கூறப்பட்டுள்ளது.

நாடியே பூமிதனில் வெளியே வந்து
நாதாந்தக் கூத்துகளும் மிகவும் ஆடி
தேடியே வரைகோடி காலமப்பா
தேசத்திலிருந்தாரே சித்து தாமே. 3584

பாம்பாட்டிச் சித்தர் கார்த்திகை மாதம் மிருகசீரிடம் நட்சத்திரத்தில் பிறந்தவர். ஜோகி என்னும் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் மருதமலையில் சமாதி கொண்டிருப்பதாகக் கூறுவர். போகர் ஜனன சாகரத்தில் இவர் துவாரகையில் சமாதி கொண்டிருப்பதாகக் கூறுவார்.

இவர்செய்த நூல்கள் பாம்பாட்டிச் சித்தர்பாடல், சித்தராரூடம், சில வைத்திய நூல்கள் முதலியனவாம்.

✡ ✡ ✡

Koviloor Digital Library

பிண்ணாக்கீசர்

பாம்பாட்டிச் சித்தரின் சீடர் பிண்ணாக்கீசர். இவருடைய போக்கு மிகவும் விசித்திரமானது. நடுவீதியில் கால்மேல் கால் போட்டுப் படுத்துக் கொண்டிருப்பார். கண்கள் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும். தமக்குத் தாமே ஏதோ பிதற்றிக் கொள்வார். திடீரென்று "கோபாலா கோபாலா" என்று கூவுவார்.

இவருடைய இருப்பிடம் ஆத்திமரத்தின் பொந்து தான். பசிவந்து விட்டால் மரப்பொந்துக்குள் இருந்து கொண்டே "கோபாலா கோபாலா", என்று கத்துவார். பசி அதிகமாக இருந்தால் வீரிட்டு அலறுவார். "கோபாலா கோபாலா...." என்று.

அந்தக் கூச்சலைக் கேட்டால் மக்கள் புரிந்து கொள்வார்கள். உடனே பாலும் பழமும் கொண்டு போய்த் தருவார்கள். சாப்பிட்டு விட்டுப் புன்முறுவல் பூத்தபடி ஆசீர்வதிப்பார். மறுபடியும் மரப் பொந்துக்குள் முடங்கிக் கொள்வார்.

இவரிடம் மக்களுக்கு அபாரமான நம்பிக்கை. என்ன நோய் என்றாலும் இவரிடம் போய் முறையிடுவார்கள். மண்ணை அள்ளிக் கொடுப்பார். அது சர்க்கரை போல் தித்திக்கும். உடனே நோய் குணமாகிவிடும்.

இப்படிச் சிறிது காலம் சென்றது. பிண்ணாக்கீசருக்கு உலக வாழ்க்கை சலித்து விட்டது. மரப் பொந்திலேயே சிவயோகம் செய்து ஐக்கியமாகி விட்டார். உடனே பட்டுப் போய்க் கிடந்த அந்த மரம் மீண்டும் துளிர்த்து இலையும் தழையுமாய் அடர்ந்து செழிப்பாக வளரத் தொங்கிவிட்டது.

மக்கள் அந்த மரத்தையே தெய்வமாகக் கருதித் தொழத் தொடங்கினார்கள். யாருக்காவது நோய் வந்து விட்டால் மரத்துக்குக் காப்புக் கட்டிப் பூசை செய்து அதன் இலை சருகுகளைக் கியாழம் செய்து கொடுப்பார்கள். உடனே நோய் குணமாகிவிடும்.

Koviloor Digital Library

பெருமை வாய்ந்த பிண்ணாக்கீசர் வைகாசி மாதம் சித்திரை நட்சத்திரம் இரண்டாம் காலில் பிறந்தார். இவர் பிறந்த சமயம் இராகுவும் சனியும் ஒரே இடத்தில் சேர்ந்திருந்ததால் வேத ரிஷியைப் போல் வாழ்ந்தார்.

இவர் கன்னடியர். மாடுமேய்ககும் இடைச்சி வயிற்றுப் பிள்ளை என்று போகர் கூறுவார். ஆனால் கருவூரார்,

குகையிலே வாழ்ந்தார் பிண்ணாக் கீசரும் பிராமணன் தான்
திகையிலே வேத நூல்கள் தீர்க்கமாய்ச் செய்து வைத்து
நகையிலாக் கிரந்த சாஸ்திரம் நாடெங்கும் தெரியச் செய்து
வகையொடு கற்பம் கொண்டு வாழ்ந்தனர் கிரியிலே தான்.590

என்று; கூறுகிறார்.

இவர் கேரளத்தில் உள்ள நாங்குனாசேரி என்ற ஊரில் சமாதி யோகத்தில் அமர்ந்திருப்பதாகப் போகமுனிவர் கூறுகிறார்.

ஆமென்ற பிண்ணாக்கு ஈசர் தாமும்
அழகான நாங்குனாச் சேரியிலே யாக்க. ஜனன - 308

பிண்ணாக்கீசர் நந்தியின் அம்சம் என்று சொல்வார் உளர்.

இருக்கின்ற சட்டை முனியுமென் மகன் காண்
கருக்கு வித்தையைக் காட்டினேன் நானே
வெருக்கிய மூலர்க்கும் பிள்ளைக்கும் வழி சொன்னேன்
குரு வெனக்கப்பா நந்தீச ராமே. பிண்- முப்பு 11

என்று தமது முப்பு சூஸ்திரம் 17 என்ற நூலில் பாடியுள்ளார்.

இவருடைய பாடல்கள் யோக ஞான சாஸ்திரத் திரட்டு இரண்டாம் பாகத்தில் உள்ளன.

***

Koviloor Digital Library

கஞ்சமலைச் சித்தர்

ஞானத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கும் இந்த வள்ளல் பிரானுக்கு ஏன்தான் கஞ்சமலைச் சித்தர் என்று பெயர் வைத்தார்களோ தெரியவில்லை. சுலபமாக இசையோடு பாடக்கூடிய அற்புதமான பாடல்களை இவரும் பாடியிருக்கிறார்.

சாண்வயிற் றாலலை யாதே - நிதம்
சஞ்சலப்பட்டுக் கொண்டே மலையாதே
ஆணுவத் தாலுலை யாதே - உனக்
கானந்த முத்தி யது நிலையாதே.

என்று இன்று பொருளாசை பிடித்துத் திரியும் சமுதாயத்தைத் தன் சொல் அம்புகளால் குத்திக் குத்திப் பிளக்கிறார் இந்தச் சித்தர்.

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையானோ
டிந்த எழுவரும் என் வழியாமே. திரு. 69

என்று திருமூலர் தமது வழித் தோன்றலாகக் கூறியிருக்கும் கஞ்சமலையன் இவராக இருக்க முடியாது ஏனெனில் இவருடைய பாடல்கள் பிற் காலத்தவையாகத் தோன்றுகின்றன என்பார் உளர்.

ஆனால் தமிழ் மக்களின் பண்பாட்டையும் ஆன்மிக ஒழுக்கத்தையும் உளப்பான்மையையும் உருவாக்கியதில் இந்தச் சித்தர்களின் பாடல்களுக்கு அளவு கடந்த பங்கு இருந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன் கிராமப்புறங்களில் இராமனையும் கிருஷ்ணனையும் பற்றித் தெரியாத மக்கள் கூட இந்தச் சித்தர்களின் பாடல்களை அறிந்திருந்தனர். பெரியவர்கள் அப்படியே மனப் பாடமாக இந்தப் பாடல்களைப் பாடுவார்கள். அதுமட்டுமன்று.

Koviloor Digital Library

கிராமப் பள்ளிக்கூடங்களில் ஆரம்ப வகுப்புகளில் இப்பாடல்களைச் சொல்லிக் கொடுப்பார்கள். பொருள் விளங்குகிறதோ இல்லையோ குழந்தைகள் இப்பாடல்களைப் பாடிப்பாடி அது அவர்களுடைய இரத்தத்தில் ஊறிப் போகும். பிற்காலத்தில் வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திக்கும்போது திடீரென்று இப்பாடல்கள் நினைவு வரும்பொழுது அவர்களுக்கே வியப்பாகவும் மலைப்பாகவும் இருக்கும்.

தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஆன்மிக வாழ்க்கைக்கும் வித்திட்ட சித்தர்களின் பாடல்களை மீண்டும் பரவலாகத் தமிழ்நாடெங்கும் பரவச் செய்வது தலை சிறந்த கடமை என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும், உணரவேண்டும்.

இவருடைய பாடல்கள் தாமரை நூலகம் யோக ஞான சாஸ்திரத் திரட்டு மூன்றாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளன.

Koviloor Digital Library

கல்லுளிச் சித்தர்

"கல்லுளிச் சித்தன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி" என்று ஒரு பழமொழியே இவரைப் பற்றி வழங்குகிறது.

இவரைக் கண்டால் மலைகளும் குறுக்கே நில்லாது பயந்து விலகி வழிவிட்டு விடும் என்பதால் இப்பழமொழி ஏற்பட்டதாகக் கூறுவர். இச்செய்தி அபிதான சிந்தாமணியில் காணப்படுகிறது.

ஆனால் கல்லுளிச் சித்தர் என்ற பெயரைக் கூட அகராதிகளில் காண முடியவில்லை. ஆயினும் இவர் சித்தர்களிலேயே முக்கியமானவர். மிக எளிய நடையிலே ஞானத்தைக் கூறியவர். கல்லாதவரும் இவர் சொல்லைக் கேட்டால் மயங்கி நிற்பர்.

பிர்ம சொரூபத்தை நாடு - உன்
கர்ம வினையோட வழிதனைத் தேடு
எட்டி பழுத்தாலு மென்ன - காசு
யீயாத லோபிகள் வாழ்ந்தாலுமென்ன
கட்டி வராகனிருந் தென்ன - அதைக்
காவல்கள் போட்டு நீ காத்திருந் தென்ன.

மனத்தை செம்மையாக்குகின்ற இந்த இனிப்பான பாடல்களைப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் எப்படியிருக்கும்? இசையோடு ஞானமும் இரத்தத்தில் ஊறி நம்முடைய மக்கட் செல்வங்கள் ஞானப் பழங்களாகத் திகழ மாட்டார்களா?

ஆனால் இப்படியெல்லாம் இனிய எளிய பாடல்கள் இருக்கின்றன, என்பது கூடத் தெரியாதவர்களாகத் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்பதை நினைக்கும் போது எந்தப் பாறாங்கல்லில் போய் முட்டிக் கொள்வது என்பதுதான் விளங்கவில்லை.

தெரிந்து கொண்ட தெய்வமதை வணங்கவேணும்
தெரிசித்துடனே பூமியி லிருக்கவேணும்
அறிந்து கொண்டு சிவயோகஞ் செய்யவேணும்
அப்பனே ஆங்கார மடக்கவேணும்

Koviloor Digital Library

பிரியமுடன் அட்டாங்க யோகந்தன்னை
பெரியோர்க ளாற்றெரிந்து கொள்ளவேணும்
சிறியதொரு மந்திரங்கற் றறிய வேணும்
தெரியாம லலைவார்கள் சிலபேரப்பா.

மனிதன் எப்டி வாழவேண்டும் என்பதை எவ்வளவு அற்புதமாகக் கூறியிருக்கிறார் கல்லுளிச்சித்தர்.

சித்தர்களின் பாடல்களெல்லாம் நாட்டுப்புறத்தானின் கொச்சை மொழிகளில் அமைந்தவை; இலக்கண வரம்புக்குப்படாதவை, என்றெல்லாம் சில பண்டிதர்களும், பெரிய படிப்புப் படித்தவர்களும், பேசுவதையும் எழுதுவதையும் பார்க்கும் போது- தமிழகத்தின் தலை யெழுத்து அவ்வளவு தாழ்ந்து போய் விட்டதை நினைத்துக் கண்டிப்பாகச் சிரிக்கமுடியாது. அழத்தான் வேண்டும் பொங்கிப் பொங்கி அழவேண்டும்.

இவருடைய பாடல்கள் தாமரை நூலகத்தில் யோக ஞான சாஸ்திரத்திரட்டு மூன்றாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளன.

Koviloor Digital Library

குதம்பைச் சித்தர்

ஆடிமாதம் விசாக நட்சத்திரத்தில் பிறந்த அந்த ஆண் குழந்தை பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இருந்தது. கருகரு என்ற விழிகள். சுருள்சுருளான கரிய தலை முடி. தாய்க்கு கொள்ளை கொள்ளையாய் ஆசை.

சீவிச் சிங்காரித்து, பொட்டிட்டு மையிட்டு, காதுகளில் குதம்பை பூட்டி பெண்ணைப் போல் அலங்கரித்துப் பார்த்துப் பார்த்துப் பூரிப்பாள். "ஐயோ! என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறதே" என்று சொடுக்கிடுவாள்.

குழந்தையைப் பார்ப்பவர்களுக்கு அதன் காதுகளில் அணிந்துள்ள குதம்பைதான் பளிச்சென்று தெரியும். அதனால் குதம்பை என்பதே அதன் பெயராகி விட்டது.

ஆண்டுகள் பல கடந்தபின் ஞானோபதேசம் பெற்றுச் சித்தரான பிறகு கூடத் தம் பிள்ளைப் பருவப் பெயராகிய குதம்பை என்பதையே பிரியமாக ஏற்றுக் கொண்டார், இவருடைய பாடல்களில் இவர் தம்மைத் தாமே அழைத்துத் தமக்குத் தாமே உபதேசம் செய்து கொள்வதைப் போல் அமைந்த பாடல்கள் மிகவும் புகழ் வாய்ந்தவை, பாமர மனிதர்களும் பாடிப்பயிலும் சிறப்பு மிக்கவை.

ஜன ரஞ்சகமான, எளிய சொற்களில் இவர் எதைத்தான் பாடாமல் விட்டார்? எவ்வளவு பெரிய தத்துவங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார் என்பதை நினைத்துப் பார்க்கும் போது நவ நாகரிக மோகத்தில் நல்லதை யெல்லாம் இழந்து விட்ட தமிழன் இந்தச் சித்தரின் பாடல்களை மட்டும் மறக்காமல் இருந்தால் கூட நல்லகதி பெற்றுவிடுவானே என்று நினைக்கத் தோன்றுகிறது.

குதம்பைச் சித்தரின் பாடல்களிலிருந்து இதோ சில எடுத்துக் காட்டுகள்!

Koviloor Digital Library

நல்லொழுக்கம்

கோபம் பொறாமை கொடுஞ் சொல் வன்கோள் இவை
பாபத்துக் கேதுவடி - குதம்பாய்
பாபத்துக் கேது வடி 87

கள்ளங்கள் காமங்கள் கொலைகள் கபடங்கள்
பள்ளத்தில் தள்ளுமடி - குதம்பாய்
பள்ளத்தில் தள்ளுமடி. 84

பொருளாசை யுள்ளவிப் பூமியிலுள்ளோர்க்கு
இருளாம் நரகமடி - குதம்பாய்
இருளாம் நரகமடி.

கற்புள்ள மாதைக் கலக்க நினைக்கினும்
வற்புள்ள பாவமடி - குதம்பாய்
வற்புள்ள பாவமடி.

நல்ல விரதம்

கொல்லா விரதம் குளிர்பசி நீக்குதல்
நல்ல விரதமடி - குதம்பாய்
நல்ல விரதமடி. 120

யான் எனது என்னும் இருவகைப் பற்றற்றோன்
வானவ னாவானடி - குதம்பாய்
வானவ னாவானடி 128

சாதிப் பிரிவினை பற்றி

ஆண்சாதி பெண்சாதி யாகும் இரு சாதி
வீண் சாதி மற்றவெல்லாம் குதம்பாய்
வீண் சாதி மற்ற வெல்லாம் 137

பார்ப்பார்கள் மேலென்றும் பறையர்கள் கீழென்றும்
தீர்ப்பாகச் சொல்வதென்ன - குதம்பாய்
தீர்ப்பாகச் சொல்வதென்ன. 138

Koviloor Digital Library

நீதி மானென்றே நெறியா யிருப்போனே
சாதிமானா வானடி - குதம்பாய்
சாதி மானா வானடி 144

சாதியொன்றில்லை சமயமொன்றில்லை யென்
றோதி யுணர்ந்தறிவாய் - குதம்பாய்
ஓதி உணர்ந்தறிவாய். 145

இப்பாடல்களைப் படிக்கும்போது என்ன தோன்றுகிறது. சமய மறுமலர்ச்சி, யுகப் புரட்சி என்பதெல்லாம் தமிழகத்தில் சித்தர்கள் காலத்திலேயே தோன்றிவிட்டது. ஆனால் அவற்றைப் பின்பற்றாமலும் பின்பற்ற விடாமலும் தடுக்கும் சுயநலவாதிகளின் சூழ்ச்சியாலேயே இன்னும் சாதி, சமயம், இனவெறி, மதவெறி எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன என்பதேயல்லவா?

இந்த மக்கள் அறியாமை என்னும் மீளாவியாதியில் ஆழ்ந்து கிடக்கின்றனரே? இவர்களைத் திருத்தவும் முடியுமா? நாளும் நட்சத்திரமும் இவர்களைக் காப்பாற்றத்தான் முடியுமா?

மீளா வியாதியில் மேன்மேலும் நொந்தார்க்கு
நாளேது கோளேதடி - குதம்பாய்
நாளேது கோளேதடி. 191

சரி மனிதர் உய்யத்தான் வழியுண்டோ? சித்தர் அதற்கு ஏதாவது சொல்லியிருக்கிறாரா? பார்ப்போம்.

பொய்யை வெறுத்திட்டு மெய்யை விரும்பினோர்
மெய்யவ ராவாரடி - குதம்பாய்
மெய்யவ ராவாரடி. 127

மனிதனாகப் பிறந்தவனை அறிவுடையவன் என்று எப்போது கூறலாம்?

- நிறையச் சம்பாதித்து வீடு, மனை,தோட்டம் துரவு, வண்டி வாகனம் என்றுசெல்வந்த னாக வாழும் போதா?

- செயற்கரிய செய்து விருதுகள் பெற்று எல்லொராலும் புகழப்படும் உயர்நிலை பெற்ற போதா?

Koviloor Digital Library

என்ன சம்பாதித்தாலும் எவ்வளவு புகழ் பெற்றாலும், பணப் பட்டம், பதவி என்பவற்றால் சாதிக்கக் கூடியது என்ன?

சேனைகள் பூந்தேர் திரண்ட மனுத்திரள்
யானையும் நில்லாதடி - குதம்பாய்
யானையும் நில்லாதடி. 108

செங்கோல் செலுத்திய செல்வமும் ஓர்காலம்
தங்கா தழியுமடி - குதம்பாய்
தங்கா தழியுமடி. 109

அதனால்,

பிறவியை நீக்கிடப் பேரின்பம் நோக்கிய
அறிவு பெரிதாமடி - குதம்பாய்
அறிவு பெரிதாமடி. 132

குதம்பைச் சித்தரின் 246 கண்ணிகளும் 246 முத்துக்கள். மாணிக்கங்கள். ஓர் எழுத்துக்கு ஒரு கோடி என்று கொட்டிக் கொடுத்தாலும் கிட்டாத ரத்தினங்கள்.

இதன் பகுதிகள் பாடப் புத்தகங்களில் இடம் பெற்றால் எவ்வளவு நன்றாக இருக்குமா? குதம்பைச் சித்தர் மயிலாடு துறையில் சித்தி பெற்றதாகக் கூறுவர்.

அவருடைய பாடல்கள் தாமரை நூலகம் வெளியிட்டுள்ள யோக ஞான சாஸ்திரத் திரட்டு இரண்டாம் பாகத்தில் இடம்பெற்றுள்ளன.

Koviloor Digital Library

கடுவெளிச் சித்தர்

நந்த வனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

எளிய சொற்கள்!
இனிய சந்தம்!

எல்லோரும் பாடலாம். எல்லோரும் ஆடலாம். இந்த நான்கு வரிகளில் ஒரு அழகான காட்சியை கண்முன் நிழலாட நிழல்படமாகத் தோன்ற வைத்து விடுகிறார் சித்தர்.

ஒரு நந்தவனம். அதில் ஒரு ஆண்டி. பாவம் ஏழை. தோண்டி வாங்க அவனிடம் காசில்லை பத்து மாதங்களாக ஒரு குயவனிடம் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தான்.

குயவனும் போனால் போகிறது என்று ஒரு தோண்டியைக் கொடுத்தான், தோண்டியை வாங்கிக் கொண்டு போன ஆண்டி என்ன செய்தான்?

இது மண் தோண்டி ஆயிற்றே? பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமே என்று நினைத்தானா? பத்து மாதங்களாகத் தவம் கிடந்து பெற்ற தோண்டியாயிற்றே என்று அதன் மேல் மதிப்பு வைத்தானா? இல்லை.

அதைத் தூக்கிக் கொண்டு ஆடாத கூத்தெல்லாம் ஆடிப் பொத்தென்று போட்டு உடைத்து விட்டான்.

இந்தக் கதையில் சித்தர் மனிதனின் ஜீவ இரகசியத்தையே கூறியிருக்கிறார். நாலு வரிப் பாடல் அதன் பொருளோ எல்லையையே சென்று தொடக் கூடியது.

பத்து மாதங்களாகத் தவம் செய்து இந்த உடலைப் பெற்று வந்தாயே? மனிதா! கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைப்பதற்குத்

Koviloor Digital Library

தானா? அடப் பாவீ ஏன் சிந்திக்க மாட்டேன் என்கிறாய்? இந்த உடல் உள்ள போதே ஆன்மா கடைத்தேற வழி காண வேண்டாமா? என்று சொல்லாமல் சொல்லி நெஞ்சில் இடித்துக் காட்டுகிறார் சித்தர்.

கடுவெளிச் சித்தர் என்று பெயர். உலகத்தையே சுத்த வெளி என்று கருதியவர் போல் தம் பாடல்களை அமைத்திருப்பதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். தாம் கண்ட ஆன்மானுபவத்தை உலகமும் அறியவேண்டும் என்ற எண்ணத்தால் எளிய இனிய பாடல்களைக் கொட்டியவர்.

மெய்ஞானப் பாதையிலேறு - சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு- உன்னை
அண்டினோர்க் கானந்தமாம் வழி கூறு

என்று மேலும் இவர் பாடியிருப்பதைக் காணலாம்.

இவருடைய பாடல்கள் தாமரை நூலகம் வெளியிட்டுள்ள யோக ஞான சாஸ்திரத் திரட்டு ஐந்தாம் பாகத்தில் உள்ளன.

வானென்ற கடுவெளிச் சித்தர்தானும்
வளமான திருக்காஞ்சிப் புதியிலாச்சு. ஜனன - 309

என்ற போகர் ஜனன சாகரம் 309வது பாடலால் இவர் காஞ்சிபுரத்தில் சமாதியில் வீற்றிருக்கிறார் என்பதை அறியலாம்.

☆☆☆

Koviloor Digital Library

அகப்பேய்ச் சித்தர்

அகப்பேய்ச் சித்தர் பற்றி டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் ஒரு சிறு குறிப்பு காணப்படுகிறது, அது,

இவர் தமிழ்நாட்டுச் சித்தர்களிலொருவர். வேளாளர் மரபில் தோன்றி உலகில் அநேக சித்துக்களாடினவர். இவர் வாத வைத்திய யோக ஞான மார்க்கங்களைத் தெளிவான நடையில் உலகத்தோர் எளிதில் அறியும்படிப் பாடியவர். இவராலேற்பட்ட அநேகம் பாடல்கள் அகத்தியர் பெயரால் வழங்கும். இவர் அநேக காலம் உயிரோடிருந்து பிறகு சமாதி புகுந்தாரெனச் சொல்லப்படும். (அகம் + பேய் + சித்தர்) மனமாகிய பேயை வென்று சித்தியடைந்தவரென இவருக்குக் காரணப் பெயராகக் கொள்ளினும் பொருந்தும்.

சித்தான சித்துமுனி சொல்வேன் கேளீர்
சிறப்பான அகப்பேய் சித்தே யாகும்
முத்தான ஜாதியது ஏதென் றாக்கால்
முனையான நாயனார் ஜாதியாகும்
சுத்தமுள்ள தலைமுறைகள் ஈரெட்டாகும்
சார்வாக அவர் நூலில் காணலாகும்
நித்தமுமே வாணிபங்கள் விர்த்தி செய்து
நிலையாக பூமிதனில் இருந்த சித்தே.

போகர் 7000/5727

அகப்பேய்ச் சித்தர் நாயனார் சாதியைச் சேர்ந்தவர். துணி வணிகஞ் செய்து பிழைத்து வந்தார் என்று போக முனிவர் கூறுகிறார்.

வேட்டி புடவை முதலான துணிமணிகளை வீடு வீடாகச் சென்று விற்கும்போது எத்தனையோ வகை மனிதர்களைப் பார்த்திருப்பார். அவர்களின் ஆசாபாசங்கள் இன்பதுன்பங்கள் அவர் மனதைத் தொட்டன.

மனிதன் துன்பம் இல்லாமல் [illegible]முடியாதா? இரவு பகலாகச் சிந்தித்தார்.

எல்லோரும் தான் பார்க்கிறார்கள். கேட்கிறார்கள். மற்றவர் களுடன் பழகுகிறார்கள். ஆனால் சிலர் மட்டுமே மற்றவர்களின்

Koviloor Digital Library

துயரங்களால் பாதிக்கப்படுகிறார்கள். அவ்வாறு பாதிக்கப் படுகிறவர்களிலும் அதற்கு ஏதாவது விமோசனம் காணவேண்டும் என்று நினைப்பவர்கள் மிகவும் குறைவு.

அகப்பேய்ச் சித்தர் அவ்வாறு நினைத்தார். தம் மனதை அடக்கி யோக சாதனை புரிந்தால் ஒரு விடை காண முடியும் என்று நினைத்தார். ஆனால் மனதை அடக்குவது என்பது எளிதில் ஆகிற காரியமா? மனம் மனிதனை என்ன பாடு படுத்துகிறது.

ஏ! என் அகமே! ஆசையால் ஆடுகிறாய். ஆணவத்தால் ஆடுகிறாய். பாசத்தால் ஆடுகிறாய். வேஷத்தால் ஆடுகிறாய். இப்படிப் பேயாட்டம் ஆடுகிறாயே? அடங்கிக் கிடக்க மாட்டாயா? என்று குமுறுகிறார்.

நஞ்சுண்ண வேண்டாமே - அகப்பேய்
நாயகன் தாள் பெறவே
நெஞ்ச மலையாதே - அகப்பேய்
நீ யொன்றுஞ் சொல்லாதே. 1

நெஞ்சத்தை அலையாமல் நிறுத்திவிடு. அது போதும் இறைவனடி சேர்வதற்கு. நீ நஞ்சு உண்ணவும் வேண்டாம். நாதியற்றுத் திரியவும் வேண்டாம். வேறு துன்பப் படவே வேண்டாம். மனதை மட்டும் அலையாமல் நிறுத்திவிடு அதுவே போதும் என்கிறார் அகப்பேய்ச் சித்தர்.

அறியாம லலைந்தவர்கள் கணக்கதுண்டோ
அறிந்தடங்கி நின்றவர்கள் சிலரே யாகும்
தெரிந்து மெய்ப் பொருளறியா திருந்தோர் கோடி
தெளிவாய் நீ இவர்களைப் போ லாகிடாமல்
பிரியாமற் சுழினையிலே மனத்தை யூனி
பேசரிய பூரணத்தில் வாசி யேற்றிக்
குறிப்பாயோர் நினைவாய்ப் பார்க்கும் போது
குணமாக விருநான்கும் நான்கும் நாட்டே.
அகஸ். பூரணஞானம் 6

அகப்பேய்ச் சித்தர் பாடல் 90. பூரணஞானம் 15 என்ற நூல்கள் தாமரை - யோக ஞான சாஸ்திரத் திரட்டு ஏழாம் பாகத்தில் உள்ளன.

தேவென்ற காசியிலே விசுவாமித்திரர்
திருவையாறு தனில் அகப்பேய்ச் சித்தர். போ. ஜனன - 309

என்று போகர் ஜனன சாகரம் 309ம் பாடலில் கூறியிருப்பதால் அகப்பேய்ச் சித்தர் திருவையாற்றில் சித்தி யடைந்தார் என்றறியலாம்.

ᴊᴊᴊ

Koviloor Digital Library

அழுகண் சித்தர்

தாடியும் முடியுமாக அந்த மனிதர் நடந்து கொண்டிருப்பார். அவர் கண்களிலிந்து நீர் ஊற்றிக் கொண்டிருக்கும்.

"இவரா.... சற்று முன் மதுரையில் பார்த்தேனே?" என்பார் ஒருவர்.

"மதுரையிலா.... நான் கடலூரில் அல்லவா பார்த்தேன்", என்பார் இன்னொருவர்.

எங்கும் தங்க மாட்டார். முடிவில்லாத வழிப்பயணத்தில் போய்க் கொண்டே இருப்பார். யார் எதுகேட்டாலும் பதில் கூறவும் மாட்டார். அவர் கண்கள் மட்டும் அழுது கொண்டே இருக்கும்.

அவர் யார்? என்ன சாதி? எங்கு பிறந்தார்? எங்கு போகிறார்? யாருக்கும் தெரியாது. போகரும் அகஸ்தியருமே அவரைப் பற்றி ஒன்றும் கூறவில்லை.

சித்தர் ஊரைப் பார்த்து அழுதார். உலகைப் பார்த்து அழுதார். தன்னையே பார்த்தும் அழுதார்.

பையூரிலே யிருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா
பாழாய் முடியாதோ.....?

வேதாந்தம் மட்டுமா பாடியிருக்கிறார். வைத்தியம் யோகம் ஞானம் எல்லாமே பாடியிருக்கிறார்.

வீரச்சுண்ணம் வெள்ளியதாம் - ஆத்தாளே
வெள்ளி பதினெட்டாகும்
பூரச் சுண்ணம் சேர்க்கவடி - ஆத்தாளே
பொன் வயதோ எண் நான்காம்.

Koviloor Digital Library

என்ன அழகான பாடல்கள்? எவ்வளவு ஆழமான கருத்துக்கள்? தித்திக்கும் தேன் அல்லவா தமிழ்?

அழுகண் சித்தர் பாடல் 200. ஞான சூத்திரம் 23 இரண்டு நூல்கள் தாமரை நூலகம் வெளியிட்டுள்ள யோக ஞான சாஸ்திரத் திரட்டு எட்டாம் பாகத்தில் உள்ளன.

பேரான அழுகண்ணிச் சித்தர் தானும்
பெரிதான நாகப்பட்டணமே யாச்சு.

போகர் - ஜனன. 307

நாகப்பட்டினத்தில் உள்ள சிவபெருமான் கோவில் வளாகத்திலேயே அழுகண் சித்தர் சமாதியும் இருக்கிறது.

❀❀❀

Koviloor Digital Library

விளையாட்டுச் சித்தர்

பார்தனில் உள்ளவர்க்கு விளையாட்டாய் - ஞானம்
பற்றும் வழி இன்ன தெனச் சொன்னதனால்
சீர்பெறும் சித்தர்களும் என்னை விளையாட்டுச்
சித்தனென்றே அழைத்தார்கள் இவ்வுலகில். விளை - 2

ஞானத்தைப் பெறுவதற்கான வழியை விளையாட்டாகக் கூறியிருக்கிறேன். அதனலேயே என்னை விளையாட்டுச் சித்தன் என்று சித்தர்களே கூறிவிட்டார்கள் என்று கூறுகிறார்.

செத்தோர்க் கழுவதுவும் விளையாட்டே - சுடலை
சேரும்வரை யழுவதும் விளையாட்டே
மெத்த ஞானம் பேசுவதும் விளையாட்டே - குளித்து
வீடு வந்து மறப்பதுவும் விளையாட்டே. விளை - 11

நம்பினோருக் காசை சொல்லல் விளையாட்டே - பின்பு
நட்டாற்றில் கைவிடுதல் விளையாட்டே
கும்பிக் கிறைதேடுதல் விளையாட்டே - கடன்
கொடுத்தாரைக் கெடுத்தலும் விளையாட்டே. விளை - 20

ஏகாந்தம் பழம் பழம்
எழுத்தில்லாதவன் தனிச்சுமை
பெண்டில்லாதான் பெருவழி
பிள்ளையில்லாதவன் கை வீச்சு
காய்த்த வாழை பூப்பூக்கும்
காயாத வாழை தானுமில்லை
பாய்ச்சின பயறு தலை யெடுக்கும்
பாய்ச்சாத பயறு தானுமில்லை.

இவ்வாறாகச் செல்கின்றன விளையாட்டுச் சித்தரின் பாடல்கள். கவிதை நயத்திற்காக மட்டுமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டன. இவரைப் பற்றி வேறு செய்தி எதுவும் கிடைக்கவில்லை. யோக ஞான சாஸ்திரத் திரட்டு ஏழாம் பாகத்தில் இவருடைய பாடல்கள் உள்ளன.

Koviloor Digital Library

குருராஜர்

திருமூலரின் சீடர். திருமூலர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்த காலத்தில குகையில் தமது உடலுக்குப் பாதுகாவலாய் அமர்த்தியவர்.

திருமூலரின் நூல்களைக் காப்பாற்றி வைத்திருந்ததோடு தாமும் பல நூல்களை இயற்றியிருக்கிறார். இவர் மறைப்பில்லாமல் வெளிப்படையாக நூல்களைப் பாடி விட்டார் என்று சித்தர்கள் அனைவரும் கோபித்து வந்தனர்.

பண்டிதனான் பாடிவைத்த யோக நூற்குப்
பதினெண்பேர் மொருமொருத்துக் கூடியொன்றாய்
கண்டவன் போற் சொன்னதென்ன மறைவில்லாமல்
காசினியி லெல்லோரும் சித்தராகச்
சண்டாளா கிழித்தெறி நீ இந்த நூலைத்
தாரணியிற் காட்டாதே சாபம் ஈவோம். குரு - சிவ-2

என்று கோபித்து வந்தனர்.

குருராஜர் சிவகாமித் தாயைத் தியானம் செய்தார்.

.....ஆத்தாள் பார்த்துக்
கண்சிவந்து சித்தரையும் கோபித்தாளே. 3

கோவித்து உங்களுக்கேன் இந்த வாது
குவலயத்தில் எனைப் பணிந்து குழந்தைகட்குப்
பாவித்த சிவயோக வாழ்ககை ஞானம்
பாலிப்பாய் என்றுரைக்கப் பாடினான் கேள். 4

ஆத்தாள் உக்கிரமான கோபத்துடன் சித்தர்களின் எதிரே தோன்றி என்னுடைய கட்டளைப்படியே குருராஜன் பாடினான். நீங்கள் ஏன் வாது செய்கிறீர்கள்? என்று கேட்கச் சித்தர்கள் பயந்து விலகினர்.

அருமையான இவருடைய பாடல்கள் சில யோக ஞான சாஸ்திரத் திரட்டு மூன்றாம் பாகத்தில் உள்ளன.

Koviloor Digital Library

இவர் பாடிய நூல்கள்.

காவியம்	1000
சூத்திரம்	700
யோகம்	500
ஞானம்	200
"	120
"	100
சிவயோக சிந்தாமணி	50
ஞானரத்தினா பரணம்	50

Koviloor Digital Library

கடைப்பிள்ளை

கொங்கணவரின் சீடர்களில் மிகவும் சிறந்தவர். இவர் சித்தர்களின் மறைப்புச் சொற்களாகிய சாகாக்கால், வேகாத்தலை, போகாப் புனல் என்பதற்கெல்லாம் வெளிப் படையான விளக்கம் அளித்துள்ளார். இவர் கொங்கணவரின் ஐநூறுக்கு மேற்பட்ட சீடர்களில் கடைசிச் சீடர் ஆகையால் கடைப்பிள்ளை என்ற பெயர் பெற்றதாகக் கூறுவர். கொங்கணவர் கோவை மாவட்டம் தாராபுரத்தை யடுத்த ஓதிய மலையில் வாழ்ந்ததாகக் கூறுவர். இவரும் அதே ஊரைச் சேர்ந்தவர் என்பர்.

இவருடைய பாடல்கள்,

கடைப்பிள்ளை ஞான சைதன்யம்	7
ஞான சமாதி தீட்சை	17
ஞான தண்டகம்	50
ஞான கக்கிஷம்	80
கலைக் ஞானம்	120
ஞான தீட்சாவிதி	16

யோக ஞான சாஸ்திரத் திரட்டு மூன்றாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர,

பெருநூல்	500
சிவயோக ஞானம்	100
பஞ்சாட்சரச்சுருக்கம்	32
மௌனதீட்சை	12

முதலிய நூல்களையும் இவர் பாடியிருப்பதாகத் தெரிகிறது.

Koviloor Digital Library

புலிப்பாணி

போகரின் மாணவர். கடைசிவரை பழநியில் போகருடன் கூடவே இருந்தவர். போகர் நவபாஷாணக் கட்டால் பழநி தண்டபாணி சிலையைச் செய்வதற்கு உதவியாகவும் இருந்தார், சீனாவுக்குச் சென்று போகரை அழைத்து வந்தவர் இவரே என்றும் கூறுவர்.

போகர் சமாதிக்குச் செல்லும் முன் பழநி தண்டபாணி பூஜைகளைக் கவனிக்கும்படி இவரை நியமித்துச் சென்றார். பிற்காலத்தில் அந்தப் பெருமை பறிக்கப்பட்டு போகர் சமாதிக்கு மட்டும் பூஜை செய்ய அனுமதியளிக்கப்பட்டது.

இவர் புரட்டாசி மாதம் சுவாதி நட்சத்திரம் நாலாம் காலில் பிறந்தவர், வேடர் குலம் என்று போகர் கூறுகிறார்.

ஆழ்ந்தவே காலாங்கி கடாட்சத் தாலே
அப்பனே வேங்கை தனில் ஏறிக் கொண்டு
தாழ்ந்திடவே ஜலம் திரட்டிப் புனித வானும்
சாங்கமுடன் தாரணியில் சுற்றி வந்தோன். 5778

புலி மேல் ஏறிச் சென்று வெறும் கையால் தண்ணீர் திரட்டிக் கொண்டு வந்து குருநாதரிடம் கொடுத்ததால் இவருக்கு இப்பெயர் ஏற்பட்டதாகச் சொல்வர். இவர் இயற்றிய நூல்கள்.

புலிப்பாணி	வைத்தியம்	500
"	சோதிடம்	300
"	ஜாலம்	325
"	வைத்திய சூத்திரம்	200
"	பூஜாவிதி	50
"	சண்முக பூஜை	30
"	சிமிழ் வித்தை	25
"	சூத்திர ஞானம்	12
"	சூத்திரம்	9

சதுரகிரித் தல புராணத்தில் இவர் பொன்வணிகர் குலத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

சிவ வாக்கியர்

பிறக்கும் பொழுதெ "சிவ சிவ" என்று சொல்லிக் கொண்டு பிறந்தது குழந்தை. சிவன் பெயரை வாக்கினால் கூறியபடி பிறந்ததால் சிவ வாக்கியர் என்று பெயர் சூட்டி அருமையாக வளர்த்தனர்.

பிறந்தது முதலே வித்தியாசமான சிந்தனைகளுடன் இருந்து-வளர்ந்தது இந்தக் குழந்தை, சமூகப் புரட்சிக்கும், கடவுள் பற்றிய சிந்தனையில் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர் சிவ வாக்கியர் என்றே கூறலாம்.

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ. 638

தெய்வம் உனக்குள் இருக்கும்போது நீ ஏன் நட்ட கல்லைச் சுற்றுகிறாய். புட்பங்களை அதற்குச் சாத்துகிறாய். மொண மொணவென்று மந்திரங்களைச் சொல்கிறாய். நட்ட கல் பேசுமா? சமைத்த சட்டியும் எடுத்த சட்டுவமும் கறியின் சுவையை அறியுமா என்று கேட்கிறார்.

எளிய உதாரணம். பெரிய கருத்து. பெரியார் சொல்ல வேண்டியதைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இவர் சொல்லியிருக்கிறார்.

சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன் ஒன்றலோ
சாதி பேத மோதுகின்ற தன்மை யென்ன தன்மையே. 165

என்று சாதி பேதத்தைச் சாடுகிறார். காப்பாகச் செய்து கையில் அணிந்தாலும் கடுக்கன் செய்து காதில் அணிந்தாலும் செய்யும் பொருளான தங்கம் ஒன்றே யல்லாவா? ஐம்பூதங்களும் தோன்றியதும் ஒரே பொருளிலிருந்தே யல்லவா? அதனால் சாதிபேதம் பேசுவது மடமையே என்கிறார்.

அரியும் சிவனும் ஒன்று என்று அழுத்தமாக மத சமரசக் கருத்தை வலியுறித்துவதற்காக,

Koviloor Digital Library

சிந்தை மேவு ஞானமும் தினம் செபிக்கும் மந்திரம்
எந்தை ராம ராம ராம ராம ராம வென்னும் நாமமே. 121

என்று ராம பிரானைப் பற்றியும்

சிவாய மஞ்செழுத்திலே தெளிந்து தேவராகலாம்
சிவாய மஞ்செழுத்திலே தெளிந்து வானமாகலாம்
சிவாய மஞ்செழுத்திலே தெளிந்து கொண்ட வான் பொருள்
சிவாய மஞ்செழுத்திலே தெளிந்து கொள்ளு முண்மையே. 190

என்று சிவபெருமானைப் பற்றியும் பாடுகிறார்.

வடிவு பத்மாசனந் திருத்தி மூல வனலையே
மாருதத்தி னாலெழுப்பி வாசலைந்து நாலையு
முடிவு முத்திரைப் படுத்தி மூல வீணா தண்டினால்
முளரி யாலயங் கடந்து மூல நாடி யூடுபோய். 490

என்று யோக சாதனையைப் பற்றிப் பாடியிருப்பது அருமை.

பத்மாசனத்திலமர்ந்து மூலாதாரத்திலிருந்து கனலை எழுப்பி சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற சக்கரங்கள் மூலமாக சஹஸ்ராரம் என்னும் ஆயிரம் இதழ்த் தாமரையில் மூச்சை நிறுத்தி யோகம் பயிலும் சாதனை பற்றிக் கூறுகிறார்.

ஆயிரம் பாடல்களிலே வைத்தியம், வாதம், யோகம், ஞானம் என்னும் சித்தர்களின் நான்கு துறைகளைப் பற்றியும் இவர் பாடியுள்ள பாடல்கள் நெஞ்சைத் தொடுவன வாகும்.

முத்து முத்தான சித்தர்களின் பாடல்களைப் படிக்கும் பொழுது அவர்களைப் பற்றிஅறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் இயற்கையாக எழுகிறது. சிவவாக்கியர் கூறுவதுபோல் "சித்தர் இங்கிருந்தவரை பித்தர்" என்று எண்ணி அவர்களைப் பற்றியு தகவல்களைச் சேகரிக்காமல் விட்டு விட்டோம். அவர்களுடைய நூல்களை எழுதிய சீடர்களும் வாழ்க்கைக் குறிப்புகளை எழுதாமல் விட்டனர்.

அதனால் சித்தர்கள் யாவர்? எங்கிருந்தனர்? எப்படி வாழ்ந்தனர்? என்பவை எல்லாம் புரியாத புதிர்களாகவே உள்ளன. இந்நிலையில் அவர்களைப் பற்றி மற்றவர்கள் கூறியுள்ளவற்றைக் கொண்டு ஓரளவு தெரிந்து கொள்ள முயல்வதைத் தவிர வேறி வழியில்லை.

Koviloor Digital Library

சிவ வாக்கியர் பற்றி அகத்தியர் பனிரெண்டாயிரம் என்னும் பெருநூல் காவியத்தில்,

திருந்தவே சிவவாக்கியர் தந்தை தாய்மார்
சிற்பரனே யவருடைய வள்ளல் கேண்மோ
அருந்ததிக் கொப்பான சிவவாக்கியர் தாய்தான்
அப்பனே அவருடைய பணிகள் கேளே. 434

மணியான கருவதுதான் மண்ணினாலே
மன்னவனே யுருச் செய்து கருக்கள் கட்டி
துணிவுடனே சிலைசெய்து கருக்கள் கட்டி
துப்புரவாய்ப் பணிதி மிகச் செய்வார் பாரே. 435

இவ்வாறு சிவவாக்கியரின் பெற்றோர்கள் சித்தர்களை அடுத்து வாழ்ந்ததாலும் தெய்வச் சிலைகள் செய்து பிழைப்பு நடத்தியதாலும்,

தானான சிவவாக்கிய நாதருக்கு
சதுரான ஞானமென்ற பீடந்தானும்
கோனான பஞ்சணத்தின் கூட்டத்தார்கள்
கொற்றவனார் சிவவாக்கிய நாதருக்கு
மானான மதியமிர்தங் கொள்வதற்கும்
மகத்தான கல்விநூ லறிவதற்கும்
தேனான குருக்கள்மார் கூட்டந்தன்னில்
தேற்றமுடன் குருபரனைத் தேடினாரே. 437

பெற்றோர்கள் தக்க குருவைத் தேடிக் கண்டுபிடித்து முறையாகக் கல்வி கற்பிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். அதன் பயனாக,

பையவே ஞானப் பாலமிர்தமேறி
பாலனுக்கு சின்மயத்தின் மயக்கங் கொண்டு
வெய்யபுகழ் பதினெண் பேர் சார்பிற் சென்று
வேதாந்த சிவவாக்கிய ரானார் காணே.

இந்தப் பாடலில் சிவவாக்கியர் பதினெண் சித்தர்கள் மரபில் சென்று வேதாந்த சிவவாக்கியரானார் என்று உறுதியாகக் கூறுகிறார்.

அடுத்த பாடலில்,

Koviloor Digital Library

மாணமருங் கல்வியுள்ளோர் தனையடுத்து
மன்னவனும் யோகநிலை வழியிற் சென்று
பூணவே பூரணத்தை யறிவால் வென்று
புங்கமுடன் அஷ்டசித்தி கொண்டார் தாமே. 441

நல்ல கல்வி கற்று யோக நெறியிற் சென்று அஷ்டசித்திகளையும் அடைந்தார் என்று அகத்தியர் பெருமான் கூறுகிறார்.

போகமுனிவர் தமது சத்த காண்டத்தில் (7000) சிவ வாக்கியர் தை மாதத்தில் மகர நட்சத்திரத்தில் பிறந்தார் என்று கூறுகிறார்.

வகுத்தேனே சிவ வாக்கியர் சாதி பேதம்
வளமான சங்கர குலம் என்னலாகும்
தொகுப்புடனே தலைமுறைகள் இருபதாகும்
தோறாமல் சாத்திரங்கள் புகன்றவாரே. 5704

சிவ வாக்கியர் சங்கர குலத்தில் பிறந்தார் என்கிறார் போகர். பின்னால் இவர் குறப் பெண்ணை மணந்து கொண்டதாலாக இருக்கலாம்.

தொல் உலகில் புகழும் சிவ வாக்கியர் தாமும்
தோறாத வையகத்தில் வெகுநாளப்பா
புல்லவே சமுசார வாழ்க்கை யற்று
புகழான அன்பத்தோ ராண்டு மட்டும். 5759

ஐம்பத்தொரு வயதுவரை திருமணம் செய்து கொள்ளாமல் தனியனாக இருந்தார். பிறகு திடீரென்று திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது.

மூச்சடங்கி மடந்தனிலே இருந்த சித்து
மூர்க்கமுடன் சமுசாரம் வேண்டியல்லோ
பாச்சலுடன் தாய் தந்தை சீர் பாதத்தை
பணிந்துமே மனதுவந்து கேட்டார் தாமே. 5760

தாய்தந்தையர் உடனே தக்கதொரு பெண்ணைப் பார்த்து மணம் செய்து வைத்தார்கள். அவர்களுக்கு சிவானந்தர் பிறந்தார் என்று கூறி முடிக்கிறார். சிவ வாக்கியர் திருமூலர் மரபில் வந்த பெண்ணின் மகன் என்றும் போகர் கூறுகிறார்.

Koviloor Digital Library

ஆனால் சிவவாக்கியரைப் பற்றிப்புராணங்களில் காணப் படுவதைப் போன்ற கர்ன பரம்பரைக் கதை ஒன்றும் வழங்குகிறது.

சிவ வாக்கியர் காசிக்குப் போக வேண்டும் என்று விருப்பம் கொண்டு தேச சஞ்சாரம் செய்து வந்தார். கடைசியாகக் காசி மாநகரை அடைந்தபோது அங்கே ஒரு தெருவில் ஒரு சக்கிலியன் உட்கார்ந்து செருப்புத் தைத்துக் கொண்டிருப்பததைக் கண்டார்.

என்ன காரணத்தாலோ சிவ வாக்கியர் உள்ளம் அந்தச் சக்கிலியனை நோக்கி ஈர்க்கப்பட்டது. அவனிடம் சென்றார். சக்கிலியன் அவரைப் பார்த்ததும் ஒரு பலகையைப் போட்டு உட்காரச் சொன்னான். சிவவாக்கியர் நின்றபடியே! "உங்களிடம் என் மனக்குறையைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்", என்றார்.

சக்கிலியன் தன் பையிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்து நீட்டினான். "முதலில் இதைக் கொண்டு போய் கங்கையிடம் கொடுத்துவிட்டு இந்தப் பேய்ச்சுரைக்காயைக் கழுவிக் கொண்டு வா", என்றான்.

சிவவாக்கியர் ஒன்றும் பேசவில்லை. அந்த நாணயத்தை வாங்கிக் கொண்டு பேய்ச்சுரையையும் எடுத்துக் கொண்டு கங்கைக்குப் போனார். யாரிடம் கொடுப்பதென்று யோசிக்க வில்லை, காசை வீசினார். உடனே வளை அணிந்த ஒரு கை கங்கையிலிருந்து தோன்றி அதைப் பிடித்துக் கொண்டது. பேய்ச்சுரைக்காயைக் கழுவி எடுத்துக் கொண்டு சக்கிலியனிடம் சென்றார்.

"நீ கங்கையில் போட்ட காசை இங்கே வாங்கிக் கொள்", என்று கூறித் தன் அருகிலிருந்த தோல் பையைத் திறந்து காட்டினான். அதிலிருந்த தண்ணீரிலிருந்து அதே கை தோன்றி காசைக் கொடுத்தது.

இதெல்லாம் என்ன? இதற்கு என்ன பொருள்? என்ற வியந்தபடி நின்றார் சிவ வாக்கியர். சக்கிலியன் அவரிடம் கொஞ்சம் மணலையும் பேய்ச் சுரைக்காயையும் கொடுத்து, "இதை எந்தப் பெண் சமைத்துக் கொடுக்கிறாளோ அவளை மணந்து கொள். உன் வாழ்க்கை நன்கு அமையும்", என்றான்.

தான் வந்த காரியம் என்ன என்பது அந்தச் சக்கிலியனுக்கு எவ்வாறு தெரிந்தது? அவன் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு சிவவாக்கியர் ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

Koviloor Digital Library

வழியில் எத்தனையோ ஊர்கள்! எத்தனையோ பெண்கள்! மணலைச் சோறாக்கிப் பேய்ச்சுரையைக் கறி சமைப்பதா? இவனுக்குப் பைத்தியந்தான் பிடித்துவிட்டது என்று நினைத்தவர் பலர்.

கடைசியாக ஒரு சிற்றூர். குறவர் வசிக்கும் குடிசைகள் உள்ள ஒரு பகுதி. அங்கு ஒரு இளம் பெண் மட்டுமே காணப்பட்டாள். மற்றவர்கள் குலத்தொழில் செய்ய மூங்கில் வெட்டப் போயிருந்தனர்.

அந்தப் பெண் சிவவாக்கியரை வணங்கி அவருக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"எனக்கு நீ இதைச் சமைத்துத் தருவாயா?" என்று கேட்டபடி மணலையும் பேய்ச்சுரையையும் கொடுத்தார் சிவ வாக்கியர்.

அவள் பதிலே பேசவில்லை. வாங்கிக் கொண்டு குடிசைக்குள் போனாள். சிறிது நேரத்தில் சமைத்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

சாப்பிட்டுவிட்டு சிவவாக்கியர் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பெண்ணின் பெற்றோர்கள் வந்தார்கள். "உங்கள் பெண்ணை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன். "அது இறைவன் கட்டளை நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டார்.

குறவர்கள் திடுக்கிட்டார்கள். தங்களுக்குள் கலந்து பேசிக் கொண்டார்கள். கடைசியாக, "நீங்கள் எங்களுடைய குல வழக்கத்தை ஏற்றுக் கொண்டு எங்களுடனேயே, தங்கிவிடுவதாயிருந்தால் பெண்ணைத் தருகிறோம்", என்றார்கள்.

சிவவாக்கியர் அதை ஏற்றுக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டார்.

ஒருநாள் சிவவாக்கியர் மூங்கில் வெட்டிக் கொண்டிருந்த பொழுது ஒரு மூங்கிலிலிருந்து தங்கம் கொட்டியது. "'ஐய்யயோ எமன்! எமன்!" என்று அலறிக் கொண்டு அப்பால் ஓடிவிட்டார்.

ஒரு நாள் கொங்கணவர் அங்கு வந்தார், இரண்டு பேரும் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். கொங்கணவர் விடை பெற்றுச் சென்றபின் சிவவாக்கியர் தம் வேலைக்குச் சென்றார்.

Koviloor Digital Library

சற்றுதூரம் சென்றபின் கொங்கணவர் எதையோ நினைத்துக் கொண்டவராகத் திரும்பிவந்தார். சிவவாக்கியர் மனைவியிடமிருந்து சில இரும்புத் துண்டுகளை வாங்கி அவற்றைத் தங்கமாக மாற்றிக் கொடுத்துவிட்டுப் போனார்.

சிவவாக்கியர் திரும்பி வந்தவுடன் அவர் மனைவி தங்கத் துண்டுகளைக் காட்டினாள். "அவற்றை வீசி எறிந்து விடு நமக்கு வேண்டாம்", என்றார் சிவவாக்கியர். அவள் அப்படியே எறிந்து விட்டாள்.

சிவ வாக்கியர் ஒரு பாறாங் கல்லின்மேல் சிறுநீர் பெய்து விட்டு, "இதன்மேல் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றிவிடு", என்றார்.

அவர் மனைவி அப்படியே செய்தாள். பாறை தங்கமாகியிருந்தது "உனக்குத் தங்கம் வேண்டுமென்றால் எடுத்துக் கொள்", என்றார் சிவ வாக்கியர். "தங்களுக்கு வேண்டாதது எனக்கும் வேண்டாம்" என்று கூறிவிட்டாள் அப்பெண்மணி.

சிவ வாக்கியர் எங்கோ ஒதுங்கி குறவர்களுக்கிடையே வாழ்ந்து கொண்டிருந்தாலும் எப்படியோ மக்களுக்கு அவரைப் பற்றித் தெரிந்து விட்டது. ஒருவர் இருவராக வரத் தொடங்கிப் பின் கூட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. ஞானம் பெற வேண்டும் என்று வந்தார்கள் சிலர். தங்கம் செய்ய வேண்டும் என்று வந்தவர்கள் தான் அதிகம். மக்களின் மடமை அவர் மனதைப் புண்ணாக்கியது. எத்தனையோ பாடல்களில் தம் உள்ளத்தைத் திறந்து கொட்டினார்.

சிவவாக்கியர் பாடல்கள் சிவவாக்கியம் என்ற நூலாகத் தொகுக்கப் பட்டுள்ளது. சிவவாக்கியர் கும்பகோணத்தில் சித்தியடைந்தார். இன்றும் பூரணை(பௌர்ணமி) நாட்களில் அவர் சமாதி பூஜை நடைபெற்று வருகிறது.

ஓஓஓ

Koviloor Digital Library

தட்சிணாமூர்த்தி

சிவபெருமானின் குரு முகூர்த்தமே தட்சிணா மூர்த்தி என்பர். சனக சனந்தனாதியர் நால்வருக்கும் உபதேசம் செய்யும் வடிவில் சிவாலயங்களில் தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார்.

பாரப்பா பதஞ்சலியே சொல்லக் கேளாய்
பாங்கான முப்பூவை அறியவேணும்
சேரப்பா சுழிமுனையில் மனக்கண் நாட்டிச்
செயலான அம்பரத்தைக் காண வேணும்
நாரப்பா நரம்புதசைத் தோலாம் வீட்டை
நம்பாதே யென்மகனே நடுவைப் பாரு
காரப்பா திரிகோண ஆட்சி வீட்டைக்
கை முறையாய்ச் சிலேத்துமத்தைக் கழற்றிப் பாரே.

தட். ஞான சூத்திரம் -7

பதஞ்சலி முனிவரை அழைத்து உபதேசம் செய்யும் திறன் வேறு யாருக்கு ஏற்பட முடியும்?

யோக ஞான சாஸ்திரத் திரட்டில் இவர் பெயரால் ஆறு நூல்கள் உள்ளன. ஆனால் ஞான பூஜாவிதி என்ற நூலில்

கேளப்பா புலத்தியனே ரசத்தில் போதம்
கெடிபடா சிவனைப் போல் வார்த்துக் கொண்டு

என்று பாடல் ஆரம்பமாகிறது. இது அகத்தியரின் பாடல். அகத்தியரின் பக்தர்கள் அவருக்கே தட்சிணாமூர்த்தி என்ற பெயரைச் சூட்டி அவரைக் கடவுளாக்கிவிட்டார்கள். அதோடு நில்லாமல் சில நூல்களைத் தட்சிணாமூர்த்தியின் பெயராலேயே வெளியிடவும் செய்தார்கள்.

தட்சிணாமூர்த்தி கலைக் ஞானம் (அச்சில்உள்ளது) என்னும் நூலில் "அகத்தியன் நான் கூறுகிறேன்" என்று ஒரு பாடலில் வருகிறது. அப்பாடல் மட்டும் இல்லாவிட்டால் அதைப் பாடியவர் தட்சிணாமூர்த்தியோ என்று சந்தேகப்பட நேரிடும்.

Koviloor Digital Library

இது தவிர திருச்சியை அடுத்த சிற்றூர் ஒன்றில் தட்சிணாமூர்த்தி என்ற ஒரு மகான் வசித்ததாகவும் அவர் பல சித்துக்களைச் செய்ததாகவும் கூறுவர்.

போகர் 7000ல் கூறப்படுபவரும் தட்சிணாமூர்த்தி திருமந்திரம் 1500 என்ற நூலை இயற்றியவருமான சித்தர் தட்சிணாமூர்த்தி மேற்கூறப்பட்டவர்களில் யாருமே அல்ல என்று தோன்றுகிறது.

ஆதியில் தட்சிணாமூர்த்தி யப்பா
அப்பனே அவர்மரபு ஏதென்றாக்கால்
நீதியாம் கவுண்டன் என்ற மரபேயாகும்
நிஷ்களங்கம் ஆனதொரு மூர்த்தி யென்பார்.
போ - 5716

கோனான தட்சிணாமூர்த்தி யப்பா
குவலயத்தில் வெகுகாலம் இருந்தசித்து
மானான வயததுவும் ஏதென் றாக்கால்
மகத்தான ஆயிரத்தி சொச்சமப்பா
பானான படி ஏழும் கடலும் சுத்தி
பூரிணிலே உழன்ற தொரு சித்து தானே. 5807

காணைவே தட்சிணா மூர்த்தி யாரும்
காசினியில் திருமந்திரம் பாடினோர்தான்
.....
ஆணவங்கள் தான் ஒடுங்கி சித்து தானும்
அன்பான காசிபதி சென்றிட்டாரே. 5808

சென்றாரே நர்மதா நதியின் பக்கம்
சிறப்புடனே தட்சிணா மூர்த்தி நாயன்
குன்றான கரையோரம் மண்டபந்தான்
கொற்றவனார் சமாதிமுகம் சென்றுமல்லோ
வென்றிடவே ஒருயுகமாம் அறுபதாண்டு
உத்தமனார் தானிருந்த சித்து தானே. 5809

தட்சிணாமூர்த்தி என்ற சித்தர், கவுண்டர் குலத்தில் பிறந்தவர். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் உலகத்தில் வசித்தவர். திருமந்திரம் பாடியவர். காசிவரை சென்று திரும்பும் வழியில் நர்மதை நதிக்கரையில் சமாதி கொண்டவர் என்று போகர் கூறுகிறார்.

Koviloor Digital Library

அகத்திய முனிவரும்

கேளப்பா புலத்தியரே மச்சகேந்திரா
கெடியான மலைவளமாம் தட்சணாயன்
சூளப்பா நதியாறு குண்ணு முண்டு
சுந்தரரே வில்விசய பூபா கேண்மோ
நாளப்பா வரைகோடி காலந்தானும்
நானிலத்தில் பிரளயங்கள் கண்ட சித்து
பாரப்பா போகாமல் ஸ்தூலந் தன்னை
பார்தனிலே மறைத்து வைத்த சித்து வாமே.

அ/1200/5/320

என்று கூறுகிறார்.

தட்சிணாமூர்த்தி பெயரால் வழங்கும் நூல்கள்

திருமந்திரம்	1500
காவியம்	1000
ஜால சூத்திரத்திரட்டு	500
ஞானோபதேசம்	16
காவியச்சுருக்கம்	16
சுத்த ஞானம்	13
ஞான பூஜாவிதி	10
ஞான சூத்திரம்	10
"	8
ஞான பஞ்சாட்சரம்	6

தாமரை நூலகம் வெளியிட்டுள்ள யோகஞான சாஸ்திரத் திரட்டு முதல் பாகத்தில் இவருடைய நூல்கள் சில உள்ளன. திருமந்திரம் 1500 தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

❁❁❁

Koviloor Digital Library

கௌபாலர்

துன்னவே கௌபால சித்து தாமும்
சுடரொளியாம் பிரகாசமான் ஜோதி
மின்னவே வைகாசி மாதமப்பா
மிக்கான சதயமது ரெண்டாங் கால்தான்
நன்னயமாய் அவர்பிறந்த நாளே யாகும்
நலமான கௌபால சித்து பாரே.

போகர் 7000 - 5914

பாரேதான் தேவதா தச்ச னப்பா
பாங்கான ஜகத்குரு கம்மாளன் தான்
நேரேதான் தனித்துதித்த சித்து வென்றும்
நெடிதான கௌபால ரிஷிதான் என்றும்
தீரேதான் வயிரக்கல் கண் டெடுத்து
தீர்க்கமுடன் பொன் உரைத்த சித்து வென்றும்
சீரேதான் பலநூல் காப்பியங்கள்
செப்பினேன் கௌபால சித்து தானே. 5915

கௌபால சித்தர் பொற் கொல்லர் வகுப்பில் வைகாசித் திங்கள் சதயம் இரண்டாங் காலில் பிறந்தவர். பொன்னை உரைத்து மாற்றுக் காணும் உரைகல்லைக் கண்டு பிடித்தவர்.

அவ்வாறு உரைகல் செய்வதற்கான கல்லைத் தேடி மலைகளில் சுற்றி யலைந்த போது வைரத்தைக் கண்டு பிடித்தார். இவர் பாடிய ஆணிக்கோர்வை என்னும் நூல் பொன்னின் மாற்றுக்களை ஆராய்வதாகும். இத்துறையில் இதுபோன்ற வேறு நூல் கிடையாது என்பர். (ஆணிக்கோர்வை - வைத்திய சில்லறைக் கோவை இரண்டாம் பாகத்தில் உள்ளது)

✠✠✠✠

Koviloor Digital Library

சுப்பிரமணியர்

தமிழர்கள் கடவுளாக வணங்கும் சுப்பிரமணியர் சித்தர்களில் முதல்வர். சிவபெருமான் மைந்தர். சித்தர் நூல்கள் எல்லாம் சிவபெருமான் உமைக்குச் சொல்ல, உமை நந்திக்குச் சொல்ல என்றே ஆரம்பமாகும்.

சிவபெருமானே சுப்பிரமணியர் என்பதால் சுப்பிரமணியரைப் பற்றி எவ்விடத்தும் குறிப்பிடப் படவில்லை போலும். இவரே அகத்தியருக்குத் தமிழை உபதேசித்தவர்.

சிவன் சொன்ன ஏழு லட்சத்தைக் குறுக்கி ஏழாயிரமாகச் சொன்னேன் என்று போகர் கூறுகிறார். சிவன் சொன்ன ஏழு லட்சம் கிடைக்கவில்லை. சுப்பிரமணியர் பெயராலும் பல நூல்கள் கூறப்படுகின்றன.

சுப்பிரமணியர் வைத்திய விஞ்சை	1500
குருப'ர நிதானம்	1000
சுப்பிரமணியர் ஞானம்	1000
"	500
"	200
பக்ஷணி	300
ஞான சைதன்யம்	108
சுத்த ஞானம்	100
ஞான கக்கிஷம்	55
சிவயோகம்	40
ஞானம்	33
நாடி	32
ஞானம்	32
ஞான விஞ்சை	30
ஞானம்	36
"	20
"	16
தீட்சை	16
ஞானம்	12
தேவிஞான தரிசனம்	10
பூஜாவிதி	10

Koviloor Digital Library

இவற்றுள் வைத்திய விஞ்சை 1500, குருபர நிதானம் 1000, ஞானம் 1000 முதலிய நூல்கள் கிடைக்கவில்லை. யோக ஞான சாஸ்திரத் திரட்டு முதல் பாகத்திலும், முருகப் பெருமான் அகத்தியருக்கு உபதேசித்த ஞானம் 500, சுப்பிரமணியர் ஞானக்கோவை முதலிய நூல்களிலும் மற்ற நூல்கள் வெளிவந்துள்ளன.

சுப்பிரமணியர் அகத்தியருக்கு உபதேசித்ததாகவே நூல்கள் அமைந்துள்ளன.

செந்திருவாம் அண்டவரை மனதைத்தானும்
செலுத்தியே சிறுவயதில் முன்னே சென்று
எந்தரமாய் நின்றதொரு கலையைப் பார்த்து
ஐம்புலனை அண்டமதில் சேர்க்கும் போது
சுந்தரம்போல் சிலம்பொலியும் காதில் கேட்கும்
சுப்பிரமணிய னென்று சொல்லிப் பேரும் கொண்டேன்
மந்திரம்போற் கும்பமுனி மகனே ஐயா
மவுனமுட னொன்றதுவும் வாகாமுற்றே.

சுப்பிரமணியர் ஞானம் 1.

தடுத்து மிகப் போகாமல் அண்ட மேவித்
தன்மனமே சாட்சியதாய்த் தவமேசெய்து
கடுத்துமிகத் திரியாதே அகத்தியோனே
கந்தர் நூல் கருத்தறிவாய் ஐந்தும் முற்றே.

சுப். ஞானானந்தம் - 5

காட்டுகிறேன் அகத்திய மாமுனியே கேளு
கருத்தொன்றாய்த் தானிறுத்திக் கபடமற்று.

சுப். சுத்தஞானம் - 8

இம்மாதிரி ஒவ்வொரு நூலிலும் அகத்தியரை முன் நிறுத்திச் சுப்பிரமணியர் பாடியுள்ளதைக் காணலாம்.

சுப்பிரமணியர் மனித வாழ்க்கைக்கு நன்மை யளிக்கக்கூடிய மிக அரிதான பல கருத்துக்களைத் தம் நூலில் கூறியிருக்கிறார். அவற்றில் சிலவற்றை இங்கே எடுத்துக் காட்டுவோம்.

தேன்போலே வாழுமிந்த ஆண்பெண் ஜாதி
சேரும்போ தோர் மனதாய்ச் சேர்ந்தாலப்போ
வானென்ன கருத்தரித்துப் பிறந்த தானால்
மகராஜ ஞானியடா ஜெக மாள்வானே.

சுப்.ஞான,25/12

Koviloor Digital Library

செகந் தனிலே ஆண்மனது சந்தோஷித்துச்
செப்பமுள்ள பெண்ணாளும் விசனித்தேதான்
அகமிருந்தா யிருவருமே சேரச் செய்து
அன்புடனே கருத்தரித்துப் பிள்ளையீன்றால்
சுகமான உத்தமத்தில் மத்திபந்தான்
சொற்பெரிதாய் வாழ்வான் பார் பாதிநாளும்
உகமையுடன் இருவருமே விசனித்தே தான்
உண்மையுடன் சேர்ந்து கருத் தரித்தாற்கேளே. 13

கருத்தரித்துப் பிறந்துதென்றால் அவனுக்கேதான்
கருணையில்லாத் தரித்திரிய மாவான்பாரு
அருத்தமறி வான்முப்ப தாண்டு மட்டும்
அலக்கழி வில்லாம லவன் விந்துகட்டி
வருமமுடன் தானிருந்து பெண்ணைச் சேர்ந்து
வன்மையுறக் கருத்தரித்துப் பிள்ளையீன்றால்
அருமையுள்ள பிள்ளையது வயது நூறாம்
அன்புடனே தானிருந்து வாழ்வான் பாரே. 14

சுப்பிரமணியர் ஞானம் 25ல் கூறப்பட்டுள்ள இக்கருத்துகள் ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருக்க வேண்டியவை. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவை.

கணவனும் மனைவியும் ஒரு மனதாகக் கவலைகளில்லாமல் மகிழ்ச்சியோடு கூடி இன்புறக் கருத்தறித்துப் பிறந்த பிள்ளை நல்ல புத்திமானாகவும், யோகியாகவும் அரசனாகவும் இருப்பான்.

கணவன் மகிழ்ச்சியோடிருந்து மனைவி மனக் கவலையுடனிருந்து அவர்கள் சேரப் பிறந்த குழந்தை தன் ஆயுட்காலத்தில் பாதி நாட்கள் சுகமாக இருப்பான். அவனுடைய வாழ்க்கை இன்ப துன்பங்கள் கலந்ததாக இருக்கும்.

கணவன் மனைவி இருவருமே கவலையுடனிருந்து அவர்கள் சேரப் பிறந்த பிள்ளை ஆயுட் காலம் பூராவும் தரித்திரத்தையே அனுபவிப்பான்.

ஒரு ஆண்மகன் முப்பது வயது வரை மனச் சபலங்களுக்கு இடம் கொடாமல், விந்தழிவுக்கு இடம் கொடாமலிருந்து பெண்ணைச் சேர்ந்து பிள்ளை பெற்றால் அப்பிள்ளை நூறாண்டு வாழ்வான். சுகமாகவும் இருப்பான்.

Koviloor Digital Library

சுப்பிரமணியர் நூல்களில் வைத்திய விஞ்சை 1500, குருபர நிதானம் 1000, ஞானம் 1000 முதலிய நூல்கள் கிடையாமற் போனது தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும். யாராவது அந்நூல்களை வைத்திருந்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்யும் பேருதவியாகக் கருதித் தாமரை நூலத்திற்கு, கிடைக்க வழி செய்ய வேண்டுமென வேண்டுகிறோம்.

மேலும் பலர்

சித்தர்களின் நூல்களைப் பல ஊர்களிலும் சென்று ஓலைச் சுவடிகளாகத் திரட்டி வெளியுட்ட திருவாளர் மதுரை - இராம - குருசாமிக் கோன் அவர்கள் வெளியிட்ட வைத்திய வாத யோக ஞான சாஸ்திரத் திரட்டு பத்து பாகங்களில் மேலும் பல சித்தர்களின் பாடல்கள் விரவிக் கிடக்கின்றன.

கண்ணானந்தர், கூர்மானந்தர், சூரியானந்தர், சச்சிதானந்தர், பிரம்மானந்தர், இராமானந்தர், சத்தியநாதர், வகுளிநாதர் சதோகநாதர், ஆதிநாதர், மச்சேந்திர நாதர், சங்கிலிநாதர், திரிகோணச் சித்தர், சங்கமுனிவர், தத்துவராயர், ஈஸ்வரன், ஈஸ்வரி, சிவபெருமான் முதலிய சித்தர்களின் இனிய பாடல்களையும் கண்டு பெருமிதம் அடைகிறோம்.

தவிர ஊன்கண்ணர், பூனைக்கண்ணர், வாமதேவர் முதலிய சித்தர்களைப் பற்றியம் கேள்விப்படுகிறோம்.

பூனைக்கண்ணர்

கண்களின் நிறம் மாறுபட்டிருந்ததால் பூனைக் கண்ணர் என்று அழைக்கபட்டார் என்றும் இவர் எகிப்திய நாட்டவராக இருக்க வேண்டும் என்று மேதகு. உத்தமராயன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பூனைக்கண்ணர் எகிப்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து வைத்திய வாத ஞான யோகப் பயிற்சிகளைப் பெற்றுப்பின் எகிப்து நாட்டுக்குத் திரும்பிச் சென்று ஆங்குள்ள மக்களுக்கு வைத்தியம் செய்தும், ஞானம் உபதேசித்தும் அறப்பணி புரிந்தபடி நீண்ட நாள் அங்கேயே இருந்து சித்தியடைந்தார் என்று கூறப்படுகிறது.

சித்தர்கள் வரலாறு
முதல் பாகம் முற்றும்

***

Koviloor Digital Library

நந்தீசர்

வீரகன் என்னும் இயற்பெயர் கொண்ட சிவகணங்களில் ஒருவரான நந்தீசர் பார்வதிதேவியாரின் அந்தப்புரக் காவலராக இருந்தார்.

ஒரு சமயம் தேவியார் கயிலையை விட்டு நீங்கி கௌரி என்ற பெயருடன் தவமியற்றிக் கொண்டிருந்தார். அப்போது அடிலகன் என்னும் அசுரனை அனுமதியின்றிச் சிவ சந்நிதானத்தில் புக அனுமதித் ததால் சிவபெருமான் கோபத்துக்கு ஆளாகிப் பனிரெண்டு ஆண்டு சிலாதர் என்ற மகரிஷியின் புத்திரராகப் பூவுலகில் வசிக்கச் சாபம் பெற்றார்.

சிலாதர் என்ற ரிஷி தன் மனைவியான சித்திரவதியுடன் இனிதே இல்லறம் நடத்தி வந்தார். ஒருநாள் சப்தரிஷிகளும் அவர் ஆசிரமத்திற்கு வந்தனர். சிலாதர் அவர்களை வரவேற்று உபசரித்துச் சிறிதுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தபின் உணவுண்டு செல்லுமாறு வேண்டினார். ரிஷிகள் பிள்ளை இல்லாத வீட்டில் அன்னம் கொள்ளோம் என்று கூறிச் சென்றுவிட்டனர்.

உடனே சிலாதர் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யத் தொடங்கினார். சிவபெருமான் அவர் முன் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்க, " எக்காலத்தும் இறப்பில்லாத மகன் எனக்கு வேண்டும் " என்று கேட்டார்.

சிவபெருமான் புன்னகை புரிந்தவராக, " நீ ஒரு யாகம் செய். உனக்கு அப்படிப்பட்ட மகன் கிடைப்பான் ", என்று கூறி மறைந்தார்.

சிலாதர் யாகம் செய்தற்காக நிலத்தை உழ, யாக பூமியிலிருந்து ஒரு மாணிக்கப் பெட்டி கிடைத்தது. அதனுள் ஜடாமுடி, நான்கு கரங்களுடன் நந்தி தேவர் இருந்தார்.

"இறைவா? இதை நான் எப்படி வளர்ப்பேன்," என்று சிலாதர் மயங்க, "மறுபடியும் பெட்டியை மூடித் திற," என்று இறைவன் கட்டளை பிறந்தது.

பெட்டியை மூடித் திறந்த போது அதனுள் அழகிய குழந்தை இருந்தது. சிலாதர் யாகத்தைச் செய்து முடித்தார். அக்குழந்தையையும்

Koviloor Digital Library

அன்புடன் வளர்த்தார். இறைவன் அருளால் அவர்களுக்கும் ஒரு பிள்ளை பிறந்தான்.

என்றும் சிரஞ்சீவியாக இருக்கும் குழந்தை வேண்டுமென்று தவம் செய்து பெற்ற பிள்ளை - பனிரெண்டாவது வயதில் மித்திரர்வருணரால் மரணமடையும் என்று அறிந்து சிலாதரும் அவர் மனைவியும் மிகவும் துக்கமடைந்தனர். வீரகன் பனிரெண்டு ஆண்டுகளே பூவுலகில் வாழ வேண்டும் என்ற சாபத்தால் ஏற்பட்ட வினை அது. ஆனால் சிவ இரகசியம் சிலாதருக்கு எப்படித் தெரியும்?

ஒரு நாள் தன் தாய் தந்தையர் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்து போயிருப்பதைக் கண்ட அக்குழந்தை காரணம் கூறும்படித் தாய் தந்தையரை வற்புறுத்தி வேண்ட அவர்கள் கூறினர். " அப்படியென்றால் நான் அந்தச் சிவபெருமானையே கேட்கிறேன்," என்று கூறிய அக்குழந்தை திட வைராக்கியத்துடன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யக் கிளம்பி விட்டது. பல ஆண்டுகள் கடின தவம் செய்தபின் இறைவன் தோன்றினார்.

என்றும் இறைவனடி நீங்காதிருக்கவும், சிவ கணங்களுக்குத் தலைமை வகிக்கும் அதிகாரத்துவமும், சிவதத்துவங்களுக்கு ஆசானாக விளங்கும் சிவ ஞானாசாரியத்துவமும் பெற்று, பித்ரு தேவர்களின் இதய கமலத்திலிருந்து தோன்றிய சயஞ்ஞை என்பவளை மணந்து சிவலோ கத்தில் எழுந்தருளும் பாக்கியம் பெற்றுத் திரும்பினான் சிலாதரின் மைந்தன்.

இது நந்திதேவர் வரலாறு புராணங்களில் உள்ளபடி.

சித்தர்களின் நூல்களில்.

சித்தர்களுக்கு முதல்வராகிய சிவபெருமானுக்கு அடுத்த படியாக விளங்கும் நந்தீசரைப் பற்றி அகத்தியர் கூறுகிறார்.

கூறுவேன் நந்தீசர் தந்தை தாய்மார்
குலாலரெனும் மரபுதனில் சென்றுமேதான்
வீருடனே பாண்டமது செய்து மல்லோ
வித்தகனார் நெடுங்காலம் சீவித்தே தான்.

அகத்தியர் பனிரெண்டாயிரம் நான்காம் காண்டம் 512வது பாடல் நந்தீசர் குலாலர் (குயவர்) மரபில் பிறந்தவர் என்று; கூறுகிறது.

Koviloor Digital Library

ஓதவே குருபரனார் தமை அமைத்து
உத்தமனார் பாலனுக்குக் கல்வியோதி
நீதமுடன் வேதாந்த சாரந்தன்னை
நிஷ்களங்க மாகவே நீடித்தே தான்
போதமெனும் பிரணவத்தின் பொருளையெல்லாம்
பொங்கமுடன் உபதேசம் பொருந்தவேதான்
வேதமெனும் மெய்ப்பொருளை விளங்கக் காட்டி
வேதாந்த சாரத்தை விளங்கினாரே. 515

விளங்கவே நந்தீசர் பாலனுக்கு
வீரான வுபதேச வுண்மையாலே
துளங்கமுடன் அத்வைத வுபதேசத்தால்
துப்புரவாய் சகலகலைக் ஞானம் கொண்டு
களக்கமற நந்தியென்ற நாமத்தாலே
காசினியில் வெகு கோடி மாண்பர் மெச்ச
வழக்கமுடன் மனக்கண்ணால் சகல சித்தும்
வளமுடனே பாடினார் பாடினாரே. 516

பெற்றோர் நந்தீசருக்குத் தக்க ஆசானை அமைத்து சகல சாஸ்திரங்களையும் வேத வேதாந்தங்களையும் கற்பிக்க ஏற்பாடு செய்தனர். மெய்ப்பொருளை உணர்ந்த நந்தீசர் உலகமெல்லாம் மெச்சும் படியாக நந்தி என்ற பெயரால் பல அரிய நூல்களைப் பாடினார்.

அகத்தியர் பனிரெண்டாயிரம் இயற்றிய அகத்தியர் இவ்வாறு கூறுகிறார். ஆனால் அமுதகலைக் ஞானம் அருளிய அகத்தியர் வேறு விதமாகக் கூறுவார்.

தேனான நந்தியுமே பிரமகுலமப்பா
திறமாக வெகு மறைவாய்ப் பாடினானே.
அக. அமுத.219

என்கிறார். அகத்தியர் என்ற பெயரால் பலபேர் பாடியுள்ளனர் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

போகர் ஏழாயிரத்தில்,

முத்தமுடன் நந்தீசர் பிறந்த நேர்மை
மூதுலகோர் தானறியச் சொல்வேன் அப்பா
நித்தமது வைகாசி மாதமப்பா
நீடான விசாகமது நாலாங் காலாம்

Koviloor Digital Library

பத்தியுடன் தான் பிறந்த நந்திதேவர்
பாரினிலே தேவஸ்தான குருவுமாச்சே. 5897

குருவான தேவதா ஸ்தலங்கள் தன்னில்
கொற்றவனே நந்தி யென்ற பேர் உண்டாச்சு
அருவான தேவேந்திரன் சாபத்தாலே
அப்பனே பிரம்மகுலந் தனில் உதித்து
உருவாகி மானிட ஜென்மமாகி
உத்தமனே கன்னியது வயிற்றில் தங்கி
திருவான நந்திரூபங் கொண்டுமல்லோ
சிறப்புடனே வந்துதித்த சித்து தானே. 5898

சிவத்தலங்களில் நந்தியாக வீற்றிருந்தவர் தேவேந்திரன் சாபத்தால் பூலோகத்தில் பிறக்க நேரிட்டது, வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் பிராமண குலத்தில் பிறந்தார் என்று போக முனிவர் கூறுகிறார்.

இனி நந்தீசர் தம்மைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதைக் கவனிப்போம், மற்றவர்கள் சொல்வதை விட அவரே சொல்லியிருப்பது என்றால் அதுவே உண்மை என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

வடதேசம் என்தேசம்

ஆமப்பா வடதேசம் கயிலை தேசம்
அப்பனே என்தேசம் உத்தரதேசம்
வாமப்பா எனைச் சேர்ந்த சித்தர் சொல்வேன்
வளமான தசரதரும் வியாசர் தானும்
காமப்பா என்தம்பி வியாசர் தாண்டா
கண் மணியே தசரதன்றான் அம்மானாகும்
நாமப்பா தன்வந்திரி பகவான் தானும்
நலமாக எந்தனுக்குப் பிள்ளையாச்சே.

நந்தீசர் கலைஞானம் - 181

ஆமென்ற அசுவினி தேவதைகள் தானும்
அப்பனே எந்தனுக்குப் பேர ராச்சு
வாமென்ற தந்தை சதாசிவன்றான் மைந்தா
வளமாத எந்தனுக்குத் தகப்பனாச்சு

Koviloor Digital Library

நாமென்ற தாயார் தான் தேவியாகும்
நலமாக இத்தனைபேர் என்னைச் சார்ந்தோர்
காமென்ற தேவியுட கிருபையாலே
கைலாச சித்தனென்ற பேருண்டாச்சே.

ந. கலை. 182

தாம் வடநாட்டில் கயிலையைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார். வியாசர் தன் தம்பி என்றும் தசரதன் தன் அம்மான் என்றும் கூறுகிறார். சந்திரகுலத்தில் பிறந்த வியாசரும் சூரிய குலத்தில் பிறந்த தசரதனும் தனக்கு உறவு என்று கூறுவதால் சூரிய சந்திர குலத்தைச் சேர்ந்த எல்லோரும் தனக்கு உறவினர்கள் என்கிறார்.

தன்வந்திரி என் பிள்ளை (சீடன்), அசுவினிதேவர்கள் எனக்குப் பேரர்கள். நான் சிவன் பெற்ற பிள்ளை. உமை எனக்கு அன்னை. அவர்களுடைய அருளால் நான் கயிலாசச்சித்தன் என்ற பெயர் பெற்றேன் என்கிறார்.

தன்வந்திரி பகவான் மகாவிஷ்ணுவின் அவதாரம். திருப்பாற் கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது அமுத கலசத்தோடு தோன்றியவர். ஆயுள்வேத வைத்தியத்தை உலகுக்கு உபதேசித்தவர் அவரையே தமது சீடனாகக் குறிப்பிடுகிறார் நந்தீசர்.

நந்தீசரைப் பற்றிப் புராணங்கள் காட்டும் படம் வேறு. சித்தர்கள் காட்டும் படம் வேறு. சிவபெருமான் உட்பட எல்லோருமே மனிதர் நிலையிலிருந்து உயர்ந்தவரே என்றே சித்தர்கள் கூறுகின்றனர். நந்தி தேவரும் மனிதர் நிலையிலிருந்தே தமது நூல்களைக் கூறியுள்ளார்.

உரை செய்வேன் தவமுனிவர் ஒளிப்பை யெல்லாம்
உத்தமனே அவர் பூட்டைத் திறப்பாருண்டோ
மறைசெய்த பொருளையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
மகத்தான சித்தர்களும் கோபம் கொண்டு
நிரைசெய்த எந்தனுடன் வாதுபேசி
நிராகரிப்பாய் வாதாடிச் சண்டை செய்தார்
பரைசெய்த சிவனும் என்மேல் கோபம் கொண்டார்
பாயவென்று ரிஷபமாய்ப் பதுங்கினேனே.

நந்தி. கருக்கிடை - 9

Koviloor Digital Library

பதுங்கினே னாதி சிவ னென்னைப் பார்த்துப்
பதஞ்சலியாய் நிரஞ்சனமாய்ப் பாதந் தூக்க
ஒதுங்கினே னவர்தயவு என்மேல் வந்து
ஓகோகோ நந்திவா வென்று சொன்னார்
இறங்கினா ரவர்முன்பு மண்டி போட்டு
இருந்தனப்பா எனக் கொருவர் எதிரே இல்லை.

நந்தி கருக் - 10

சிவன் எதிரில் மண்டியிட்ட நந்தி இன்றுவரை சிவாலயங்களில் மண்டியிட்ட நிலையிலேயே காட்சி தருகிறார். சிவபெருமானுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பூஜை பெறுகிறார்.

அரன் உமைக்குச் சொன்ன இரகசியத்தை, மறைப்பாகச் சொல்லாமல் வெளிப்படையாகச் சொல்லி விட்டதால் சித்தர்கள் கோபித்தனர். சிவனும் கோபித்தார் என்கிறார் நந்தீசர்.

மாயசத்தி உரைத்த சொல்

ஆரப்பா என்னைப் போற் சொல்வார்
அரன் எனக்கு உரைத்த நூலை
காரப்பா உந்தனுக்காய்க்
கருத்துடன் வெளியிட்டேனே.

அரன் எனக்குச் சொன்னதை உனக்குக் கருத்துடன் கூறிவிட்டேன்.

இட்டேனே இந்நூலும் சிறந்த வாக்காய்
இறை உமையும் உரைத்த மொழி தவிர்த்திடாமல்
விட்டேனே சண்டீசன் மனமுந்தேற
விளம்பினேன் வடமொழியின் விரிவைக் கண்டு
தொட்டேனே இந்நூலைச் சுருக்கமாகத்
தொல்லுலகோர்க் குண்மையிது தெரியவேண்டி
நட்டேனே தமிழ்ப் பயிராய் விளைய வைத்து
நன்மைபெற இப்பொருளைக் கூறினேனே.

நந்தி நிகண்டு - 5.

நந்தீசர் சண்டீசருக்கு உரைத்ததாக நிகண்டு அமைந்துள்ளது. வடமொழியில் யாருக்கும் புரியாதபடி விரிவாய் சொல்லப்பட்டிருக்கும்

Koviloor Digital Library

இரகசியங்களை நான் உனக்குத் தமிழில் சுருக்கமாகக் கூறுகிறேன். இந்த உலகத்தில் உள்ளவர்களுக்கு உண்மை தெரியவேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன் என்கிறார்.

நட்டேனே தமிழ்ப் பயிராய் விளைய வைத்து

நன்மைபெற இப்பொருளைக் கூறினேனே என்ற சொற்களில் உலகம் அறிய வேண்டிய இந்த அற்புதமான விஷயங்களை அறியாமல் வீணாகிக் கொண்டிருக்கிறதே என்ற ஆதங்கம் ஒலிக்கிறது. உலகம் நன்மை பெறுவதற்காகவே சொன்னேன் என்பதில் உறுதியும் தெளிவும் ஒலிக்கின்றன. ஆயினும்

வாசியென்ற சமுத்திரத்தின் கரைகண்டாலும்
மாயசத்தி உரைத்த சொல்லோ கரை தோணாது

என்கிறார்.

நூலை வெளிப்படையாகக் கூறிவிட்டேன். ஆயினும் இது மாயசத்தியாகிய உமையன்னை உரைத்ததாயிற்றே? இதன் கரையைக் காணமுடியுமா?

திரும்பத் திரும்பப் பார்த்து,
திரும்பத் திரும்பச் சிந்தித்து.

ஒவ்வொரு முறை சிந்திக்கும் போதும் புதுப்புதுப் பொருளை உணர்ந்து,

முடிவான உண்மை இது என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஒரு குருவின் அருளிருந்தாலே முடியும் என்ற உண்மையை இங்கு விளக்குகிறார்.

இந்த நூல் மிகவும் இரகசியமானது. மிதவும் சக்தி வாய்ந்தது. அதனால் பாவிகளுக்கு இதைக் காட்டாதே, வெளியிடாதே, அப்படிச் செய்தால் உன் தலை வெடித்துப் போகும் என்று கடுமையான சாபமிடுகிறார்.

நந்தீசரின் நூல் அற்புதமானது. ஆழம்காண முடியாதது. அழகான தமிழிலேயே பாடப்பட்டது. தமிழ் மக்கள் இந்த நூல்களைப் பயின்று தங்கள் இதய கமலங்களிலே வைத்துப் பூட்டவேண்டும்.

Koviloor Digital Library

சித்தர் மறைப்பு (பரிபாஷை)ச் சொற்கள்

சித்தர்கள் அனைவரும் தாங்கள் சொல்லும் மிகவும் நுட்பமான அரிய பெரிய பயன்களை அளிக்கக் கூடிய கருத்துகள் தகாதவர்களிடம் அகப்பட்டு விடக் கூடாதென்பதற்காக மறைப்பு மொழியில் பாடியுள்ளார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தமிழ்ச் சித்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் இதில் தான் பெரிய வேறுபாடு காணப்படுகின்றது.

சுத்த ஜலம்

ஆமப்பா அண்டச் சுண்ணம் நன்றாய்ச் சொன்னேன்
அப்பனே சுத்தசல மெடுக்கக் கேளு
வாமப்பா கன்னியவள் கெர்ப்பமானால்
வளமான அபானனவன் சலக்குடத்திற் சேர்வன்
நாமப்பா முயன்று பத்து மாதமானால்
நலமான அபானனவன் கீழே நோக்கக்
காமப்பா நீர்க் குடந்தான் உடைந்து போகும்
கண்மணியே அப்போது பிடித்துக் கொள்ளே.

நந்தி. கலை - 51

சுத்த ஜலம் என்பது நிறைகர்ப்பிணி பிள்ளை பெறப் போகும் சமயம் பனிக்குடம் உடைந்து வெளியேறும் நீர் என்று நந்தி கூறுவதாக அமைந்துள்ளது பாடல்.

மள்ளப்பா சுத்தஜலம் நன்றாய்ச் சொன்னேன்
மகத்தான ஐங்கோலச் செயநீர் கேளு
அள்ளப்பா ஐங்கோலப் பிண்டம் மைந்தா
அப்பனே ஐந்தாவது மாதம் வாங்கே. 52

வாங்கடா பிறந்தைந்தா மாதந்தன்னில்
வளமாக இறந்தாக்கால் வாங்கிக் கொண்டு
ஆங்கடா கோரையுடன் சட்டை போக்கி
அப்பனே கல்லுரலி லிட்டுக் கொண்டு
நாங்கடா யெகு உலக்கை அதனாற் சாடு
நலமான புளிபோலே யாகும் பாரு
மாங்கடா எடுத்ததனைப் பீங்கானில் வைத்து
மகத்தான ரவிதனிலே நவநாள் வையே. 53

Koviloor Digital Library

வைப்பப்பா செயநீர் தாவிறங்கு மைந்தா
வளமான ஐங்கோலச் செயநீ ரையா 54

நந்தீசர் சர்வகலைக் ஞானம் என்ற இந்த நூல் தன்வந்திரிக்கு உபதேசிக்கப்பட்டது. தன்வந்திரியும், அவர் வழியாக அகத்தியரும் இதே மாதிரிப் பாடியுள்ளார்கள். வடக்கிலிருந்து வந்த சித்தர்கள், கருவைத் தொட்டுக் கூறிய வைத்திய வாத முறைகளைப் பிற்காலத்தில் அப்படியே பின்பற்றிப் பழி பாதகங்களுக்கு ஆளானவர்கள் பலர்.

இவர்களைச் சித்தர்கள் என்று சொல்வதே தவறு. ரிஷிகள் என்றே சொல்ல வேண்டும். இவர்கள் கருவைத் தொட்டுச் காரியங்கள் தமிழ் மக்களுக்கு வெறுப்பை உண்டாக்கின. இ இருசி என்றால் அரக்கன், இரக்கமில்லாதவன், பாவி, கொலை என்ற பொருளில் நாட்டுப் புறமக்கள் அச்சொல்லைப் பயன்படு

இந்தப் பரம்பரையில் பிற்காலத்தில் தோன்றிய யூகிமுனி பிண்ட என்றால் பிணம் அல்ல என்று இக்கருத்தை மறுத்துக் கூறும் வை வைத்தியர்கள், வாதிகள் என்று சொல்லிக் கொண்ட பலரும் இதே கருத்தைப் பின்பற்றி வந்தார்கள்.

ஆயுர்வேதத்தைப் பின்பற்றிய வைத்தியர்கள் கருவைத் தொட்டு வைத்தியமும் மாந்திரிகமும் செய்து வந்தார்கள் என்பதை உலகறியும். மறைப்பு மை, போன்ற மாந்திரிக காரியங்களுக்கு கருவிலிருந்தே மை தயாரிக்கப் படுவதாகச் சொல்கிறார்கள். இத்தொழில் கேரள மாநிலத்தில் இன்றும் நடை பெறுவதாகச் சொல்கின்றனர்.

சைவம் தழைத்திருந்த தமிழகத்தில் இக்கருத்துகள் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்க முடியாது. அதனாலேயே நந்தி, தன்வந்திரி; அகத்தியர் போன்றவர்கள் இக்கருத்துகளை மிகவும் இரகசியமாகக் காப்பாற்றி வந்தனர். இதை வெளியே சொல்லாதே, சொன்னால் உன் தலை வெடித்துப் போகும் என்று கடுமையான சாபங்களைக் கூறினர்.

தமிழ்ச் சித்தர்களுக்கும் ரிஷிகளுக்கும் இன்னும்பல வேறுபாடுகள் உள்ளன. தமிழ்ச் சித்தர்கள் கூடு விட்டுக் கூடு பாய்ந்தனர். கற்ப உணவை உண்டு காயசித்தி பெற்றனர். வாதத்தையே முதலாவதாகக் கருதினர். வாதத்தின் அடிப்படையில் எழுந்த பற்ப செந்தூரங்களையே முக்கியமான மருந்துகளாகக் கையாண்ட ஆனால் மக்களால் நெருங்க முடியாதபடி பித்தர்களைப்

Koviloor Digital Library

வாழ்ந்தனர். அதனால் தனிமைப்படுத்தப்பட்டு விட்டனர். அதனாலேயே தமிழ்ச் சித்தர்களின் பெருமை குன்றி தன்வந்திரி, அகத்தியர் போன்றவர்களின் பெருமை ஓங்கியது. அவர்கள் மக்களோடு நெருங்கி வாழ்ந்ததால் அவர்களையே சித்தர்களாகவும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

இன்றைக்கு அகத்தியரைத் தெரிந்த அளவு போகமுனிவரையோ, கொங்கணவர், சட்டைமுனி, திருமூலர் போன்றவர்களையோ மக்களுக்குத் தெரியவில்லையென்றால் அதற்கு இதுவே காரணம்.

தவிர வீடுகளிலேயே தயாரிக்கக் கூடிய கஷாயம், மாத்திரை, லேகியம் போன்ற மருந்துகளைப் பரவலாகக் கையாண்டு, பாட்டி வைத்தியம், வீட்டு வைத்தியம் என்ற அளவில் மருத்துவம் பரவியதற்கும் அகத்தியர் போன்றவர்களே காரணமாக இருந்ததாலும் அவர்களுடைய புகழ் ஓங்கியது.

ஆனால் அகத்தியர் தமிழ்ச் சித்தர்களிடமிருந்து, வாத வைத்தியமுறை, காயகற்ப மூலிகைகள் மருந்துகள், ரசமணிகள், விண்வெளியில் உலாவுதல் போன்றவற்றைக் கற்றுக் கொண்டு அவற்றைத் தம் சீடர்களுக்கும் உபதேசித்தார். மேலும் வளப்படுத்தினர். அவ்வகையில் அகத்தியர் வழித் தோன்றல்களில் யூகிமுனிவர் குறிப்பிடத் தக்கவர் எனலாம்.

நந்தீசர் கூறும் கற்ப மூலிகைகள்

போக முனிவர் நாற்பத்தைந்து கற்பமூலிகைகளைப் பற்றிக் கூறுகிறார். நந்தீசரும் கலைக் ஞானம் 1000ல்

பார்த்திட்ட மலைகளிலே மூலிகை கேளும்
பரிவான 1 கருநெல்லி 2 கருத்த நொச்சி
பூர்த்திட்ட 3 புல் சோதி 4 பெரிய சோதி
புகழ்பெரிய 5 வெள்ளைப் பூந்துத்தி யோடு
ஏர்த்திட்ட 6 கல்லுக்குள் கஞ்சமப்பா
எளிதான விருட்சங்கள் 7 ரோம சாதி
கார்த்திட்ட 8 கருவேலி 9 சுணங்க விருட்சம்
கறுத்திருக்கும் 10 கொடிவேலி 11 சேந்திராயே.

நந்தி - கலை - 932

Koviloor Digital Library

சேந்திராய் 12 வெண்புரசு 13 வெள்ளைக் கண்டன்
14 செங்கழலி 15 செம்பல்லி 16 குண்ட மாம்பாலை
காந்திராய் கசப்பான 17 பசளையொடு
கடிய தொரு 18 பொற் சீந்தில் 19 சாய்கை 20 பேதி
ஆந்திரா 21 கருவீழி 22 கறுத்த வாழை
அதிவெள்ளை 23 தூதுவளை 24 கருத்த தில்லை
காந்திராய் கருப்பான 25 கரி சாலை
26 கருத்தமத்தை 27 வெண் காரை 28 கல்லையாமே. 933

ஆமப்பா 29 மூவிலையாங் குருந்தினோடு
ஆச்சரியங் 30 கருந்தும்பை 31 வெள்ளைக் கரந்தை
ஓமப்பா 32 வெண்பான ஆதண்டையோடு
உத்தமனே முப்பத்திரண்டு மூலி
வாமப்பா மலைதோறும் உண்டு உண்டு
மகத்தான மூலிகை தான் பரிச வேதை
காமப்பா ஒவ்வொன்றிற் சூதங்கட்டும்
கலந்து நின்ற வாசனைக்குப் பாஷாணம் சாமே. 934

சாகவே சரக்கான அறுபத்துநாலும்
தனதளவே வேதையுமாம் சகத்திரத்துக் கோடும்
சாகவே உபரசங்கள் நூற்றிரண்டு பத்தும்
சவளைபோல் சத்தாகும் இறங்கும் பாரு
சாகவே லவண முதல் இருபத் தஞ்சும்
தனித்தனியே கட்டாகும் சரக்கைக் கொல்லும்
சாகவே பண்ணாம லிருத்தி வைக்கும்
சங்கற்ப விகற்ப மென்ற சட்டை போக்கே. 935

நந்தீசர் 32 கற்ப மூலிகைகள் பற்றிக் கூறுகிறார். இவை மலைகளில் கிடைக்கும். இவை வாதத்திற்குப் பயன்படக் கூடியவை. இவற்றால் பாதரசம் மணியாகத் திரளும். இவற்றின் வாசம் பட்டாலே பாஷாணங்கள் செத்துமடியும். அறுபத்து நான்கு சரக்குகளும் வேதையாகும். உபரசங்கள் நூற்றிருபதும் சத்தாகும். உப்பு முதல் இருபத்தைந்து சரக்கும் கட்டு ஆகும். இந்த மூலிகைகள் மனிதனைச் சாகாமல் இருத்தி வைக்கும் கற்பமூலிகைகள் ஆகும் என்கிறார்.

நந்தீசர் காலம்

சித்தர்களின் வயதையோ அவர்கள் வாழ்ந்த காலத்தையோ அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆனால் நந்தீசர் கலைக்ஞானம் என்ற

Koviloor Digital Library

நூலை எழுதியவர் பதினைந்து பதினாறாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்திருக்க வேண்டும்.

நூலின் மொழி, நடை, சொல்லப்பட்டுள்ள முறை பற்றிச் சித்தர்களின் காலத்தைக் கணக்கிடுவது தவறு. சொல்லப்பட்டுள்ள விஷயத்தைக் கொண்டே கணக்கிட வேண்டும்.

போகர் முதலானவர்கள் வேதியியல் பற்றிப் பாடியதோடு அவற்றை நடைமுறையில் செய்து பார்த்தார்கள். தங்கள் காலத்திற்குப் பிறகும் நிலைத்திருக்குமாறு செய்தும் வைத்தார்கள், நந்தீசர், அகத்தியர் முதலானவர்கள் அப்படி எதையும் செய்து வைக்கவில்லை. நந்தீசர் கலைக் ஞானத்தில்,

பண்ணியே தைலமதை எடுத்துக் கொண்டு
பார்தனிலே சாபமென்ற மோடியாட
பண்ணியே பசார் வீதி தன்னில் குந்தி
பாலகனே நைவேத்திய மன்பாய்ச் செய்து. 614

ஜாலம், மோடி, பஜார்வீதி என்ற சொற்கள் பயன்படுத்தப் பட்டிருப்பதைப் பார்க்கும்போது நந்தீசர் முறைகளைப் பரம்பரையாகக் கையாண்டு வந்த பிற்காலத்தைச் சேர்ந்த ஒருவர் இந்நூலை இயற்றியிருக்க லாம் என்றே தோன்றுகிறது.

நந்தீசர் அருளிய நூல்கள்

வைத்திய காவியம்	1200	தண்டக பக்ஷணி	100
கலைக் ஞானம்	1000	ஞானசூத்திரம்	100
" சூத்திரம்	500	சங்கம விளக்கம்	42
நிகண்டு	300	முப்பு சூத்திரம்	37
கருக்கிடை	300	வைத்தியம்	12
சம்வாதம்	200	கருக்கிடை சூத்திரம்	33

இவற்றில் நந்தீசர் கலைக் ஞானம், நிகண்டு, கருக்கிடை, ஞான சூத்திரம் முதலிய நூல்கள் தாமரை நூலகத்தால் வெளியிடப் பட்டுள்ளன.

நந்தீசர் பெயரால் அற்புதமான நாடி சோதிட நூல் ஒன்று ஓலைச் சுவடிகளாக உள்ளது. நந்தி வாக்கியம் என்ற பெயரால் விளங்கும் சோதிட நூல்கள் மிகவும் பிரபலமானவை.

♦♦♦

Koviloor Digital Library

தன்வந்திரி

தேவர்களும் அசுரர்களும் அமுதத்திற்காகத் திருப்பாற் கடலைக் கடைந்த போது அமுத கலசத்துடன் தோன்றியவர். விஷ்ணுவின் அம்சம் என்பர்.

சட்டமுடன் தன்வந்திரி ஜாதிபேதம்
தகமையுள்ள மகாவிஷ்ணு என்னலாகும்
வட்டமுள்ள தலைமுறைகள் முப்பத்திரண்டு
வளமுடன் கண்டறிந்த நூலிதாமே.
போ. 7000/ 5701

என்றுபோகமுனிவர் சத்த காண்டத்தில் கூறுகிறார். மேலும் தொடர்ந்து ஐப்பசிமாதம் புனர்பூசம் நாலாங்காலில் பிறந்தவர் என்றும் கூறுகிறார்.

சத்தியுள்ள மகாவிஷ்ணு என்றே சொல்வர்.
தாரணியில் மானிடமாம் சித்து வாகும்
முத்திபெற ஐப்பசியாம் திங்களப்பா
முனையான புனர்பூசம் நாலாங்காலே. 5877

பாற்கடலில் தோன்றியவர் உலக வாழ்வின் நிமித்தம் தீர்க்கதமர் என்பவரின் புதல்வராய்ப் பிறந்து வைத்திய நூல்களை அருளினார் என்று கூறுவர்.

மறுபடியும் காசிராஜன் மகனாய்ப் பிறந்ததாகவும் பின்னர் தீர்த்த பசு என்பவரின் மகனாகப் பிறந்ததாகவும் கூறுவர். தீர்த்த பசுவின் மகன் சேதுமான். இவரே சுச்ருதருக்கு ஆயுள் வேதத்தை உபதேசித்தவர்.

வேறொரு வரலாறு தன்வந்திரி அனு என்ற அரசனின் மகனாகப் பிறந்து பரத்வாசரிடம் ஆயுள் வேதங் கற்று அதை எட்டு வகையாகப் பிரித்துத் தமது மாணாக்கர்களுக்கு உபதேசித்தார் என்று கூறுகிறது.

அகஸ்தியர் பனிரெண்டாயிரத்தில் தன்வந்திரி விஷ்ணு பகவானே என்றும் அவர் உலக நன்மைக்காக மானிடராகப் பிறந்தார் என்றும் கூறுகிறார்.

Koviloor Digital Library

மாச்சலென்ற தன்வந்திரி வளப்பங் கூறுவேன்
மன்னவனே முன்பிறப்பில் விஷ்ணு வென்பார்
பாச்சலுடன் இப்பிறப்பில் தன்வந்திரி தானும்
பாலகனே மானிடராய்ப் பிறந்தார் காணே.
12000/ 4 / 427

பூணவே யவர்தாதை தந்தை தாயும்
புகழ்பெறவே காயத்திரி நாமங் கொண்டு
வேணபடி தம்பூரு வீணை கீதம்
வித்தகனார் கையேந்தி யாசீர்மங்கள்
தோணவே கரபாச்திரங் கையிலேந்தி
தோற்றமுடங் யாசகங்கள் செய்தார் தானே. 428

தாமான சாத்திரத்தின் கியானரூபம்
சதகோடி சூரியர் போல் பிரகாசிக்க
கோமானாம் தன்வந்திரி பாலனுக்கு
கூறிய தோர் மூன்று லட்சங் கிரந்தம் தன்னை
சாமானிய மான தொரு பதினெண் பேர்கள்
சாற்றினா ருபதேசம் பலவாறாக
போமே தானிதிகாசங் கட்டறுத்து
புகட்டினார் தன்வந்திரி பாலனுக்கே. 431

முற்பிறப்பில் விஷ்ணுவாக இருந்தவர். மனிதனாகப் பிறந்தார். அவருடைய தந்தை கையில் தம்புராவுடன் பாடிச் சென்று யாசகம் எடுத்து வாழ்ந்தார். தன்வந்திரிக்கு உரிய காலத்தில் சகல சாஸ்திரங்களையும் கற்பித்தார். சித்தர்கள் பதினெட்டுப் பேருமே தன்வந்திரிக்கு உபதேசம் செய்தார்கள். மூன்று லட்சம் கிரந்தங்களையும் உபதேசித்தார்கள். கல்வியால் பெற்ற ஞானத்தால் தன்வந்திரி சூரியன் போல் பிரகாசித்தார் என்று அகத்தியர் கூறுகிறார்.

ஆயுள் வேதத்தின் தந்தை என்று கருதப்படும் தன்வந்திரி வடமொழியில் பல நூல்களைச் செய்துள்ளார். தமிழில் இவர் இயற்றியுள்ள நூல்கள்,

வைத்திய சிந்தாமணி	1200	நிகண்டு	300
வைத்திய காவியம்	1000	வைத்தியம்	208
நாலுகாண்ட ஜாலம்	800	தண்டகம்	140

Koviloor Digital Library

கலைக் ஞானம்	500	" சூத்திரம்	100
தைலம்	500	கருடாரூடம்	100
சிமிட்டுரத்தினச்சுருக்கம்	360	வைத்திய சிந்தா மணிச்சுருக்கம்	73
கருக்கிடை	300	செயநீர்	50
		முப்பு சூத்திரம்	48
		கலைக்ஞானம்	32

வைத்தியம் 1000, கலைக்ஞானம் 500, தைலம் 500, சிமிட்டு ரத்தினச்சுருக்கம், நிகண்டு, பாலவாகடம் முதலிய நூல்கள் தாமரை நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

தன்வந்திரி முனிவர் வைத்தீசுவரன் கோவிலில் சமாதி கொண்டிருப்பதாகக் கூறுவர்.

❖ ❖ ❖

Koviloor Digital Library

அசுவினி தேவர்கள்

தேவர்களுக்கு வைத்தியர்களான அசுவினி தேவர்கள் தன்வந்திரியிடம் பாடம் கற்றவர்கள். இவர்களையே அகத்தியர் தமது குருவாகக் கூறுகிறார்.

அசுவினி தேவர்கள் சூரியனின் புத்திரர்கள். குதிரை வடிவாக இருந்த சமுக்ஞா தேவியின் நாசித் துவாரங்கள் வழியாக இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தவர்கள் என்று புராணங்கள் கூறும். சியவன மகரிஷிக்கு இளமை அளித்தவர் என்றும் பாண்டுவின் மனைவியான மந்தரையிடம் நகுல சகாதேவர்களைப் பெற்றவர் என்றும் புராணங்கள் கூறும்.

✡ ✡ ✡

Koviloor Digital Library



அகத்தியர்- (ஓர் கற்பனை வடிவம்)

Koviloor Digital Library

சட்டைமுனி.சீர்காழி- ஓர் கற்பனை வடிவம்

இந்தநூலில் குறிப்பிடப்பட்டுள்ள மூலிகைகளின் பெயர்களும்
தொடர்புடைய மலைகள் சித்தர்களும்.

Koviloor Digital Library

அகத்தியர்

அகத்தியர் வரலாற்றினை எழுதப் புகுமுன் தமிழின் வரலாற்றையும் தமிழ்நாட்டின் வரலாற்றையுமே ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

அகத்தியர் வடநாட்டிலிருந்து வந்தவர். விந்திய மலையைக் கடந்து வந்தவர். அதாவது தமிழர்கள் ஆரியர்களால் விந்திய மலைக்குத் தெற்கே விரட்டியடிக்கப்பட்டு, ஆரியப் படைகளால் அம்மலையைக் கடந்து வர முடியாத ஒரு கால கட்டத்தில் அகத்தியர் தெற்கே வந்தார்.

இன்றைக்குச் சமார் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன், அரப்பா மொஹஞ்சதாரோ காலத்தில் தமிழர்கள் இமயம் முதல் குமரிவரை ஒரு குடைக் கீழ் ஆண்டு வந்தார்கள் என்பதும் இந்திய துணைக் கண்டம் முழுவதிலும் தமிழர்களே வாழ்ந்தார்கள் என்பதும் வரலாற்று ஆசிரியர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை.

அகழ் வாய்வு வல்லுநர்கள் அரப்பா மொஹஞ்சதாரோவில் தமிழர் பண்பாட்டுச் சின்னங்களே காணக் கிடக்கின்றன, அங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்பதில் ஐயமில்லை. அவை கி.மு. ஐயாயிரம் ஆண்டு கட்கு முந்திய கால கட்டத்தைச் சேர்ந்தவை என்று கூறுகின்றனர்.

ஆரியப் படையெடுப்பில் தமிழர்கள் தெற்கே விரட்டப்பட்டனர். வந்தவர்களான ஆரியர்கள் இம்மண்ணில் பிறந்தவர்களான தமிழர்களை எவ்வாறு வெல்ல முடிந்தது? தமிழர்கள் எதனால் தோல்வியுற்றுத் தெற்கு நோக்கி ஓடினர்?

இக்கேள்விகளுக்குப் பதில் வெளிப்படையாகத் தெரிந்ததே! ஆயினும் யாரும் அதைப்பற்றி எழுதவில்லை. கூறவில்லை.

தமிழர்கள் ஈட்டி, வேல், வாள் முதலிய போர்க் கருவிகளையே பெற்றிருந்தனர். கற்கள் மரங்களையும் பயன் படுத்தியிருக்கலாம். இக்கருவிகளை ஒருவன் ஒன்று தான் எடுத்துச் செல்ல முடியும். எதிராளியை நோக்கி எறிந்து விட்டால் பிறகு அவ்வீரன் வெறும் கையனாகி விடுவான். களத்தில் கிடக்கும் ஆயுதம் வேறேதாவது கிடைத்தால் தான் உண்டு.

Koviloor Digital Library

ஆனால் ஆரியர்கள் வில்களையும் அம்புகளையும் பயன் படுத்தினார்கள். ஒரு வில்லாளி பல அம்புகளை எடுத்துச் செல்லமுடியும். அவன் தேரில் செல்பவனாக இருந்தால் ஒரு ஆயுதக் கிடங்கையே தன் தேரில் எடுத்துச் செல்லமுடியும்.

அம்புகளில் நஞ்சு தோய்ந்த அம்புகள் உடம்பில் இலேசான கீறலை உண்டாக்கிவிட்டால் கூட எதிரி மரணமடைவான். அத்தகைய நஞ்சு தோய்ந்த அம்புகள், தீப்பந்தங்களைக் கொண்ட அம்புகள், வெடிகளைப் பொறுத்தப்பட்ட அம்புகள், ஒரே அம்பு எய்யப்பட்டவுடன் பலவாகப் பிரிந்து பலபேரைத் தாக்கும் படியாக அமைக்கப்பட்ட அம்புக் கட்டுகள் - இப்படிப் பலவகையான அம்புகளைப் பயன் படுத்தும் திறன் பெற்றவர்களாக வில் வீரர்கள் இருந்தார்கள். தவிர அம்போடு அம்பு தொடுத்து பாலம் அல்லது தடுப்புக் கட்டக் கூடிய முறைகளையும் வில் வீரர்கள் கற்றிருந்தார்கள். இத்தகைய போராளிகளுக்கு எதிரே தமிழ்வீரர்கள் நிற்க முடியாதது வியப்புக்குரிய தன்று.

இராமாயணத்தில் இராமன் ஒருவனாகக் கரதூஷணர்களோடு வந்த ஆயிரக் கணக்கான வீரர்களைக் கொன்று குவித்ததாக ஒரு கதை உண்டு. அது பொய் அன்று.

இன்றைக்கு அணு ஆயுத வல்லரசைப் பார்த்து மற்ற அரசுகள் அஞ்சுவதைப் போன்றே அன்றைய தமிழர்கள் ஆரியர்களைக் கண்டு அஞ்சியிருக்க வேண்டும். இராமாயணப் போர்களைப் பற்றிச் சற்று ஊன்றிக் கவனித்தால் இந்த உண்மை புலப்படும்.

ஆரியர்கள் வடக்கே ஒரு நிலையான அரசை அமைத்துக் கொண்டார்கள். தமிழர்கள் தெற்கே ஆண்டார்கள். ஆரியர்கள் தெற்கே வர முடியாதபடி விந்தியமலை ஒரு பெரிய தடையாக இருந்தது.

விந்திய மலைக்காடுகளில் மனிதரை அடித்துத் தின்னக் கூடிய காட்டு மிராண்டிகள் வசித்தார்கள். புராணங்கள் கூறும் அசுரர்கள் அவர்களாகவே இருக்கலாம்.

தமிழர்களை விரட்டி விட்டு ஒரு நிலையான அரசை ஏற்படுத்திக் கொண்டபின் ஆரியர்கள் தமிழர்களின் உயர்ந்த பண்பாடு, கலை கல்விச் சிறப்பு, மருத்துவம், வாதம், யோகம், ஞானம் முதலியவற்றில் தமிழர்கள் அடைந்திருந்த மேம்பாடு முதலியவற்றை அறிய வாய்ப்பு ஏற்பட்டது. தமிழர்களோடு தொடர்பு கொண்டு அவற்றைக் கற்றுக் கொள்ள

Koviloor Digital Library

விரும்பினர். தங்களில் மிகவும் புத்திசாலியும், மேதாவியும் சாதுர்யம் கொண்டவருமான அகத்திய முனிவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்கள்.

அகத்தியர் மித்திரா - வருணர்களின் வீரியத்தில் தோன்றி ஒரு குடத்திலிருந்து பிறந்ததாகப் புராணம் கூறும். சுப்பிரமணியரே கும்பமுனியே என்று அகத்தியரை அழைக்கிறார்.

மந்திரம் போற் கும்பமுனி மகனே ஐயா
மவுனமுட னொன்றிதுவே வாகாய் முற்றே.
சுப். ஞானம்

காதிலிருந்து (கர்ணன்) மூக்குத் துளைகளிலிருந்து (அசுவினி தேவர்கள்) தொடையிலிருந்து (வேனன்) கடைசியாகக் குடத்திலிருந்து (அகத்தியர்) இப்படியெல்லாம் பிள்ளைகள் உண்டாக்கப் புராணக் கதைகளால் மட்டுமே முடியும்.

புராணக் கதைகள் பொய்யானவை என்று சுப்பிரமணியர் கூறிவிட்ட பிறகு, அதைப்பற்றி ஆய்வு செய்வது வீண்வேலை. ஆரியரான அகத்தியமுனிவர் தெற்கே வரவேண்டியதற்கான காரணம் எப்படி ஏற்பட்டது என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

சிவபெருமான் உமாதேவி திருமண வைபவத்தைக் காண்பதற்காகத் தேவர்கள் ரிஷிகள் அனைவரும் வடக்கே இமயத்தில் வந்து கூடிவிட்டதால் வடக்கே தாழந்துவிட்டதாகவும் அதைச் சரிப்படுத்த அகத்தியர் ஒருவரே போதும் என்று தெற்கே அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறும் புராணக்கதை உண்மையாக இருக்க முடியாது. இந்தியா சீனாவில் உள்ள மக்கள் தொகை வடநாடான சைபீரியாவில் உள்ளதைப் போல் நூற்றுக் கணக்கான மடங்கு அதிகம், அதனால் சைபீரியா ஏற்றம் போல் மேலே தூக்கிக் கொள்ளவில்லை.

எனவே சிவபெருமான் திருமணக்கதையை விட்டு விடுவோம். சித்த மருத்துவ வளர்ச்சிக் குழுவின் உறுப்பினரான திரு. **N.** கந்தசாமி பிள்ளை அவர்கள் எழுதி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி டிபார்ட்மென்ட் வெளியிட்டுள்ள HISTORY OF SIDDHA MEDICINE சித்த மருத்துவ வரலாறு என்ற நூலில் எழுதியுள்ளதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

Koviloor Digital Library

It is a well known fact that the compiers of the Ayurveda and their patrons had sent men to the South and East to gather materials to be assimilated in their then proposed Ayurvedic system. The greatness of Tamilian culture in all its branches and their very high philosophy which guided their life were well known to the Aryans just arrived in the north. They wanted to enrich their culture by the assimilation of the highly civilized culture of the Tamilians, so, they sent the best of their men to gather materials from different sources. The man who was sent to the south i.e., Tamilnadu, was sage Agasthiya. This fact lies hidden in the story of the marriage between Siva & Uma.

ஆயுர்வேதத்தைத் தொகுத்தவர்களும் அவர்களுக்கு ஆதரவாக விளங்கியவர்களும் தங்களுடைய ஆயுர்வேத மருத்துவ முறையில் சேர்த்துக் கொள்ளத்தக்க விஷயங்களைச் சேகரிப்பதற்காகத் தங்களுடைய ஆட்களைத் தெற்கேயும் கிழக்கேயும் அனுப்பிவைத்தார்கள் என்பது நன்கு தெரிந்ததே. தமிழர் பண்பாடு அவர்களுடைய உயர்வான தத்துவக் கொள்கைகள், எல்லாம் வடக்கே வந்து சேர்ந்த ஆரியர்களுக்கு நன்கு தெரிந்திருந்தன. அவற்றைத் தங்கள் பண்பாட்டுடன் சேர்த்து வளமைப்படுத்திக் கொள்வதற்காகத் தங்களில் மிகச் சிறந்த ஒருவரைத் தென்னாட்டுக்கு அனுப்பி வைத்தனர். அப்படி அனுப்பப்பட்டவர் அகஸ்தியர். இந்த உண்மை சிவன் - உமை திருமணக் கதையில் மறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கந்தசாமிப் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்.

அகத்தியர் தனி ஒருவராக வரவில்லை. அவர் தலைமையில் பல ரிஷிகளும் அவர்களின் சீடர்களும் வந்திருக்க வேண்டும். பின் நிகழ்ச்சிகள் அதையே சுட்டிக் காட்டுகின்றன.

எவ்வாறு நோக்கினும் அகத்தியர் தமிழகத்திற்கு வந்தது அரப்பா மொஹஞ்சதாரோ காலத்திற்குப் பின்னர்த்தான். இராமாயண காலத்திற்குச் சற்று முன்னதாக என்று எடுத்துக் கொள்ளலாம்.

வாதாபி வில்வலன்

விந்திய மலைக் காடுகளில் வாதாபி வில்வலன் என்ற இரண்டு கொடிய அரககர்கள் வாழ்ந்தனர். மனிதர்களைத் தந்திரமாக

Koviloor Digital Library

வசப்படுத்திக் கொன்று தின்பது அவர்கள் தொழில். தங்களில் ஒருவனை ஆடாக மாற்றி அதைவெட்டிக் கொன்று வந்தவனுக்கு உணவு படைப்பான் வில்வலன் அவன் உண்டு முடிந்ததும் " வாதாபி வெளியே வா " என்று அழைத்தால் உணவாக வயிற்றுக்குள் சென்றவன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்துவிடுவான். பிறகு இருவருமாக வயிறு கிழிந்து இறந்து கிடப்பவனை அறுத்துத் தின்பார்கள், அப்படி ஒரு வரம் பெற்றிருந்தார்களாம் அவர்கள்!

இது தேவைதானா?

வில்வலன் அகத்தியருக்கு விருந்து வைத்தான். அகத்தியர் உண்டு முடித்தபிறகு " வாதாபி வெளியே வா " என்று அழைத்தான். பலமாக ஒரு ஏப்பம் விட்டு விட்டு அகத்தியர் "வாதாபி சீரணமாகி விட்டானே?" என்றார். (வரம் பலிக்கவில்லை) கோபம் கொண்ட வில்வலன் அகத்தியரைத் தாக்க அகத்தியர் அவன்மேல் பாசுபதாஸ்திரத்தை ஏவ, வில்வலன் அகத்தியருக்கு நிறையப் பொருள் கொடுத்து மன்னிப்புப் பெற்றுச் சென்றான்.

இதிலிருந்து ஆரிய ரிஷிகள் மாமிச உணவை விரும்பி உண்டார்கள். மனித இறைச்சியையும் விட்டு வைக்கவில்லை என்று தெரிகிறது.

வாதாபி வில்வலன் சகோதரர்கள் விந்திய மலைக்குத் தெற்கே அரசாண்ட மன்னர்களாக இருக்கவேண்டும். அகத்தியர் தன் மனைவி லோபா முத்திரைக்காக வில்வலனிடம் பொருள் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஆடாக மாற்றும் கதை வேண்டுமென்றே புனையப் பட்டதாக இருக்கவேண்டும்.

வில்வலன் தவிர, வதுவாதிபராசன், திராவிட பூபதி, கிருதபவன் என்பவர்களும் விந்திய மலைக்குத் தெற்கே அரசாண்ட மன்னர்கள் என்று தெரிகிறது. அகத்தியர் வில்வலனிடமிருந்து அவர்களுக்கும பொருள் பெற்றுக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

அகத்தியர் விந்திய மலையை எப்படிக் கடந்தார் என்பதைக் கதையாக மட்டுமே கூறப்பட்டுள்ளது. தங்களைத் தெற்கு நோக்கிச் செல்ல விடாத விந்திய மலையை ஆரியர்கள் மிகவும் வெறுத்தன. விந்தியன் மிகவும் கர்வம் கொண்டு ஆணவத்துடன் நின்றதாகக் கூறினர். இன்னொரு புராணக் கதை விந்தியனுடைய சிறகுகளை சிவபெருமானே வெட்டி வீழ்த்தியதாகவும் கூறும்.

Koviloor Digital Library

அகத்தியர் விந்திய மலையின் கர்வத்தை அடக்கியது

கோபமாக வளர்ந் தோங்கி முகடு மட்டும்
குடதிசைக்கே யோதாமல் சந்திராத்
சோபமாக வழிமறித்துக் கொண்டு நிற்க
சுருதி மறை வேதியர்கள் வானோர் எல்லாம்
தாபமாகச் சிவனருகே முறையிட்டார்கள்
தாழ்ச்சியாக விந்தகிரி தன்னால் என்றும்
ஆபமாக அகத்தியரைத் தாம் அழைத்து
அடக்கிடுவாய் நீ யென்று சிவன் சொன்னாரே.

போகர் 7000/ 2061

சூரிய சந்திரர்கள் கூட மேற்கே போக விடாமல் விந்திய மலை தடுத்துக் கொண்டு நிற்கிறது என்று தேவர்களும் ரிஷிகளும் போய்ச் சிவபெருமானிடம் முறையிட்டார்களாம். விந்தியமலை எவ்வளவு இடைஞ்சலாக இருந்துள்ளது என்பது இதிலிருந்து புரிகிறதல்லவா?

அகத்தியரே முதன் முதலாக விந்தியத்தைக் கடந்து தெற்கே வந்த ஆரியர், (அவரோடு பலரிஷிகளும், வீரர்களும் வந்திருக்கவேண்டும்.)

அகத்தியர் சிவபெருமானுடைய ஆசியுடனேயே வந்தார் என்பதை மறுக்கமுடியாது. சிவன் மைந்தரான சுப்பிரமணியர் அகத்தியரைச் சீடராக ஏற்றுக் கொண்டது அதை விளக்குகிறது.

தமிழர் கடவுளான சிவபிரான் அகத்தியருக்கு அனுகூலமானது எவ்வாறு?

சிவபெருமானும் ஆரியர்களும்

ஆரியர்கள் சிந்து கங்கைச் சமவெளியிலிருந்து தமிழர்களைத் தெற்கு நோக்கு விரட்டி விட்டார்கள். ஆனால் கயிலையில் வசித்த சிவபெருமானிடம் அவர்களுடைய கைவரிசை செல்லவில்லை, பூதகணங்களைப் படைகளாக உடைய சிவபெருமானை நெருங்கவே ஆரியப்படைகள் அஞ்சின.

அதனால் ரிஷிகள் ஒன்று கூடி ஒரு பெரிய யாகம் செய்து அதிலிருந்து கொடிய புலி, யானை, பாம்பு, எரியும் நெருப்பு, முதலானவற்றை அனுப்பினார்கள். சிவன் அவற்றை வென்று புலித் தோலை ஆடையாகவும், பாம்புகளை ஆபரணமாகவும் வடவாக்னியைக் கையிலும் ஏந்தி அடக்கிவிட்டார். ரிஷிகள் கடைசியாக ஏவிய நான்கு வேதங்களையும் காற் சிலம்புகளாக அணிந்து கொண்டார்.

Koviloor Digital Library

சிவனைத் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று அறிந்த ரிஷிகள் அவரைத் தம் கடவுளாக ஏற்றுக் கொண்டு சமாதானம் செய்து கொண்டனர். ஆரிய மன்னனான தட்சன் தன் பெண்களில் ஒருத்தியாகிய சதியை சிவபெருமானுக்கு மணம் செய்து கொடுத்து உறவேற்படுத்திக் கொண்டான்.

சிறிது காலத்திற்குப் பிறகு ஆரியர் ஆட்சி நன்கு வேரூன்றிக் கொண்டது என்ற துணிவேற் பட்டவுடன் தட்சன் சிவபெருமானை அழிப்பதற்காக ஒரு பெரிய யாகத்திற்கு ஏற்பாடு செய்தான். ஆரியர்களின் கடவுள்கள் எல்லோரும் அதில் கலந்து கொண்டார்கள். அதையறிந்த சதிதேவி துடித்தாள். எப்படியும் அந்த யாகத்தைத் தடுத்து விட வேண்டும் என்ற எண்ணத்துடன் புறப்பட்டாள்.

தட்சன் தன் மகளை ஏசினான். " சுடுகாட்டில் திரிபவனை மணந்து கொண்ட நீ வந்ததால் யாக சாலையின் புனிதத் தன்மை கெட்டுப் போய் விட்டது ஓடிப்போய் விடு " என்று விரட்டினான்.

யாகத்தை நிறுத்துவதற்கு வேறு வழியில்லை என்பதை உணர்ந்த தாட்சாயணி யாக குண்டத்தில் விழுந்து தன்னையே அழித்துக் கொண்டாள். யாகம் தடைப்பட்டது.

நடந்ததை அறிந்த சிவபெருமான் மிகவும் கோபம் கொண்டு வீரபத்திரனை அனுப்பினார். வீரபத்திரன் ஆரியர் கடவுள்களை வென்று தட்சன் தலையையும் வெட்டி யாக குண்டத்தில் போட்டுப் பொசுக்கி விட்டார்.

சிவபெருமானைத் தங்களால் வெல்லவே முடியாது என்பதை உணர்ந்த ஆரியர்கள் அவரைப் போற்றித் தொழுது அடியார்களாகி விட்டனர். தங்களுடைய புராணக் கதைகளான மச்சபுராணம், வராக புராணம், நரசிம்ம புராணம், வாமன புராணம் போன்றவற்றையும் சிவபெருமானுக்கே முதலிட மளிப்பவையாக மாற்றி விட்டார்கள்.

எல்லா மக்களையும் தம் மக்கள் போலவே பாவிக்கும் தமிழ்ப் பண்பால் சிவபெருமான் ஆரியர்களை ஏற்றுக் கொண்டார். ரிஷிகளும் சிவ பக்தர்களாய் மாறி விட்டார்கள். அவர்களில் அகத்தியரை சிவபெருமானுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனாலேயே அகத்தியரை தென்னாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

இங்கு பேரறிஞர் டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியிலிருந்து சில வரிகளை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

Koviloor Digital Library

விந்திய பர்வதத்தைச் சுற்றிலும் துங்கபத்திரா நதிக்கு வடபாரிசத்திலுள்ள வனாந்தரத்தில் அகஸ்தியர் நுழைந்து வந்ததன் பிறகே ஆரிய மக்கள் தென்னாட்டு எல்லையில் பிரவேசிக்க ஆரம்பித்தார்கள். ஆகவே ஆரியர்கள் அகத்தியரைத் தலைவராகக் கொண்டுதான் தமிழ் நாட்டை அடைந்ததாக எண்ணப்படுகிறது. தன்வந்திரி மாணாக்கரென்று கருதப்படும் இவ்வகத்தியர்தான் ஆயுள் வேதத்தையும் தென்னாட்டில் புகட்டினார் என்றும் கருதப்படுகிறது.

அகத்தியர் மலைகளைக் கடந்து வந்து கொண்டிருக்கும் போதுதான் பறக்கும் விமானத்தின் மூலமாக வந்த இராவணன் அவரைக் கண்டான். விமானத்திலிருந்து இறங்கி வந்து அவர் எதிரே நின்றான். அகத்தியர் தன்னை வணங்காதது அவனுக்கு ஆத்திரத்தை உண்டாக்கிற்று. இரண்டு பேரில் யார் பெரியவர் என்ற சர்ச்சை உண்டாயிற்று. இசைப் போரில் அகத்தியர் இராவணனை வென்றார். இராவணன் அகத்தியரை வாழ்த்தி விடை பெற்றுச் சொன்றான். இது கதை!

அகத்தியர் மேலும் தெற்கு நோக்கி நடந்து குடகு மலையை அடைந்தார். காவிரி ஆறு உற்பத்தியாகும் அழகான இடத்தைக் கண்டார். அங்கே தவம் செய்து கொண்டிருந்த ஒரு முனிவரின் மகளான லோபா முத்திரையை மணம் செய்து கொண்டார். (லோபா முத்திரை புலத்தியரின் தங்கை என்றும் கவேரன் என்பான் மகளாகையால் காவேரி எனப் பெயர் பெற்றாள் என்றும் விதர்ப்ப தேசத்தரசன் பெண் என்றும் பல கதைகள் உண்டு).

அகத்தியர் தன்மனைவியுடன் சிறிது காலம் அங்கே தங்கியிருந்தார். அக்காலத்தில் அவருடன் வந்திருந்த ரிஷிகளும் வீரர்களும் தமிழகத்தில் சென்று அங்குள்ள சூழ்நிலையை அறிந்து வந்தனர். சிவபெருமானால் அனுப்பப்பட்ட முனிவர் தமிழகத்திற்கு வருகிறார் என்றால் தமிழ் மக்களிடையே ஏற்பட்ட ஆர்வத்திற்குக் கேட்கவும் வேண்டுமா? தமிழரிடையே எப்படி எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையெல்லாம் அகத்தியர் தம் சீடர்களுக்கு நன்றாகவே அறிவுறுத்தி யிருக்கவேண்டும்.

பொதுவாகத் தமிழர்கள் புலால் உண்டபோதிலும் சைவத்திற்கே அதிக மதிப்புக் கொடுத்தார்கள். கொல்லாமை, புலால் உண்ணாமை, குறிப்பிட்ட காலங்களிலேனும் மது உண்ணாமை என்ற சிறந்த பழக்கங்கள் தமிழரிடை இருந்தன. தவிர தமிழ்க் குலப் பெண்டிர்

Koviloor Digital Library

கற்ப! நெறியில் சிறந்து விளங்கினர். இந்தப் பண்புகளை மதித்து நடக்கும்படி அகத்திய சீடர்கள் அறிவுறுத்தப் பட்டிருந்தனர்.

மேலும் தமிழ் மக்களுக்கு மருத்துவம் செய்தும், வேறுபல உதவிகளைப் புரிந்தும் சீடர்கள் ஒரு நல்ல எண்ணத்தை உண்டாக்கினர். வெள்ளைத் தோல் படைத்த ஆரியர்கள் மிகவும் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் தமிழர்களிடையே ஏற்பட்டது. இந்த எண்ணம்தான் பிற்காலத்தில் ஆரியர்கள் பெரிய அளவு கூட்டம் கூட்டமாகத் தமிழ்நாட்டில் குடியேறவும் அரசர்களிடம் மான்யங்களாக நிலங்களைப் பெற்று வசதியோடு வாழவும் உதவியது. அதோடு நிற்கவில்லை. வெள்ளைத் தோல் படைத்த ஆரியர்கள் தங்களை விட மேலான குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதித் தமிழர்கள் அவர்களுக்கு மரியாதை செலுத்தவும் ஆரம்பித்து விட்டார்கள்.

வெள்ளையர்கள் இந்திய நாட்டில் குடியேறுவதற்கு முன்னர் பாதிரிகளையும் தவ மகளிரையும் (NUNS) அனுப்பி மதப் பிரசாரம் செய்தும், பள்ளிக்கூடங்கள் கட்டியும், மருத்துவ விடுதிகள் ஏற்படுத்தியும் ஆங்காங்கு வாழ்ந்த மனித சமுதாயங்களின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்றார்கள் அல்லவா? அதே போன்ற நிகழ்ச்சிதான் இது.

காவிரி தோன்றும் குடகு மலையிலிருந்து புறப்பட்ட அசத்தியர் நேராகச் சுப்பிரமணியரிடம் சென்று தமிழ் கற்றுக் கொண்டார். மொழியை அறிந்தால் மட்டுமே மக்களிடம் கலந்து பழக முடியும். அவர்கள் அன்பைப் பெறவும் முடியும் என்பதை அகத்தியர் நன்கு அறிந்திருந்தார்.

அகத்தியர் வருவதற்குமுன் தமிழே இல்லை என்பது போலும் அவர்தான் தமிழை உண்டாக்கினார் என்பது போலும் கதைகள் கட்டி விடப்பட்டிருப்பது கொடுமையிலும் கொடுமை!

அகத்தியர் நைமிசாரண்ய முனிவர்களிடம் கோபித்துக் கொண்டு வந்தாராம். பொதிகையில் குமரக் கடவுளைத் துதிக்க முருகன் அவர் இருக்குமிடத்தில் ஒரு மணத்தை உண்டாக்கினாராம். அகத்தியர் அதனைத் தம் கையில் எடுக்க, அதன் பரிமளத்தைக் கண்டு தமிழ் என்ன - அது முதல் என்ற மொழி உண்டாயிற்றாம் - அபிதான சிந்தாமணி இவ்வாறு கூறுகிறது.

அகத்தியர் தெற்கு நோக்கி வருவதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இருந்தது. அதுதான் உண்மை?

Koviloor Digital Library

சுப்ரமணியர் அகத்தியருக்கு ஞானத்தை உபதேசித்தார். தமிழ் மொழியால் உபதேசித்தார். அதனால் அகத்தியர் சுப்பிரமணியரிடமிருந்து தமிழையும் ஞானத்தையும் கற்றுக் கொண்டார்.

அகத்தியரே கூறுகிறார்.

ஒண்ணாது இன்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
உத்தமனே புலஸ்தியரே சொல்லக்கேளும்
நண்ணமுடன் வடிவேலர் தம்மிடத்தில்
நாட்டமுடன் வெகுகாலம் அடுத்திருந்தேன்
கண்ணபிரான் பெற்றதுபோல் அடியேன் தானும்
காசினியி லுபதேசம் பெறவே வந்தேன்
வண்ணமுடன் நாதாந்த சித்து தாமும்
வணக்கமுடன் வேலவரைக் கேட்டார் தாமே.

அ. 12000 - 1 / 258

அகத்தியர் சுப்பிரமணியரை நெடுங்காலம் அடுத்திருந்ததாகக் கூறுகிறார். கண்ணபெருமான் உபதேசம் பெற்றதைப்போல் நானும் தங்களிடம் உபதேசம் பெறவே வந்தேன். எனக்கு உபதேசம் செய்தருள வேண்டும் என்று வணக்கத்துடன் கேட்டுக் கொண்டார்.

கேட்டவுடன் அடியேன்மேல் மனதுவந்து
கேள்வியின் உத்தாரச் சொற்படிக்கி
நீட்டமுடன் ஞானோப தேசந் தன்னை
நெடுங்காலம் போதிப்பேன் என்று சொல்லி
வாட்டமுடன் வடிவேலர் சந்தோஷித்து
வாகுடனே அகத்தியர்க்கு வுபதேசங்கள்
கூட்டமுடன் நந்தீசர் முன்னதாக
கூறுவார் உபதேசம் கூறுவாரே. 259

சுப்பிரமணியர் மனம் மகிழந்தவராக அகத்தியருக்கு நெடுங்காலம் உபதேசித்தார். எழுத்துக்கு முதல்வனாக விளங்கும்படியாக அவ்வளவு தெளிவாக உபதேசித்தார். சகல கலைக் ஞானங்களையும் உபதேசித்தார். நந்தீசரையும் அருகில் வைத்துக் கொண்டு உபதேசித்தார். அதனால் அகத்தியர் சகல கலைகளிலும் வல்லவராக உயர்ந்த ஞானவானாக விளங்கினார்.

அகத்தியரால் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியக் கண்டம் முழுவதிலுமே ஒரு கலாச்சாரப் பிரளயமே ஏற்பட்டது எனலாம். வடக்கும் தெற்கும் ஒன்றுடனொன்று கருத்துகளை பரிமாறிக்

Koviloor Digital Library

கொண்டு முன்னேறிய போதிலும், பிற்காலத்தில் ஆரியர்கள் சமஸ்கிருத மொழியே முதல் மொழி என்பது போலும் அதிலிருந்துதான் மற்ற எல்லாம் தோன்றின என்பது போலும் எழுதி வைத்துக் கொண்டார்கள். ஆரிய இனம் மேலினமாக ஒப்புக் கொள்ளப்பட்டதால் அது எளிதாக முடிந்தது. ஆயினும் இந்திய நாடு முழுவதிலும் ஆரிய தமிழ் இனங்களிடையே சமரச மனப்பான்மையும் இணைந்து வாழும் பண்பும் ஏற்பட்டன. மொத்தத்தில் ஒரு கலாச்சாரப் பிரளயத்துக்கு இது வழி கோலியது எனலாம்.

பாண்டிய நாட்டில்

அகத்தியர் அதன்பின் பாண்டிய நாட்டை யடைந்தார். அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட காய்சின வழுதி என்னும் மன்னன் அகத்தியரைத் தம் அவையில் சேர்த்துக் கொண்டான். அகத்தியர் அக்காலத்திலிருந்த முதல் தமிழ்ச் சங்கத்திலும் இடம் பெற்றதோடு பிறகு அதன் தலைவராகவும் ஆனார்.

இக்காலத்தில் தான் பிரளயம் ஏற்பட்டு மதுரையும் குமரியாற்றை அடுத்திருந்த நாற்பத்தொன்பது சிறு நாடுகளும் கடலால் கொள்ளப்பட்டு அழிந்தன. இந்தப் பிரளயத்தைப் பற்றியே அகத்தியர் தமது பெருநூல் காவிய பனிரெண்டாயிரம் முதல் காண்டத்தில் குறிப்பிடுகிறார்.

தைத்ததொரு நூலெல்லாம் பிரளயத்தில்
தாரணியில் மிதந்துவிடக் கண்டோர் தாமும்
நைத்ததொரு பெருநூல்கள் கருவியெல்லாம்
நலமாக மிதந்துவிடக் கண்டிட்டோமே. 271

பிரளயம்

அந்தப் பிரளயத்தில் மிக முக்கியமான சுருதிபொருளான நூல்கள் எல்லாம் மறைந்து போய்விட்டன. கடலோரத்தில் மிதந்த நூல்களை மட்டும் பொறுக்கிக் கொண்டு வந்து அவற்றின் கருத்துகளை அறிந்தோம் என்கிறார்.

துண்டிதமாய்ச் சிலநூல்கள் சாகரத்தில்
சுருதி பொருளானதுவும் மறைந்து போச்சு
அண்டியே கடலோரம் மிதந்த நூல்கள்
அகப்பட்ட மட்டுமல்லோ அறிந்தோம் யாமே. 272

அகத்தியர் அதன்பின் தாம் பொதிகை சென்றதையும் மற்ற சித்தர்கள் வந்து வரவேற்றதையும் அவர்கள் செய்த நூல்களைச்

Koviloor Digital Library

காண்பித்ததையும் கூறுகிறார். அந்த நூல்களில் குறைகள் இருந்ததால் தாமே ஒரு குற்றமற்ற நூலை இயற்றியதாகவும் கூறுகிறார்.

பொதிகைமலையில்

அவருக்குப் பல சீடர்கள் ஏற்பட்டனர். அகத்தியருக்கு வைத்தியர் என்ற முறையில் ஒரு தனிச் சிறப்பு ஏற்பட்டிருந்தது. நாடெல்லாம் அவருடைய வைத்தியத் திறமையின் புகழ் பரவியிருந்தது. கும்ப முனி, ஏருமுனி, பொதிகைமுனி, தமிழ்முனி, என்ற சிறப்புப் பட்டப் பெயர்களும் அவருக்கு ஏற்பட்டன.

ஆனால் அகத்தியர் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய சீடர்களும் அபிமானிகளுமான பலர் அகத்தியர் என்றே பெயர் வைத்துக் கொண்டு வைத்தியம் செய்தனர். நூல்களையும் இயற்றினர். பிற்காலத்திலும் பலர் அகத்தியர் என்ற பெயரால் நூல்களை இயற்றிச் சேர்த்து விட்டனர். இது மறுக்க முடியாத உண்மை.

ஏனென்றால் அகத்தியர் பெயரால் வெளிவந்துள்ள நூல்கள் ஒன்றுக்கொன்று முரணான மொழிவழக்கு, நடை முதலியன உள்ளனவாகவும் கருத்திலும் முரண்பாடுகள் உள்ளனவாகவும் இருக்கின்றன. எடுத்துக் காட்டுகள் வேண்டுமென்றால் நூற்றுக் கணக்கில் காட்டலாம்.

தவிர ஒரே பொருள் பற்றப் பல நூல்கள் ஒன்றுக்கொன்று மாறான முறைகளைச் சொல்லக் கூடியவையாகவும் உள்ளன. அகத்தியர் பெயரால் வழங்கும் வைத்திய நூல்களுக்குக் கணக்கே இல்லை.

அகத்தியர் தாம் வடக்கே இருந்து கொண்டு வந்த ஆயுர் வேதத்தையும் தமிழ்ச் சித்தர்களின் மருத்துவத்தையும் ஒன்றுகலக்க முயன்றதால் ஏற்பட்ட குளறுபடிகள் தான் அதற்குக் காரணம். ஒரு சமயம் வைத்தியமே தலை பிறழ்ந்து போய் விடக்கூடிய அபாயமும் ஏற்பட்டதெனலாம்.

இங்கு பேரறிஞர் டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் குறிப்பிட்டுள்ள சில வரிகளை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

> *அகத்தியர் மூலமாய் ஆரிய மக்கள் இத்தென்னாட்டுக்கு வந்த பிறகுதான் இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் பாஷையும் தமிழ் நூற்களும் வடமொழியில் கலக்கப்பட்டுச் சீர் குலைந்த தென்பதை இவ்விடம் குறிக்கற் பாலது.*

Koviloor Digital Library

நாதரிஷி

அகத்தியர் சுப்பிரமணியரிடம் கற்றுக் கொண்ட உண்மைகளை நூல்களாக எழுதிவெளியிட்டார். அவர் எழுதிய நூல்களை நாதரிஷி என்பவர் தன் விருப்பத்திற்கு தாறுமாறாக எழுதி வெளியிட்டு விட்டார். அதை அறிந்த அகத்தியர் நாதரிஷியை அழைத்தார். "நீ தவறாக நூல்களை வெளியிட்டதால் உனக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் தீராமலே போகட்டும் " என்று சபித்து விட்டார்.

நாதரிஷி அகத்தியரின் கால்களில் விழுந்து அழுதார். சாபவிமோசனம் கேட்டார்.

"என்னுடைய நூல்கள் சங்கப் பலகையாக மிதந்து வரும் காலத்தில் நீ அவற்றை அடைந்து சந்தேகம் தெளிவாய்", என்று அகத்தியர் சாபவிமோசனம் அருளினார்.

நாதரிஷி பல காலம் நூல்களைத் தேடி அலைந்தார். வெகு காலத்திற்குப் பிறகே அவருக்குச் சாப விமோசனம் கிடைத்தது.

வேளாள அகத்தியர்

அகத்தியர் காலத்திலேயே அகத்தியர் பெயரால் பலர் நூல்களை வெளியிட்டனர் என்று கூறினோம். பிற சித்தர்கள் எழுதிய நூல்களும் அகத்தியர் பெயரால் வழங்கப்பட்டன.

அப்படித் தோன்றிய அகத்தியர்களில் ஒருவர் வேளாள குலத்தில் தோன்றிப் புகழ் பெற்று விளங்கினார். அவரைப் பற்றியே போகர் குறிப்பிடுகிறார்.

தேனான அகத்தீசர் சாதிபேதம்
கொற்றவனே வேளாளன் என்னலாகும். 5903

சிறந்ததொரு அகத்தீசர் உதித்த நேர்மை
சிறப்பான தனுர் மாதம் என்னலாகும்
துறந்ததொரு ஆயில்யம் மூன்றாம் காலாம்
துப்புர வாய் அவர் பிறந்த நாளுமாச்சே. 5882

என்றும் போகர் கூறுவார்.

Koviloor Digital Library

வேளாளர் குலத்தில் மார்கழி மாதம் ஆயில்ய நாளில் பிறந்த இந்த அகத்தியர் மற்ற அகத்தியர்களை விட மிகவும் சிறப்பு வாய்ந்தவராக இருந்திருக்க வேண்டும்.

குற்றாலநாதர்

அகத்திய முனிவரைப் பற்றி எத்தனையோ கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் குற்றாலநாதரை உண்டாக்கியதும் ஒன்று.

அக்காலத்தில் குற்றாலத்தில் ஒரு விஷ்ணுவின் ஆலயமே இருந்தது. வைணவர்களின் மதவெறி எல்லோருக்கும் தெரியும். விஷ்ணுவின் ஆலயத்திற்குள் விபூதி பூசியவன் நுழையவே அனுமதிக்க மாட்டார்கள்.

அகத்தியர் குற்றாலத்திற்கு வந்ததும் விஷ்ணுவின் ஆலயத்திற்குள் செல்ல விரும்பினார். அங்கிருந்த வைணவர்கள் அவரைத் தடுத்து விட்டார்கள்.

அகத்தியர் மீண்டும் அருவிக்குச் சென்று குளித்து விட்டுப் பட்டை பட்டையாக நாமம் தீட்டிக் கொண்டு ஆலயத்திற்கு வந்தார். வைணவர்கள் தடுக்கவில்லை. உள்ளே சென்றதும் விஷ்ணு பகவான் தலைமேல் கையை வைத்து, "நமசிவாய நமசிவாய " என்று சொல்லி அழுத்தினார். விஷ்ணுவின் சிலை குறுகி லிங்கமாகி விட்டது. உடனே அங்கிருந்த பட்டர்களைப் பார்த்து, " சிவாலயத்தில் உங்களுக் கெல்லாம் என்ன வேலை? ஓடிப் போய் விடுங்கள் ", என்றார்.

வைணவர்கள் திடுக்கிட்டனர். ஆனால் அவர்கள் வணங்கிய விஷ்ணுவே சிவபெருமானாகி விட்ட பின்னர் செய்வதற்கு என்ன உள்ளது? அன்று முதல் அது சிவாலயமாகி விட்டது.

சந்நதிக்குப் பின் புறம் சிதம்பர சக்கரத்தையும் அகத்தியர் ஸ்தாபித்து வைத்ததாகச் சொல்லப்படுகிறது.

குற்றாலநாதர் ஆலயத்தில் விஷ்ணுவுக்குத் தனி சந்நிதி இருந்ததாகவும் பிற்காலத்தில் அது நீக்கப்பட்டிருக்கலாம் என்றும் தல ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நடராஜர் ஆலயங்களில் விஷ்ணுவுக்குத் தனி சந்நிதி அமைப்பது வழக்கம் தில்லையிலும் திருநெல்வேலியிலும் உள்ளன. குற்றால நாதர் ஆலயத்தில் இப்போது வெஞ்சன அறையாக இருப்பதே விஷ்ணுவின் கருவறையாக இருந்திருக்கும் என்றும் கருதப்படுகிறது.

Koviloor Digital Library

தைலக் கிணறு

நாங்குனேரியில் உள்ள பெருமாள் ஆலயத்தில் உள்ள எண்ணெய்க் கிணறு அகத்தியரால் உண்டாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இன்னும் சுற்று வட்டாரத்தில் உள்ள பல ஊர்களில் அகத்தியருடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

கும்பேசுவரர் கோவிலில்

அகத்தியர் அனந்த சயனம் என்ற தலத்தில் சமாதியடைந்திருப்பதாகக் கூறுவர். அனந்தசயனம் என்பது திருவனந்தபுரம் அனந்த பத்ம நாபசுவாமி கோவிலாக இருக்கலாம், ஆயினும் சிலர்,

அகத்தியர் கும்பகோணத்தில் உள்ள கும்பேசுவரர் கோவிலில் சமாதி கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

இன்னும் அவர் பொதிகை மலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே நினைப்பவர்களும் உண்டு.

அகத்தியர் பெயரால் வழங்கும் நூல்கள்

அகத்தியர் பெயரால் ஏராளமான நூல்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் சில.

பெருநூல்	12000	பரிபாஷை	500
மணி	4000	ஜால சூத்திரத் திரட்டு	500
அதன் சூத்திரம்	2000	ஞானம்	500
திருமந்திரம்	1500	இரண வாகடம்	500
வைத்திய காவியம்	1500	வைத்தியம்	500
அமுதகலைக் ஞானம்	1200	பூரணம்	400
ஆயுள்வேதம்	1200	கௌமதி	400
சௌமிய சாகரம்	1200	எடைபாகம்	400
வாத சௌமிய சாகரம்	1200	சம்ஹாத சாதாக்கியம்	400
இலக்க " "	1200	வைத்திய ரத்தினச் சுருக்கம்	360

Koviloor Digital Library

யோக " "	1200
ஞான " "	1200
பரிபூரணம்	1200
நாலுகாண்ட வைத்தியம்	1200
வகார ஜாலம்	1200
ஐந்து காண்ட வைத்தியம்	1200
ஆறு காண்ட சத்தி ஜாலம்	1200
ஏழு காண்ட சிவ ஜாலம்	1200
பனிரெண்டு வைத்திய நிகண்டு	1200
வைத்தியத் திரட்டு 2 காண்டம்	1000
வைத்திய காவியம்	1000
வாத காவியம்	1000
ஞான காவியம்	1000
பூரண காவியம்	1000
மாந்திரிக காவியம்	1000
பஞ்சகாவிய நிகண்டு	800
திராவகம்	600
வல்லாதி	600
பாண்டு வைப்பு	600
குருநூல் முப்பு சிந்தாமணி	600
நாடி நடுக்காண்டம்	600
" கடைக்காண்டம்	600
அமுதகலைக்ஞானம்	120
மனோன்மணிதீட்சை	120
நிகண்டு சூத்திரம்	116
நாடிப் பரீட்சை	100
சகலகலைக்ஞானம்	100
குருமுறை சூத்திரம்	100
ஞானம்	100
கற்பமுறை	100
சிவயோகம்	100
குருமுடிப்பு	100
வைத்திய சதகம்	100
வகாரச் சுண்ணம்	100
கேசரி	100
செந்தூரம்	300
பாலவாகடம்	300
அட்டகருமம்	300
கனகமணி	300
கன்மகாண்டம்	300
" சூத்திரம்	300
தத்துவம்	300
தர்க்கம்	300
விஷ வைத்தியம்	250
குருநாடி	235
பூரண சூத்திரம்	236
பூரணம்	205
வகார சூத்திரம்	200
நயன சாத்திரம்	200
தீட்சாவிதி	200
பூஜாவிதி	200
தர்க்கபரிபூரணம்	200
சௌமியச் சுருக்கம்	150
சரக்குச் சுத்தி	150
வைத்தியம்	150
தைலம்	150
பட்சணி	130
குருநாடி	130
வைத்தியக் கோவை	130
குணவாகடம்	130
பிள்ளைத்தமிழ்	100
அனற்கிரியை	53
உட்கருச் சூத்திரம்	50
வெளிக்கருச் சூத்திரம்	50
சரநூல்	50
குழம்பு	50
நாற்பத்து முக்கோண பூஜாவிதி	50
சரக்கு வைப்பு	50
குருநூல் முப்பு	50
" சூத்திரம்	50

Koviloor Digital Library

காவியச் சுருக்கம்	100	மெய்ச்சுருக்கம்	50
		வைத்திய வெண்பா	50

இவை தவிர இன்னும் பல நூல்கள் வைத்திய சில்லறைக் கோவை, யோக ஞான சாஸ்திரத் திரட்டு பத்தாம் பாகத்தில் உள்ளன. பல நூல்கள் நாஞ்சில் நாடு திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ளவர்களிடம் அச்சேறாத ஓலைச்சுவடிகளாக உள்ளன. வெளியே தெரியாமல் குகையில் மறைக்கப்பட்டுள்ள நூல்கள் பல இருப்பதாகவும் கூறுகின்றனர்.

✖ ✖ ✖

Koviloor Digital Library

புலத்தியர்

புலத்தியரே அகத்தியரின் முதன் மாணாக்கர்.

புராணங்கள் கூறும் புலத்திய மகரிஷி இராவணனின் பாட்டனார். பிரம்மதேவரின் காதில் பிறந்தவர். திரணபிந்து என்ற மன்னனின் மகள் ஆவிர்ப்பூவை மணந்தவர். இவர் மகன் விசிரவசு. விசிரவசுவின் பிள்ளைகள் இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பநகை. புராணக் கதையை விட்டுவிடுவோம்.

சித்தான இன்னமொரு மார்க்கம் பாரு
சீருள்ள புலிப்பாணி மைந்தா கேளு
புத்தியுள்ள புலஸ்தியனார் பிறந்த நேர்மை
பூதலத்தில் எவராலும் கூறப்போமோ
முத்திதரும் ஆவணியாம் திங்கள் தன்னில்
முனையான அனுஷமாம் நாலாங் காலில்
பக்தியுடன் பிறந்தாரே புலத்தியர் தானும்
பாரினிலே வந்துதித்த உருவு மாச்சே. 5899

உருவான புலஸ்தியரின் மார்க்கம் கேளு
ஓகோகோ நாதாக்கள் அறிந்த தில்லை
கருவான தேவரிஷி தன் வரத்தால்
கமலமுனி தன் வயிற்றில் பிறந்த பேரன்
திருவான அகஸ்தியருக்கு உகந்த சீடன்
தீர்க்க முள்ள சிவராஜ புனித யோகன்
பருவான திருமந்திர உபதேசந்தான்
பாருலகில் புலஸ்தியர் என்றறையவாமே. 5900

போகர் ஏழாயிரத்தில் புலஸ்தியர் கமல முனியின் பேரன் என்றும் ஆவணி மாதம் அனுஷ நட்சத்திரம் நாலாம் காலில் பிறந்தவர் என்றும் கூறுகிறார். வரம் செய்து பெற்றபிள்ளை, அகத்தியருக்குப் பிரியமுள்ள சீடன், சிவராஜ யோகி, திருமந்திர உபதேசம் பெற்றவர் என்றெல்லாம் மேலும் விளக்கமாகக் கூறுகிறார் போகர்.

காணவே இன்ன மொரு மார்க்கம் சொல்வேன்
கருவான புலஸ்தியரின் மரபே தென்றால்

Koviloor Digital Library

தோணவே சிங்களவ ஜாதியாகும்
தோறாமல் தலைமுறைகள் எட்டதாகும். 5710

என்றும் கூறுகிறார்..

புலஸ்தியர் அகத்தியரின் மகன் என்று சித்த மருத்துவ வரலாறு (History of Siddha Medicine) எழுதியN. கந்தசாமி பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளது தவறு. சித்தர்கள் தங்களுக்குப் பிரியமான சீடரை மகன் என்றே குறிப்பிடுவது வழக்கம். சீடரும் குருவைத் தந்தை என்றே குறிப்பிடுவார்.

இவரைப் பற்றி டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் கூறப்பட்டுள்ளதைக் கீழே தருகிறோம்.

புலத்தியன் - அகத்தியர் சீடர். சிவராஜ யோகத்தில் சிறந்தவர். திருமந்திரத்துக்குக் காரணமானவர். இவர் அகத்தியருக்கு உகந்த சீடர். இவருக்கு சிவராச யோகி என்று பெயர். இவர் சீனபதி கடலோரத்தில் சில நாள் தங்கியிருந்து பிறகு தேரையரோடு பொதிகை மலைச் சாரலில் வந்து சமாதி புகுந்தார். பிறகு சிலகாலம் சென்று வெளியே வந்து தேரையருக்குப் புத்தி சொல்லி மறுபடியும் தேகத்தை மறந்து சமாதி புகுந்தார்.

இவர் சமாதி பொதிகை மலைச்சாரலில் பாபநாசத்தில் இருப்பதாகக் கூறுவர். ஆவுடையார் கோவிலிலும் சமாதியடைந்ததாகக் கூறுவார்கள்.

புலஸ்தியர் இயற்றிய நூல்கள்

வைத்திய வாதம்	1000
வாத சூத்திரம்	300
கற்பசூத்திரம்	300
ஞான சூத்திரம்	216
வைத்தியம்	100
வாதம்	100
வழலைச் சுருக்கம்	13

❀❀❀

Koviloor Digital Library

தேரையர்

அகத்தியரின் சீடர்களில் புகழ் வாய்ந்தவர் தேரையர். ஆயுர் வேதத்தின் தூண்களான இவர்கள் சித்த வைத்தியர்களாகவே தமிழகத்தில் பேசப்படுகிறார்கள். உண்மையான சித்தர்களின் முறைகளை அடியோடு பின் தள்ளிவிட்டு இவர்களுடைய வைத்திய முறைகளையே சித்த வைத்தியர்கள் பெரும்பாலும் பின்பற்றி வருவதும் வியப்புக்குரிய ஒன்று.

அகத்தியரும் தேரையரும் மருத்துவம் பற்றி ஏராளமான நூல்களைச் செய்தனர். எளிய வைத்திய முறைகளைச் சொல்லினர். இந்த முறைகள் எளிதாக இருந்ததால் அவற்றைப் பின்பற்றும் வைத்தியர்கள் பலபேர் உண்டாயினர். கட்டு என்றும் களங்கு என்றும் செந்தூரம் என்றும் பஸ்மம் என்றும் சொல்லிக் கொள்ளும் சித்த மருத்துவர்கள் எங்காவது இங்கொருவர் அங்கொருவர் ஆதரவில்லாமல் நலியலாயினர். இதுதான் பதினைந்தாம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டில் மருத்துவர்களின் நிலை.

அகத்தியரும் தேரையரும் வைத்தியத்தைத் தான் முக்கியமாகக் கருதினார்களே தவிர வாதத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சித்தர்கள் அனைவரும் வாதத்துக்கே முக்கியத்துவம் அளித்தனர். சித்தர்களைப் பற்றிச் சரியான ஆய்வு மேற்கொள்ளப்படும் பொழுது இந்த உண்மை புலப்படும்.

அகத்தியரும் தேரையரும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் பிற்காலத்தில் தேரையர் என்ற பெயரில் புகழ் பெற்று விளங்கிய வைத்தியர் ஒருவர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

புதுடெல்லியில் உள்ள மைய ஆயுர்வேத சித்த ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள தேரையர் சேகரப்பா என்ற நூலில் தேரையரைப் பற்றிச் சிறிய வாழ்க்கைக் குறிப்பு ஒன்று காணப்படுகிறது.

இந்நூலாசிரியரான தேரையர் பழந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் " தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோர்

Koviloor Digital Library

உடைத்து " என்று ஔவை மூதாட்டி கூறும் சிறப்புடைய தொண்டை நாட்டிலே சற்றேறக்குறைய ஐநூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்திருந்தவராவார் என்பது மருத்துவ அறிஞர் கருத்தாகும். இவர் தம் ஊர் பாலாற்றின் வடகரையிலுள்ளதான திருமலைச் சேரி என்பதாம். தந்தையார் நம் பூபதி என்னும் பெயரினராவார்.

தேரையர் தம் இளமையிலேயே முத்தமிழும் சோதிடமும் பிறபல கலைகளும் பல மொழிகளும் கற்றுத் தேர்ந்து தொண்டை நாட்டு மன்னரிடம் பரிசிலும் வரிசைகளும் பெற்றுப் புகழ் பெற்று வாழ்ந்தார். மேலும் கூரத்தில் தரும சௌமியர் என்னும் புத்த ஆசிரியரிடம் மருத்துவம் பயின்று சித்த மருத்தவராகவும் விளங்கினார்.

பழம் பாடலொன்று தேரையரியற்றிய நூல்களாகப். பின்வரும் பட்டியலைத் தருகின்றது.

1. சிகாமணி வெண்பா
2. நிகண்டு
3. சேகரப்பா
4. காப்பியம்
5. தரு
6. அந்தாதி
7. மருத்துவப் பாரதம்
8. வண்ணம்
9. நான்மாலை
10. யமக வெண்பா
11. எதுகை வெண்பா
12. கரிசல்

தேரையர் யமக வெண்பா இரண்டாம் பாகத்திற்கு எழுதிய முன்னுரையில் டாக்டர் ஆர். தியாகராசன் அவர்கள் தேரையரைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்.

இந்நூலின் ஆசிரியர் தேரையர். இவ்வாசிரியர் தம் பெயரைத் தேரன் எனத் தன் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். இவர் இயற்றிய பாடல்களிலிருந்து இவருக்குத் தமிழைப்போல் வடமொழி, தெலுங்கு, கன்னடம் எனப்பட்ட பல மொழிகளின் புலமை உண்டென அறியப்படுகின்றது. இவர் இயற்றியதாகக் கூறப்பெறும் முக்கிய நூல்கள் பன்னிரெண்டு நூல்களில் இப்போது வெளிவரும் யமக வெண்பாவும் ஒன்றாகும்.

மேலும் தொடர்ந்து கூறிவருங்கால்,

தேரையரை வணிகர் என்பர் தேரையருடைய ஞானாசிரியர் தரும சௌமியர் என்பர்.

Koviloor Digital Library

மேலும் தெலுங்குக் கவிஞர் வேமனரைப் பற்றி தேரையர், "உத்தம மஞ்சிவாடு சுமி நீவென வேமனர் வடுகில் உரைத்தல்போல் " என்று கூறியிருப்பதால் இவர் வேமனர் காலத்தவர் அல்லது அவருக்குச் சற்றே பிற்காலத்தவர் என்று ஊகிக்கலாம். வேமனர் கி.பி.1389 - 1505 இடைப்பட்ட காலத்தவர். மேலும் இந்நூலில் உருளைக் கிழங்கு கற்பம் பற்றிக் கூறியிருப்பதாலும் உருளைக் கிழங்கு தென் இந்தியாவுக்கு வந்தது கி.பி. 16ம் நூற்றாண்டு என்று அறிவதாலும் தேரையர் சற்றேறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்று கருத இடமுண்டு.

இவ்வளவும் எடுத்துக் காட்டியதன் காரணம் என்னவென்றால் தேரையர் என்ற பெயரால் அகத்தியரின் புகழ்பெற்ற சீடராக இருந்த ஒருவர் பிற்காலத்தைச் சேர்ந்த ஒருவரோடு இணைத்துப் பேசப் படுவதால் குழப்பம் உண்டாகக் கூடாது என்பதற்காகவே.

அகத்தியரும் தேரையரும்

புலத்தியரே அகத்தியரின் முதற் சீடர். தேரையர் புலத்தியரின் சீடரே. ஆயினும் தேரையர் அகத்தியரின் சீடர் என்பது போலப் பேசப் படுகிறார். தேரையர் அந்த அளவு புகழ் பெற்ற ஆயுள்வேத வைத்தியராக விளங்கியதே அதன் காரணம் எனலாம்.

கடல்போல் நூல்களைக் கொட்டியுள்ளார் தேரையர். எளிய வைத்திய முறைகள் அவற்றில் கூறப் பட்டுள்ளன. அகத்தியருடைய வைத்திய நூல்களையும் தேரையரின் நூல்களையும் ஒப்பு நோக்கி விரிவான ஆய்வு நடத்துவது பயனுள்ள செயலாகும். ஏனென்றால் வைத்தியத்தில் ஒரு குழப்பமற்ற தெளிவான முறையை வகுத்துக் கொள்ள இது பேருதவியாக இருக்கும்.

தவிர பஸ்ம செந்தூரங்களைப் பற்றி அதிகமாகப் பாடியுள்ள வேளாளரான சித்தவைத்திய அகத்தியருக்கும் வடக்கிலிருந்து வந்த அகததிய ரிஷிக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளவும் இது உதவும்.

முற்கூறிய தேரையர் புலத்தியரின் சீடர் என்று கூறப்பட்டிருக்க தேரையர் நேரடியாகவே அகத்தியரிடம் சீடனாகச் சேர்ந்ததாகஒரு வரலாறு கூறுகிறது.

Koviloor Digital Library

முற்பிறப்பில் இராமதேவர் என்றும் யாகோபு எனறும் புகழ் பெற்று விளங்கிய சித்தர், மறுபிறப்பில் பிராமண குலத்தில் பிறந்து தக்க ஆசானை நாடியவராய் அவாவுற்றிருக்கையில் ஔவைப் பிராட்டியார் அப்பிள்ளையைக் கண்டு அகத்தியரிடம் கொண்டு போய்ச் சேர்க்கத் தீர்மானித்தார்.

இராமதேவர் தான் தேரையராகப் பிறந்தார் என்று டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் கூறியிருக்கிறார்.

கோடியால் தேரையர் மரபே தென்றால்
கொற்றவனே யான் உரைப்பேன் கண்டமட்டும்
நீடியே பிரம்மகுலம் என்னலாகும்
நெடிதான காப்பியங்கள் கூறும் வண்ணம்.
போ/7000/5942.

என்று போகர் கூறுவார். கருவூரார் வாத காவியத்தில் பின் வருமாறு கூறுகிறார்.

வந்ததோர் தேரையர்தான் மகாசித்தர் நூலில் வல்லோர்
அந்த நல் அகத்தியர்க்கு அருமையாய் வந்த பிள்ளை
குந்தகமில்லார் பிரம்ம குலத்தினில் வந்துதித்தோர்
விந்தையாய்க் காயசித்தி மிகச் செய்து முடித்தார் பாரே.
கரு.வாத. 621

அகத்தியர் அக்காலத்தில் தமக்கு ஒரு நல்ல சீடன் வேண்டும் என்ற எண்ணத்துடன் தேடிக் கொண்டிருந்தார். ஔவையார் அவரைத் தேடிக் கொண்டு வரவே மிகவும் மகிழ்ச்சியடைந்தவராக அவனை வணங்கி வாழ்த்தி உபசரித்தார். ஔவையுடன் வந்த சிறுவனைப் பார்த்து அவன் யார் என்று விசாரித்தார்.

ஔவையாரும் சாமர்த்தியமாக, "பாவம் ஊமைப்பிள்ளை. பிராமணப் பையன். உங்களுக்கு உதவியாக விட்டுப் போகலாம் என்று அழைத்து வந்தேன், " என்றார்.

அகத்தியருக்கு மிகவும் மகிழ்ச்சி. அப்படி ஒரு சீடனைத் தான் அவர் தேடிக் கொண்டிருந்தார். உடனே இராமதேவரைச் சீடனாக ஏற்றுக் கொண்டார்.

Koviloor Digital Library

அகத்தியர் பனிரெண்டாயிரத்தில் இந்த வரலாறு காண்ப்படுகிறது.

அட்டதிசை யான்திரிந்து வந்த காலம்
அப்பனே எந்தனுக்குச் சீடன் வேண்டி
திட்டமுடன் லோகாதி சுத்துங்காலம்
சுந்தரியா ளவ்வை யாரைக் கண்டிட் டேனே. 288

கண்டேனே யம்பாளின் புண்ணியத்தால்
காரிழையா மவ்வையாரைத் தெரிசித்தே தான்
விண்டேனே யுந்தமக்குச் சீடன் வேண்டி
விருப்பமுடன் முகதாவில் கேள்வி கொண்டேன்
சண்டமாருதம் போலே எந்தன் மீது
சற்பனையாய் எந்தனிட வித்தை யாண்மை
கொண்டு மிகவுறுதியுடன் பதமுஞ் சொல்லி
கொற்றவரே பாடியங்கள் மிகச் சொன்னாரே. 289

இராமதேவர் என்ற தேரையர் இவ்வாறு அகத்தியரிடம் வந்து சேர்ந்தார். விட்டகுறை இருந்ததால் தேரையருக்கு தானாக ஞானம் உண்டாகத் தொடங்கியது.

சீறலுடன் விட்டகுறை யறிந்த பாலன்
சிதாபாசக் களைதனிலே இருந்திட் டாரே.

என்று அகத்தியர் கூறுகிறார். தம்முடைய சீடனான ஊமைப் பிள்ளைக்கு வாய் ஒன்றுதான் இல்லையே தவிர மற்ற எல்லாவிதத்திலும் அவன் கெட்டிக்காரனாக இருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். வைத்தியத்திற்காக எங்கு சென்றாலும் அவனையும் அழைத்துச் செல்வார்.

ஒரு சமயம் பாண்டிய மன்னன் ஒருவன் அகத்தியரை அழைத்து வரச் சொன்னான். மன்னனின் முதுகு கூனல். அதோடு அரசவையில் அமர்வது அவனுக்கு மானக்கேடாக இருந்தது.

அகத்தியர் அவனுடைய கூனை நிமிர்த்தி விடுவதாக வாக்களித்திருந்தார்.

அரண்மனையில் ஒரு பெரிய கூடத்தில் மன்னனுக்குத் தேய்ப்பதற்காகத் தைலம் தயாராய்க் கொண்டிருந்தது. அநேக வித

Koviloor Digital Library

மூலிகைகளின் சாறுகளைப் பிழிந்து எண்ணெயில் ஊற்றிக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தனர்.

ஏதோ காரணமாக அகத்தியரை மன்னர் அழைக்க அகத்தியர் தம் ஊமைச் சீடனிடம் " பார்த்துக் கொள்" என்று சாடை காட்டிவிட்டுச் சென்றார்.

சீடன் கவனித்துக் கொண்டிருந்தான். எண்ணெய் கொதித்துக் கொண்டிருந்த கொப்பரைக்கு மேலே, உயரத்தில் பல்லக்குக் கொம்புகள் போடப் பட்டிருந்தன. மூங்கிலால் நடுவில் வில் போல் வளைத்துச் செய்யப்பட்டிருந்த பல்லக்குக் கொம்பு கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்வதைக் கண்டவுடன், தைலம் பதத்திற்கு வந்து விட்டது என்பதை அறிந்தவனாக ஊமைச்சீடன் நெருப்பை அணைத்து விட்டான்.

திருப்பிவந்த அகத்தியர் திடுக்கிட்டார். கோபத்துடன் "ஏன் இப்படிச் செய்தாய்? " என்று கேட்டார். சீடன் மூங்கிலைச் சுட்டிக் காட்டியவுடன் அகத்தியருக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவு உண்டோ?

மற்றொரு முறை:

அகத்தியருக்கு சங்கப் புலவர்களிடமிருந்து அழைப்பு வந்தது. புலவர்களில் ஒருவரான திரணாக்கிய முனிவருக்குத் தீராத தலைவலி. எந்த மருந்தாலும் குணப்படுத்த முடியவில்லை. நோயால் துடித்துக் கொண்டிருந்தார்.

அகத்தியர்வைத்தியம் செய்தவற்குப் புறப்பட்டார். சீடன் கையில் சோளிப்பையைக் கொடுத்துத் தூக்கிக் கொண்டு வரும்படிக் கட்டளை யிட்டிருந்தார்.

சட்டமுடன் என்சீடன் தேரன் கையில்
சதுரான பண்டிதமாம் சோளிப்பையை
திட்டமுடன் கைகொடுத்தேன் தேரன் கையில்
தீர்க்கமுள்ள தேரையனும் பின் தொடர்ந்தான்
அட்டபுகழ் சித்தரெல்லாம் எந்தனைத்தான்
அழைத்துமே கொடு போனார் சங்கம் முன்னே. 2

தீராத நோயப்பா முனிவருக்கு
தீர்க்கமுடன் எந்தனையும் அஞ்சலித்து

Koviloor Digital Library

கூறாத வார்த்தையது மிகவும் கூறி
குருபரனே எந்தனையும் அவிழ்தம் கேட்டார்.

தீராத தலைநோயால் துடித்துக் கொண்டிருந்த திரணாக்கிய முனிவரைக் காப்பாற்ற வேண்டுமென்று அகத்தியரைக் கேட்டுக் கொண்டார்கள், போடாத கும்பிடெல்லாம் போட்டு பெரிய பெரிய வார்த்தைகளால் புகழ்ந்து, "நீங்கள் மனது வைத்தால் இவன் பிழைப்பான். இல்லாவிட்டால் செத்துப் போவான். இவனுக்கு நீங்கள் தான் உயிர்ப் பிச்சை அளிக்க வேண்டும்" என்று வேண்டினார்கள்.

அகத்தியர் பார்த்தார். திரணாக்கியரின் கபாலத்திற்குள் தேரை புகுந்து கொண்டிருக்கிறது. கபாலத்தைத் திறந்து தேரையை வெளியேற்றினால் தான் அவர் பிழைப்பார் என்பதைத் தெரிந்து கொண்டார். அக்காலத்திலேயே அகத்தியர் மூளை அறுவை சிகிச்சை வரை செய்திருக்கிறார் என்பதை இது காட்டுகிறது.

அகத்தியர் திரணாக்கியரின் மண்டை ஓட்டைத் திறந்தார். உள்ளே தேரை இருந்தது. அதை எடுப்பதற்காக இடுக்கியை எடுத்தார். தேரையை எடுக்க வேறு வழி இல்லை என்பதாலேயே அகத்தியர் அவ்வாறு செய்தார். ஆனால் சற்று இசகு பிசகாக இடுக்கி பட்டுவிட்டால் கூட உடனே நோயாளி இறந்து போய் விடுவானே? தவிர அகத்தியர் இடுக்கியால் பிடிக்கும் வரை தேரை உட்கார்ந்து கொண்டா இருக்கும்?

அதைப்பற்றி யெல்லாம் யோசிக்க அகத்தியருக்கு அவகாசம் இருக்கவில்லை. ஆனால் புத்திசாலியான ஊமைச் சீடன் உடனே நிலைமையைப் புரிந்து கொண்டான். சட்டென்று அகத்தியரைத் தடுத்து விட்டான். ஓடிப்போய் ஒரு தாம்பாளத்தில் தண்ணீர் கொண்டுவந்து தேரையிடம் காட்ட அது மூளையை விட்டுத் தாம்பாளத் தட்டில் குதித்தது.

தீராக அடியேனும் மனது வந்து
தீர்க்கமுடன் தலை தனையே கீறிமைந்தா
வீராக ஆயுதத்தால் தேரை தன்னை
விருப்பமுடன் தானெடுக்கச் சென்றிட்டேனே. 294

சென்றேனே நோயாளி பக்கம் சென்றேன்
தெளிவாகத் தேரையர் பின்னே நிற்க,
வென்றிடவே தேரை தன்னை எடுக்கும் போது
வேகமுடன் ராமதேவர் செய்த வண்ணம்

Koviloor Digital Library

பையவே தாம்பாளந் தன்னிலப்பா
பாலகனே நீரெடுத்துக் காட்டினார் பார்
நையவே தேரையது மூளை விட்டு
நலமுடனே சலந்தனிலே குதிக்க லாச்சே. 295

அகத்தியருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவும் கூறமுடியுமா? ஊமைப் பையனாகக் காட்சியளித்த அந்தச்சீடன் எவ்வளவு மாபெரும் காரியத்தைச் சாதித்துவிட்டான்! நோயாளியின் உயிரைக் காப்பாற்றி விட்டான். தன்னுடைய மானத்தையும் காப்பாற்றி விட்டான். அது முதல் அந்தச் சீடனுக்குத் தேரையர் என்ற பெயரே நிலைத்துவிட்டது.

குதிக்கையிலே யான்மகிழ்ந்து மனங்கனிந்து
குருபரனே என்தேவே குலக் கொழுந்தே
மதிப்புடனே புத்தியுள்ள குஞ்சரமே
மகதேவா மாணிக்க மதனழகா
துதிப்புடனே இன்று முதல் உன் தனக்கு
துப்புரவாய் லோகபதி மகிமை யெல்லாம்
கதிப்பில்லா உபதேச நன்மையாவும்
காவலனே உத்தாரம் செய்திட்டேனே. 296

அகத்தியருக்கு உண்டான அளவு கடந்த மகிழ்ச்சிப் பெருக்கில் தம் சீடனைப் பார்த்து. "ஐயா... நீ எனக்கு குருவுமாகி விட்டாய் தெய்வமாகி விட்டாய். குலத்திற்குக் கொழுந்து மானாய்" என்று பலவாறு பாராட்டுகிறார். அன்றுமுதல் அவனுடைய ஊமைத் தன்மையைப் போக்கித் தமக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாம் கற்பித்தார். உலக அதிசயங்களை யெல்லாம் எடுத்துச் சொன்னார்.

அகத்தியரிடம் கற்ற கல்வியால் தேரையன் என்ற பெயர் எட்டுத் திசைகளிலும் சென்று பரவும்படியான புகழைத் தேரையர் பெற்றார். அவருக்கு ஏராளமான சீடர்கள் ஏற்பட்டனர். ஐம்பதுபேர் தேரையர் பெயரால் மடங்களையும் நிறுவினார்கள்.

அகத்தியரால் தலைநோய் நீங்கிய திரணபக்கிய முனிவர் அகத்தியரின் சீடனாகித் தொல்காப்பியம் என்ற சிறந்த இலக்கண நூலை இயற்றித் தொல்காப்பியர் என்ற பெயரும் பெற்றார்.

இந்த வரலாற்று உண்மையைச் சிலர் திரித்து அகத்தியரால் தலைநோய் தீர்க்கப் பட்டவன் இந்திரன் என்றும், நக்கீரர் என்றும் பலவாறு கதைகளைப் புனைந்து கூறி விட்டனர்.

Koviloor Digital Library

தேரையர் ரசவாதம் செய்தது

ஒரு சமயம் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. பொருள் வளம் குன்றி வறுமை தலை தூக்கியது. மக்கள் கொடிய துன்பங்களுக்கு ஆளாயினர். எல்லோரும் ஒன்று கூடி யோசித்தனர். என்ன செய்தால் தங்கள் துன்பம் தீரும்?

பொன் இருந்தால் அண்டை நாடுகளில் உணவுப் பொருள்களை வாங்கிப் பிழைத்துக் கொள்ளலாம். பொன்னுக்கு எங்கே போவது? அருகே ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்த தேரையரின் நினைவு வந்தது.

மக்கள் ஒன்று திரண்டு தேரையரிடம் சென்றார்கள். நாங்கள் உயிர் வாழவேண்டும். கருணை புரிய வேண்டும். சித்தராகிய தாங்கள் தங்கம் செய்து கொடுத்தால் அண்டை நாடுகளில் தானியம் வாங்கி உண்டு பிழைத்துக் கொள்வோம் என்று முறையிட்டார்கள்.

" தங்கம் தானே வேண்டும்? இதோ வந்து விட்டேன் " என்று கூறிய தேரையர் தம் சீடர்களை அழைத்து அருகிலிருந்த மலையைச் சுற்றிலும் துருத்திகளை வைத்து நெருப்பு மூட்டி ஊதச் சொன்னார்.

மலைகளில் இருந்த பறவைகள் அலறி ஓடின. மிருகங்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தன. அதன்மேல் தவம் செய்து கொண்டிருந்த ரிஷிகள் எல்லோரும் அலறி அடித்துக் கொண்டு மலையை விட்டு இறங்கி ஓட்டம் பிடித்தனர்.

ரிஷிகள் அகத்தியரிடம் வந்து முறையிட்டனர். " தங்கள் சீடனாகிய தேரையன் மலையைத் தங்கமாக்குகிறேன் என்று அதைச் சுற்றிலும் துருத்திகளை வைத்து ஊதுகிறான். எங்களுக்குத் தங்க இடமில்லை. காப்பாற்ற வேண்டும் " என்று கதறினார்கள்.

அகத்தியருக்கு அளவு கடந்த கோபம். தேரையரை அழைத்து வரச் சொன்னார். ஏன் எதற்காக என்று கூடக் கேட்கவில்லை. தேரையரின் இரண்டு கால்களையும் பிடித்து இரண்டாகக் கிழித்தெறிந்து விட்டுப் போய்விட்டார்.

இப்படி நடக்கக்கூடும் என்பதை யூகித்திருந்த தேரையர் முன்னதாகவே தம் சீடர்களுக்கு கிழிந்த சதை கூடவும், பிரிந்த உயிர் சேரவும் உதவும் மூலிகைகளைக் சுற்றுக் கொடுத்திருந்தார். சீடர்கள் அதன் படித் தம் குருவின் உடலை ஒன்று சேர்த்து மூலிகைச் சாற்றைத் தடவி அவரை உயிர்ப்பித்து விட்டார்கள்.

Koviloor Digital Library

தேரையரைப் பற்றி இப்படிப் பலகதைகள் கூறப்படுகின்றன. தேரையர் வைத்தியரே தவிர வாதி அல்ல. இந்தக் கருத்துப் பரவலாகப் பேசப்படுவதைத் தவிர்க்க அவரிடம் அன்பு பூண்டவர்கள் கட்டி விட்ட கதையாக இருக்கவேண்டும்.

குருவுக்குப் பார்வை கொடுத்தது

தேரையரைப் பற்றி வழங்கும் கதைகளில் இதுவும் ஒன்று. கதையே ஆன போதிலும் இதிலுள்ள மருத்துவ உண்மைகளை இழந்து விடக் கூடாது என்பதற்காக இங்கே கூறுகிறோம்.

ஒரு சமயம் அகத்தியருக்குப் பார்வைக் கோளாறு ஏற்பட்டது. நாளுக்கு நாள் கண் பார்வை மங்கி வந்தது. அப்போது தேரையர் அகத்தியரின் கோபத்துக்கு அஞ்சித் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்தார். அதனால் யாரிடம் போவது என்று தெரியாமல் சீடர்கள் வருந்தினர்.

அப்போது சற்று தொலைவுக் கப்பால் இருந்த காட்டில் ஒரு காட்டு மனிதன் வசிப்பதாகவும் அவன் யாருக்குமே தெரியாத காட்டு மூலிகைகளைக் கொண்டு எல்லா நோய்களையும் குணப்படுத்தி விடுவதாகவும் கேள்விப்பட்டனர்.

சீடர்கள் அந்தக் காட்டு வாசியை அழைத்துக் கொண்டு வருவதற்கு அகத்தியரிடம் அனுமதி கேட்டனர்.

அகத்தியர் அனுமதி கொடுத்தார். அதே சமயம் அந்தக் காட்டு மனிதனுடைய மூலிகைகளைப் பற்றிய அறிவு எத்தகையது என்பதைப் பரிசோதித்துக் கொள்ளவும் தீர்மானித்தார்.

சீடர்களைப் பார்த்து, "நீங்கள் போகும்போது எல்லா இடங்களிலும் புளிய மரத்தின் நிழலையே தேடிப்பிடித்துப் படுத்து உறங்கவேண்டும். வேறிடங்களில் தூங்கக் கூடாது" என்று கட்டளையிட்டு அனுப்பினார்.

சீடர்கள் கானக வழிகளில் பலநாள் நடந்து காட்டு வாசி இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அடர்ந்த தாடி முடியும் உடம்பெல்லாம் ரோமமுமாகக் கரடி போல் காட்சி அளித்தான்அந்த மனிதன்.

தூரத்தில் இருந்தபடியே சீடர்கள் அவனுக்கு வணக்கம் தெரிவித்தனர். உடனே ஒரு சீடன் இருமினான் குபுக்கென்று இரத்தத்தைக் கக்கினான்.

Koviloor Digital Library

அடுத்து இன்னொரு சீடன், பிறகு மற்றொரு சீடன். எல்லோருக்கும் இரத்த வாந்தி.

காட்டுமனிதன் அவர்களைக் கையமர்த்தி, " முதலில் உங்கள் நோயின் காரணத்தை அறிவோம். நீங்கள் வருகிற வழியில் என்ன உட்கொண்டீர்கள். எங்கே நீர் பருகினீர்கள். வேறு என்ன காரியம் செய்தீர்கள் சொல்லுங்கள், " என்று கேட்டான்.

"நாங்கள் இயற்கைக்கு மாறாக எதுவுமே செய்யவில்லை. மரங்களிலிருந்த காய் கனிகளையே பறித்து உண்டோம். சுனை நீரையே பருகினோம். ஆனால் புளிய மரங்களைத் தேடிப்பிடித்து அவற்றின் நிழலிலேயே உறங்கினோம். "

" ஏன் அப்படிச் செய்தீர்கள் ? "
" எங்கள் குருநாதரின் கட்டளை "
" யார் உங்கள் குருநாதர் "
" அகத்திய மாமுனிவர்....."

"அப்படியானால் உங்கள் நோய்க்கு மருந்து தேவையில்லை. இங்கிருந்து திரும்பிப் போகும் போது வேப்பமரத்தின் நிழலிலேயே இளைப்பாருங்கள். உறங்குங்கள். எல்லாம் சரியாகப் போய்விடும். இனி நீங்கள் வந்த காரணத்தைக் கூறுங்கள். "

" எங்கள் குருநாதர் பார்வைக் கோளாறால் அவதிப்படுகிறார். மருந்துகளால் குணப்படுத்த முடியவில்லை. அதனால் உங்களை அழைத்துப் போய்க் காட்டலாம் என்று வந்தோம். "

காட்டு மனிதன் சற்றே சிந்தித்தான். நயனவிதி எழுதிய அகத்தியருக்கா நயனம் தெரியவில்லை? தம்மைச் சோதிப்பதற்காகவே அவ்வாறு செய்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டார். " சரி. நான் வருகிறேன். நீங்கள் செல்லுங்கள்."

சீடர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு காட்டு வாசியாகத் தம் குருவுக்குத் தெரியாதபடி மறைந்து வாழ்ந்து கொண்டிருந்த தேரையரும் புறப்பட்டார்.

காட்டுமனிதன் அகத்தியரின் கால்களைத் தொட்டு வணங்கினான். அகத்தியரின் கண்களைப் பரிசோதித்து மருந்து ஊற்றினான். "தேரையா உன்னை வரவழைப் பதற்காகவே இந்தத் தந்திரம் செய்தேன். எனக்கு ஒரு அபூர்வ மூலிகை வேண்டும். அதைக் கொண்டு வருவதற்கு வேறு யாராலும் முடியாது, " என்றார் அகத்தியர்.

Koviloor Digital Library

"என்ன மூலிகை? எதுவானாலும் கொண்டு வருகிறேன். சொல்லுங்கள் குருவே. "

" கண் வெடிச்சான் மூலிகை வேண்டும். உன்னால் கொண்டு வர முடியுமா? "

தேரையர் திடுக்கிட்டார். குருவுக்குக் கண் தெரியும்படிச் செய்த உதவிக்குப் பிரதி பலனாக அவர் தன் கண்களையே கேட்கிறாரா? கண்வெடிச்சான் மூலிகையைப் பறித்தால் உடனே அதிலிருந்து கிளம்பும் புகையால் பறித்தவன் கண்கள் போய்விடும். தப்பவே முடியாது.

ஆனால் தேரையர் யோசிக்கவில்லை. " உடனே போய்க் கொண்டு வருகிறேன் குருவே, " என்று கூறி விடை பெற்றுச் சென்றார்.

தேரையர் பொதிகை மலைமேல் எல்லா இடங்களிலும் சென்று தேடினார். அடர்ந்த காடுகள், எட்டாத உயரத்திலிருந்து விழும் அருவிகள். அகாதமான பள்ளத்தாக்குகள்.

எல்லா இடங்களிலும் அற்புதமான பல மூலிகைகளைக் கண்டார். அவற்றின் பண்புகளை ஆராய்ந்தார். அந்த அனுபவம் மலைபோல் குவிந்தது. தனக்குத் தெரியாத மூலிகையே கிடையாது என்ற அளவு அனுபவம் பெற்று விட்டார்.

கடைசியாக ஓரிடத்தில் கண் வெடிச்சான் மூலிகை என்ற பெயரால் அழைக்கப்படும் மூலிகைச் செடியைக் கண்டார். அதன் இலைகள் மான்களின் கண்களைப்போல் அழகாக இருந்தன. அவை அசையும்போது வா வா என்று அழைப்பது போல் இருந்தன. ஆனால் அவற்றைத் தொட்டால் உடனே விஷப் புகை கிளம்பும் என்பது தேரையருக்குத் தெரியும்.

தேரையர் செடியைத் தொடவில்லை. அங்கேயே பத்மாசனம் போட்டு உட்கார்ந்தார். கண்களை மூடித் தேவியைத் தியானம் செய்தார். " அம்மா! என் குருநாதர் வைத்த பரிட்சையில் தேறுவதற்கு அருள்புரி அம்மா... தேரையன் தேரவில்லை என்ற சொல் ஏற்படக் கூடாது. அது உனக்கே கடன், " என்று தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

" தேரையன் தேரிவிட்டான். இதோ நீ கேட்ட மூலிகை," "என்று அன்னை பதிலளிப்பது போல் இருந்தது. தேரையர் கண்களை விழித்துப் பார்த்தார். மூலிகை கொத்தாக இலையில் சுற்றப்பட்டு இருந்தது. அதன் விஷத்தன்மையைத் தடுப்பதற்காகவே அது இலையில்

Koviloor Digital Library

சுற்றப்பட்டிருந்தது என்பதைத் தேரையர் தெரிந்து கொண்டார். அதை அப்படியே எடுத்துக் கொண்டு வந்து அகத்தியர் முன் வைத்தார்.

அகத்தியருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தேரையரைக் கட்டித் தழுவிக் கொண்டார். " தேரா.....நான் வைத்த எல்லாப் பரிசோதனைகளிலும் தேறிவிட்டாய். மலைக் காடுகளில் நீ எவ்வளவோ மூலிகைகளைப் பார்த்திருப்பாய். அவற்றின் பொருட் பண்புகளைப் பற்றி ஒரு நூல் எழுது. மருத்துவ உலகிற்கு அது இன்றியமையாதது. அது உன்னாலேயே முடியும்," என்று கட்டளை யிட்டார்.

குருவின் கட்டளையைச் சிரமேற் கொண்டு தேரையர் குணபாடம் என்ற நூலை இயற்றினார்.

நெடுங்காலம் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் சேவை செய்து கொண்டிருந்தபின் பொதிகை சார்ந்த தோரண மலையில் (மலையாள நாடு) தவம் செய்து சித்தியடைந்தார்.

æ æ æ

Koviloor Digital Library

இராமதேவர்

இராமதேவர் புலத்தியரின் சீடர்.

இராமதேவர் பரிபாஷை விளக்கம் 27 என்ற நூலின் காப்புச் செய்யுளில்,

அண்டபிண்டம் நிறைந்த குண்டலியின் பாதம்
அருள் பெருகும் கணபதியின் அருளே காப்பு
மண்டலங்கள் மூன்றும் ரவிமதியாய் நின்ற
மதியிரவி யொளியினுட கமலம் போற்றிக்
குண்டலிதான் பூண்ட புலத்தியர்தன் பாதம்
குருமொழி தானாயிரத்தின் பீடம் போற்றி
கண்டபொருள் பாஷை பரிபாஷை பீடம்
கருக் குருவாங் கணபதியின் பாதம் காப்பே.
பரி - 1.

என்று புலத்தியரை வணங்கி நூலை ஆரம்பிக்கிறார்.

மேலும் அதே நூலில் மூன்றாவது பாடலில்,

நவிலுவோம் புலத்தியர்தன் கடாட்சத்தாலே
நாமுரைத்த பாஷையெல்லாம் நளினமாக
அவிலுவோம் ஆதியந்தம் யோக சித்தி
அருளுகிறோம் குருவமுத அனுக்ரகத்தால். பரி - 3.

என்று பாடுகிறார்.

இராமதேவர் ஒரு துணிவு மிக்க சித்தர் என்றே கூறவேண்டும். தமது நூல்களைத் தொடங்கும்போது தாயே தன்னைப் பாடச் சொன்னதாகவே கூறுவார். அவருடைய பக்தி எத்தகையது என்பதை அதன்மூலம் அறியலாம். இராமதேவர் வைத்கிய காவியம் 1000 என்ற நூலில்,

வளங்கண்டு குருவினுட வண்மை கண்டு
மகத்தான சிவசத்தி பூசை செய்து

Koviloor Digital Library

நலங் கொண்டு சஞ்சாரச் சமாதி கொண்டேன்
நன்மையுட னஷ்ட திசை சுற்றும்போது
தலங்கண்டேன் அத்தலத்தின் நாதம் கண்டேன்
தாயான மனோன்மணியாள் தன்மை பெற்றேன்
உளம்கனிய மனோன்மணியாள் வாவாஎன்று
உண்மையென்ற பொருள் ஈந்தாள் உருப்பெற்றேனே.
இராம/ வை/4

உருவான பொருளறிந்து உண்மை பெற்றேன்
உண்மையுடன் வாராம தேவா என்றாள்
கருவான கருக்குருவு மெனக்கே ஈந்தாள்
கைபாகம் முறைபாகம் கணக்கின் பாகம்
திருவான ஒருபாகம் குருவின் பாகம்
செம்மையுடன் நன்றாகச் செப்பினாள் பார்
குருவான குருவருளால் ஆத்தாள் என்னைக்
கூப்பிட்டுக் காப்பிட்டுக் குறி சொன்னாளே.5

இப்படித் தாயே தன்னை அழைத்து எல்லாம் விளக்கமாகச் சொல்லிக் கொடுத்து " நீ பாடு " என்று கூறியதாகக் கூறும் துணிச்சல் எவருக்கு வரும்?

அதைத் துணிச்சல் என்று சொல்வதா? பக்திப் பெருக்கு என்று சொல்வதா? அல்லது எல்லாம் கடந்த நிலை என்று சொல்வதா?

இராமதேவர் விஷ்ணு குலத்தில் பிறந்தார். மாசி மாதம் பூர நட்சத்திரம் இரண்டாம் காலில் பிறந்தார் என்று போக முனிவர் கூறுகிறார்.

மிகுத்திடவே ராமதேவர் ஜாதிபேதம்
மிக்கான விஷ்ணுகுலம் என்னலாகும்
போ.7000/5700.

திருவான ராமரென்ற தேவரையா
தீர்க்கமுடன் வந்துதித்த நேர்மை கேளீர்
கருவான மாசியென்ற திங்களப்பா
கடியதோர் பூரமது ரெண்டாம் காலாம்
போ.7000/5886.

ஆனால் கருவூரார் வாத காவியத்தில்

Koviloor Digital Library

மெய் ராம தேவ ராதி வேதப் பிராமணராம் பின்பு
உய்யவே மறவர்தேவர் உயர்குலச் சாதியப்பா. கரு.561.

பிராமணராகப் பிறந்த ராமதேவர் பிறகு வீரம் மிகுந்த தேவர் குலத் தோன்றலும் ஆனார், என்று கூறுகிறார் கருவூரார்.

எப்படி என்பதை அவர் விளக்காததால், தேவர் என்ற பெயரை அடிப்படையாகக் கொண்டே அவ்வாறு கூறியிருக்கலாம் என்று எண்ண இடமேற்படுகிறது.

இராமதேவர் சஞ்சார சமாதியில் லயிக்கும் இயல்புடையவராக இருந்தார். அவர் நடந்து கொண்டே இருப்பார். எண்ணம் எங்கோ இருக்கும். கண்கள் பாரா. காது கேளா, மூச்சும் ஓடாது.

அது ஒரு அபூர்வ நிலை. வாசிப் பயிற்சியில் முதிர்ச்சியடைந்த சித்தர்களாலேயே முடியும்.

ஒரு சமயம் காசியிலிருந்து விசுவநாதரைக் கொண்டு வந்து தாம் வசிக்கும் காயாரோகணம் என்னும் நாகப்பட்டினத்தில் நிறுவ வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. அந்த எண்ணத்துடனேயே எழுந்து நடக்கத் தொடங்கி விட்டார்.

எத்தனை நாள்? எத்தனை மாதம்? அல்லது ஆண்டுகளா? அவருக்கே தெரியாது. ஒருநாள் சுயநினைவடைந்து பார்க்கையில் அவர் காசியில் இருந்தார்.

கங்கையில் நீராடினார். காசி விஸ்வநாதரை தரிசித்தார். மறுபடியும் கங்கையில் வந்து முழுகி எழுந்தபோது அவர் கையில் ஒரு லிங்கம் அகப்பட்டது.

இராமதேவருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த லிங்கத்தில் காசி விஸ்வநாதரை எழுந்தருளச் செய்து அதை நாகப்பட்டினத்தில் கொண்டு வந்து பிரதிட்டை செய்தார். நாள்தோறும் அதைப் பூசித்து வந்தார். தியானத்தில் ஆழ்ந்தார்.

அக்காலத்தில் நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு கப்பல்கள் வந்துபோகும். அரேபிய நாடுகளிலிருந்து வரும் கப்பல்களே அதிகம். இராமதேவர் அந்தக் கப்பல்களில் வரும் அராபிய வியாபாரிகளைப் பார்த்து வியப்படைவார். தாமும் அவர்களோடு பேச வேண்டும், பழக வேண்டும் என்ற எண்ணம் உண்டாகியிருக்கலாம்.

Koviloor Digital Library

ஒரு நாள் தியானத்திலிருந்து கண் விழித்துப் பார்த்த போது அவர் அரேபியாவில் இருந்தார்.

எப்படி அங்கு வந்து சேர்ந்தார்?
அவருக்கே தெரியாது.

தியானத்தில் அந்த எண்ணத்துடன் அமர்ந்தவர் சஞ்சார சமாதியில் ஆழ்ந்தபடி அப்படியே மெக்காவுக்கு வந்து சேர்ந்து விட்டார். கடல் வழியாக வந்தாரா? தரை வழியாக வந்தாரா? ஒன்றுமே அவருக்குத் தெரியாது. விண்வழியாகத் தான் வந்திருக்க வேண்டும். சித்தர்கள் விண்வழிப் பயணம் செய்யும் வித்தகர்கள் ஆயிற்றே.

வரண்ட பாலைவனம்! எங்கும் மணல். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மணல்!

வியர்வை ஆறாகப் பெருகியது. இராமதேவர் பார்த்துக் கொண்டே நின்றார்.

தூரத்தில் ஒரு ஒட்டகம் வருவது தெரிந்தது. அதன் பின் மற்றொன்று. அதன் பின்னால் வேறொன்று ஒட்டகங்கள் வரிசையாக வந்து கொண்டிருந்தன.

தங்கள் நாட்டில் யாரோ ஒரு அன்னியன் புகுந்து விட்டதைக் கண்டதும் அராபியர்கள் வேகமாக வந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"யார் நீ.....? "
" எப்படி வந்தாய்? "
" எங்கே வந்தாய்? "

இராமதேவர் பதில் சொல்ல முயன்றார், செவி கொடுத்துக் கேட்பார். யாருமில்லை. அவர்கள் அவரைக் கொன்றே போட்டிருப்பார்கள். ஆனால் அவர்களில் ஒரு புத்திசாலி இருந்தான்.

யூகியாம் மதி மந்திரி யோகவானாம்
உத்தமனார் அங்கொருவர் தான் இருந்தார்
யோகியாம் சின்மயத்தில் சேர்ந்த சித்து
ஒளிவான ரிஷிஒருவர் அங்கிருந்தார்.

போ.70005799

அவனால் இராமதேவர் உயிர் பிழைத்தார்.

Koviloor Digital Library

போனாரே மலைநாடு குகை கடந்து
பொங்கமுடன் நபிதனையே காணவென்று
கானாறு பாதைவழி செல்லும்போது
கடுங்காளை நபிக்கூட்டம் மிகவாய்க் கண்டு
மானான மகதேவர் பதியிலப்பா
மார்க்கமுடன் வந்ததினால் உந்தமக்கு
தீனான தீன்பதியில் உந்தனைத் தான்
திட்டமுடன் சபித்திடுவோம் என்றிட்டாரே.
போ.7000 - 5800

ந் ஏன் தீன் தேசத்துக்கு வந்தாய். உன்னைத் தண்டிக்காமல் விடமாட்டோம் என்று அவர்கள் கத்தினார்கள்.

என்றவுடன் இராமதேவர் தாள் பணிந்து
எழிலான வார்த்தையது கூறும்போது
சென்றுமே யாகோபு என்று கூறி
சிறப்புடனே சுன்னத்து செய்துமல்லோ
தின்றிடவே ரொட்டியது தானும் ஈந்து
சிறப்புடனே அசன் உசேன் என்று கூறி
வென்றிடவே உபதேச பிரணவத்தை
விருப்பமுடன் மலுங்குமா ரோதினரே. 5801

ஓதவே நபிநாயர் கூட்டத்தார்கள்
உத்தமர்கள் மனம்போலே மனதுவந்து
நீதமுடன் மக்கபுரி கோட்டைக் குள்ளே
நிஷ்களங்க பக்கிரி யாகோபு தன்னை
கோதமுடன் கொண்டு சென்றார் அரண்மனைக்குள்
கோறாமல் கொத்துபா ஓதினார்கள்
வீதமது பயனறிந்த சித்து தாமும்
விடுபட்டு வந்த தொரு யாகோபாச்சே. 5802

" உன்னைத் தண்டிக்காமல் விடமாட்டோம், " என்றார்கள்.

இராமர் அவர்களுடைய தாள்பணிந்து மிகவும் நயமான வார்த்தைகளால் வேண்டிக்கொள்ள " அப்படியானால் எங்கள் மதத்தில் சேர்ந்துவிடு, " என்று கூறி " இன்று முதல் உன் பெயர் யாக்கோபு, " என்று பெயர் சூட்டி அந்நாட்டு வழக்கப்படி சுன்னத்து செய்து உண்பதற்கு ரொட்டியும் கொடுத்து உபதேசம் செய்தார்கள்.

Koviloor Digital Library

இராமதேவர் அவர்கள் மனம் போல் நடந்து கொண்டார். பிறகு அவர்கள் மக்கா நகரக் கோட்டைக்குள் இருந்த அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் மதமாகிய குரானை ஓது வித்தார்கள். யாகோபு அனைத்தையும் விரைவிலேயே கற்றுக் கொண்டு அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றார்.

இராமதேவர் இயற்றிய நூல்கள்

இராமதேவர் மக்காவிலிருந்து திரும்பி வந்தபின் சதுரகிரியை அடைந்து ஓர் வனத்தில் தங்கினார், அவ்வனத்திற்கு இராமதேவர் வனம் என்ற பெயரே வழங்குகிறது.

அங்கு தியான யோகத்தில் அமர்ந்திருந்த இராமதேவர் அவ்வப்போது சில நூல்களை இயற்றினார். அவை,

இராமதேவர்	வைத்திய காவியம்	1000
”	ஜாலம்	800
”	நிகண்டு	500
”	கலைக்ஞானம்	500
”	பரிபாஷை	300
”	சிவயோகம்	200
”	தண்டகம்	110
”	பட்சணி	100
”	பரஞான கேசரி	100
”	வைத்திய சூத்திரம்	33
”	சுத்தி முறை	50
”	அட்டாங்க யோகம்	50
”	முப்பு சூத்திரம்	31
”	பரிபாஷை விளக்கம்	27

இராமதேவர் அழகர் மலையில் சித்தியடைந்ததாகக் கூறுவர்.

***

Koviloor Digital Library

யாகோபு

சித்தத்தைச் சிவத்திலே நிறுத்தியவரும் அன்னையின் பேரருளுக்குப் பாத்திரருமான இராமதேவர் வேற்று மதத்தைத் தழுவலாமா என்று கேட்கலாம்.

சீவனைச் சிவனே என்று உணர்ந்தவர் சித்தர். எல்லா உயிர்களிலும் நிலைபெற்று விளங்குவது சிவனே என்று துணிந்தவர்க்கு சாதி மதம் என்ற வேறுபாடுகளே தோன்ற முடியாது. அவர்கள் எல்லாவற்றையும் கடந்தவர்கள். உடல் பூணும் வேடங்களாலோ, இறைவனைத் தொழும் முறைகளாலோ மனித ஆன்மா கரைபடு வதில்லை. நல்லொழுக்கமும் நல்லெண்ணமும் கொண்டு வாழ்பவன் என்ன வேடம் போட்டலும் எந்தக் கடவுளைக் கும்பிட்டாலும் அது எங்கும் நிறைந்த ஒரு முழு முதற் பொருளையே சாரும்.

இராமதேவர் சாதி, சமயம், சடங்குகள் எல்லாவற்றையும் கடந்த சித்தர். சித்தர்கள் எல்லோருமே அப்படித்தான் அதனால் இதுபோன்ற வீண் குழப்பத்துக்கு இடம் தரலாகாது.

யாகோபு வெகு விரைவில் மக்கத்து மக்களால் தம்முள் ஒருவராக ஏற்றுக் கொள்ளப் பட்டார். அவர்களைப்போல் உடையணிந்தார். அவர்கள் மொழியில் பேசினார். அவர்களுடைய பிணிகளைப் போக்கினார். வழக்குகளைத் தீர்த்து வைத்தார். அதே சமயம் தான் கண்டுணர்ந்த மருத்துவ உண்மைகள் கால காலத்துக்கும் அம்மக்களுக்குப் பயன் படும்படியாகப் பதினேழு மருத்துவ நூல்களை அராபிமொழியில் பாடி வைத்தார்.

அவருக்குப் பல சீடர்கள் ஏற்பட்டனர். ஏற்கெனவே யோகியாம் சின்மயத்தில் சேர்ந்த சித்து ஒருவர் அங்கிருந்தார் என்று கூறியுள்ளோம். அவர் யாகோபுக்குப் பிரதம சீடரானார்.

இவ்வாறு தன் சீடர்கள் மூலமாக அரபு நாட்டில் உண்டான பல மூலிகைகளையும் கொண்டு வரச் செய்து அவற்றின் தன்மைகளை ஆராய்ந்தார்.

Koviloor Digital Library

பாலைநிலத்தில் கடும் வெயிலில் காய்ந்து போய் மணலுக்குள் புதைந்து விடும் மூலிகைகள் பிறகு எப்போதாவது ஈரம் பட்டவுடன் துளிர்த்துப் புத்துயிர் பெறுவதைப் பற்றி அறிந்தார். இவ்வகை மூலிகைகள் பெரும்பாலும் பாலைவனச் சோலைகளை அடுத்துள்ள நிலங்களிலேயே முளைத்தன. பலநாள் மணல் வெளியாகக் கிடந்த இடத்தில் திடீரென்று துளிர்கள் உண்டாகி பச்சைப் பசேலென்று ஒரு புதர் உண்டாகி விடும் "ஆ! என்னே விந்தை! இந்த மூலிகைகள் உயிர்ச் சத்தைப் பிடித்து வைத்துக் கொள்ளும் விந்தைதான் என்ன? இவை அற்புதமான கற்ப மருந்துகளாகப் பயன்படும் அல்லவா? " என்று நினைத்தார். அதைப்பற்றி யெல்லாம் தன் நூல்களில் எழுதினார்.

கற்ப மூலிகைகளின் திறனைச் சோதிப்பதற்காகத் தாம் சமாதியில் இருக்க விரும்பினார். அதைப்பற்றித் தம் சீடர்களிடம் பேசினார். அவர்களால் நம்ப முடியவில்லை. "நான் சமாதியில் அமர்வேன். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் உயிர்பெற்று எழுவேன்," என்று யாகோபு கூறினார். சீடர்களால் நம்ப முடியவில்லை.

ஆனால் குருவாக்கை மீற முடியுமா?

சமாதிக்கு இடம் தெரிவு செய்யப்பட்டது, குழி தோண்டப்பட்டு உட்சுவர்கள் கட்டப்பட்டன. யாகோபு சமாதியில் இறங்கி நின்று கொண்டு சீடனிடம் கூறுவார்.

இறங்கியே சமாதிதனில் இருந்து கொண்டு
எழிலாகச் சீடனுக்கு அதிதம் சொல்வார்
சுரங்கமென்ற குழிதனிலே போறேன் அப்பா
சுருதிபொருள் கருவி கரணாதி யெல்லாம்
அரங்கமுடன் உள்ளடக்கி மனதிருத்தி
வையகத்தின் வாழ்க்கை எனும் தளை அகற்றி
உரங்களுடன் பத்தாண்டு இருப்பே னென்று
உத்தமனார் யாகோபு கூறினாரே.

போ.7000 - 3872

" நான் பத்தாண்டுக் காலம் சமாதியில் இருப்பேன். பிறகு நான் வெளியே வருவேன். சமாதியிலிருந்து நான் வெளிவரும் காலத்தில் பல அற்புதங்கள் நிகழும். தேன் மாரி பொழியும். நறுமலர்கள் பூத்து மணம் கமழும். விலங்குகள் கூட ஞானம் பேசும். இந்த மாதிரி அடையாளங்களைக் கொண்டு நான் திரும்பிவரும் நாளை நீ தெரிந்து கொள்ளலாம்," என்று கூறிச் சமாதியை மூடிவிடச் சொன்னார்.

Koviloor Digital Library

பத்து ஆண்டுகள் கழிந்தன. யாகோபு சொன்னதுபோல் திரும்பி வந்தார். தன் உண்மைச் சீடன் சமாதியருகிலேயே இருந்தது கண்டு மிகவும் மகிழ்ந்தார். அவனுக்கு வேண்டிய உபதேசங்களைக் கூறியபின் தான் சமாதிக்குச் சென்றதன் பின் அங்கு என்ன நடந்தது என்று கேட்டார். சீடன் சொன்னான் " குருவே, நீங்கள் சமாதிக்குச் சென்றவுடன் பெருங்கூட்டம் கூடியது. யாகோபு சமாதிக்குப் போய்விட்டார். இனிமேல் திரும்பி வரமாட்டார். அவருடைய உடல் மண்ணாய்ப் போகும்," என்றெல்லாம் மிகவும் கேவலமாகவும் ஏளனமாகவும் பேசினார்கள்.

கூச்சலுடன் வெகு மாண்பர் கும்பல்கூடி
குவலயத்தில் வேகமுடன் வார்த்தை சொன்னார்
ஏச்சாகக் கூறினதோர் மொழிகட்கெல்லாம்
எதிராக யான் ஒன்றும் பேசேன் பாரே. 3886

பாரேதான் வெகுகாலம் சமாதி பக்கம்
பாரினிலே வருவாரும் போவாருண்டு
நேரேதான் அவர்களிடம் வார்த்தை பேசேன்
நேர்மையுடன் சமாதியிடம் பள்ளி கொள்வேன்
கூரேதான் சமாதியிடம் இருந்து கொண்டு
கொப்பெனவே தேவர்வரும் காலம் மட்டும்
ஊரேதான் போகாமல் காத்திருந்து
உறுதியுடன் சேவையது கண்டிட்டேனே. 3887

பலபேர் பலவிதமாகக் கூச்சல் போட்டுப் பேசினார்கள். நான் எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. சமாதிக்குப் பக்கத்திலேயே படுத்துத் தூங்கினேன். இரவும் பகலும் இங்கேயே காவலுக்கு இருந்தேன். ஒருதடவைகூட நான் என்னுடைய ஊருக்குக் கூட போகவில்லை என்று சீடன் கூறினான்.

அந்தச் சீடனின் அன்பு யாகோபின் மனம் நெகிழச் செய்தது. " அப்பனே! அவர்கள் பேசியதில் தவறில்லை. இந்த மானிட தேகம் நிலையானது அல்ல. காயகற்பம் உண்டு காயத்தைச் சித்தி செய்து நான்கு யுகங்கள் வாழ்ந்தாலும் பிறகு ஒருநாள் இந்த உடல் மண்ணாய்த் தான் போகும். நான் மறுபடியும் சிறிது காலம் சமாதியில் இருக்க விரும்புகிறேன், இந்தமுறை முப்பது ஆண்டுகள் கழிந்த பிறகே வருவேன். நான் சமாதிக்குச் சென்ற பிறகு என்னைப் பற்றித் தவறாகப் பேசியவர்களுக் கெல்லாம் கண் குருடாகப் போய் விடும். " என்று கூறிவிட்டு மறுபடியும் சமாதியில் இறங்கி விட்டார்.

Koviloor Digital Library

சமாதியின் மேல் பாறை கொண்டு மூடப்பட்டது.

சமாதியைப் பார்க்க வந்தவர்கள், " அடப்பாவமே! இனி யாகோபு திரும்பி வருவதேது? " என்று ஏளனமாகப் பேசினால் உடனே கண்களின் பார்வை போய் விட்டது. அதுமட்டுமா?

குருடராய்ப் போனவர்கள் சிலது மாண்பர்
குவலயத்தில் அழிந்தவர்கள் சிலது மாண்பர்
திருடராய் ஒளித்தவர்கள் சிலது மாண்பர்
தீர்க்கமுடன் வாய்குளறிச் சிலது மாண்பர். 3901

கண்கெட்ட பிறகு "ஐயோ இப்படி ஆகி விட்டதே என்று அடித்துக் கொண்டார்கள். வாய்க் கொழுப்பால் வந்த வினை தீருமா" என்று அழுதார்கள்.

முன் நின்று யாக்கோபு வருவ தெப்போ
மூவுலகில் சாபமது தவிர்வதெப்போ
மன்னரவர் மாண்பர்களின் வினையை நீக்கி
மானிலத்தில் வரம் கொடுக்கும் காலம் எப்போ. 3902

என்று அழுது புலம்பியபடி அங்கேயே காத்துக் கிடந்தார்கள். ஆண்டுகள் பலகழித்தன. இதனிடையே செத்தவர்கள் பலர். இருந்தவர்கள் பலர்.

கோடியாம் சிலபேர்கள் ஞானவான்கள்
குவலயத்தில் வெகு நாளாய்ப் பேருண்டாக
நாடியே சமாதியிடம் கிட்டிருந்து
நாதாந்தப் பேரொளிவின் சமாதி முன்னே
வாடியே காத்திருந்த சீடர் தாமும்
வண்மையுடன் உபதேசம் பெற்றார் தானே. 3903

காத்திருந்த சீடர்கள் முப்பதாண்டுகளுக்குப் பிறகு சமாதியிலிருந்து வெளிவந்த யாகோபின் தரிசனம் பெற்றார்கள். சோதி வடிவாக வெளிவந்த யாகோபு அவர்களுடைய குறைகளை நீக்கினார். ஆனால் அவருக்கு மெக்காவின் வாழ்க்கை அலுத்து விட்டது. சீவன் முத்தி பெற வேண்டு மென்றால் தமிழகத்திற்குச் சென்றாக வேண்டும் என்று தோன்றியது.

சிறிது காலம் தன் சீடர்களுடன் இருந்து அவர்களுக்கு வேண்டிய உபதேசங்களைச் செய்தபின் " நான் மறுபடியும் சமாதிக்குச் செல்கிறேன். இனித் திரும்பிவர மாட்டேன்." என்றார்.

Koviloor Digital Library

சீடர்கள் திடுக்கிட்டார்கள். சிலர் அழுதார்கள். சிலர் தொழுதார்கள். நீங்கள் போகக் கூடாது இங்கேயே இருக்கவேண்டும் என்று வேண்டினார்கள்.

" அட மூடர்களே! அப்படியே நான் இருந்தாலும் நான் இருக்கும் காலம் வரை நீங்களும் என்னுடனேயே இருப்பீர்கள் என்று உறுதி கூற முடியுமா? பிறந்தவர் எல்லோரும் போயே ஆகவேண்டும். இந்த உடல்தான் அழியக் கூடியதே தவிர ஆன்மாவுக்கு அழிவில்லை. அதனால் அழாதீர்கள். நான் என்றும் உங்களுடனேயே இருப்பதாக நினையுங்கள், " என்று கூறி விடை பெற்றுச் சமாதி புகுந்தார்.

யாகோபு மெக்காவில் சமாதியடைந்ததாகக் கூறுவார்கள். ஆனால் அவர் சமாதியிலிருந்து வெளிப்பட்டுத் தமிழகம் வந்து சதுரகிரியில் சிறிது காலம் தங்கியிருந்து தாம் மெக்காவில் இருந்த போது அரபி மொழியில் எழுதிய மருத்துவ நூல்களைத் தமிழில் எழுதினார். பிறகு சதுரகிரியில் இராமதேவர் வனத்தில் சென்று சில காலம் தங்கினார். அதன்பின் அழகர்மலையை அடைந்து அங்கே சமாதியடைந்தார்.

தமிழகம் திரும்பி வந்த பிறகு தமது ஆசிரமத்திற்குச் சென்றபின் அவர் இராமதேவராகவே மாறிவிட்டார். அதனாலேயே அழகர்மலையில் சமாதியடைந்தவர் இராமதேவர் என்றே கூறப்படுகிறது.

யாகோபு அருளிய நூல்கள்

யாகோபு	சவுக்காரம்		1200
"	வைத்திய சிந்தாமணி		750
"	சுன்னக்காண்டம்		600
"	வைத்திய வாத சூத்திரம்		400
"	சுன்னம்		300
"	செந்தூரம்		300
"	வைத்தியம்		300
"	களங்கம்		300
"	பஞ்சமித்திரம்	300	
"	சுண்ணசூத்திரம்		150
"	செந்தூர சூத்திரம்		150

Koviloor Digital Library

யாகோபு	தண்டகம்	119
"	வாத சூத்திரம்	57
"	செந்தூர சூத்திரச் சுருக்கம்	50
"	சுண்ண சூத்திரச் சுருக்கம்	50

இவற்றில் சவுக்காரம் 1200 தவிர மற்ற நூல்கள் தாமரை நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

யூகிமுனி

பைந்தமிழில் இலங்கும் ஐந்து சிறு காப்பியங்களில் ஒன்றான பெருங்கதை என்ற நூலில் வத்சல மன்னனாகிய உதயணன் என்பவனுடைய முதலமைச்சராக இருந்த யூகி என்பவரே முறைப்படி உபதேசங்கள் பெற்றுத் துறவறம் பூண்டு "யூகிமுனிவர் " என்ற பெயருடன் இருந்தார் என்பது சில நூலாசிரியரின் கருத்தாகும், என்று மரு.க.சு. உத்தமராயன் அவர்கள் தமது தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் என்ற நூலில் எழுதியுள்ளார்.

இது சரியான கருத்தல்ல. பெருங்கதையில் வருவது கற்பனை! கதையே தவிர வரலாறு அல்ல.

வரைந்திட்டேன் சிவனுமைக்கு மகிழ்ந்து சொல்ல
வகையாக உமைதானும் நந்திக்கு
தரைந்திட்டே நந்தி அசுவனிக்குச் சொல்ல
தாட்டிகமாய் அசுவினியும் விசுவினிக்குச் சொல்ல
பரைந்திட்டு விசுவினியாம் தேவரிடியும்
பாசமாய்த் தன்வந்திரிக்கு உபதேசிக்க
அரைத்திட்ட தன்வந்திரி அகத்தியர்க்கு
ஆதியாம் அகத்தியரும் அன்பாய்த் தானே.
யூகி. வாத. 2

அன்பாக அகத்தியரும் புலத்தியர்க்குச் சொல்ல
ஆதியாம் புலத்தியரும் தேரருக்குச் சொல்ல
தென்பாகத் தேரருமே யூகிக்குச் சொல்ல
திரமான யூகியுமே உலகத்தோர்க்கு

என்று குரு பரம்பரையாக நூல் வந்த விதத்தை யூகி முனிவர் கூறுகிறார்.

யூகிமுனிவரின் பிறப்பு வளர்ப்பு பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. போகர் 7000 எனும் சத்தகாண்டத்தில்

சீரான யூகிமுனி பிறந்த வண்ணம்
சிறப்புடனே சொல்லுகிறேன் திறமை மெத்த

Koviloor Digital Library

நேரான ஆவணியாம் திங்கள் அப்பா
நெடிதான பூசமது மூன்றாம் காலாம்.
போ.7000/5944

என்று யூகிமுனி பிறந்த திங்கள் கோள் முதலியவற்றைக் கூறுகிறார்.

தானான யூகிமுனி மார்க்கமே தென்றால்
தகைமை யுள்ள தன்வந்திரிக்கு உற்ற பேரன்
கோனான சிங்களவ குலத்துதித்த
கொம்பனையாள் கானீனன் பெற்றபிள்ளை. 5945

என்றும் கூறுகிறார்.

இவ்வரிகளால் யூகிமுனி தன்வந்திரி வழிவாக வைத்தியவாத யோக ஞானங்களைக் கற்றவர் என்பதும், இவர் தாய் சிங்கள நாட்டைச் சேர்ந்தவள் என்பதும் தெரியவருகிறது. (கானீனன் = கன்னிப்பெண்-திருமண மாகாதவள் பெற்ற பிள்ளை)

நீடான யூகிமுனி மரபு ஏதென்றால்
நிசமான குறும்பருட ஜாதியாகும்
தாடான தலைமுறைகள் என்ன சொல்வேன்
தாக்கான பதினெட்டு ஒன்று மூன்றே.
போ.7000 /5733

யூகிமுனி குறும்பர் குலத்தில் பிறந்தவர். இருபத்திரண்டு தலைமுறைவரை அறியப்பட்டவர் என்கிறார். குறும்பர் என்பது ஆடு மேய்க்கும் சாதியாரைக் குறிக்கும். மேலும்,

பிறிதோரிடத்தில் யூகிமுனி வெகுகாலம் இல்லறவாழ்க்கை நடத்தியவர் என்றும், சமதக்கினி முனிவருக்கும் திரணாக்கிய முனிவருக்கும் குரு என்றும் தமது குருவான காலாங்கி நாதர் உரைத்ததாக போகமுனிவர் கூறுகிறார்.

யூகிமுனிவர் மலைகளுக்கிடையே சமாதிக்கு இடம் தேடிய வராகச் சுற்றி வருகையில் ஓரிடத்தில் ஒரு குத்துக்கல்லைக் கண்டார். அங்கே அவர் வீற்றிருந்த சமயம் அம்மலையில் கிடுகிடென்ற பேரொலி உண்டாயிற்று.

திருத்தமுடன் சமாதிபுறம் சத்தம் கேட்டுத்
திடுக்கிட்டு மெய்மறந்து நிற்கும் போது

Koviloor Digital Library

அருந்ததி போல் சோதியொன்று காணலாச்சு
அப்போது சித்தொளிவைக் கண்டார் பாரே.
போ. 7000/3626

கண்டாரே சித்தொளிவைக் கண்டபோது
கண்காணாச் சோதிமய மென்ன சொல்வேன்
அண்ட சராசரங்க ளெல்லாம் கிடு கிடுத்து
அங்ஙனமே யொளிதனிலே மயங்கிப் போனார்
தெண்டமுடன் கண் திறந்து பார்க்கும்போது
தெளிவான ஸ்ரீ சம்பாரனையுந்தான்
பண்டு மிகப் பிரகாசந்தான் கொண்ட சித்து
பாரினிலே தோற்றமது காணலாச்சே. 3627

காணவே யூகிமுனி சித்து பாலன்
கண்டாரே ஸ்ரீசம்பாரனையர் தன்னைத்
தோணவே யவர் பாதந் தொட்டுமேதான்
தொல்லுலகில் கீர்த்தியுடன் அடிபணிந்து
வேணதொரு வரமெனக்குத் தருகவென்று
விருப்பமுட னஞ்சலிகள் செய்து கொண்டார்
ஊணவே ரிஷியாரும் முனியாருக்குப்
புகழாக ஞானோ பதேசஞ் செய்தார் பாரே. 3628

சமாதியிலிருந்து ஒளிவடிவாய் வெளிவந்த சம்பார முனிவர் யூகிமுனிவருக்கு ஞானோபதேசம் செய்த வரலாற்றை மேற் கண்ட பாடல்கள் கூறுகின்றன.

யூகிமுனிவர் தேரையரின் சீடர் என்பதை முன்பே கண்டோம். யூகி மிகச் சிறந்த சீடராக விளங்கினார். நல்ல பண்புகளும் நுண்ணறிவும் உடையவராக இருந்தார். அப்படிப்பட்ட உத்தம சீடனை அடைந்ததில் தேரையருக்கு மிகவும் மகிழ்ச்சி. அதனால் அவரைத் தமது குருவான அகத்தியரிடம் அழைத்துச் சென்றார்.

பண்புள்ளா னென்றுமே சொல்லி யென்னைப்
பதிவாகத் தேரருமே கூட்டிப் போக
சண்பாக வகத்தியரு முபசரித்துச்
சரியான சிந்தூரம் வைத்துக் காட்டி
எண்பாக மென்றுமே சொல்லிக் காட்ட
இருந்திட்டேன் திருவண்ணா மலையில் நேரே. 686

Koviloor Digital Library

தேரர் தன்னை மிகவும் பண்புடையவன் என்று கருதி, அகத்தியரிடம் அழைத்துச் சென்றார். அவர் தமக்குச் செந்தூரம் செய்யும் முறையைச் சரியாகக் கற்றுத் தந்தார் என்று கூறுகிறார்.

யூகிமுனி நந்தீசரிடமும் நூல்கற்றுத் தெளிந்துள்ளார் என்பதையும் அறிகிறோம்.

பெருமையாம் ஆறுவரை தாண்டியேறி
பேசாத மாசற்ற நிற்குணத்தை
அருமையாய் மனமுன்றிப் பார்த்துத் தேர்ந்து
அடுக்காறு தலத்தில் நின்று ஜபித்து ஏறி
நெடுமையாய்ச் சாஸ்திரமும் பாடித் தேர்ந்து
நிற்குணத்தின் வழிநின்று நெடுநூலைக்
கடுமையாய் நந்தியென்ற பாட்டனாரைக்
கனிவாக நாவினால் துதிசெய்தேனே. 603

துதிசெய்தேன் சுருதியாய்ச் சொன்னாரையா
துப்புறவாய்க் கேளாது கேட்டுக் கொண்டேன்
கதிபெறவே கடாட்சித்து யூகி யென்றார்
கருணைபெற வடியேனு மொப்புக் கொண்டு
நிதிபெறவே திருவண்ணாமலையில் வந்தே
நெடுங்கால மங்கிருந்து உரை செய்தேனே. 604

இப்பாடல்களால் நந்தீசரால் யூகி என்று பெயர் பெற்றதையும் அவர் அருள் பெற்றுத் திருவண்ணாமலையில் வந்து நெடுங்காலமிருந்து தவம் செய்ததையும் அறிகிறோம்.

இதனால் வைத்திய வாத யோக ஞானங்களைப் பற்றி மிகத் தெளிவான கருத்துக்களுடனேயே யூகிமுனி நூல்களைச் செய்துள்ளார் என்பது தெரிகிறது.

வாதம் செய்ய வேண்டிய கிரமம்

முதலில் அயத்தைப் பாரு (அயம் = இரும்பு) அதன்பிறகு சவுக்காரச் சுன்னம்பாரு. அதன் பின்பு துரிசைப்பார். பிறகு சூதத்தைக் கட்டு. (சூதம் = இரசம்) இவ்வாறு வாதத்தை முறையாச் செய்துவந்தால் நீயும் பெரியோனாகலாம். ஏனென்றால் வாதம் பார்த்தால் ஞானம் வரும். ஞானம் வந்தால் யோகம் கைகூடும் என்கிறார் யூகிமுனி.

Koviloor Digital Library

சித்தியாய் எட்டிரண்டு மென்ற பேரு
சிறப்பான ரவி மதியாம் ஊணிப்பாரு
பத்தியாய் இஃதிரண்டு மொன்றானாக்கால்
பதிவான தங்கமாம் இந்த வித்தை
முத்தியாம் முன்சென்மம் ஈடேறிப்போம்
முடிவான பொருளிதுதான் மூர்க்கமாகும்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் பொருளுக்கும்
சதாசிவன்தான் சொன்னதிது சரிதான்பாரே. 14

எட்டு என்பது ரவி. இரண்டு என்பது மதி. ரவி செம்பு. மதி வெள்ளி, செம்பையும் வெள்ளியையும் முறைப்படி சேர்த்துவிட்டால் தங்கமாகிவிடும் என்கிறார் யூகிமுனி.

தங்கம் செய்வது வெகு சுலபமாய் உள்ளதே என்று யாரும் நினைத்து விட வேண்டாம். இதில் எத்தனையோ ரகசியங்கள் உள்ளன. வாதத்திற்கு செம்பும் வெள்ளியும் என்பது சரிதான். ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதில் தான் இரகசியம் உள்ளது.

யோகத்திற்கு எட்டு=ரவி என்பது இடகலை, இரண்டு = மதி என்பது பின்கலை. இடகலையும் பின்கலையும் சுழிமுனையில் சேர்ந்தால் யோகம் சித்தியாகி விடும்.

இவை தவிர இன்னும் ஒரு பொருளும் உள்ளது. எட்டு=நாதம், இரண்டு=விந்து பெண்ணின் கருப்பையில் உண்டாகும். நாதமும்ஆணின் விந்தும் சேர்ந்தால் ஒரு உயிர் உண்டாகிறது. உலகமே இவ்வாறு உண்டானது தான். புல், பூண்டு, பூச்சி, புழுக்கள் முதல் நாம் காணும் அனைத்து உயிர்களும் நாதவிந்துக்களின் சேர்க்கையால் உண்டானவையே.

இவை மட்டுமல்லாமல் ஞானக் குழந்தையும் நாத விந்துக்களின் சேர்க்கையாலேயே உண்டாயிற்று என்பதையும் ஞானியர் உரைப்பர். குரு பிரானின்நாவே லிங்கம். சீடனின் செவியே யோனி நாவிலிருந்து உண்டாகும் ஒலி செவியின் வழியாக அறிவுப் புலனைச் சென்றடைவதால் ஞானக் குழந்தை பிறக்கிறது.

எட்டும், இரண்டும் என்ற இச்சொற்களின் மறைபொருளை உணர உணர மெய்சிலிர்க்கும். எட்டு - அ. தமிழில் அகர எழுத்தே எட்டைக் குறிக்கும். உகர எழுத்து இரண்டைக் குறிக்கும். அகர உகரங்கள் சேர்ந்து மகர முற்றுப் பெற்று ஒலிக்கும் பொழுது " ஓம் " என்ற பிரணவம் எழுகிறது. சோதிமயமாய், ஒளி வெள்ளமாய், எங்கும் நிறைந்த ஒலி ஒளிப் பிரவாகமாய், அண்டசராசரங்களிலுள்ள அனைத்தையும் தழுவி

Koviloor Digital Library

அகில உலகங்களிலும் வியாபித்து ஓங்கார நாதமாய்ச் சத்தி சொரூபமாய், சிவ சொரூபமாய், சக்தி சிவ சொரூபமாய் விளங்குகிறது.

எட்டும், இரண்டும் பற்றிய இரகசியத்தை யூகிமுனிவர் வாயிலாக அறியத் தொடங்கும் பொழுது சிந்தனைகள் இவ்வளவு விரிந்து பரந்த பொருளையும் உய்த்துணர இடமேற்படுகிறது.

ஆக்குவது கெந்தியினால் செம்பைக் கொல்லு
அடைவாக அயத்தினால் எழுப்பிக் கொள்ளு
தூக்குவது உருக்கிடவே செம்பொன் னாகும்
துடியாக மதிதனிலே எட்டிரண்டு
தாக்குவது ஏழாகும் விற்றுக் கொள்ளு
தன்மையாய் வாசி யோகத்தைப் பாரு
நோக்குவது பிராணனைத் தான் மேலே நோக்கு
நொடிக்குள்ளே எட்டிரண்டும் சித்தியாமே

என்று பதின்மூன்றாவது பாடலில் கூறுகிறார்.

கெந்தி (கந்தகம்) செம்புக்குச் சத்துரு. சத்துருவால் ஒரு சரக்கைக் கொன்று மித்துருவால் எழுப்பும் போது அச்சரக்கு புதிய தன்மை பெறுகிறது என்பது சித்தர் கண்ட உண்மை. செம்புடன் கந்தகத்தைச் சேர்த்து உருக்கும் போது செம்பு மடிந்து விடுகிறது. அதனுடன் அயத்தைச் சேர்த்து உருக்கினால் செம் பொன் ஆகும். அதனுடன் எட்டுக்கு இரண்டு வெள்ளி சேர்த்து உருக்கினால் ஏழுமாற்றுத் தங்கம் கிடைக்கும் என்று யூகிமுனிவர் கூறுகிறார்.

தங்கம் செய்வது உலகத்தை விலைக்கு வாங்குவதற்காக அல்ல. உயிர்வாழ்வதற்குத் தேவையான அளவுக்கு மட்டும் செய்து விற்று உண்ணு, வாசி யோகத்தைப் பண்ணு. உன் சீவன் கடைத்தேறும் வழியை எண்ணு. எட்டும் இரண்டும் (வாசியோகம்) சித்தியாகும் என்கிறார்.

வாதம் அறிந்தவர்கள்

இவ்வாறு யோக நெறியில் நின்று இரசவாதம் செய்பவர்கள் தேவர்களுக்கு ஒப்பாவர். சிவனுக்கே ஒப்பாவர் என்கிறார் யூகிமுனி.

ஆமேதான் வாதத்தைக் கண்டபேர்கள்
ஆதிசிவ னவனாகும் ருஷிகளாகும்
தாமேதான் சத்த மகா சித்தராகும்
தடையறவே நவகோடி சித்தராகும்

Koviloor Digital Library

வாமேதான் கண்டவர்க்குத் தெய்வ மில்லை
வடிவாகக் கண்டவர்தான் தெய்வ மாகும்
பூமேதான் பூமாதர்க் கொப்பு மாகும்
புவியி லுள்ள மனிதர்களுக் கதிக மாமே. 25

அதிகமாம் பரமசிவன் தங்கமாகும்
அடுத்துநின்ற செம்பொன்னும் உமையாளாகும்
பதியவே உமையாளைக் குளிகை தன்னால்
பாச்சிடவே களிம்பற்றுச் சிவமு மாச்சு
கதியவே புதுசாகச் சிவமு மாச்சு
கருணை பெறச் சிவனுக்கு அதிகமாகும்
சரியாகச் சொன்னாக்கா லென்ன லாபம்
சத்தியமாய் நரகிலே மாளுவாரே.

இப்பாடல் வைத்தியம் வாதம் அறியாதவர்கள் சித்தர்களாக முடியாது; என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

வாதத்தைப் பற்றி மிகத் தெளிவாகவும் விரிவாகவுமே கூறியிருக்கிறார் யூகிமுனி.

அயச்செம்புச் சத்துச் செந்தூரம்

ஐம்பது பலம் ரோமத்தை எள்ளெண்ணெயில் தோய்த்து சட்டியிலிட்டு உருக்கு. உருகும்போது இரும்பை ராவிய பொடி - அரப்பொடி (பத்துப்பலம்) போட்டு நன்றாகப் புரட்டி எடுத்துக்கொள்.

பிறகு கந்தகம் முக்கால் பலம் (நாதம் - கந்தகம்) சூடன் அரைப்பலம் வீரம் கால்பலம், சேர்த்துத் தண்ணீர் விட்டு அரைத்து பத்துப்பலம் நிறை உள்ள செம்புத் துண்டின்மேல் கவசம் கட்டிக் காயவை. அதற்கு மேல் கனமாகச் சுண்ணாம்புக் கவசம் போடு. பிறகு அதைப் பத்தெருவில் வைத்துப் புடம் போடு. எடுத்து உடைத்துப்பார். செம்பு நொறுங்கி அதறாக (தூளாக) விழும். அப்படி விழாவிட்டால் மறுபடியும் கந்தகக் கவசம் போடு.

நொறுங்கின செம்பு கரிபோலிருக்கும். அதன் எடைக்கு எடை ரோமம் சேர்த்த அயத்தைச் சேர்த்துச் செவ்வல்லிப் பூச்சாற்றால் அரைத்துச் சிவப்பாகும் வரை புடம் போடு. இது அயச் செம்புச் சத்துச் செந்தூரமாகும்.

இதுபோல் பல மருந்துகளையும் தொடர்ந்து கூறிவருகிறார்.

Koviloor Digital Library

யூகிமுனியிடம் உள்ள மிகச் சிறப்பான பண்பு என்னவென்றால் அதுவரை மற்ற சித்தர்கள் பாடிய பாடல்களில் உள்ள பரிபாஷை - மறைப்புச் சொற்களை யெல்லாம் தகர்த் தெறிந்து விட்டார் என்பது தான். யூகிமுனி சித்தர் வரிசையில் கடைசியாகத் தோன்றியவர் என்பதால் அவருடைய பணி - அன்று வரை கருவைத் தொட்டு வைத்தியம் செய்தவர்களின் கண்களைத் திறந்தது. சித்த வைத்தியர்களுக்கு மக்களிடையே ஏற்பட்டிருந்த அபவாதத்தையும் கெட்ட எண்ணத்தையும் போக்கியது.

பின்வரும் பாடல்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

நாடிப்பார் சுடுவாதி புளியைக் காணார்
நாடியே மலந்தானும் புளிய தென்பார்
வாடியே மனிதர் மூத்திரத்தைத் தானும்
வகையாக அமுரியென்பார் புத்தியில்லார்.

என்கிறார் யூகிமுனி. அப்பாடலால் அன்றுவரை மல மூத்திரங்களை மருந்தாகப் பயன்படுத்தலாம் என்று எண்ணி வந்த மூட வைத்தியர்களின் கண்களைத் திறக்கிறார்.

மேலும் வாய்நீர், சுத்த கங்கை, வேகாக்கால், சாகாத்தலை, போகாப்புனல் என்ற மறைப்புச் சொற்களுக் கெல்லாம் விளக்கம் கூறுகிறார். கடைசியாக,

நந்தீசரும், அகத்தியரும் கூறிய நூல்களைப் படிப்பவர்கள் சுத்தகங்கை என்றால் குழந்தை பிறக்கும் போது பனிக்குடம் உடைந்து வெளிவரும் நீர் என்று நினைக்கும் படியாக இருந்தது.

அதிலிருந்து பிண்டம் என்ற சொல்லுக்கு இறந்த சிசு என்ற பொருள் கொள்ளப்பட்டது. ஐந்தாம் மாதப் பிண்டம் ஆறா மாதப் பிண்டம் என்று வரும் இடங்களில் ஐந்து மாதங்களில் மரித்த சிசு ஆறுமாதத்தில் மரித்த சிசு என்ற பொருள் கொள்ளப்பட்டது. வேறு சிலர் இதையே ஐந்தாம் மாதத்திய கர்ப்பம், ஆறாம் மாதத்திய கர்ப்பம் என்று பொருள் கொண்டு மதி கெட்ட வழிகளில் சென்று பெரும் பாவத்திற் காளானார்கள். (கருவைக் கொண்டு மருந்தும் மாந்திரிகமும் செய்யும் முறை ஆரியர்களுடையது என்றும் இன்னும் மலையாள நாட்டிலும் வடக்கே சில நாடுகளிலும் இம்முறைகள் பின்பற்றப் படுவதாகவும் கூறுகிறார்கள்.)

Koviloor Digital Library

யூகிமுனி அவர்களுக் கெல்லாம் நல்ல சாட்டையடி கொடுக்கிறார்.

நலமாக வழலை யென்று இதற்கே பேராம்
நந்தீசர் சொன்னதுதான் நாடிப்பாரு
பெலமாக வழலையைத்தான் மறைத்தார் கோடி
புரட்டாக வழலையென்று பிணத்தைத் தானும்
கலனாகச் சொல்லிவிட்டார் பித்தர் தானும்
கருத்தாகப் பார்த்தாக்கால் அயமுமாச்சு
சலனாகப் பிணம் பிடுங்க வேண்டா மையோ
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் உலகத்தோரே.
யூகி வாத காண்டம் - 299

அயமில்லை கருவித்தை யென்பார் கோடி
அலைந்துமே திரியாதே அயத்தைப் பாரு
நயமில்லை கருவிலொன்று மில்லையப்பா
நாடியே கரும்பொன்னில் வேதையாகும்
பயமாக எண்ணாதே கறுப்பில்பாரு
பருவமாய டிக்கடிக்குச் சொல்ல மாட்டேன்
சுயமாக நூலைத்தான் கடைசி தன்னில்
சுருக்கமாய்ப் பாகமாய்ச் சொல்லிவிட்டேன். 301

சொல்லிவிட்டேன் திரிமூர்த்திக் கொப்பாய்ச் சொன்னேன்
சுருதியைத் தானா ராய்ந்து சுருக்கிப் பாரு
நல்லிவிட்டேன் பிண்ட வித்தை பொய்யே யாகும்
நலமான அயவித்தை சத்தியமாகும்
கல்லிலிட்ட கஞ்சாவும் அபின் தின்போர்கள்
கலனாகச் சொல்வார்கள் பிண்ட வித்தை
வல்லிடவே ஈஸ்வரன்தான் அறியச் சொன்னேன்
வகையான பிண்ட வித்தை பொய்யதாமே. 302

இவ்வாறு யூகிமுனி அடித்துக் கூறிச் சித்த வைத்தியர்களைச் சரியான பாதைக்குத் திருப்பியிருக்கிறார். பிண்டம் என்றால் பிணம் என்று பேசுபவன் கஞ்சாவையும் அபினையும் தின்றுவிட்டுப் பிதற்றுகிறான் என்று இவ்வளவு துணிச்சலோடு கூறியவர்கள் அக்காலத்தில் யாருமே இல்லை.

அகத்தியர் தேரையரைப்போல் யூகிமுனிவரும் பல நூல்களைப் பாடியுள்ளார். அவை,

Koviloor Digital Library

யூகி பன்னிரு காண்டம்	12000
" வைத்திய சிந்தாமணி	800
" வைத்திய சூத்திரம்	500
" வகாரம்	200
" " சூத்திரம்	150
" கரிசல்	150
" தத்துவ ஞானம்	105
" கற்பம்	100
" " சூத்திரம்	55
" " ஞானம்	50

* * *

Koviloor Digital Library

மச்சமுனி

மச்சமுனிவரைப் பற்றி டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் வினோதமான ஒரு குறிப்பு காணப்படுகிறது.

> **மச்சமுனி:** ஓர் சித்தர். இவர் பிண்ணாக்கீசர் வளர்த்த பிள்ளை. மேலும் அவரின் மாணாக்கரு மாவார். சதாசிவம் கால ஞானத்தை உமாதேவிக்கு உபதேசிக்கும் போது, உமாதேவி தூங்கிவிட, அப்பொழுது கேட்டுக் கொண்டிருந்த மீனை மச்சமுனியாக ஈஸ்வரன் உற்பவிக்கச் செய்த ஓர் சித்தர் இவர் என்பதாக ஒரு கதையுண்டு.

என்பதுவே அக்குறிப்பு கதையாக இருந்தாலும் மிக நன்றாக உள்ளது.

> பெற்றுடன் வாழ்ந்தா ரிந்தப்பேர் பெரும் மச்சர்தாமும்
> உற்ற செம்படவர் ஜாதி உலகத்தில் நல்ல சித்தர்
> கொற்றவனருளா லந்தக் குலம் விட்டு மவருமேகி
> மற்ற நற்கலைகள் கற்று வகாரத்திற் றிரமானாரே.

என்று கருவூரார் வாதகாவியம் நொண்டியில் 523வது பாடலில் கூறுகிறார்.

அகத்தியரும் தமது அமுத கலைக் ஞானம் 218 வது பாடலில்,

> அருமையுள்ள மச்சமுனி யென்ன சொல்வேன்
> அவன்குலந் தான் செம்படவ னாகுந் தானே.

என்கிறார். ஆனால் போகமுனிவர் வேறுவிதமாகக் கூறுகிறார்.

> தலைமுறையா மச்சமுனி சாதிபேதம்
> தன்மையுள்ள கல்லுடையார் என்னலாகும்.
> போ.7000/5700

மச்சமுனி என்ற பெயரைக் கொண்டு, செம்படவர் என்று முடிவு கட்டுவது எளிதான காரியமே.

Koviloor Digital Library

பக்தியுள்ள மச்சமுனி பிறந்த நேர்மை
பாங்குடனே ஆடியாம் திங்களப்பா
சத்தியுடன் ரோகணியாம் முதற் காலப்பா
சாங்கமுடன் பிறந்த தொரு நாளுமாச்சே. 5873

ஆடிமாதம் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர் என்றும் போசர் கூறுகிறார்.

மச்சமுனி தம் பாடல் ஒன்றில் பிண்ணாக்கீசர் தனக்கு உபதேசம் செய்ததாகக் கூறுகிறார். ஆனால் மச்சமுனி ஞான தண்டகம் 97ல்,

குருநந்தி ஆசானைக் கும்பிட்டேன் ஞாலந்
திருமூலர் நாமத்தைச் சேவித் - தரு முன்னோன்
போக குரு விட்டிமையைப் பூசியருச்சித் தேற்றும்
காகநிறத் தந்தி பதங் காப்பு

குருநந்தி என்றும், போககுரு என்றும் நந்தீசரையும், போக முனிவரையும் குறிப்பிடுகிறார்.

கை கண்டோர்கள் கயிலாசக் கொங்கணர்
கடந்த மூலர் பதஞ்சலி மாமுனி
தை கண்டேறியே தன்னை யிகழ்ந்திட்டுத்
தாக்கி நின்றனர் கேசரிக் குள்ளய்யா

என்று பாடுவதால் இவர் திருமூலர் பதஞ்சலி வியாக்கிரமரோடு தில்லையில் நடனம் கண்ட காலத்திலேயே இருந்தனர் என்று கொள்ளலாம்.

அகத்தியர் பனிரெண்டாயிரம் ஐந்தாம் காண்டத்தில், மச்சர் புசுண்டரிடம் உபதேசம் பெற்றவர் என்றும் உலக ஆசை யற்றவராகத் தன் சொத்தை எல்லாம் விற்று ஏழை பரதேசிகளுக்கு அன்னதானம் செய்தவரென்றும் கூறுகிறார்.

ஆணவங்கள் தானொடுங்கி யிருந்த சித்து
அப்பனே புசுண்டருப தேசம் கொண்டு
மாணமருங் கல்விகளி லதிகமாக
மானிலத்தில் பயித்தியங் கொண்டருளுமாகி. 304

Koviloor Digital Library

சித்தான சித்துமுனி மச்சனப்பா
சீருலகில் நெடுங்கால மிகுந்த சித்து
சத்தான திரேகமதை நம்பாமற் றான்
தாரணியி லிருந்ததொரு தனத்தை யெல்லாம்
நித்தியமு மகதிகட்கு அன்னந் தந்து
நிட்களங்க நிடேத வழி தெரிந்துமே தான்
பத்தியுட னம்பாளின் தரிசனத்தால்
பாருலகை மறந்ததொரு சித்தனாமே. 305

மச்சமுனி திருப்பரங்குன்றத்தில் சித்தி யடைந்ததாகக் கூறுவர். திருவானைக்காவில் என்பாரும் ஊர்.

மச்சமுனி இயற்றிய நூல்கள்.

மச்சமுனி பெருநூல் காவியம்	800
" சரக்கு வைப்பு	800
" வகாரம்	800
" யோகம்	800
" வைத்தியம்	800
" திருமந்திரம்	800
" வேதாந்தம்	800
" ஞானம்	800
" குருநூல்	800
" தீட்சாவிதி	100
" தண்டகம்	100
" ஞானதீட்சை	50
" தூல சூக்கும காரண ஞானம்	30
" சூத்திரம்	21

Koviloor Digital Library

கோரக்கர்

அருள்பெற்ற நந்தி ஆசான் எனக்குப்
பொருள் பெற்ற மூலர் போகர் எனக்குத்
தருவொத்த தோழர் சட்டைமுனியும்
பரமுள கொங்கணர் பச்சம் மிகுதியே!

கோரக்கர் வகார சூத்திரம் 100 என்ற நூலின் முதற் பாடல் இது. நந்தி தமது ஆசான் என்றும் திருமூலர் வழிவந்த போகர் தோழர் என்றும் சட்டைமுனி கொங்கணவர் மேல் தனக்குப் பிரியம் அதிகம் என்றும் இந்தப் பாடலில் கோரக்கர் கூறுகிறார்.

நந்தி ஆசான் என்றதால் இவர் வடநாட்டைச் சேர்ந்தவர் என்ற ஐயம் எழலாம். இவர் மராட்டியர் என்று கருதுவாரும் உண்டு.

சொல்லவே கோரக்கர் பிறந்த நேர்மை
சுந்தரனார் வசிஷ்ட மகா ரிஷியாருக்கு
புல்லவே கானக்குற ஜாதியப்பா
புகழான கன்னியவன் பெற்ற பிள்ளை
வெல்லவே அனுலோமன் என்னலாகும்
வேதாந்த கோரக்கர் சித்து தாமும்
நல்லதொரு பிரகாசமான சித்து
நாதாந்த சித்தொளிவும் என்னலாமே.

போ.7000/5913

கோரக்கர் வசிஷ்ட மகா ரிஷியாருக்குக் கன்னியான குறப் பெண்ணிடம் பிறந்த பிள்ளை. அதனால் அனுலோமன் என்று கூற வேண்டும் என்று கூறுகிறார் போகமுனிவர். (அனுலோமன் என்றால் உயர்ந்த குலத் தந்தைக்குத் தாழ்ந்த குலப் பெண்ணிடம் பிறந்த பிள்ளை)

புத்தியுள்ள கோரக்கர் பிறந்த நேர்மை
பண்பான கார்த்திகையாம் மாதமாகும்
சித்திபெற ஆயிலியம் இரண்டாம் காலாம்
சிறப்பான நாளென்று சொல்ல லாமே. 5912.

Koviloor Digital Library



கோரக்கர்- (ஓர் கற்பனை வடிவம்)

Koviloor Digital Library



மச்ச முனிவர்- திருப்பரங்குன்றம்-

Koviloor Digital Library

கோரக்கர் கார்த்திகை மாதம் ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்தவர் என்றும் போகர் கூறுகிறார்.

அப்பனே கோரக்கர்தான் ஆதி விப்பிர ராய்ப் பின்பு
ஒப்பவே சேணியனாம் உயர்குலந் தனி லிருந்து
எப்பவு மழியாத் தேகத் தியல்புடன் வாழும் நாளில்
கெப்பமாயிடையன் மாடு திறனாக மேய்க்கக் கண்டார்.

கரு. வாத/563

கோரக்கர் பிராமணராகப் பிறந்து பிறகு சேணியனாக இருந்தார். கற்பதேகத்துடன் வாழ்ந்து வரும் நாளில் ஒரு இடையன் பாம்பு கடித்திறக்கக் கண்டு அவனுடைய உடலில் புகுந்து இடையரானார். இடைச்சியோடு இன்பமாக வாழ்ந்தார்.

வேட்டைக்கு வந்த மன்னன் மலைக்குகையில் இருந்த சடலத்தைப் பார்த்து அனாதைப் பிணம் என்று கருதி எரித்து விட்டுப் போய்விட்டான். இடையன் தேகத்தை விட்டு வந்த கோரக்கர் தம் பழைய உடலைக் காணாமல் திடுக்கிட்டார். தன் சீடர்களான நாகார்ச்சுனர் சாணாக்கிய முனிவர்களோடு சதுரகிரியில் வாழ்ந்த ஒவ்வொரு முனிவரின் ஆசிரமமாகச் சென்று ஆங்காங்கு சில காலம் வசித்த படியே கற்ப மூலிகைகளை உண்டு இடையன் உடலைக் கற்ப உடல் ஆகச் செய்து கொண்டார், என்று கருவூரார் தமது வாத காவியத்தில் கூறுகிறார்.

என்று கோரக்கர் சீடனியல் நாகார்ச்சுனர் தன்னோடு
அன்று சாணாக்கி யாரும் அன்புடன் மூன்றுபேரும்
சென்றுமே வனங்கள் தோறும் சித்தர்க ளிடத்திலேகி
அன் றொவ்வோர் வருடமாக அருமையா யிருந்து வந்தார். 574

தீர்த்திடுங் குளிகை செய்து இடைத்திரு மேனி தன்னை
ஆர்த்திடச் சித்தி செய்து அழியாத சடலமாக்கி
பார்த்தபின் மூவருந்தான் பகல் சதுராச லத்தில்
மூர்த்தியாய் பத்தி தன்னில் முயன்றனர் குகையினுள்ளே. 577

சித்தர்கள் தங்கள் உடலை அழியாத கற்ப உடலாக்கிக் கொள்வதை மிக முக்கியமான கடமையாகக் கொண்டிருந்தனர் என்பதையும் கோரக்கர் சீடர்களோடு சதுரகிரியில் வாழ்ந்தார் என்பதையும் இதன் மூலம் அறிகிறோம்.

Koviloor Digital Library

ஒரு சமயம் கோரக்கரும் அல்லமாப் பிரபு என்ற சித்தரும் எதிர் எதிரே சந்தித்துக் கொண்டனர். கோரக்கர் தம் தவ வலிமையைக் காட்ட ஒரு வாளைக கொடுத்து அதனால் தம்மை வெட்டச் சொன்னார். அல்லமாப் பிரபு தமது பலம் கொண்ட மட்டும் ஓங்கி வெட்ட வாள் முனை மழுங்கிப் போயிற்று.

உடனே அல்லமாப் பிரபு வேறொரு வாளைக் கோரக்கர் கையில் கொடுத்துத் தம்மை வெட்டும்படிக் கூற கோரக்கர் வெட்டியவுடன் அவ் வாள் உடலின் ஊடே சென்றது. அல்லமாப் பிரபு காற்றே உடலாய்க் கொண்டவர் என்பதை அறிந்த கோரக்கர் அவரை வணங்கி உபதேசம் பெற்றார்.

போகரும் கோரக்கரும் ஒன்றாக நிகழ்த்திய பல சித்துகளை கோரக்கர் தமது சந்திரரேகை என்ற நூலில் கூறியுள்ளார். பிற்காலத்தில் நமது நாட்டில் உண்டாகப் போகும் நிலைமைகள் பற்றியும் வரப்போகும் ஆட்சிகள் பற்றியும் கோரக்கர் இந்த நூலில் கூறியுள்ளார்.

ஆனால் கோரக்கர் இயற்றிய பல நூல்கள் நமக்குக் கிடைக்காமலே போய்விட்டன.

கோரக்கர் எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பாடிவிட்டார். அதனால் கெடுதலே உண்டாகும் என்று கருதிய சித்தர்கள் ஒன்று திரண்டு அவருடைய ஆசிரமத்துக்கு வந்தார்கள்.

என்றிவர்கள் வருதற்கு முன்னே யானும்
ஏற்றமுறக் கஞ்சாவைப் பயிரே செய்து
அன்றுடனே வந்தவர்க்கு அரிசியோடு
அரைத்து அடைதட்டிச் சுட்டு உணவை ஈந்தேன்.
சந்திரரேகை - 154

சித்தர்கள் வருவார்கள். தன்னுடைய நூல்களைப் பறித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்பது கோரக்கருக்கு முன்பே தெரிந்தி ருந்தது. கோரக்கர் தாம் வசிக்கு மிடத்தைச் சுற்றிலும் கஞ்சாச் செடிகளைப் பயிர் செய்து வைத்திருந்தார். மருந்துகளில் கஞ்சாவை உபயோகிப்பது அவர் வழக்கம் கஞ்சாச் செடிக்கு கோரக்கர் மூலி என்றே பெயர்.

சித்தர்கள் வரப்போகிறார்கள் என்பது தெரிந்தவுடன் அரிசியையும் கஞ்சாவையும் சேர்த்து அரைத்து அடைசுட்டு வைத்திருந்தார். " பாவம் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள்.

Koviloor Digital Library

அடைசுட்டு வைத்திருக்கிறேன். சாப்பிடுங்கள்," என்று கூறிக் கொடுத்தார்.

சித்தர்கள் அடைகளைச் சாப்பிட்டார்கள் கஞ்சா வேலை செய்யத் தொடங்கியது. ஆளுக்கொரு பக்கம் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்துத் தூங்கி விட்டார்கள்.

கோரக்கர் அதுதான் சமயம் என்று தன் நூல்களில் முக்கியமான வற்றை மட்டும் எடுத்து மறைத்து விட்டார்.

சித்தர்கள் எழுந்தவுடன் கோரக்கரிடம் நூல்களைக் கேட்டார்கள். கோரக்கர் எடுத்துக் கொடுத்தார். அவற்றை வாங்கிக் கொண்டு பறந்து போய் விட்டார்கள்.

அவ்வாறு சித்தர்கள் கொண்டுபோன நூல்கள்:

காட்சி பெறத் தெளிவாகக் களங்கமின்றிக்
காளமேகம் கபாடப்பூட்டு கமலாஞ்சனி
தாட்சியராய் பிரமபோதம் திலதரவி
தன்மையுறும் சுரபிவிந்து லலாடப் பூட்டே.

சந்திர - 151

பூட்டான பஞ்சவர்த்தம் மறலி வாதம்
புகழ்பெரிய சென்மசித்து ஆன்மசித்து
தாட்டிகமாய் வகாரகந்தம் ஞான சோதி
தான்பெரிய சோடசரம் கல்பபோதம்
மேட்டிமையா நிலையொடுக்கம் மேன்மையாக
மேதினியி லறிவதற்கு வெளியாய்ச் சொன்னேன். 152

இந்த நூல்களை யெல்லாம் சித்தர்கள் கொண்டு போய்விட்டார்கள். இப்போது கிடைக்கும் நூல்கள்,

கோரக்கர்	சந்திரரேகை	200
"	நமநாசத்திறவுகோல்	100
"	ரவிமேகலை	75
"	முத்தாரம்	91
"	மலைவாகடம்	

இந்த நூல்கள் தாமரை நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

பிற நூல்கள் :

1. கற்பம்	1000
2. முத்திநெறி	500
3. அட்டகர்மம்	300
4. " சூத்திரம்	100
5. வகார சூத்திரம்	100
6. மூலிகை	100
7. தண்டகம்	50
8. கற்பசூத்திரம்	31
9. பிரம்ம ஞானம்	20
10. குருசெய நீர்	10

இவற்றில் வகார சூத்திரம் 100, கற்ப சூத்திரம் 31, பிரம்ம ஞானம் 20 குருசெயநீர் 10 ஆகிய நூல்கள் தாமரை நூலகம் - யோக ஞான சாஸ்திரத் திரட்டில் உள்ளன. மற்ற நூல்கள் கிடைக்கவில்லை.

Koviloor Digital Library

அல்லமாப் பிரபு

கேள்விப் படாத பெயர்!

ஆனால் இவர் புசுண்டருக்கு உபதேசித்தவர் என்பதாலும் சித்தர்களின் நிலைக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறார் என்பதாலும் இந்த நூலில் இடம் பெறுகிறார்.

காலாங்கி நாதரைப் போல் காற்றையே உடலாகக் கொண்டவர் என்பதைக் கோரக்கர் வரலாற்றில் கண்டோம்.

அல்லல் படா மனத்தோனே உனக்காய்ச் சொன்னேன்
அரும் பொருளைப் புசுண்டாநீ அறிவாய் தானே!

என்று கூறித் தமது நாடி சாஸ்திரம் பனி ரெண்டைக் கூறத் தொடங்குகிறார்.

மாற்றுகின்ற வாதமது அடிதானென்றும்
வகுத்துரைப்பார் பித்தமது நடுத்தானென்றும்
போற்றுகின்ற சீதமது முடிதானென்றும்
புகன்றிட்டார் சித்தரெல்லாம் புகன்றிட்டாரே. 3

போச் சென்ற பதினாறு கடிகைதனிற்
பொருந்தியே நிற்கிலவர் வயது கேட்டால்
ஆச்சென்ற ஆண்டதுதான் நூற்றுப்பத்து
அரகரா அவன் வாழ்நாள் இருந்து வாழும்
வீச்சென்ற பனிரெண்டு கடிகை நடுவதனில்
விரைவதிலே இருந்தேகிற் சொல்வேன் மைந்தா
காச்சென்ற வருடமொரு நூறுசொல்வோம்
கண்மணியே இதுதிடமாய்க் கண்டு தேரே. 7

நாடியைக் கொண்டு ஒரு மனிதனின் ஆயுட் காலத்தைக் கூறும் முறையை அல்லமாப் பிரபு இந்தப் பனிரெண்டு பாடல்களிலே கூறியிருக்கிறார்.

Koviloor Digital Library

சித்த வைத்தியம் என்றால் ஏதோ இதிலே கொஞ்சம் அதிலே கொஞ்சம் தெரிந்து கொண்டு ஒரு பட்டம் வாங்கிக் கொள்வது மட்டுமாகாது. அது ஒரு பெரிய கடல். அதில் சிறிதளவாவது நன்கு தெரிந்து கொள்ளவேண்டும் என்ற முயற்சி சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களிடையே உண்டாகவேண்டும்.

நாடி சாஸ்திரத்தை நன்கு பயில வேண்டும். பிறகு நாடி பார்த்து வியாதிகளைக் கண்டு பிடிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். பிறகு தக்க மருந்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கவேண்டும். முயற்சியும் ஊக்கமும் இருந்தால் ஒவ்வொரு சித்த மருத்துவ மாணவரும் சித்தரின் நிலையையே அடையலாம்.

அல்லமாப் பிரபுவின் வரலாறு பிரபுலிங்க லீலை என்ற நூலில் விரிவாக இடம் பெற்றுள்ளது. இங்கே அபிதான சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளதை மட்டும் எடுத்துக் காட்டுவோம்.

> **அல்லமாப்பிரபு:** இவர் வள்ளி காலை என்னும் ஊரில் நிராகாரன், சுஞ்ஞானி இருவரும் செய்த தவாக்கினியில் பிறந்தவர். சிவாம்சமாயுள்ளவர். யாவர் மனத்தையும் அறிந்தவர். கையில் இலிங்கமுள்ளவர். இவர் சஞ்சரிக்கும் காலையில் தருக்கள் காடுகள் மலைகள் முதலிய இவரைப் பணியும்.
>
> இத்தன்மையுள்ள இவர், வச்சலபுரமெழுந்தருள வசவ தேவர் இவர் திருவடியை அடைந்து சிங்காதனத் திருத்தி அமுதுக்கு எழுந்தருளச் செய்ய அவ்வணமிசைந்து, வசவர் லக்ஷத்து எண்பதினாயிரம் பெயர்களுக்கு வைத்திருந்த உணவுகளைப் புசித்துவிட, வசவர் பயந்து அடியேனோ அமுது படைப்பவனென அனுக்கிரகித்தவர்.
>
> இவர் வசவரிடமிருந்த அன்னமெல்லாம் உண்டதனால் வந்திருந்த சங்கம ரனைவரும் பசிதீர்ந்தனர். இவர் தம்மை மயக்க வந்த மாயையை மயக்கித் தாம் கொக்கிதேவர், முத்தாயி அம்மை, வேடன் இவர்களுக்கு உபதேசம் செய்து, வசவரிட்ட சூனிய சிங்காதனத் திருந்து வசவருக்கு அருள் புரிந்தனர்.

இவர் எழுதிய நாடி சாஸ்திரம் 12 தவிர வேறு நூல் ஏதும் கிடைக்கவில்லை.

***

Koviloor Digital Library

காகபுசுண்டர்

அது ஒரு மிகச் சிறப்பான நாள்!

கயிலாயத் திருச்சபையில் தேவர்கள் ரிஷிகள் அனைவரும் கூடியிருந்தனர்,

சிவபெருமான், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளும் தத்தம் தேவிகளுடன் வீற்றிருந்தனர்.

சிவபெருமானுக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்துவிட்டது. அவையோரைப் பார்த்துக் கேட்டார்.

கேளப்பா ஈசன் ஒரு காலம் தன்னில்
கிருபையுடன் சபை கூடி இருக்கும்போது
வாளப்பா மால்அயன்தன் முகத்தை நோக்கி
வந்தவாறு எவ்வகையோ சென்றது ஏதோ
கேளப்பா ஜெயகால லயம் தான் எங்கே
குரு நமசிவாய மெங்கே நீங்கள் எங்கே
ஆளப்பா ஐவர்களும் ஒடுக்கம் எங்கே
அறிந்தெனக்கு இவ்வகை உரைசெய்வீரே.

• புசுண்டர் ஞானகாவியம் 33/3

சிவபெருமான் கேட்டார். " இந்த உலகம் எல்லாம் பிரளய காலத்தில் அழிந்து விட்டபிறகு எல்லோருக்கும் குருவான நமசிவாயம் எவ்விடத்தில் தங்கும்? நீங்கள் எல்லாம் எங்கே இருப்பீர்கள்? பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன் சதாசிவம் ஆகிய ஐவர்களும் எங்கே இருப்பார்கள்? இதை எனக்குக் கூறவேண்டும், " என்று,

ஈசன் கேள்விக்கு ஒருவரும் பதில் சொல்லவில்லை. ஏனென்றால் அதைப்பற்றி யாருக்கும் தெரியாது.

இன்னவகை ஈசரவர் கேட்கும்போது
எல்லோரும் வாய்மூடி இருந்தாரப்போ
சொன்னவகை தனையறிந்து மார்க்கண்டேயன்
சொல்லுவான் குழந்தையவன் கலகலென்ன

Koviloor Digital Library

அன்னைதனை முகம்பார்த்து மாலை நோக்கி
அரிஹர ஈசர் மொழிக்கு உரை நீர் சொல்வீர்
பின்னை வகை யார் உரைப்பார் மாயாமூர்த்தி
பேசாமல் இருந்துவிட்டால் ஒழிவார் எங்கே. 4

எல்லோரும் வாயை மூடிக் கொண்டு சும்மா இருந்தார்கள். அப்போது சிறு பாலனான மார்க்கண்டேயன் திருமாலைப் பார்த்து, "ஈசனின் கேள்விக்கு நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும். எல்லோரும் பேசாமல் இருந்து விட்டால் எப்படி? " என்று கூற,

அறிவார்கள் ரிஷிகள் சித்தர் முனிவோரையா
அரகரா அதுக்குங்கோள் ஆர் என்றாக்கால்
பொறிபாகம் புசுண்டமுனி சொல்வாரையா
போயழைக்கக் கோளாறு வசிஷ்டராகும்
நெறியாக இவ்வகை நான் அறிவேன் ஐயா
நிலைத்த மொழி புசுண்டர் அல்லால் மற்றோர் சொல்லார்
புரிவாரு மவ்வளவென் றுரைத்தார் மாயன்
பொருள் ஞானக் கடவுளப்போ மகிழ்ச்சி பூண்டார். 6

இதுபற்றி சித்தர்களுக்கும் ரிஷிகளுக்கும் தெரிந்திருக்கலாம். அவர்களிலும் குறிப்பாகச் சொல்வதென்றால் புசுண்ட முனிவரைக் கேட்டால் தெரியும். அவரை இங்கே அழைத்து வர வேண்டுமென்றால் வசிஷ்டரைத் தான் அனுப்ப வேண்டும். மற்றவர்களை அனுப்பினால் முடியாது என்று கூறினார் திருமால்.

சிவபெருமானுக்கு ஒரே ஆச்சரியம்! மார்க்கண்டனைப் பார்த்து, "எனக்கே தெரியாத ஒன்றை நீ அறிந்து கூறிவிட்டாய். இது உனக்கு எப்படித் தெரிந்தது? " என்றி பாராட்டிவிட்டுத் திருமாலைப் பார்த்து, " புசுண்டருக்குத் தெரியும் என்பது உமக்கு எப்படித் தெரியும்? யாம் அறியச் சொல்வீராக," என்று கேட்டார்.

விஷ்ணு கூறுகிறார்.

பரமான பரம கயிலாச வாசா
பார்த்திருப்போம் ஆலிலை மேற் பள்ளியாகி
தரமான புசுண்டமுனி அந்தவேளை
சக்கரத்தைப் பிறழ வொட்டார் அந்தவேளை
துரமாக எவ்வாறோ திரும்பிப் போவார்
சூட்சமதை யாமறியோம் பின் ஏதோதான்
வரமான வரமளித்த ஞான வாழ்வே
வசிஷ்டர் போய் அழைத்து வரத் தகும் என்றாரே. 9

Koviloor Digital Library

பிரளயத்தில் எல்லாம் அழிந்து போயின. ஆலிலை மேல் பள்ளி கொண்டிருந்த என்னிடத்தில் சித்துகள் யாவும் ஒடுக்கமாயிருந்தன. யானும் செய்வதேது மில்லாததால் தூங்காமல் தூங்கி - அறிதுயிலில் ஆழ்ந்திருந்தேன். என்னுடைய சக்கரம் வெகுவேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. அதன் வேகத்தை யாரும் தடுக்க முடியாது.

ஆனால் அப்போது அங்கு வந்த புசுண்டர் எப்படியோ என் சக்கரம் ஓடாமல் நிறுத்தி விட்டு அதைத் தாண்டிச் சென்றார். அதனால் அவர் எல்லாம் வல்லவர் என்பதை அறிந்தேன், வசிஷ்டரை அனுப்பி அவரை அழைத்து வருவது சரிதான். அவர் அதற்குத் தகுதியானவர் தான்.

விஷ்ணு இவ்வாறு கூறவே சிவபெருமான் வசிஷ்டரை அனுப்பி புசுண்டரை அழைத்து வரச் சொன்னார். புசுண்டர் தாம் எத்தனையோ யுகப் பிரளயங்கள் தோன்றி அழிந்ததையும் எத்தனையோ பிரம்மாக்கள், எத்தனையோ விஷ்ணுகள், எத்தனையோ சிவன்கள் அழிந்து போனதையும், ஒவ்வொரு பிரளயத்திற்குப் பிறகும் உலகம் புதிதாக உண்டானதையும் பார்த்ததாகக் கூறுகிறார்.

பாதமதைச் சிரசில் வைத்து யுகங்கள் தோறும்
பண்பாகத் தானிருந்து கோடி காலம்
சாதகமாய்ப் பிரளயங்கள் முடியும்போது
தனியாகக் கல்லாலின் மேலிருந்து
சேதமொன்று மில்லாமல் மவுனமுற்று
சிறப்பாக எத்தனையோ யுகங்கள் கண்டு
வேதமென்ற பிரம்மத்தி லடங்கிக் கொண்டு
வெகுகோடி யுகங்கள் வரை இருந்திட்டேனே.

காக/2

காகபுசுண்டர் பெருநூல் காவியத்தில் இரண்டாவது பாடல் இது. காகபுசுண்டர் பல யுகங்கள் - ஆயிரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உயிரோடிருந்ததாகக் கூறுகிறார்.

இருந்திட்டேன் காகத்தின் சொரூபமாக
இன்பமுடன் வசிஷ்டருந்தான் என்னிடத்தில்
வருந்தியே வந்துயென்றன் முன்னே நின்று
வாய்திறந்து கோடியுகம் கல்லால் தன்னில்
பொருந்தியே இருந்துதான் வந்தீரையா

Koviloor Digital Library

புகழாக இருந்த விதங்கள் தன்னை
திருந்தியே சொலவேணு மென்று கேட்க
செப்பினேன் உண்மைதனைத் திறந்து தானே. 3

வசிஷ்டர் வந்து கேட்டதால் தாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கல்லால் மரத்தின் மேல் காகத்தின் உருவில் வீற்றிருந்த வரலாறைக் கூறியதாகக் கூறுகிறார். வசிஷ்டருக்கே உபதேசம் செய்தவர் என்பதால் புசுண்டரின் சிறப்பு வரை கடந்ததாகிறது.

சித்தர் இயல்பின் ஆழமும் அகலமும் சாதாரண மனிதர்களால் எண்ணிப் பார்க்கக்கூட முடியாது. அதன் பரிமாணங்களை அறிய வேண்டுமென்றால் சித்தர்களைப் பற்றிய எல்லா விஷயங்களையும் தெரிந்து வைப்பது அவசியம்.

இங்கே ஒரு ஐயம் எழலாம். புசுண்டருக்கு ஏன் காகபுசுண்டர் என்று பெயர்? அவர் காகத்தின் உருவில் இருந்ததாகக் கூறுகிறாரே அதன் காரணம் என்ன?

புசுண்டர் நூல்களில் எவ்விடத்திலும் இதற்கான காரணம் கூறப்படவில்லை. இதைப் பற்றிப் போகர் சத்த காண்டத்தில் (7000) ஒரு பாடல் இவ்வாறு கூறுகிறது.

உரைத்துமே புசுண்டரது பிறப்பைக் கேளாய்
உகந்த மதுஉண்டு அன்னம் களிக்கும் போது
பரைத்துமே பரிதிமுதல் சோமனையும் தரித்த
பராபரமும் பார்ப்பதியும் பார்த்தா ரத்தை
நிறைத்துமே சிவகலைதான் கர்கம்போல
நேர்ந்தணைய அன்னமங்கே நிறைகர்ப்பமாயிற்று
இரைத்துமே இருபதிற் றொன்று பிள்ளை
ஈசரது கலையாலே புசுண்டராச்சே. 180

ஆச்சென்ற இருபது பேர் கன்மத்தாலே
அநேகநாள் இருந்துமே கழிந்து போனார்
போச்சென்ற இவர் பிடித்தார் பிராண யோகம்
பேரான சீவகளை புகுந்ததாலே -
பேச்சென்ற ஆண் பிறந்தால் பிள்ளையாமோ
பேறுபெற அவர் போலே யாருக்காகும். 181

Koviloor Digital Library

ஒரு காலத்தில் சத்தி கணங்கள் மது உண்டு நடனமாடிக் களித்தனர். அப்போது சிந்திய மதுக் கலந்த நீரைக் பருகிய அன்னங்கள் களிப்புடன் இருக்க அதைச் சிவனும் பார்வதியும் கண்டு மகிழ்ந்தனர். அதனால் உண்டான சிவகலை காகத்தின் உருவில் அன்னத்தைச் சேர அன்னம் அப்போதே கர்ப்பமுற்று இருபத்தொரு முட்டைகள் இட, இருபது அன்னக் குஞ்சுகளையும் ஒரு காகத்தையும் பொரிந்தது. அந்தக் காகமே புசுண்டர்.

இருபது அன்னங்களும் அநேகநாள் இருந்து முத்தியடைந்தன. காகம் மட்டும் சிவகலையால் பிறந்ததால் அழியாமல் இருக்கும் பேறு பெற்றுத் தன் யோக சத்தியால் என்றும் உயிரோடிருக்கும் தன்மையடைந்தது.

சுகப்பிரம ரிஷி தமது ஞான சூஸ்திரம் 32லும் இதே வரலாற்றைக் கூறுகிறார்.

கருதியதோர் புசுண்டரது பிறப்பைக் கேளு
கலந்துமது உண்டன்னம் களிக்கும்போது
பருதி முதற் சோமனையும் தரித்த ஈசன்
பார்வதியும் சென்றங்கு பார்க்கும் காலை
பொருதி யென்ற சீவகளை நாதந்தாகம்
போற்றழைய அன்னமங்கே நிறைந்த கற்பம்
சுருதியென வொன்பானோ டொன்றாம் பிள்ளை
தன்னுக்குள் ளிவரொருவர் தானாங் காணே. 87

சுகப் பிரமம் வேத வியாசரின் பிள்ளை. பிறக்கும் போதே சீவன் முத்தராய்ப் பிறந்தவர். அவர் கூறிய பாடல் என்பதால் மிகவும் சிறப்பானதாகிறது.

போகமுனிவர் அடுத்தபடியாகப் புசுண்டரின் இருப்பிடத்தைக் கூறுகிறார்.

அறிந்திட்ட ஐயர் எங்கே இருப்ப தென்றால்
ஆதி மகா மேருவுக்குத் தெற்கே யாகும்
முறிந்திட்ட வாதமுண்டு ஞானமுண்டு
மூர்க்கமாம் யோகமுண்டு சித்தெல்லாமுண்டு. 184

என்றும் கூறும் போகர் தொடர்ந்து தாம் புசுண்டரிடம் உபதேசம் பெற்றதையும் கூறுகிறார்.

Koviloor Digital Library

மேலே கூறப்பட்ட வரலாறு அபிதான சிந்தாமணியிலும் காணப்படுகிறது. வசிஷ்டர் வந்து தமக்கு உபதேசிக்கும்படி கேட்க, உம்மைப் போல் எட்டு வசிஷ்டர்களை நான் பார்த்திருக்கிறேன் என்று கூறியதாக அபிதான சிந்தாமணி கூறுகிறது.

டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் இன்னும் சற்று விரிவான செய்திகள் காணப்படுகின்றன.

புசுண்டர் }
புஜண்டர் } வரரிஷியின் சாபத்தால் உலகத்தில் சந்திர குலம் விளங்க வெள்ளாட்டின் வயிற்றில் பிறந்தவர். அறிவிற் சிறந்தவர். பெருந்தவசி. உரோமரிஷிக்கு ஆசிரியர். இவரைத் தமிழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர் எனச் சொல்வதுண்டு. இவர் பிரளய காலங்களில் அவிட்ட நட்சத்திர பதவியில் வாழ்வார். ஆதலின் இவரைக் காகபுசுண்டர் என்பர். இவரது பெருமையும் சிறப்பும் மேன்மையும் எவராலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. இவர் உலகப் பிரளய காலத்தில் காக்கை உருவெடுத்து அப்பிரளயத் தினின்று தப்பிப் பிழைத்து அனேக கோடி வருஷ காலம் சீவித்து வந்ததற்கு உதாரணமாக இவர் ஒரு பிரளயத்தில் பிரமனைப் பார்த்து இருபத்தொன்றாவது பிரமாவே. வாருங்கள் என்றாராம். இதனால் இவர் சீவித்து வந்த நெடுங்காலத்தை அறியலாம்.

வரரிஷியின் சாபத்தால் புசுண்டர் அவதரித்த வரலாறு பற்றி போகர் 7000 கூறுவது.

திண்பான புசண்டரிட மார்க்கம் சொல்வேன்
தீர்க்கமுடன் பங்குனியாம் திங்களப்பா
கண்பான உத்தரமாம் இரண்டாம் பாதம்
காசினியில் வந்துதித்த திருவுமாச்சு
மண்பான வரரிஷியின் சாபத்தாலே
மார்க்கமுடன் அவதரித்த பாலனாமே. 5888

பாலனாம் சந்திரகுலம் விளங்க வந்த
பாரினிலே வெள்ளாட்டி பெற்ற மைந்தன். 5889

வெள்ளாட்டி என்றால் விதவை என்று பொருள். சாம்பசிவம் பிள்ளை அவர்கள் பார்த்த பதிப்பில் வெள்ளாடு பெற்ற மைந்தன் என்று இருந்திருக்கலாம்.

Koviloor Digital Library

வெள்ளாட்டி பெற்ற மைந்தன் என்பதே சரி. ஆக விதவையின் பிள்ளை. வரரிஷியின் சாபத்தால் சந்திர குலத்தில் விதவையின் பிள்ளையாகப் பிறந்தார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

(திரதராட்டிரனும் பாண்டுவும் சந்திரகுலத்தில் விதவைகளின் பிள்ளைகளாகப் பிறந்தவர்களே.)

காகபுசுண்டர் வன்னிகுலம்(அக்னிகுலம்) என்றும் பங்குனிமாதம் உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர் என்றும் போகர் கூறுகிறார். இவர் திருச்சி உறையூரில் வாழ்ந்ததாகவும் அங்கேயே சமாதி கொண்டதாகவும் சிலர் கூறுவர்.

காகபுசுண்டர் அன்னத்தின் முட்டையிலிருந்த பிறந்தாரா? வெள்ளாட்டி பிள்ளையாகப் பிறந்தாரா என்ற சர்ச்சையில் ஈடுபட வேண்டியதில்லை. ஏனென்றால் இவற்றுக் கெல்லாம் விளக்கம் கூறுவார் யாருமே இல்லை.

காகபுசுண்டர் அருளிய நூல்கள்

காகபுசுண்டர்	பெருநூல் காவியம்	1000
"	சூத்திரம்	500
"	மெய்ஞான விளக்கம்	80
"	ஞானகாவியம்	33
"	உபநிடதம்	32
"	ஞான சூத்திரம்	19
"	ஞானக்குறள்	19

பெருநூல் காவியம் தனி நூலாகவும், சூத்திரம் 500 தவிர மற்ற நூல்கள் யோக ஞான சாஸ்திரத் திரட்டு நான்காம் பாகத்திலும் வெளியிடப்பாட்டுள்ளன.

æææ

Koviloor Digital Library

உரோமரிஷி

உடம்பெல்லாம் ரோமத்துடன் விளங்கியதால் இவர் உரோமரிஷி என்று பெயர் பெற்றதாகக் கூறுவர் சிலர். இதையொட்டியே அபிதான சிந்தாமணிக் குறிப்பும் அமைந்துள்ளது.

உரோமரிஷி: இவர் புசுண்டமாமுனிவர் குமாரர். (சீடனை மகன் என்றே குறிப்பிடுதல் சித்தர் வழக்கு) இவர் செய்த நூலைச் சட்டைமுனி கிழிக்காதபடி புசுண்டர் சடையில் ஒளித்து வைத்து அகத்தியருக்குக் காட்ட, அவர் நெடுநாள் பொறுத்து மீண்டும் கொடுத்தனர். இவர்க்கு உடம்பெல்லாம் மயிர். ஒரு பிரமன் இறந்தால் ஒரு மயிர் உதிரும். அப்படி மூன்றரைக் கோடி பிரம்மாக்கள் இறந்தால் ஆயுள் முடிவு. இவர் இறக்கின் அட்டகோண ரிஷிக்கு ஒரு கோணம் நிமிருமாம்.

புராணங்களில் இது போன்ற கதைகளை ஏராளமாகப் பார்க்கலாம். ஆயின், இவர் உரோமாபுரியைச் சேர்ந்தவர். ஆதலால் உரோமரிஷி என்றழைக்கபட்டார் என்பதே ஏற்புடையதாகத் தெரிகிறது.

சித்தர்கள் வாழ்ந்த காலம் இமய மலைவரைத் தமிழர்கள் வாழ்ந்த காலம். இன்றைக்குச் சுமார் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எனலாம்.

அக்காலத்தில் புதிய உலகம் அறியப்படவில்லை. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்கள் மட்டுமே அறியப்பட்டிருந்தன. தமிழர்கள் கிழக்கே சீனா வரையிலும் மேற்கே ரோமாபுரி வரையிலும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். காலாங்கியும் போகரும் சீனாவிலிருந்து வந்து சித்தர்களானதைப் போல் ரோமரிஷி ரோமாபுரியிலிருந்து வந்து சித்தராகியிருக்கலாம். இதற்கு போதிய அகச் சான்று புறச் சான்றுகள் இல்லாமலிருப்பதால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை.

நிலைத்ததொரு ரோமரிஷி சாதிபேதம்
நிலையான வலைவீசும் சாதியப்பா. 5699

என்று கூறும் போகர், பிறிதோரிடத்தில்,

Koviloor Digital Library

ஆச்சப்பா செம்படவன் தந்தையப்பா
அப்பனே மாதுருவும் குறத்தியாகும்
பாச்சலுடன் பலநூலும் கண்டாராய்ந்து
பாடிவைத்த மரபதுவும் மெய்யே யாகும்
மாச்சலுடன் இருகுலத்தார் பெற்ற மைந்தன்
மகத்தான ரோமரிஷி என்னலாகும்
மூச்சடங்கி நின்ற தொரு காளீனன் அப்பா
மூதுலகில் சென்றதொரு சித்துமாச்சே. 5872

(காளீனன்: கன்னி - கலியாணமாகாதவள் பெற்ற பிள்ளை)

போதமாம் ரோமரிஷி பிறந்த நேர்மை
புகலுகிறேன் மாணாக்கர் அறிய என்று
நீதமுடன் ஆவணியாம் திங்களப்பா
நிஷ்களங்கமான கார்த்திகை தானாகும்
வீதமுடன் பயனறிய மூன்றாம் காலாம்
விற்பரனார் பிறந்ததொரு நாளுமாச்சே. 5871

என்று கூறுகிறார்.

உரோமரிஷியின் தந்தை செம்படவன். தாய் குறத்தி. இரண்டு ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குப் பிறந்த பிள்ளை. ஆவணிமாதம் கார்த்திகை மூன்றாம் காலில் பிறந்தவர் என்று மேற்கண்ட பாடல்களால் அறியலாம்.

உரோமரிஷி அற்புதமான பாடல்களைப் பாடியிருக்கிறார். உவமை நயத்திற்கும் சிலேடைகளுக்கும் குறைவில்லை. உப்புக்குப் பலவேறு பெயர்களைச் சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதன் உண்மை தெரியாமல் பல நூல்களையும் படித்துப் படித்து நாய் தேங்காயை உருட்டி உருட்டி, புரட்டினதைப் போலும் குருட்டு நாய் ஈசலைப் பிடிக்கத் தாவுவதைப் போலும் வெறிபிடித்தாற் போல அலைவார்களே தவிர உண்மைப் பொருளை உணர முடியாமல் தவிப்பார்கள் என்கிறார்.

எவ்வளவு அழகான உவமை.

திரட்டினா ருப்புக்கு வெகு நாமங்கள்
தேசாதி வழக்கமல்லோ சித்தர் சொன்னார்
மருட்டினா ரென்று சொல்லி உலக மாண்பர்
மதிமயங்கிப் பலநூலின் வகை தோணாமல்

Koviloor Digital Library

உருட்டினதே யல்லாமல் நாய்க்குத் தேங்காய்
உடைக்கறியு மோவிதுதானுவமை அய்யா
குருட்டு நாயீசலுக்குத் தாவுகின்ற
குணமாச்சு யானைகண்ட குருடர்தானே.
உரோம குருநூல் சிங்கி - 33

இவர்கள் செயல் யானையைத் தடவிப் பார்த்து அடையாளம் தெரிந்து கொள்ள முயன்ற குருடர்களின் செயலை ஒப்பதாகும் என்கிறார்.

ஒரு குருடன். திருமணம் செய்து கொண்டான். குழந்தையும் பிறந்து விட்டது. குழந்தையை எடுத்துத் தாய் பால் புகட்டினாள். குழந்தை அழுவதை நிறுத்தி விட்டது. குருடனுக்கு ஆச்சரியம்!

"குழந்தையை என்ன செய்கிறாய்? "
" பால் கொடுக்கிறேன். "
" பால் எப்படி இருக்கும்? "

மனைவிக்கு எப்படி விளக்குவ தென்று தெரியவில்லை. " கொக்குப் போல் இருக்கும் " என்றாள்.

" கொக்கு எப்படி இருக்கும்....? "

மனைவிக்கு மேலும் குழப்பம் அருகிலிருந்த கொக்கின் பொம்மையை எடுத்துக் கொடுத்து " இதுபோல் இருக்கும் " என்றாள்.

தடவிப் பார்த்த குருடன், " அடிப்பாவீ..... குழந்தை இதை எப்படி விழுங்கும். குழந்தையைக் கொன்றுவிடப் பார்க்கிறாயா" என்று அலறினான்.

குருடனுக்குப் பால் நிறந்தான் கொக்குப்போலே
கொண்டுவந்து காட்ட அவன் தடவிப் பார்த்து
புருடனும் சீ குழந்தை இதை விழுங்கினாக்கால்
பிழைக்குமோ என்று சொன்ன புதுமை போலும். 34

இப்படி நகைச் சுவையோடும் தக்க உவமைகளோடும் உரோமரிஷி வாத வைத்தியங்களைக் கூறியிருக்கிறார்.

Koviloor Digital Library

உரோமரிஷி இயற்றிய நூல்கள்

உரோமரிஷி	வைத்தியம்	1000
"	சூத்திரம்	50
"	வைத்திய சூத்திரம்	500
"	அமுதகலைக்ஞானாம்	50
"	பெருநூல்	500
"	குருநூல்	50
"	காவியம்	500
"	முப்பு சூத்திரம்	30
"	இரண்டடி	500
"	சோதி விளக்கம்	27
"	நாகாரூடம்	114
"	வகார சூத்திரம்	25
"	சிங்கி வைப்பு	100
"	வைத்திய சூத்திரம்	21

❖❖❖

Koviloor Digital Library

பிரம்மமுனி

சில நூல்களில் பதினெண் சித்தர்களில் ஒருவராக பிரம்மமுனி சேர்க்கப் பட்டிருக்கிறார். கோரக்கரையும் இவரையும் சேர்த்து ஒரு கதை வழங்கப் படுகிறது.

இரண்டு பேரும் படைப்பு முதலான ஆற்றல்கள் அனைத்தும் பெறுவதற்காக யாகம் செய்தார்கள். அந்த யாகத்திலிருந்து இரண்டு அழகிய பெண்கள் தோன்றித் தங்களை மணந்து கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். முனிவர்கள் கோபத்துடன் அவர்களைச் சபிக்க எண்ணினர். அதேசமயம்எரிந்து கொண்டிருந்த யாககுண்டத்திலிருந்து அக்னிதேவனும் அங்கு வைக்கப்பட்டிருந்த நீர்ப பொருள்களிலிருந்து வருண தேவனும் வெளிப்பட்டு வந்து அப்பெண்களின்மேல் மையல் கொண்டு அவர்களை அடைவதற்கு விரும்பினார்கள்.

முனிவர்களுக்கு வந்ததே கோபம்! கமண்டல நீரை அப்பெண்களின் மேல் தெளிக்க இருவரும் இரண்டு செடிகளாகி விட்டார்கள். சிவபெருமான் தோன்றி வரமளித்தபடி கோரக்கர் கஞ்சாச் செடியையும் பிரம்மமுனி புகையிலைச் செடியையும் கற்ப மூலிகைகளாகப் பயன் படுத்துவதாக எடுத்துக் கொண்டார்கள். (கஞ்சாவும் புகையிலையும் தோன்றிய கதை.)

கமல முனிதான் பிரம்மமுனி என்றும், போகருக்கே பிரம்மமுனி என்று பட்டம் கொடுக்கப் பட்டதாகவும் சில வழக்குகள் உண்டு.

இவர் பிராமண குலத்தைச் சேர்ந்தவர் என்று சில நூல்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அகத்தியர் பனிரெண்டாயிரம் நான்காம் காண்டத்தில்,

துய்ய நல்ல வாரிதியாஞ் சாகரந்தான்
துப்புரவாய் மச்சவகை தான் பிடித்து
பையவே வியாபார வர்த்தகங்கள்
பாங்குபெற விற்றுண்டு கலைகள் மாறி
வெய்யவே சதாகாலஞ் செட்டு மார்க்கம்
வீரமுடன் செய்திருந்தார் பிரமத் தோடே. 476

Koviloor Digital Library

பிரமமுனிவர் தாய் தந்தையர் மீன் பிடித்து வியாபாரம் செய்து வந்தார்கள் என்கிறார் அகத்தியர். இவரைப் பற்றி வேறு விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

பிரம்மமுனி எழுதியதாக வழங்கும் நூல்கள்

பிரம்மமுனி	வைத்தியம்	700
"	கருக்கிடை	380
"	சூத்திரம்	200
"	தண்டகம்	100
"	ஞானம்	100
"	வகார சூத்திரம்	68
"	அண்ட வித்தை	42
"	முப்பு தீட்சை	45
"	" சூத்திரம்	45

R R R

Koviloor Digital Library

வசிஷ்டர்

அகத்தியரின் உடன் பிறப்பு ஆகையால் சித்தர்களாக அறியப்படாத ரிஷிகளின் வரிசையில் முதலிடத்தை பெறுகிறார் வசிஷ்டர்.

முதலில் பிரமனின் மனதிலிருந்து மானசீக புத்திரராக உதித்துச் சூரிய குல மன்னர்களுக்குக் குலகுருவாக விளங்கிவரும் காலத்தில் நிபிச் சக்கரவர்த்தியால் தேகம் இழக்கும்படி சபிக்கப்பட்டார்.

தேகத்தை இழந்து பிரம்மதேவரிடம் போய் முறையிட மித்திரா வருணரால் மீண்டும் உடல் கிடைக்க வரம்பெற்றார்.

மித்திரனும் வருணனும் கடல்களை ஆண்டு வந்தனர். மித்திரன் ஊர்வசியின் மேல் மையல் கொண்டு அவளை அழைக்க - ஊர்வசி அவனிடம் சென்று கொண்டிருக்கும்போது வருணன் பார்த்து அழைத்தான். தான் ஏற்கெனவே மித்திரனுக்கு வாக்களித்து விட்டதால் அவனிடம் சென்று வருவதாக ஊர்வசி கூறினாள். அப்படியானால் நீ மித்திரனிடம் இருக்கும்போது உன் மனதை மட்டும் என்னிடம் வைத்திரு என்று வருணன் கேட்டுக் கொண்டான். அவ்வாறே செய்வதாக ஊர்வசி கூறிச் சென்றாள்.

ஊர்வசி தன்மேல் அக்கரையில்லாமல் இருப்பதை உணர்ந்த மித்திரன் காரணம் அறிந்து கோபம் கொண்டு அவளைப் பூலோகத்தில் பிறக்கும்படிச் சபித்தான். மித்திரா வருணர்களிடமிருந்து வெளிப்பட்ட வீரியம் கடலிலிருந்து வசிஷ்டராகவும் குடத்திலிருந்து அகத்தியராகவும் வெளிப்பட்டது.

இப்படிப்பட்ட கதைகளைப் புராணங்களில் மட்டுமே காணமுடியும். இங்கே வசிஷ்டரைப் பற்றிக் கூறிய காரணம் உலகத்தில் முதன் முதலாக சிசரியன் ஆபரேஷன் செய்து குழந்தையை வெளிப்படுத்தும் முறையை உண்டாக்கியவர் வசிஷ்டரே என்பதாலும், வசிஷ்டர் ஸ்ரீராமபிரானுக்கு உபதேசித்த வைத்தியம் 216 என்ற நூல் அற்புதமான வைத்திய நூல் என்பதாலும் தான்.

Koviloor Digital Library

வசிஷ்டர் செய்த பிரசவ அறுவை சிகிச்சை

சூரிய வமிசத்தைச் சேர்ந்த மன்னன் சவுதாசன் என்பனின் மனைவி மதியுந்துகி என்பவள் கருத்தரித்து ஏழு ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்காமல் இருந்ததால் வசிஷ்டர் அவள் வயிற்றை கருங்கல்லின் கூரிய முனையால் கிழித்துக் குழந்தையை வெளிப்படுத்தினார். பிறகு மூலிகைகளால் அவளையும் உயிர் பிழைக்கச் செய்தார்.

உலோகங்களால் வயிற்றைக் கிழித்தால் அதனால் உண்டாகும் நச்சுத் தன்மையால் அப்பெண் மரணமடைவாள் என்பதை அக்காலத்திலேயே வசிஷ்டர் உணர்ந்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

வசிஷ்டர், கௌதமர், விசுவாமித்திரர் போன்ற ரிஷிகளை இரசாயன சாஸ்திரிகள் என்று வடநூலார் கூறுவர். இரசாயன சாஸ்திரிகள் என்றால் வாதம் மட்டும் அறிந்தவர்கள் என்று பொருள். ஆனால் இந்த ரிஷிகள் அனைவருமே ஞானத்தால் மேம்பட்டவர்கள். இவர்களைச் சித்தர்கள் வரிசையில் சேர்ப்பதே சரி.

Koviloor Digital Library

வருணன்

கர்த்தமப் பிரஜாபதி என்ற ரிஷியின் மகன். சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து கடல்களுக்கு அரசுரிமையும் வருணன் என்ற பெயரும் பெற்றனன். அகத்தியர் பனிரெண்டாயிரத்தில்,

பணியவே வானனூல் சாத்திரங்கள்
பாரினிலே மாணாக்கள் அறியவென்று
துணியவே அருந்ததியி னளவு தானும்
சூரியனார் சந்திரனார் குறிப்பு மார்க்கம்
கணிதமுட னேழுவரை மண்டலங்கள்
கருவான சத்த மேகத்தி னேர்மை
மணியவே அண்டத்தின் அளவு தானும்
மார்க்கமுடன் வானநூல் வேண்டும் பாரே.

அக/12000/509

வேண்டுமே நாள் கிழமை யறிவதற்கு
வெட்டவெளி யாகாசக் கணக்குத் தானும்
தாண்டவம்போல் கிராணத்தின் கணக்குத்தானும்
தகமையுடன் பூமியுட நேர்மைதானும்
ஆண்டுவகை அளவெடுக்கும் சூட்சவேதம்
அப்பனே கருவி கரணாதியந்தம்
தூண்டியதோர் கருமான மின்னும் சொல்வோம்
சூட்சாதி சூட்சமதைச் சொல்லுவீரே

என்று சித்தர்கள் வருண ரிஷியிடம் கேட்கிறார்கள்.

சொல்ல வென்றால் பூமியிட சாத்திரங்கள்
தோற்றமுடன் சத்த சாகரத்தின் நேர்மை
வெல்லவே உலகின்முதல் முடிவா திந்தம்
வேத முதல் கவன சூத்திரங்கள் யாவும்
புல்லவே நட்சத்திர மாலை தானும்
புகழான கணித நூல் சாஸ்திர பேதம்
நல்லவே பஞ்சாங்க கணித வேதம்
நலமான பணித பரிசாரமாமே.

Koviloor Digital Library

பரிவான கெவுட நூலாயிரந்தான்
பாங்கான சமுத்திர நூலெண் ணூறுந்தான்
சரியான கணித சிந்தாமணி யாயிரந்தான்
தாக்கான மலை நூலா மெண்ணூறுந்தான்
வரியான சந்திர நூல் அறுநூறுந் தான்
வாகான மேக நூல் முன்னூறுந் தான்
தெரியவே சத்த மண்டலந் தான் நூறு
தெளிவான வானநூல் சுருக்கம்பத்தே. 512

பத்தான பூமிநூல் ஆயிரந்தான்
பண்பான சோதிடமும் எண்ணாயிரந் தான்
சித்தான பரிட்சித்துக் குபதேசித்த
சிறப்பான சுகர் பதினெண் ணாயிரந்தான். 513

முத்தான சுக்கிரனார் எண்ணா யிரந்தான்
மூதுலகில் சிறப்பான நூல்கள் யாவும்
நித்தமுடன் தானுரைக்கும் பஞ்சபட்சி
நீடான வினாடியென்ற கிரந்த மாமே. 513

ஆமேதான் இத்தாதி நூல்களெல்லாம்
அன்பான வருணரிடி குகை தானுள்ளே
நாமேதான் சொன்னபடி சாத்திரங்கள்
நலமாகப் பாடிவைத்த வண்ணம் யாவும். 514

வருண மகரிஷி இந்த பூவுலகின் தன்மை பற்றியும் ஏழுகடல்களின் தன்மை பற்றியும் வானமண்டலம் பற்றியும் (கவன சூத்திரங்கள்) நட்சத்திரங்களைப் பற்றியும் நூல்களை எழுதியுள்ளார். கணித சாஸ்திரத்தைப் பற்றியும் பாடியுள்ளார்.

கெவுன நூல்	1000
சமுத்திர நூல்	800
கணித சிந்தாமணி	1000
மலை நூல்	800
சந்திர நூல்	600
மேகநூல்	300
சத்தமண்டலம்	100
வானநூல்	10
பூமிநூல்	1000
சோதிடம்	8000

Koviloor Digital Library

என்ற நூல்களை வருண மகரிஷி பாடியுள்ளதாக அகத்தியர் குறிப்பிடுகிறார். சமுத்திரத்தைப் பற்றியும் சந்திரனைப் பற்றியும் மேகங்களைப் பற்றியும் பாடும் தகுதி வேறு யாருக்கு வரும்?

ஆனால் இந்த நூல்களில் ஒன்று கூட நமக்குக் கிடைக்கவில்லையே என்பதை நினைக்கும் பொழுது எவ்வளவு வேதனையாக உள்ளது?

✠✠✠

Koviloor Digital Library

வால்மீகர்

" தேற்றமுடன் வால்மீகர் என்ற சித்து " என்றே போகமுனிவர் பாடுகிறார். எனவே வால்மீகரைச் சித்தர் வரிசையில் சேர்ப்பது ஏற்புடைத்தே யாகும்.

வடமொழியில் இராமாயணம் பாடிய வால்மீகி வேறு. தென்னாட்டில் வாழ்ந்த வால்மீகி வேறு என்று வேற்றுமை கற்பிப்பவர் உளர். ஆனால் போகமுனிவர் ஆணியடித்தாற்போல்,

தேற்றமுடன் வால்மீகர் என்ற சித்து
தெளிவாக மார்க்கமது சொல்வேன் பாரீர்
மாற்றமயம் நீக்கியல்லோ வையகத்தில்
வளமையுடன் வெகு காலம் இருந்த சித்து
ஆற்றலுடன் வால்மீகி ராமாயணத்தை
அவனிதனில் மாந்தருக்குச் செய்திட்டாரே!
போ/7000/5834

என்று கூறுகிறார். மேலும் தொடர்ந்து,

செய்த தொரு வால்மீகர் வயதே தென்றால்
செப்பமுடன் எழுநூற்றுச் சொச்சமப்பா
துய்ய தமிழ்ப் பண்டிதனாம் கல்வி வானாம்
தூய்தான அகப்பேறு கொண்ட சித்து
பையவே சமாதிமுகம் சென்றதில்லை
பாங்குடனே காயாதி கொண்டுதானும்
வெய்யவே நெடுங்காலம் இருந்த சித்து
வேதாந்த வால்மீகர் தானுமாமே. 5835

என்றும் கூறுகிறார்.

வால்மீகர் புரட்டாசித் திங்கள் அனுட நாளில் பிறந்தவர். வேடர்குலத்தைச் சேர்ந்தவர், என்றும் போகர் கூறுகிறார்.

வால்மீகர் நாரதர் உபதேசத்தால் ஞானம் பெற்று இராமாயணத்தை இயற்றியதாகக் கூறுவர். இவருடைய சமாதி தமிழ்நாட்டுச் எட்டுக்குடியில் உள்ளது

Koviloor Digital Library

பதஞ்சலி முனிவர்

உண்மையென்ற குண்டலியே பிராண வாய்வு
ஓங்கார பிண்டத்தி லுதித்த வான்மா
மென்மையென்ற வாகாசத் திருந்த வாறும்
மேலெழுத்துங் கீழ்எழுத்து மானவாறும்
தன்மையென்ற விந்துவிலே நின்ற வாறும்
சாஸ்திர விதஞ் சாகரத்திற் சார்ந்தவாறும்
கன்மையென்ற சிங்கு வங்கில் நிறைந்த வாறும்
கண்மூக்கு மத்தியிலே கண்டு பாரே.

பதஞ்சலி. ஞானசூத்திரம் 20/19

ஞான சூஸ்திரம் 20ல் பத்தொன்பதாவது பாடலில் பதஞ்சலியார் இவ்வாறு பாடுகிறார்.

வடமொழியில் மஹா பாஷ்யம் இயற்றிய பதஞ்சலி வேறு. யோக சூத்திரம் எழுதிய பதஞ்சலி வேறு என்று அங்கேயே கூறுபோடுகிறவர்கள் தமிழ் பாடிய பதஞ்சலியும் அவரே தான் என்று ஒப்புக் கொள்ளார்.

சித்தர்களின் இயல்பும் அவர்கள் காலம் கடந்து பல நூற்றாண்டுகள் வாழும் ஆற்றல் பெற்றிருந்தார்கள் என்பதும் தியாதவர்களாதலால் சித்தர்கள் வாழ்ந்த காலம், அவர்களுடைய ஆயுட்காலம் போன்றவை பற்றி எந்த முடிவுக்கும் வரமுடியாது.

இன்றைய சூழ்நிலையில் எதையும் தக்க சான்றுடன் மெய்ப்பித்துக் காட்டுவ தென்பதும் இயலாத காரியம். பதஞ்சலியும் வியாக்ர பாதரும் நீண்ட காலம் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே சித்தர்களும் வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் திருமூலருடன் ஒன்றாகத் தில்லையில் நடனம் கண்டார்கள் என்பதைத் திருமூலரே கூறுகிறார். முக்தியடைந்ததும் இராமேசுரத்தில்! எனவே அவர்கள் தமிழில் பாடியிருக்க முடியாது என்று கூறுவது அறிவீனம் என்றே நாம் கருதுகிறோம்.

அவர்கள் தமிழில் பாடினார்கள் என்று கூறுவது அவர்களுக்கு இழுக்கு உண்டாக்கக் கூடியதும் அன்று.

Koviloor Digital Library

பதஞ்சலியைப் பற்றிப் புராண வரலாறு மட்டுமே உள்ளது. அவர் ஆதிசேடனின் அம்சம் அல்லது அவதாரம். தன்மேல் பள்ளி கொண்டிருந்த விஷ்ணு சிவதாண்டவம் கண்டதை நினைந்துப் புளகித மடைந்து புரள அந்தபாரம் தாங்க முடியாமல் காரணம் கேட்டு அறிந்து, தானும் சிவ தாண்டவம் காண்பதற்காகக் கயிலையில் தவம் செய்ய இறைவன் தோன்றித் தில்லையில் அவருக்கும் வியாக்ரமருக்கும் சிவதாண்டவம் காணும் பேற்றினை அளிப்பதாகக் கூறினார்.

அதன்படி தென்னாடு வந்து வியாக்ரமருடன் சிவபூஜை செய்துவரும் நாளில் இறைவனின் நடனம் காணும் பேறு பெற்றார்.

அதன்பின் பதஞ்சலி தில்லை வனத்திலேயே நெடுநாள் தங்கியிருந்தார். ராஜசபை என்னும் ஆயிரங்கால் மண்டபத்தில் அமர்ந்து தாம் இயற்றிய வியாகரண சூத்திரம் என்ற நூலைச் சீடர்களுக்கு நேரிலேயே உபதேசிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால் ஆதி சேடனாகிய தம் மூச்சுக் காற்று பட்டாலே சீடர்கள் எரிந்து சாம்பலாகப் போய் விடுவார்களே என்று அஞ்சினார்.

அதனால் நடுவில் ஒருகனமான திரையைப் போட்டுக் கொண்டு திரைக்குப் பின்னாலிருந்து உபதேசம் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தினார். அறுபது சீடர்கள் அவரிடம் பயின்றனர்.

தம் குருநாதரின் கம்பீரமான குரலையும் கேள்வி கேட்குமுன் பதில்கள் வரும் வேகத்தையும் கண்டு வியந்த சீடர்கள் எப்படியாவது அவர் திருமுகத்தைப் பார்த்து விடவேண்டும் என்று எண்ணினார்கள்.

ஒருநாள் ஒரு சீடன் திடீரென்று திரையைப் பிடித்து இழுத்து விட்டான். அக்கணமே அத்தனை பேரும் சாம்பலாயினர். ஏதோ காரணமாக வெளியே சென்றிருந்த கௌடபாதர் என்ற ஒரு சீடர் மட்டும் உயிர் தப்பினார்.

திரும்பி வந்து கொண்டிருந்த கௌடபாதர் சீடர்கள் சாம்பலாவதைப் பார்த்து அஞ்சி நின்றார். பதஞ்சலி தம் தோற்றத்தை மாற்றிக் கொண்டு, " குழந்தாய் வா, குருவின் அனுமதியில்லாமல் வெளியே சென்றதற்காக நான் உன்மேல் கோபம் கொள்ள மாட்டேன். நீ ஒருவனாவது தப்பிப் பிழைத்தாயே என்று மகிழ்கிறேன்" என்று கௌடபாதரை அழைத்து அவருக்குச் சகல கலைகளையும் உபதேசித்தார்.

Koviloor Digital Library

கௌடபாதரின் சீடர் கோவிந்த பகவத் பாதாள். இவரே ஆதி சங்கரரின் ஞானாசிரியர்.

பதஞ்சலியார் இயற்றிய இரண்டு நூல்கள் தாமரை வெளியீடான யோக ஞான சாஸ்திரத் திரட்டு நான்காம் பாகத்தில் இடம் பெற்றுள்ளன.

Koviloor Digital Library

வியாக்ரம பாதர்

ஐயன் வந்தெனை யாட்கொண்ட வதிசயம் கேளாய்
கையும் வாயுமாய்க் காட்டினன் கண்டத்திற் கண்டாய்
பொய்யை போக்கினேன் ஓடினேன் ஒன்றினில் புகுந்தேன்
மெய்ய னாகினேன் உயிர்க்கெம னிலையென விதித்தான்.

வியாக்கிரம பாதர் ஞானம் 13/3

என்று அற்புதமாகப் பாடுகிறார் வியாக்கிரமர். இவருடைய பாடல்கள் கவிநயமும் கருத்தாழமும் மிக்கவையாய் உள்ளத்தை ஈர்ப்பவையாய் அமைந்துள்ளன. இவருடைய நூல்களும் இரண்டே இரண்டு - மாதிரி பார்ப்பதற்காகக் கிடைத்துள்ளன. மற்ற பாடல்கள் கிடைக்க வில்லையே என்று ஏங்கச் செய்கின்றன.

இவர் வசிஷ்டருடைய உறவினர். தில்லைவனத்தில் மூலநாதரைப் பூசித்து வருங்காலத்தில் தேனீக்கள் மலர்களைத் தொடாத அதிகாலை நேரத்தில் மரங்களில் ஏறி மலர் பறிக்க முடியவில்லையே என்று வருந்த இறைவன் அவருக்குப் புலிக் கால்களையும் இரவிலும் தெரியும் கண்களையும் வழங்கினார்.

பதஞ்சலியும் வந்து சேர்ந்து கொள்ள இருவரும் இறைவனைப் பூசித்தபடி இருந்து தைத் திங்களும் பூசநாளும் கூடிய வியாழக் கிழமையன்று தில்லை நாதனின் திருநடனம் கண்டு களித்தனர். இவர்களோடு திருமூலரும் திருநடனம் கண்டதாகக் கூறுவார். வியாக்ரபாதர் வசிஷ்டருடைய தங்கையை மணந்து அவள் மூலம் உபமன்யு என்ற புத்திரனை அடைந்தார். உபமன்யுவே கிருஷ்ண பகவானுக்கு உபதேசம் செய்து சிவ தீட்சை அளித்தவர்.

***

Koviloor Digital Library

அத்திரி மகரிஷி

பிரமன் படைப்பிலே முதன் முதலாகத் தோன்றிய ரிஷிகளும் எவ்வாறு சித்தர்களின் கருத்துக்களையே பாடியுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுவதற்கர்கவே அவர்களுடைய பாடல்களிலிருந்து சில துளிகள் இங்கு எடுத்துக் காட்டப் படுகின்றன.

பிரம்ம தேவரின் கண்ணிலிருந்து தோன்றியவர் என்று புராணம் அத்திரி மகரிஷியைப் பற்றிக் கூறும். மும்மூர்த்திகளையும் குழந்தைகளாக்கித் தொட்டிலிலிட்டுத் தாலாட்டிய அனுசூயையின் கணவர். சப்தரிஷி மண்டலம் என்ற பிரகாசமான நட்சத்திரக் கூட்டத்தில் முதலாவது நட்சத்திரமாக மிகவும் ஒளியுடன் பிரகாசிப்பவர்.

நன்னயமாய்ச் செனிக்கும்போ திருந்த கோட்கள்
நடுநிலையாய்த் தரும்வயது சென்றதானால்
வின்னமதாய்த் தேகமது அழிந்து போகும்
விஞ்சையென்ற இருவாயு மொன்று சேர்ந்தால்
உன்னி யுன்னைக் கொல்லுகின்ற வாயுதங்கள்
ஒன்றுமில்லை என நன்றா யுணர்ந்து கொள்ளே.
அத்திரி - உண்மை ஞான போதகம் - 9

கொள்ளப்பா பிடிப்பதற்கு ஏமனேது
குவலயத்தில் பிறப்பிக்கப் பிரமனுக்கு
விள்ளப்பா ஆண்மையேது அண்டந்தன்னை
விற்பனமாய் சிருஷ்டிகர்த்தன் பிண்டத்திற்குள்
கள்ளப்பா ஒன்றுமிலா திருவராகிக்
கனிந்திருந்தா ரிதனையார் கோவிலென்பார்
தள்ளப்பா யிதனாலே யொன்று மில்லை
சடலத்துட் சத்தி சிவந் தனைக் கண்டாரே. 10

தாமரை வெளியீடு யோக ஞான சாஸ்திரத் திரட்டு நான்காம் பாகத்தில் அத்திரி மகரிஷியின் உண்மை ஞான போதகம் என்ற நூல் இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

இந்த அருமையான பாடலின் பொருள், ஒவ்வொருவனும் பிறக்கும் போது அமைகிற கிரகங்களின் அமைப்புக்குத் தக்கபடி ஆயுட்காலம் அமைகிறது. அந்த ஆயுட் காலம் முடிந்தவுடன் உடல் அழிந்து போகும். ஆனால் தன் அறிவுத் திறனால் இடகலை பிங்கலை என்ற இரண்டு வாயுக்களையும் ஒன்று சேர்த்துச் சுழினையில் இயங்கும்படிச் செய்து விட்டால் அதன் பிறகு எந்த ஆயுதத்தாலும் அந்த மனிதனைக் கொல்ல முடியாது. எமன் அணுக மாட்டான். மறுபடியும் அந்த ஜீவனைப் படைக்கின்ற வேலையும் பிரமனுக்கு இல்லாமல் போய்விடும்.

இவ்வளவு அருமையாக இந்த விஷயத்தை யாருமே கூறவில்லை.

Koviloor Digital Library

பரத்துவாச மகரிஷி

வாரேநீ மூலவெளி காணுமட்டும்
மைந்தனே சுழிமுனையில் நின்றாயானால்
காரே நீ மனதொடுங்கும் காற்றாடாது
கருத் தறிந்து குருபதத்தில் நினைவைக்காரு
பாரேதான் வினையகலும் பயமே இல்லை
பார்க்கையிலே ஆதாரம் தோணும் தோணும்
நேரேதான் அவ்விடத்திற் சென்று கொண்டால்
நீணிலத்திற் சித்தியெல்லா மாடுந் தானே.

பரத்துவாசர்/யோக சாதனம் 14

மூலவெளி - எங்கும் பரந்து வியாபித்துள்ள பரவெளியைக் காணும் வரை சுழிமுனையில் நின்றால் - அதாவது சுவாசம் சுழிமுனையில் நிற்கும்படி இருந்தால் உன்னுடைய மனம் ஒடுங்கி விடும். மூச்சு நடை பெறாது. குருவின் கருத்தை உணர்ந்து அதன்படி நடந்தால் உன்னுடைய நல்வினை தீவினைகள் யாவும் அகன்று விடும். அதன் பிறகு அஞ்சவே வேண்டாம். சகல சித்திகளும் பெற்றவனாவாய்.

அத்திரி மகரிஷி மூச்சை சுழிமுனையில் நிறுத்து என்றார். அதனால் அடையும் பயனைக் கூறுவது போல் அமைந்துள்ளது இந்தப் பாடல்.

பரத்துவாசர் குரு பகவானாகிய பிரகஸ்பதியின் மகன். குடத்திலிருந்து பிறந்தவர் என்றும் கூறுவர். இராமர் காடு செல்லும்போதும், இராவண வதம் முடிந்து சீதையோடு திரும்பிய காலத்தும் இவர் ஆசிரமத்தில் தங்கிச் சென்றார்.

Koviloor Digital Library

பராசரர்

உச்சி எனும் முடியாய் ஓங்கார மாகி
உற்ற ஐந்து பூதமுமாய் ஒளிவுமாகி
சச்சி தானந்த வடிவாகி மோன
சற்குருவால் அறிவிக்குந் தோற்றமாகி
பச்சிலையில் துயில் அரியோடு அயனுமாகி
பரமாகி அண்டரண்ட பிண்டமாகி
இச்சையற்ற பொருளாகி எங்குமாகி
இலங்கு பரவெளி ஒளியின் பாதங்காப்பே.

பராசரர்/ஞானோபதேசம் 22/1

பராசர மகரிஷியின் ஞானோபதேசம் 22 என்ற நூல் யோக ஞான சாஸ்திரத் திரட்டு நான்காம் பாகத்தில் இடம் பெற்றுள்ளது.

அத்திரியும் பராசரரும் தமிழில் பாடவாவது. யாரோ ஒரு தமிழ்ப் புலவன் அவர்கள் பெயரால் பாடி வைத்து விட்டான். தமிழ் நாட்டில் இதுமாதிரி இடைச் செறுகல் வேலை நிறைய நடைபெற்றுள்ளது என்று சிலர் பேசலாம்.

படித்தவர்களுக்கும் தமிழ்ப் பண்டிதர்களுக்கும் கூட இந்த ஐயப்பாடு தோன்றலாம். தோன்றுவது நியாயமும் கூட!

ஆனால்,

அத்திரியும் பராசரரும் தமிழில் பாடக்கூடாது என்று ஏதாவது சட்டம் உள்ளதா?

இமயம் முதல் தமிழ் வழங்கிய ஒரு கால கட்டத்தில் இவர்கள் எல்லோரும் வந்து குடியேறியவர்கள். ஞானிகளுக்குப் பிறமொழிகளைத் தாமாகவே உணர்ந்து கொள்ளவும் அவற்றில் நூல் இயற்றும் புலமை பெறவும் முடியும் என்பதை ஞான நெறி பற்றி அறிந்தவர் யாவரும் ஒப்புக் கொள்வர். அதனால் ரிஷிகள் தமிழில் பாடியது வியப்புக்குரிய செயல் அல்ல.

Koviloor Digital Library

இப்பாடல்கள் பிற்கால நடையில் உள்ளன. ரிஷிகள் வாழ்ந்த காலத்திய தமிழ் இப்படி இருந்திருக்க முடியாது என்பர் சிலர்.

காலம் கடந்து வாழும் ஆற்றல் படைத்தவர்களான ரிஷிகள் அவர்கள் வாழ்ந்த காலத்தில் இவற்றைப் பாடினார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமே?

பிற்காலத்தில் ஒருவர் பாடி ரிஷிகளின் பெயர்களால் சேர்த்து விட்டார் என்று சொன்னால் - எத்தனை விதமான பாடல்கள்! வகை வகையாக சொல்லாழமும் கவிநயமும் கொண்ட பாடல்கள்! இப்பாடல்களை வாய் விட்டுப் படித்தாலே, இவை அனைத்தும் ஒருவரால் இயற்றப் பட்டவை அல்ல என்பதைப் பறைசாற்றி விடுமே?

சிலர் பாடினார்கள் என்றால் - ஒருவர் அத்திரி பெயரால்- ஒருவர் பராசரர் பெயரால்- என்று இப்படி ஒரு கும்பல் திட்டம் போட்டுச் சதி செய்வதைப் போல் பல பாடல்களை இயற்றிப் பல ரிஷிகளின் பெயரால் சேர்த்தார்கள் என்பது நடைபெறக் கூடிய காரியமா?

தவிர சித்தர் நெறியில் நின்று ஞான அனுபவம் பெற்றவர்களால் மட்டுமே இப்படிப்பட்ட பாடல்களை உருவாக்க முடியுமே தவிர மற்றவர்களால் முடியும் என்று நினைக்கத்தான் முடிகிறதா?

பெரிய அளவில் இப்படிப்பட்ட ரிஷிகளின் பாடல்கள் கிடைத்திருந்தால் இவை போன்ற ஐயங்கள் எழா. ஆனால் வேதவியாசர் தமிழில் எண்ணாயிரம் பாடல்கள் இயற்றியதாக அகத்தியர் கூறுகிறார். ஒரே ஒரு பாடல் கூடக் கிடைக்கவில்லையே?

கிடைத்துள்ள பாடல்களில் பொதிந்துள்ள அரும்பொருளை உணர்ந்து மகிழ்வதைவிட்டு வீணான சர்ச்சைகளில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது.

பராசரர் வசிட்டரின் பேரர். சத்தி முனிவரின் மகன். மன்மத பாணங்களை (சரர்கள்) திரும்பி ஓடச் செய்தவர் என்பதால் பராசரர் என்ற பெயரைப் பெற்றவர்.

ஒருசமயம் யமுனை நதியைக் கடக்கையில் படகை ஓட்டிய மச்சகந்தி என்னும் பெண் மூலம் வியாசரைப் பெற்றவர். இவரைப் பற்றிய வரலாறுகளைப் புராணங்கள் மூலமாக அறியலாம்.

Koviloor Digital Library

வேதவியாசர்

உலகத்திலேயே மிகப் பெரியதும் அற்புதமான கட்டுக்கோப்புடன் கூடிய கதையமைப்புக் கொண்டதுமான மாகபாரதத்தை இயற்றியவரும், பதினெண் புராணங்களையும் தொகுத்து வழங்கியவருமான வேதவியாசரைப் பற்றி போகமுனிவர் இவ்வாறு கூறுகிறார்.

சீரேதான் வேதமென்ற வியாசரப்பா
சிறப்புடனே வெகுகாலம் இருந்த சித்து
காரமென்ற வயததுவும் ஆயிரத்து சொச்சம்
குவலயத்தில் வேதமதை அறிந்த சித்து
தீரமுடன் நூலாதி நூல்கள் எல்லாம்
திரைகடல் போல் கண்டதொரு சித்து காணே. 5788

வேதவியாசர் சந்திர குலத்தைச் சேர்ந்தவர் என்பதையும் போகமுனிவர் உறுதிப் படுத்துகிறார்.

நேரேதான் வியாசருட மரபே தென்றால்
நேர்பான சந்திரகுல ஜாதியாகும். 5711

வேதவியாசர் என்னென்ன செய்தார் என்பதைப்பற்றி அகத்தியர் பனிரெண்டாயிரத்தில் விபரமாகக் கூறியுள்ளார்.

உண்மையாம் ஞான காவியமாக
உத்தமனே எண்ணாயிரம் காவியம்தான்
வண்மையாய் உலகத்தின் நீதியெல்லாம்
வளப்பமுடன் கண்டல்லோ மிகவாராய்ந்து

எண்ணாயிரம்பாடல்கள் ஞான காவியமாகப் பாடி குகைக்குள் பத்திரப்படுத்தி வைத்தார் என்று கூறுகிறார் அகத்தியர்.

என்னவே கலியுகத்து மாண்பருக்கு
எழிலான சாத்திரங்கள் கோத்திரங்கள்
துன்னவே மிகப்பலடத்து வதிதத்தோடும்
துப்புரவாய்த் தானடைந்து விதிப்பா டோடும்

Koviloor Digital Library

பின்னவே பலசாதி பலபாஷையாகப்
பாலித்தார் கட்டுவகை வரை பாடெல்லாம்
சின்னமது வாராமல் சினமில்லாமல்
சீருடனே முறைப் பாடாய் தெளிந்திட்டாரே.
அ/12000/816

மனித் இனத்தில் பலசாதிகளையும் அவரவர்க்குரிய பாஷை (பேச்சுக்) களையும் வேத வியாசரே வகுத்தார். கட்டுப்பாடுகளையும் உண்டாக்கினார். இவை எல்லாவற்றையும் முறையாகச் செய்து வைத்தார் என்று அகத்தியர் கூறுகிறார்.

மேலும்,

தாமேதான் சாதிக்கு பேதாபேதம்
பண்புடனே கட்டுவகை யாகவல்லோ
வேமேதான் விரதங்கள் கோடாகோடி
வேற்றுமைகள் தாமுரைத்தார் மிகவொண்ணாது
நாமேதான் சொன்னபடி அவரவர்க்கு
நாட்டினார் பலபேத வண்மை யெல்லாம்
ஆமேதான் அற்புதங்கள் மிகவாய்க் கூறி
அவனி தனில் நாட்டி வைத்தார் புதுமை யாமே. 827

புதுமையாம் திங்களுக்கோர் விரதமாக
பொங்கமுடன் தானமைத்தார் கணக்கோ இல்லை
கதுமையாம் தேவ கோட்டிக ளனந்தம்
கழறினார் தேவதாஸ் தலங்கள் தன்னில்
நிதமுடன் திங்களுக்கோர் திருவிழாக்கள்
நிட்களங்க மாகவல்லோ நியமித்தே தான்
பதமுடனே பலபலவாய் தேவ வர்க்கம்
பாவித்தார் மாந்தருக்குப் பான்மையாமே. 824

பான்மையாம் பண்டிகைகள் அனந்தம் கூறி
பண்புடனே ஆசார பேதங் காட்டி
நோன் பென்றும் விரத மென்றும் நொடிகள் கூறி
நோக்கமுடன் தானமைத்தார் லக்கோ யில்லை. 825

சாதிக்கு சாதி வேறுபாடுகளை உண்டாக்கினார். அந்தந்த சாதியார் அனுசரிக்க வேண்டிய விரத நியமங்களை வகுத்தார்.

Koviloor Digital Library

அதேபோல் தேவாலயங்களில் மாதா மாதம் நடைபெற வேண்டிய திருவிழாக்கள், பூசை புனஸ்காரங்களையும் வகுத்து வைத்தார். பண்டிகைகளையும் அவற்றை அனுசரிக்கவேண்டிய ஆசார விதிகளையும் அமைத்து வைத்தார்.

சாதி வேறுபாடுகள், சாதிப் பழக்கங்கள், அந்தந்த சாதியார் செய்ய வேண்டிய பூசைகள் அனுசரிக்க வேண்டிய விரதங்கள் எல்லாம் வேத வியாசராலேயே உண்டாக்கப்பட்டன என்கிறார் அகத்தியர். அப்படியென்றால் வியாசருக்கு முன் அவை முறையாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது.

கோயில் வழிபாடுகள் திருவிழாக்களையும் வேத வியாசரே வகைப் படுத்தியதாகவும் அகத்தியர் கூறுகிறார்.

இவையெல்லாம் இன்று வரை நாம் அறியாத விஷயங்கள். அகத்திய மாமுனிவருக்கு நாம் நன்றி தெரிவிக்கவேண்டும்.

***

Koviloor Digital Library

சுகப்பிரம்மம்

வேதவியாசரின் மகன் சுகர். பிறக்கும் போதே யாவும் கடந்த பரம ஞானியாகப் பிறந்ததால் பரப்பிரம்மமென்றே அழைக்கப்பட்டார்.

நல்லதொரு பரமகுரு வந்த தாலே
நலமுள்ள சரியைவழி மார்க்கந் தோணும்
மெல்லவே சரியைவழி நடந்தாயானால்
விபரமதாய்க் கிரியை வழி விரைவில் தோன்றும்
வல்லதொரு கிரியை வழி கண்டபின்பு
மைந்தனே யோகவழி தெளிவாய்த் தோன்றும்
செல்லதொரு யோகவழி நடந்தாயானால்
திறமையுள ஞான வழி தெரியும் பாரே.

சுகர் - ஞான சூத்திரம் 32/28

சித்தர் நெறியை இதைவிட எளிதாகவும் விளக்கமாகவும் வேறுயாரும் கூறவில்லை எனலாம். இவர் புசுண்டரின் பிறப்பைப் பற்றிக் கூறியுள்ள பாடல்களைப் புசுண்டர் வரலாற்றில் காண்க.

✖✖✖

Koviloor Digital Library

ஊர்வசி

வேதவியாசரிடம் உபதேசம் பெற்றுச் சித்தர் நெறிக்கு வந்தவள் ஊர்வசி.

ஊர்வசி தேவலோகத்தில் இந்திரன் சபையில் நடனமாது. அதனால் அடிமைகள் குலத்தில் சேர்ந்தவள் என்கிறார் போகர்.

உன்னிதமாய் தேவதா மடந்தை யென்றும்
உத்தமர்கள் சித்தர்முனி கூறும் வண்ணம்
பன்னியே தலைமுறைகள் பகுக் கொண்ணாது
பாலகனே அடிமை என்ற சாதியாமே.

போகர் 7000 ,724

தேவமடந்தையான ஊர்வசி மானிடனமேல் காதல் கொள்ளலாமா? கூடாது.

அப்படிக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அவன் இந்திரன் சபையைப் பார்க்க விரும்பினான் என்பதற்காக அவனைப் பூமாலையாகப் பண்ணிக் கழுத்தில் போட்டுக் கொண்டு நடனமாடவும் போய் விட்டாள்.

இந்திரன் ஆயிரம் கண்ணுடையவனாயிற்றே? அவனுக்குத் தெரியாமல் போய்விடுமா? தெரிந்து விட்டது. உடனே அளவு கடந்த கோபம் கொண்டு பூலோகத்தில் கிடந்து உழலும்படி சபித்து பூமியில் தள்ளி விட்டான்.

துயரத்தோடு பூமியில் வந்து விழுந்த தன்னை, "கருணை வளர் சித்தரேனைக் காத்திட்டாரே," என்று கூறுகிறாள் ஊர்வசி.

அப்படிக் காத்த சித்தர்கள் யார்?

காத்திட்ட காலாங்கி, கலசநாதர் (அகத்தியர்)
கமலமுனி யூகிமுனி கருணானந்தர்
பார்த்திட்ட போகநாதர் சட்டைநாதர்
பதஞ்சலியார் கோரக்கர் பவனந்தீசர்

Koviloor Digital Library

சீர்த்திட்ட புலிப்பாணி அழுகண் சித்தர்
செகம்புகழும் பாம்பாட்டி இடைக் காட்டீசர்
பேர்த்திட்ட வசிஷ்டரொடு கவுசிகரும்
பிரமமுனி யாக வின்னம் பெரியோர் தானே.

ஊர்வசி - 5.

தானான வேதகுரு வியாசரோடு
தன்வந்திரி சட்டைமுனி பிண்ணாக்கீசர்
கோனான நந்தீசர் அகப்பேய்ச் சித்தர்
கொங்கணவர் குருபாத நாதர் மச்சர்
தேனான பரத்துவாசர் கூனக் கண்ணர்
தெளிவருளும் கடுவெளியாம் சித்தர் முத்தர்
பானான ரோமரிஷி புசுண்டரோடு
பராசர மாரிஷியிவரைப் பணிந்தேனையா. 6

ஐயமற்ற தேரையர் புலத்தியீசர்
அந்தமுன சுந்தரானந்த சித்தர்
செய்ய மறைத் திருமூலர் கருவூர் நாதர்
சிவவாக்கிய ரோடு தொழுகண் சித்தர்
துய்யமன நவநாதர் வசுக்களானோர்
துர்வாசரான சத்த ரிஷிகள் மாரை
பையெனவே யான்பணிய யிரக்கங் கொண்டு
பகரறிய வெகுநூலைப் பாலித்தாரே. 7

ஊர்வசி சித்தர்கள் என்று யார் யாரைக் குறிப்பிடுகிறாள் என்பதை ஊன்றிக் கவனிக்கும் போது இது காறும் நாம் வரலாறு கூறிவந்த ரிஷிகள் பலரும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

புராணத்தில் வரும் ஒரு ஊர்வசி விஷ்ணு பகவானின் தொடையிலிருந்து பிறந்தவள். தவம் செய்து கொண்டிருந்த விஷ்ணுவை மயக்கும்படி இந்திரன் அரம்பையரை ஏவ, விஷ்ணு தம் தொடையிலிருந்து உண்டாக்கி அனுப்பிய ஊர்வசியைக் கண்டு அவர்கள் வெட்கப்பட்டு ஓடிஒளிந்தனர். (ஊர்வசி ஊரு என்றால் தொடை) ஆனால் போக முனிவர் ஊர்வசி பிருங்கி மகரிஷியின் பேத்தி என்கிறார்.

மாதான ஊர்வசியாள் மார்க்கம் தானும்
மகத்தான கானகத்து ரிஷிதானப்பா

Koviloor Digital Library

தீதான பிருங்கி மகா ரிஷியின் பேத்தி
தீர்க்கமுடன் கானீனன் பெற்ற மாது. 5927

பிருங்கி மகரிஷியின் மகனுக்குத் தாழ்ந்த குலப் பெண்ணிடம் பிறந்த பெண் என்கிறார் போகமுனிவர். இவள் ஊர்வசியின் இரண்டாவது அவதாரமாக இருக்கலாம்.

எல்லவரும் தான் புகழ வைகாசிதன்னில்
எழிலான பூரம் என்ற நாலாங் காலாம்
வல்லமையாம் கண்டுதித்த தேவமாது
வையகத்தில் ஊர்வசி என்ற மாதே. 5926

போகர் கூறுவதில் பிழை இருக்க முடியாது. வைகாசி மாதம் பூர நட்சத்திரத்தில் பிறந்தவள் என்றால் ஊர்வசி மற்ற குழந்தைகளைப் போல் பிறந்தவளாகத்தான் இருக்கவேண்டும்.

ஊர்வசி வேத வியாசரிடம் உபதேசம் பெற்றாள் என்றும் பல நூல்களைப் பாடி வைத்துப் பின் கோதாவரி நதிக் கரையில் சமாதியடைந்தாள் என்றும் போகமுனிவர் கூறுகிறார்.

தோதான காவியங்கள் பலவும் கூறி
தோறாமல் பாடிவைத்த மாது சித்து
நீதான வியாசரிடம் உபதேசங்கள்
நீதியுடன் பெற்ற தொரு மாது தானும்
கோதாவரிக் கரைதனிலே மடிந்த சித்து
கொற்றவனே சமாதியது அங்கே உண்டே. 5838

ஊர்வசி பஞ்சரத்னம், வைத்திய சிட்கா, இரசவாத சிட்கா என்ற நூல்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் பஞ்சரத்னம் மட்டுமே பாடல்களாக உள்ளது. மற்றவை உரைநடையில் அமைந்துள்ளன. இவை மூன்றும் ஒரே நூலாகத் தாமரை நூலகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

◇◇◇

Koviloor Digital Library

வரரிஷி

ரசமணி என்ற பெயரால் பலமணிகளைப் பார்க்கிறோம். நூறு ரூபாய் முதல் ஆயிரம் இரண்டாயிரம் என்று விலை சொல்வாரும் உண்டு. இவையெல்லாம் பாதரசத்தைக் கட்டியான பொருளாக்கி அதை உருக்கி ஊற்றுவதன் மூலம் உண்டாக்கப் பட்டவை.

சிலவகை இலைச்சாறுகள் பாதரசத்தை இறுகச் செய்யும். எளிதான முறை துரிசுச் சுன்னம் சேர்த்து அரைப்பது. ரசம் நொடியில் கட்டிவிடும். அதன்பிறகு கருஊமத்தன் காய்க்குள் வைத்துப் புடம் போட்டால் ரசம் மணியாகிவிடும்.

ஆனால் இந்த மணிகள் ரசமணி செய்வதாகச் சொல்லும் வேலைகளைச் செய்யாது. பாலைக் குடிக்காது. விஷத்தை உறிஞ்சாது. ஸ்தம்பன சக்தியையும் உண்டாக்காது. அப்படிச் செய்வதற்கான ஆற்றல் அதற்கு உண்டாக. வேண்டுமேன்றால் சாரணை தீர்க்க வேண்டும்.

சாரணை தீர்ப்பது என்பது ரசமணிக்கு மற்ற உலோகங்கள் உபரசங்களின் சத்துக்களை ஊட்டி வலுப்பெறச் செய்வது என்று பொருள். அது சித்தர்களாலேயே முடியும். ஏனென்றால், ரசத்திற்கு ஒரு விசித்திரமான பண்பு உள்ளது.

ஒரு ரசமணியை எடுத்து நிறுத்துக் கொண்டு அதற்கு எடைக்கு எடை வெறெந்தப் பொருளின் சத்தை ஊட்டினாலும் சத்து ஊட்டியபின் அது பழைய எடை மட்டுமே இருக்கும். ஊட்டப்பட்ட சத்து எங்கே போயிற்று என்பதே தெரியாது. ஒரு நூறு கிராம் எடையுள்ள ரசமணிக்கு ஒன்பது உலோகங்கள் அறுபத்து நான்கு பாஷாணங்கள் நூற்றிருபது உபரசங்கள் அத்தனையும் ஊட்டிய பிறகும் அது நூறு கிராம் எடை மட்டுமே இருக்கும். ரசம் எவ்வளவு அபாயகரமான ஆள் என்பது புரிகிறதா?

உண்மையாக சாரணை தீர்க்கத் தெரிந்த ஆள் கிடைத்தால் பரிசோதித்துப் பார்க்கலாம்.

இந்த ரசமணிகளைக் கொண்டே சித்தர்கள் ககன சஞ்சாரம் முதலான அற்புதமான காரியங்களையும் செய்ததாகக் கூறுவார்கள்

Koviloor Digital Library

குளிகை செய்வதில் திருமூலரும் அவருடைய வர்க்கத்தைச் சேர்ந்த சித்தர்களுமே திறமைசாலிகள் என்று கூறுவர். சித்தர்கள் தம்மிடம் வந்து குளிகை பெற்றுச் செல்வதாக போக முனிவர் கூறியுள்ளார்.

ஆனால் வரரிஷியார் வெளியே கிடைக்கும் ரசத்தை வாங்கி மணிசெய்து பயனில்லை. ரசம் என்பது சிவபெருமான் விந்து. உன்னிடமே விந்து இருக்கும் போது சிவன் விந்துவை ஏன் தேடுகிறாய். உனக்குள்ளே இருக்கும் விந்தை மணியாக்கிக் கொண்டால் அற்புதமான ஆற்றல்களைப் பெறுவாய் என்று கூறுகிறார்.

வரரிஷி கலைக்ஞானம் 22 என்ற நூலில் இடம் பெற்றுள்ள இப்பாடல்,

பாரப்பா விந்துவைத் தான் மணியாய்ச் செய்யப்
பாடுகிறேன் சிந்தை தெளிந்தையா கேளு
வீரப்பா வுன்னிடத்தில் வாசி தன்னை
விதமாகப் பீசத்துள் அடக்கிக் கொண்டு.

வர - கலை - 4

இந்த முறை சித்தர்களாலேயே முடியும். நீண்டகாலம் ஒரு சித்தரிடம் சீடனாக இருந்து படிப்படியாக வாசியோகத்தில் பயிற்சி பெற்றால் முடியும்.

தேமென்ற இம்முறையைச் சொன்னேன் யானும்
சிவஞான மவுனிக்குச் சொன்ன தல்லால்
ஊமென்று பிறந்திருக்கும் மாண்பருக்கும்
உலுத்தருக்கும் இம்முறையைச் சொன்னாயானால்
காமென்ற கழுதையுட ஜென்ம மாகிக்
கடைப் பிறப்பாய் பிறந்திடுவாய் கருதிப் பாரே. 13

என்கிறார். வரரிஷி இந்தமுறையை வெளியே சொல்லவே சொல்லாதே. சொன்னால் கழுதையாய்ப் பிறப்பாய் என்று கடுமையாக சாபமிடுகிறார்.

வரரிஷியின் பெருமைபற்றி அகத்தியர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார் போகமுனிவர்,

காணாரே தவசியென்னும் வரரிஷியார் தானும்
கருவாக காளிங்க மடுவு தன்னில்
வேணபடி தவயோகம் செய்யவென்று
விட்டகுறை தனை அகற்றி மருவிச் சென்று

Koviloor Digital Library

தோணவே பனிரெண்டு ஆண்டு மட்டும்
தொல்உலகில் ஜலஸ்தம்ப சமாதியாகி
மாண்பெரும் வையத்தோர் காண என்றும்
மார்க்கமுடன் வந்ததோர் சித்து தானே.

போ.7000/5832.

என்று கூறுகிறார்.

சித்தர்கள் சமாதிக்குச் செல்வது பற்றி அறிவோம். பூமியில் ஒரு சுரங்கம் செய்து அதற்குள் அமர்ந்து பத்தாண்டு, இருபதாண்டு என்று புதைக்கப் பட்டிருந்தபின் மீண்டும் உயிரோடு திரும்பி வருவார்கள்.

ஆனால் வரரிஷி காளிங்க மடுவுக்குள் சென்று பனிரெண்டு ஆண்டுக்காலம் ஜலஸ்தம்பனம் செய்தபடி வீற்றிருந்து பின் திரும்பி வந்தார் என்கிறார். (காளிங்க மடு யமுனை நதிக் கரையில் உள்ளது. காளிங்கன் என்ற கொடிய விஷப்பாம்பு அம்மடுவில் வசித்தது. அதன் நச்சு நீர்க் காற்று பல கல் தொலைவுக்கு வீசியதால் யாருமே மடுவை நெருங்க முடியாதபடி இருந்தது. கண்ணபிரான் அம்மடுவில் குதித்து நாகத்தின் கொட்டத்தை அடக்கி அதை அங்கிருந்து துரத்திவிட்டார் என்பது புராணம்.)

ஆவியுடன் பூமிதனில் இருந்தசித்து
அப்பனே வரத்தினால் பிறந்த சித்து
காவிலயம் கொண்டதொரு கள்ளர் ஜாதி
கருவான ஜாதியென்றே செப்பலாமே. 5722

நேரேதான் இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
நெடிதான வரரிஷியாம் என்ற சித்து
சீரேதான் அவர்பிறந்த வண்மையப்பா
சிறப்புடைய சித்திரையாம் திங்கள் தானே. 5922

சித்திரையாம் அசுவினியாம் மூன்றாம் காலாம்
சிறப்பான நாள்தனிலே பிறந்தார் என்று. 5923

வரரிஷி கள்ளர் குலத்தைச் சேர்ந்தவர். சித்திரை மாதம் அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர் என்றும் போக முனிவர் கூறுகிறார்.

ரரரி

Koviloor Digital Library

பிருகு முனிவர்

காணவே நீ நூல்தானும் வெளிவரும் காலம்
காட்டினேன் பாரதத்தின் வர்ஷந் தன்னில்
கோனே வடபாகம் தன்னில் தானும்
குறிப்பாக ஆட்சியது செய்வோன் நாமம்
ஊனே தானில்லாது உலகு தன்னில்
உரம் பிளந்தோன் நாமமது ஆதியாகும்
மானேதான் தென்சார்பு வெற்றியக்கம்
மங்கையவள் ஆண்டிடுவாள் திராவிட நாடே.

பிகுரு - 95

இப்படி ஒரு அற்புதமான பாடல் தாமரை நூலகம் வெளியிட்டுள்ள பிருகு மாந்திரிகம் 100 என்ற சிறிய நூலில் காணப்படுகிறது. அதாவது

இந்த நூல் வெளிவரும் காலத்தில் இந்த நாட்டின் வடபாகத்தில் உரம்பிளந்தோன் - மார்பைப் பிளந்தவன் - இரணியனின் மார்பைப் பிளந்த நரம்சிம்மன் பெயரை முதலாவதாகக் கொண்டவரும் தென் நாட்டில் வெற்றி - ஜயம் - என்பதை முதலாவதாகக் கொண்ட பெயருடைய பெண்ணும் ஆட்சிபுரிவார்கள் என்பதை அறிவாயாக என்று பிருகு முனிவர் கூறியுள்ளார்.

இந்த நூலை ஓலைச் சுவடியிலிருந்து எழுதிக் கொடுத்தவர் நங்கநல்லூர் (சென்னை) டாக்டர் கோவிந்தராஜன். மேலும் பல ஓலைச் சுவடிகள் இருப்பதாகக் கூறினார். அற்புதமாகப் பலன் கூறும் பிருகு நாடி என்ற சோதிட நூலின் ஓலைச் சுவடிகளும் தம்மிடம் இருப்பதாகக் கூறுகிறார்.

ரிஷிகள் தமிழில் பாடினார்களா? அவர்களுக்குத் தமிழ் தெரியுமா? சூத்திர பாஷையான தமிழில் அவர்கள் நூல்களைச் செய்வார்களா என்றெல்லாம் பேசிகிறவர்கள் சிந்திக்கவேண்டும்.

ரிஷிகள் தங்கள் ஞான சக்தியால் எல்லா மொழிகளையும் அறியவும் அவற்றில் பேசவும் பாட்வும் ஆற்றல் பெற்றவர்கள் என்பது ஞான மார்க்கத்தில் செல்பவர்களுக்குத் தெரியும்.

Koviloor Digital Library

கண்ணானந்தர் என்ற சித்தர் பிருகு மகரிஷியைத் தமது குருவாகக் குறிப்பிடுகிறார்.

ஆதியெனக் குபதேச குருவதாகி
ஆண்டருளு மனோமணியின் பாதம் போற்றி
நீதியுள்ள பலகலைகள் ஓதி வைத்த
நிற்குணஞ் சேர் பிருகு மகரிஷியைப் போற்றி
கோதிள்ள மேலோர்கள் பாதம் போற்றிக்
குறிப்புடைய சிவயோக மார்க்கந் தன்னை
மேதினியிற் சொல்லுகிறேன் தெளிவதாக
மெய்என்ற நிலை தெரிந்து யோகம் செய்யே.

பிருகு முனிவர் பிரம்ம தேவரின் மனதிலிருந்து உதித்த பிள்ளைகளில் ஒருவர். (மானஸ புத்திரர்). பிறக்கும்போதே அளவு கடந்த ஒளியுடன் பிறந்ததால் பிருகு என்ற பெயர் பெற்றவர். செல்வத்திரு மகளை (மகாலட்சுமி) மகளாக அடையப் பெற்றவர். ஜமதக்கினி முனிவரின் தந்தை. இவருடைய விரிவான வரலாற்றைப் புராணங்களால் அறியலாம்.

ரிஷிகள் பாடியதாக மேலும் பல அரிய நூல்கள் தாமரை வெளியீடான நாற்பத்தெட்டுச் சித்தர்கள் பெரிய ஞானக் கோவை என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை,

1. ஜெயமுனிவர்: திருமந்திர ஞானம் 37 - இந்த நூலில் வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகிருஷ்ணம், வித்து வேடனம், பேதனம், மாரணம் என்ற அஷ்ட கர்மங்களுக்கும் ஆதி கணபதியைத் தியானம் செய்து சித்தி பெறும் வழியைக் கூறியுள்ளார். மிகவும் சிறப்பு வாய்ந்த நூல் இது.

2. துர்வாசர்: கோபக்காரரான துர்வாச முனிவரைப் பற்றி அறியாதவர் இரார். இந்திரன் நாடிழந்து, தேவ பதவியிழந்து போகவும், சகுந்தலை கணவனான துஷ்யந்தனால் மறந்து கைவிடப் படவும் சாபம் கொடுத்தவர் இவர். அநசூயை மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக்கிய போது ருத்ராம்சமாகக் குழந்தையானவர். இவர் இயற்றிய ஞான சூத்திரம் 77 என்ற நூல் பெரிய ஞானக் கோவையில் இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

3. சமதக்கினி: பிருகு முனிவரின் மகன். பரசுராமரின் தந்தை. இவர் இயற்றிய வாஸ்து தரிசனம் 13 என்ற நூல் பெரிய ஞானக் கோவையில் இடம் பெற்றுள்ளது.

4. சங்கரர்: ஆதிசங்கரர் தமிழில் பாடிய நூல் நவக்கிரக கக்கிஷம் பெரிய ஞானக் கோவையில் இடம் பெற்றுள்ளது. கக்கிஷம் என்ற சொல் மாந்திரிகத்தைக் குறிக்கும். அஷ்ட கர்மங்களுக்கு நவக்கிரகங்களை நாயகராக்கி அவர்கள் அருளால் வசியம் முதலான கர்மங்களைச் செய்யும் வழியைக் கூறுகிறது இந்நூல்.

5. கௌசிகர்: காசி மன்னனாகப் பிறந்து, காமதேனு என்ற தெய்வப் பசுவுக்காக வசிஷ்டருடன் போர் புரிந்து தோல்வியுற்றதால், அரச வாழ்க்கையை விட தவவாழ்க்கையே சிறந்த தெனத் துணிந்து கடுந்தவம் புரிந்து வசிஷ்டரால் பிரம்மரிஷி என ஒப்புக் கொள்ளப்பட்டவர். இவரைப் பற்றிய புராணக் கதைகள் பல. இவர் இயற்றிய ஞான சூத்திரம் 30 என்ற நூல் யோக ஞான சாஸ்திரத் திரட்டு மூன்றாம் பாகத்தில் இடம்பெற்றுள்ளது.

கலைக்கோட்டு மாமுனிவர்: (ரிஷிய சிருங்கர்) காசிப முனிவரின் மகனான விபாண்டகரின் மகன். மானின் வயிற்றில் பிறந்தவர். தலையில் மான் கொம்பு போன்ற ஒரு கொம்பு உடையவர். இவர் காலடி பட்டால் மழைபெய்யும் என்பதை அறிந்த உரோமபாதன் என்ற மன்னன் சில தாசிகளை அனுப்பி தன் நாட்டிற்கு அழைத்துவரச் செய்து மழை உண்டாகச் செய்தான். பிறகு தன் மகளை இவருக்கு மணம் செய்து கொடுத்தான். தசரதருக்கு புத்திர காமேஷ்டி யாகம் செய்து இராமன் முதலாகப் பிள்ளைகள் பிறக்க உதவியவர். இவர் எழுதிய தாகக் கலைக் கோட்டார் பிரம ஞானம் 32 என்ற நூல் யோக ஞான சாஸ்திரத் திரட்டு எட்டாம் பாகத்தில் உள்ளது.

முற்றும்

◆◆◆

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR A. No. 44964

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

சித்தர்கள் வரலாறு